

என் உள்ளம்
கவர்ந்த தேவதை
அருணா நந்தினி

# என் உள்ளம் கவர்ந்த தேவதை

## 1



சிக்னல் சிவப்புக்கு தாவியதும்... போக்குவரத்து ஸ்தம்பித்ததுபோல நின்றது.

'சர்'ரென்று ஸ்கூட்டியை நிறுத்தி.. ஒரு காலை ஊன்றி நின்றாள் நந்திதா.

சுடுகின்ற வெயிலில் அப்படி நிற்பதும் கஷ்டமாகத் தான் இருந்தது.. வழிந்த வியர்வையைக் கைக்குட்டை யால், துடைத்துக் கொண்டாள்.

கண்கள் 'சிக்னல்' கம்பத்தையே பார்த்தவாறு இருந்தன... 'ஆரஞ்சு' நிறத்துக்கு வந்ததும் ஸ்கூட்டியை உசுப்பினாள்.

பச்சை நிறத்திற்கு தாவியதும் வண்டி சீறிக் கொண்டு ஓடியது.

சீக்கிரம் வீட்டுக்குப் போய் சாப்பிட வேண்டும்... பசி வயிற்றில் ராகம் இழுத்தது.

முகாமில் வேலை சக்கையாய் பிழிந்ததால் அலுப்பு வேறு.. ஆனாலும்.. சேவை செய்வதில் ஆனந்தம் தான்..

வீட்டுக்குப் போனதும் அம்மாவிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியிருக்கும்...

''என்னடீ இது.. வயசான கிழவி மாதிரி சமூக சேவை.. தொண்டு என்று அலைந்து கொண்டு... உன் வயசுக்கு ஏத்தமாதிரி இருக்கமாட்டியா.. கர்மம்டீ...'' என்று கத்துவார்கள்.

ஆனால்... அம்மாவுக்கு என்ன தெரியும்... இப்படி மக்களுக்குத் தொண்டு செய்வதில் வரும் ஆனந்தமே அலாதியென்று... ஆனால் இந்த விஷயத்தில் அப்பாவுக்குப் பெருமைதான். அது மட்டும் நிச்சயம்.. எண்ண அலைகளின் மத்தியில்.. யாரோ ''ஏய்... நந்து'' என்று அழைப்பதை உணர்ந்து கவனத்தை திருப்பினாள்.

வித்யா...! அவளுடன் படித்தவள்... நெருங்கிய தோழி மட்டுமல்லாமல்.. அவளைப் போலவே சேவை மனப்பான்மை கொண்டவள்...

இரத்த தானம்... இலவச மருத்துவப் பரிசோதனை... கண்புரை அறுவை சிகிச்சை முகாம் என்று எத்தனையோ தடவை இருவரும் சேர்ந்து 'சர்வீஸ்' செய்திருக்கிறார்கள்.. சென்ற வருடத்தில் தான் அவளுக்கு மணமாயிற்று...



அதற்குப் பின் அவளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

இதோ... இப்போதுதான் சந்திப்பு.. உடனே வண்டியை நிறுத்திவிட்டுக் கேட்டாள்.

''ஹேய்... வித்யா.. வாட் எ ஸர்ப்ரைஸ்.. எப்போ ஊருக்கு வந்தே...''

''நாலு நாள் ஆச்சு... என் தம்பிக்கு அடிப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்தான்... அவனைப் பார்க்க வந்தேன் ஆமாம்... நீ எப்படி இருக்கே நந்து.. ஏதாவது நியூஸ் இருக்கா.. திருமண விஷயம் தான்...'' என்று கண்களை சிமிட்டி அவள் வினவ...

''ஊகூம்.. அதை நான் கேட்க வேண்டும் மேடம்... குட் நியூஸ் இருக்கிறதான்னு..'' என்று கேட்டாள் நந்திதா.

''இப்போதைக்கு வேண்டாம்னு இருக்கோம்டீ... அந்த விஷயத்தில் என் மாமியாருக்கு மனத்தாங்கல் தான் என்ன செய்ய... என் கணவர் கொஞ்ச நாள் போகட்டும் என்கிறார்..''

''சரி... எத்தனை நாள் நீ இங்கே இருப்பே... சொல்லு.''

''வந்தது வந்தாச்சு... இருபது நாள் இருந்து விட்டுப் போகலாம்னு உத்தேசம்.. அம்மா வீடு மாதிரி சந்தோஷம் எங்கேயும் வராதுடீ.. நிம்மதியும்... குஷியும் இங்கே தான் நந்து... கல்யாணம் ஆகாதா என்கிற நினைப்பு. அது ஆனதும் ஏன்டா செய்து கொண்டோம்ங்கற அங்கலாய்ப்பு... பிறந்த வீட்டு சுகம் எங்கும் கிடைக்காது என்பது உண்மைதான்...'' மனக்குறையை வெளியிட்ட தோழியை பார்க்கும்போது பாவமாக இருந்தது.

இவளே தான் வந்து புலம்பியது... ''எப்போ பார்த்தாலும் ''நொய் நொய்''னு ஏதாவது சொல்லுவது பெத்தவங்களோட வழக்கமாயிச்சுடீ.. அதை செய்யாதே... இது பண்ணாதே.. அப்படி இருக்கணும்... இப்படிப் பேசணும்னு ஒரே அடக்கு முறைதான்.. எப்படா கல்யாணம் ஆகும்... ஹாயா போய் புருஷனோட குடும்பம் நடத்தலாம்னு இருக்கு.. இஷ்டப்படி நாம் இருக்கலாம் பார்..'' என்று சொன்னது இவளே தான்...

திருமணம் நிச்சயம் ஆனதும் ஆகாயத்தில் பறக்காத குறைதான்.. வெகு உற்சாகமாய் அழைப்பிதழை நீட்டி... ''இனி உல்லாசமாய் இருக்கப் போகிறோம்ங்கிற சந்தோஷம்டீ.. அப்பா அம்மாவோட சதா கால அட்வைஸ் புலம்பலிலிருந்து நிரந்தர விடுதலை பார்'' என்றவள் இப்போது திருமண வாழ்க்கையை நினைத்து சலித்துக் கொள்கிறாள்.

பாவம்...

''சரி வித்யா.. இங்கே இருக்கிற நாட்களையாவது ஜாலியாக கழிடீ... அடுத்த வாரம் நம்ம காலேஜ் கிரௌண்டில் சீனியர் சிடிசன்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.. சர்வீஸ் செய்ய வருகிறாயா.. உன் பெயரை கொடுத்து விடுகிறேன்.. நம்ம குரூப் எல்லோரும் வருகிறார்கள்..''

''அய்யோ வேணாம் நந்து.. இந்த சேவையெல்லாம் கன்னி வாழ்க்கையோடு போச்சு.. கல்யாணத்தன்னிக்கே என் கணவர் கறாராய் சொல்லிவிட்டார்.. ஊர் ஊராய்... தெருத் தெருவாய் சுத்தி ஸோஸியல் சர்வீஸ் பண்ற நினைப்பையெல்லாம் தூக்கிப் போட்டு விடுன்னு.. அந்த



விஷயத்தில் இனி மூச்... அவருக்கு இது தெரிஞ்சா அவ்வளவுதான்.. வெட்டிப் போட்டு விடுவார்.

ப்ச்சு.. திருமண வாழ்க்கையோடு எல்லாம் போச்சு... நந்து.. கல்யாணத்தை மட்டும் நினைக்காதே.. நம்மோட லட்சியம்.. ஆசை.. குறிக்கோள் என்று எதுவுமே நடக்காது.. எல்லாம் மண்ணோட மண் ஆயிடும்.. அப்படியே நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளணும்னு முடிவெடுத்தால்.. இந்த சேவை.. தொண்டையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்து விடு.. என் அனுபவத்தில் நான் கண்டு கொண்டதை உனக்குச் சொல்கிறேன் ஏம்மி..'' தோழியின் பேச்சு நந்திதாவின் மனசைத் தொட்டது.

அவள் சொல்வது உண்மைதானா.. திருமண வாழ்வு இலட்சியத்திற்குக் குறுக்கே நிற்குமா என்ன.. அய்யோ.. அந்தக் கலக்கத்துடனேயே தோழியிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

வழியெல்லாம் அதே நினைப்பு.. திருமணம் என்ற வார்த்தையே அவளை நடுநடுங்கச் செய்தது. அம்மாவுக்கு விருப்பம் இல்லையென்றாலும்... தன் ஆத்மதிருப்திக்காக ஜனசேவை செய்து வந்தவளுக்கு... திருமணத்தால் அதை இழக்க நேரிடும் என்ற விஷயம் அதிர்ச்சியைத் தந்தது.

வித்யா சொல்வது போல.. எதிர்காலக் கனவுகளை.. வாழ்வின் குறிகோளை சுட்டுப் பொசுக்கி விட்டுத்தான் மணமேடையில் அமர வேண்டும் என்றால்... ஊகூம்.. அத்தகைய வாழ்க்கை வேண்டவே வேண்டாம்.

வருகின்ற கணவன் என்னைப் புரிந்தவனாய்... என் இலட்சியத்தை மதிப்பவனாய் இருப்பான் என்று என்ன

நிச்சயம்... வித்யாவின் கணவர்... மாதிரி அமைந்தால்.. மை காட்...!

அப்போதிலிருந்து... திருமணம் என்று நினைக்கையில் உள்ளம் கசந்து வழிந்தது.

திருமணமா.. நெவர் என்று தீர்மானமாய் அவள் முடிவெடுத்த அதே நேரம்...

அவள் வீட்டில் அவளோட திருமணப் பேச்சுக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது.

வரலட்சுமி கணவருக்கு வெற்றிலையில் பாக்கை வைத்து மடித்துக் கொடுத்தவாறு சொன்னாள்.

''என்னங்க... என் தங்கை போன் பண்ணினா..''

''என்ன விஷயமாம்..'' வெற்றிலையை வாங்கிக் கொண்டு கேட்டார் கேசவன்.

''எல்லாம் நம்ம பொண்ணு கல்யாண விஷயமாத் தான்... யாரோ பையன் இருக்கிறான்... நல்ல குடும்பம். அதுவும் தெரிந்த குடும்பமாம்... பையன் நல்ல வேலையில் இருக்கிறான்.. எழுபதாயிரம் ரூபாய் சம்பளம் என்கிறாள்.. அதுமட்டுமில்லை.. அவன் சம்பாதித்து தான் ஆக வேண்டும் என்று இல்லையாம்... அவ்வளவு சொத்து இருக்காம்.. மூன்று தலைமுறைக்கு போதுமான அளவு இருந்தாலும்.. உத்தியோகம் புருஷ லட்சணம் என்று படிச்சு... வேலைக்கு போயிருக்கிறானாம்.. அக்கா.. நம்ம நந்துவோட அழகுக்கு பொருத்தமானவனா இருக்கான்னு சொல்றா பூமா..''

''அவ பார்த்தாளாமா அந்தப் பையனை..''

''இல்லைங்க.. அந்தப் பையனோட அக்காவைத் தெரியுமாம்..அவள் மூலமா தான் தெரிய வந்ததாம். அவள்



வீட்டில் பையனோட போட்டோவை ஆல்பத்தில் பார்த்தாளாம். நல்ல உயரமா.. சிவப்பா..கலையா இருக்கான்னு சொன்னாள். உடனே பதிலைச் சொல்லுக்கா.. நல்ல வரன்.. கை நழுவி போய் விடக் கூடாதுங்கறாள்..''

''சரி.. நம்ம பொண்ணை ஒரு வார்த்தைக் கேட்க வேண்டாமா.. திருமணத்துக்கு நாம் தயார்னா.. அவள் தயாரா இருக்கணுமே.. அவளிடம் கேட்கலாம் இரு..''

''இதோ பாருங்க.. கோழியைக் கேட்டுட்டு மசாலா அரைக்கிறதில்லை... பெத்தவங்க முடிவெடுத்தா போதும். பிள்ளைங்க சம்மதிக்கணும்... நமக்கில்லாத அக்கறையா...''

''சரி.. அவ மத்த பொண்ணுங்க மாதிரி இல்லையே. அவளுக்குன்னு தனி வழி.. மனிதப் பிறவி எடுத்திட்டா.. ஏதாவது செய்யணும்ப்பா... மனித நேயம் இருக்கணும் அதுதான் பிறவியின் நோக்கம் என்று தத்துவம் பேசுகிறாள்.. இந்த மனநிலையில் அவள் ஒத்துப்பாளா... சொல்லு..''

''அதுதான் என் கவலையே... இப்படியே ஜனசேவை ஜனார்தன் சேவைன்னு இருந்தாள்னா.. இன்னொரு அவ்வையாராயிடுவாள்.. அப்படி விட்டு விட முடியுமா என்ன.. அவளுக்கு அப்புறம் ரஞ்சி இருக்கா. அவளோட படிப்பு முடிஞ்சதும் அவளுக்குத் தேட ஆரம்பிக்கணும்.. யாருக்கு வேணும் இந்த சமூக சேவையெல்லாம்.... இந்த காலத்தில் இப்படியும் ஒரு பொண்ணா.. எல்லாப் பொண்களைப் போல எந்த ஆசையுமில்லாமல்... விசித்திரமாய் இருக்கீறாள் பாருங்கள்.. எல்லாம் தலையெழுத்து..''

''என்ன செய்வது வரா.. இந்த விஷயத்தில் என் அம்மாவைக் கொண்டிருக்கிறாள். அந்தக் காலத்தில்.. 'உம்'மென்றால் உதவிக்கு போய் நிற்பாள் அம்மா... யாருக்காவது பிரசவம் என்றால்... இதோ வந்துவிட்டேன்னு ஓடுவாள்.. எந்த வீட்டிலாவது சாவு விழுந்தது என்றால்.. காபி.. டீன்னு செய்து கொண்டு போய் கொடுப்பாள்.. என்ன.. அம்மா அக்கம் பக்கத்தில் போய் சேவை பண்ணுவாள்.. உன் பொண்ணு பெரிய அளவில் செய்கிறாள்... மொத்தத்தில் அதே சேவை மனப்பான்மை தான்..''

''ஆகா.. பெருமைதான்.. நாளைக்கு புருஷன் வீட்டுக்கு போனப்புறமும்.. இந்த மாதிரி ஓடினால் அவர்களுக்கு கோபம்தான் வரும்... அதை முதல்ல அவளுக்கு எடுத்துச் சொல்லணும்.. இந்த மாதிரி சுத்தினதெல்லாம் போதும்.. இனிமே கல்யாணப் பொண்ணா லட்சணமா இருக்கப் பார் என்று எடுத்துச் சொல்லுங்க.. என்ன.. புரியுதா.''

''என்னம்மா... கல்யாணப் பொண்ணா.. அது யாரு.. யாருக்காவது கல்யாணமா என்ன..''

அப்போதுதான் உள்ளே வந்த நந்திதா தாயிடம் கேட்டாள்.

வரலட்சுமியும் கேசவனும் ஒருவரையொவர் பார்த்துக் கொண்டனர்.

வரலட்சுமி சைகை காட்டினாள்... ''நீங்களே சொல்லுங்கள்..''

''அதும்மா.. உங்கம்மா உனக்குக் கல்யாணம் செய்து வைக்கணும்னு நினைக்கிறாள்.. உன் சித்தி இன்னிக்கு



போன் பண்ணி... யாரோ தெரிஞ்ச பையன் இருக்கிறான் என்றாளாம்.. அதான்.. நல்ல இடமாய் இருந்தால் பண்ணிடலாம்னு சொல்கிறாள்...''

அதைக் கேட்டு அதிர்ந்து போனாள் நந்திதா.. கல்யாணமா... என் இலட்சியத்தையெல்லாம் குழிதோண்டி புதைத்துவிடுமே.. என் கனவுகளையெல்லாம் பாழாக்கி விடுமே..

நான் பயந்தபடியே ஆகிவிட்டதே.. வித்யா சொல்லி சில மணித்துளிகள் தான் ஆயிற்று. அதற்குள் கல்யாணப் பேச்சு தலையெடுத்து விட்டதே... இதிலிருந்து எப்படித் தப்பிப்பது..

நெருப்புக் குழிக்குள் தவறி விழுந்த ஜீவனைப் போல தவித்துப் போனாள் அவள்.

''என்னம்மா.. பேச்சையே காணோம்.... உன் அம்மா ஆசைப்படி.. கல்யாணத்திற்கு சம்மதமா.. சித்தியிடம் 'ஓகே'ன்னு சொல்லிவிடலாம் தானே..'' என்று தந்தை கேட்க...

''ப்ளீஸ் டாட்... வேண்டாமே.. கல்யாணத்திற்கு இப்போ என்ன அவசரம் டாட்..'' என்றாள் அவள்... கெஞ்சும் குரலில்.

''பின்னே... எப்போ தயாராம்.. கேளுங்க... இப்பவே இரண்டு கழுதை வயசாச்சு. இவ வயசில் எனக்கு கல்யாணம் ஆகி.. இரண்டு குழந்தைகளையும் பெத்தாச்சுன்னு அவளுக்கு எடுத்து சொல்லுங்க...'' கோபத்துடன் சொன்னாள் வரலட்சுமி.

''ஏன் அதை அவளுக்கு நீயே சொல்லக் கூடாதா.. மத்தியில் நான் எதுக்கு.. அம்மாடி.. நீ என்ன சொல்றே..

கல்யாணம் இப்ப வேண்டாம் என்கிறாயா.. இல்லை எப்பவுமே வேண்டாம் என்கிறாயா.."

"நீங்களே அவளைத் தூண்டி விடுவீங்க போலிருக்கே.. கல்யாணம் செய்து கொள் என்று வலியுறுத்திப் பேசறதை விட்டுவிட்டு... வேண்டுமா வேண்டாமான்னு பட்டிமன்றமா நடத்தறீங்க... இதோ பாருடீ.. நான் முடிவு செய்தாச்சு... இந்த வருஷம் உன் கல்யாணத்தை நடத்திட வேணும்னு.. அதற்கு ஏத்த மாதிரி நல்ல வரனும் வந்திருக்கு... சித்திக்கு போன் பண்ணிடறேன்.. சம்மதம்னு.."

"ப்ளீஸ்ம்மா.. எனக்கு விருப்பமில்லாமல்..."

"வாயை மூடுடீ... உனக்கு எப்போ என்ன செய்யணும்னு எங்களுக்குத் தெரியும். அதிகப் பிரசங்கித்தனமா பேசாதே.. என்னங்க.. ரஞ்சிதாவை காலேஜில் சேர்த்துவிட்டு.. நேரே நாம குன்னூருக்கு போறோம்.. போய் கல்யாணத்தை பேசி முடிச்சுட்டு வர்ரோம்.. தெரிகிறதா.. ரஞ்சிதா.. ஏய்.. ரஞ்சி.."

தாயின் கூவலைக் கேட்டு ஓடி வந்தாள் இளைய மகள்.

"ஏம்மா.. எதுக்கு கூப்பிட்டீங்க..."

"ஊருக்கு போறதுக்கு எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டாயா.. எதையும் மறக்காமல் பொறுப்பா எடுத்து வைத்துக் கொள்... அப்புறம் அதை மறந்துட்டேன். இதை விட்டுட்டேன்னு அங்கே வந்து புலம்பாதே.. முக்கியமாய் உன் மார்க் சர்டிபிகேட்... டி.ஸி எல்லாம் மறக்காமல் எடுத்து வைத்து விடு.... உன்னை காலேஜில் சேர்த்துவிட்டு... குன்னூருக்கு நாங்க போயாக வேண்டும்..."



"குன்னூருக்காம்மா.. சித்தியைப் பார்க்கவா..."

"ஆமாண்டி... யாரோ பையன் இருக்கான்னு சொன்னாள்.. அது விஷயமாத்தான்.. அது நல்லபடியா முடிஞ்சா.. சீக்கிரமே நீ லீவு போட்டுட்டு வர வேண்டியிருக்கும்..."

"ஹைய்யா... நம் வீட்டிலும் கல்யாணம்.. குஷியா இருக்கும்மா.. என்ன கல்யாணப் பொண்ணு.. சந்தோஷம்தானே.. என்ன.. வெட்கத்தையே காணோம். முகம் சிவந்து.. தலை குனிய வேண்டாமா.. அதுதானே கல்யாணப் பொண்ணோட இலக்கணம்...! இல்லையாப்பா..." கேலி செய்தாள் ரஞ்சிதா.

"ப்ச்சு.. எனக்கு எதுவும் பிடிக்கல்லைடீ.." சலித்த குரலில் சொன்ன தமக்கையை வியப்புடன் பார்த்தாள்.

"ஏன்க்கா.. உனக்கு இஷ்டமில்லையா.. ஹையோடா... என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள் என்றால் உடனே தலையாட்டிவிடுவேன். படிப்பு என்றாலே சுத்த போராக இருக்கிறது.

'பி.ஆர்க்' குக்கு இன்னும் நான்கு வருடங்கள் படிக்கணுமேன்னு இருக்கு... அம்மா... இப்பவும் சொல்லு. படிப்பு வேண்டாம் என்றால்.. நான் கல்யாணத்திற்கு ரெடி.."

தலையில் அடித்துக் கொண்டாள் பெற்றவள்...

"என்ன கண்றாவியோ.. என்ன பிள்ளைகளைப் பெத்து வச்சிருக்கிறேன்.. ஒருத்தி என்னடா என்றால் கல்யாணமே வேண்டாம் என்கிறாள்... இன்னொருத்தியோ.. எனக்கு கல்யாணம்னு குதிக்கிறா.. எல்லாம் என் தலையெழுத்து..." உரக்கவே முணுமுணுத்தாள் வரலட்சுமி.

அன்றைக்கு இரவு முழுக்க உறக்கமின்றிப் புரண்டாள் நந்திதா.

என்ன செய்வது.. எப்படி இந்தக் கல்யாணத்தை தவிர்ப்பது.. அம்மாவின் பிடிவாதத்தைப் பார்த்தால்.. இதை நடத்தி முடித்துவிடுவாள் போல இருக்கிறதே...

அய்யோ.. அப்புறம் என் லட்சியம் எல்லாம் குதிரைக் கொம்பாகி விடுமே...

எல்லாப் பெண்களைப் போல நானும் கணவனுக்கு வடித்துக் கொட்டி.. அவனுக்கு பணிவிடை செய்து... குழந்தை குட்டிகளைப் பெற்று.. அவைகளுக்கு 'நாப்பி' கட்டுவதில் பொழுது கழித்து.. கற்பனையில் நினைத்துப் பார்க்கவும் வேதனையாக இருந்தது. இதுதான் வாழ்க்கையா.. எல்லோரையும் போல் தானும் வாழ வேண்டுமா.. தனக்கென்று ஆசை.. அபிலாஷை எதுவும் இருக்கக் கூடாதா.. சே. பெண்களின் வாழ்க்கை கல்யாணத்தில்தான் முடிய வேண்டும் என்ற சட்டமா என்ன.. இந்தச் சித்தி சும்மா இருந்திருக்கக் கூடாதா.. ஏன் இதை ஆரம்பிக்க வேண்டும்... வந்த ஆத்திரத்தில் சித்தியைப் பார்த்து உலுக்க வேண்டும் போல் இருந்தது.. நாலு வார்த்தை.. அப்போது தான் 'பளிச்' சென்று ஒரு யோசனை உதித்தது.. ஏன் சித்தியிடமே போய் எனக்கு விருப்பமில்லை.. எப்படியாவது நிறுத்திவிடுங்கள் என்று சொல்லக் கூடாது.

அம்மாவிற்கு தெரியாமல் இருக்கட்டும் என்று சொல்லி... இந்த ஏற்பாட்டை நிறுத்தச் சொன்னால்...

அதுவும் நல்ல யோசனையாகப்பட்டது அவளுக்கு. உடனே... என்ன செய்ய வேண்டும்.. எப்படி செயல் படுத்த வேண்டும் என்பதையும் திட்டம் போட்டாள்.



# 2



''என்னடி சொல்றே.. எங்களோடு நீ வரலையா.. அப்போ... நீ தனியாகவா இருக்கப் போறே...'' திகைப்புடன் கேட்டாள் வரலட்சுமி.

''எனக்கென்னம்மா பயம்... வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்.. வேண்டும் என்றால் சின்னம்மாவை ராத்திரி இங்கேயே இருக்கச் சொல்கிறேன்... நீ என்னைப் பற்றி கவலைப்படாமல் போய் வாம்மா'' என்றாள் மகள்.

''இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாதுடீ... வயசு வந்த பொண்ணை இப்படி தனியா விட்டுட்டுப் போனா.. நாங்களும் நிம்மதியா இருக்க முடியும் என்கிறாயா.. ஒண்ணும் வேண்டாம்.. நீயும் எங்களோட புறப்படு.. சொல்லிட்டேன்...''

''திடீர் என்று சர்வீஸ் செய்ய அழைப்பு வரலாம்மா.. அதற்குப் போயாக வேண்டும்..''

''போதும்டீ.. எப்பவும் அதே தானா.. குடும்பத்தோட ஜாலியா இருக்கணும்னு உனக்கு இல்லையா... தங்கையை முதன்முதலா காலேஜில் சேர்க்கப் போகிறோம்.. கூட வரலாம்னு உனக்கு தோணமாட்டேன்கிறதே.. இதை விட உனக்கு சமூக சேவை தான் முக்கியமா படுகிறது இல்லே..'' எரிச்சலுடன் சொன்னாள் தாய்.

''கமிட்மெண்ட் பண்ணியாச்சும்மா.. இப்போ முடியாது என்று சொல்ல முடியாது.. அசிங்கமாயிடும்.. புரிஞ்சுக்கம்மா.. ப்ளீஸ்...'' கெஞ்சினாள் நந்திதா.

''போன உடனே வரமுடியாது நந்து.. ரஞ்சியை சேர்த்து விட்டு... நல்ல பேயிங் கெஸ்ட் ஹோமா பார்த்து ஏற்பாடு செய்து விட்டு வரணும்.. நாலைந்து நாள் கூட ஆகும்டீ.. அதான் யோசிக்கிறேன்.. அத்தனை நாள் நீ தனியா இருக்கணும்... அது சரியாக தோணவில்லை நந்து. பிடிவாதம் பிடிக்காமல் புறப்படும்மா.''

நந்திதாவுக்கு தவிப்பாக இருந்தது... அம்மா விட மாட்டாள் போலிருக்கிறதே.. எப்படி இதைத் தவிர்ப்பது.

நல்ல வேளையாய் அவளது 'செல்' கூவி அழைத்தது. நினைத்தது போலவே புனிதா தான்... இதற்காகத் தானே அவள் காத்திருப்பதும்..

''அப்படியா..'' ''ஷ்யூர்..'' ''வந்து விடுகிறேன்'' என்று பேசியவள்.. உரையாடல் முடிந்ததும் தாயிடம் சொன்னாள்.

''நான் சொன்ன மாதிரியே அழைப்பு வந்தாச்சும்மா. ஏதோ கிராமத்தில் மருத்துவ முகாமாம்.. எங்கள் குரூப்பிலிருந்து எல்லோரும் போகிறார்கள்.. நான் போகாமல் இருக்க முடியாதும்மா..''

''சகிக்கல்லைடீ... இப்படித் தெருத்தெருவா சுத்தறதும்.. கண்டவர்களோட பழகறதும் எனக்கு சுத்தமா பிடிக்கல்லே டீ... இது நாள் வரைக்கும் நீ சமூகசேவை செய்தது எல்லாம் போதும்.. இனியாவது அடக்க ஒடுக்கமா வீட்டில் இருக்கப் பார் நந்திதா... இப்படி ஓடி ஓடி சேவை செய்யறதால யாரும் உனக்கு கிரீடம் வைக்கப்



போறதில்லை... என்னிக்கிருந்தாலும் இன்னொருத்தர் வீட்டுக்கு போய் வாழ வேண்டிய பொண்ணு நீ... குடும்பக்கலையை முதலில் கத்துக்க பார்.. கல்யாண ஏற்பாடும் நடக்கிறது நந்து.. அதைப் புரிந்து கொண்டு நட...'' மகளுக்கு அறிவுரையைக் கூறிக் கொண்டிருக்கும்போது கேசவன் அங்கு வந்தார்.

''என்ன பிரச்சனை.. அம்மாவுக்கும் மகளுக்கும்.. நீ சத்தம் போட்டுப் பேசுவதைக் கேட்டால்.. சண்டை போடற மாதிரி இருக்கு வரா.. உன் தொண்டை வால்யூமை கொஞ்சம் குறைச்சுக்கோயேன்..'' என்று சொல்ல.. வரலட்சுமி முறைத்தாள்.

''ஆகா.. சொல்லமாட்டீங்க.. ஏன்னா.. உங்கம்மாவையல்லவா கொண்டிருக்கா.. அதான்.. பொண்ணைத் தலைமேல் வைத்து கொண்டாடறீங்க..''

''இப்ப என்ன ஆச்சு வரா.. நந்து குட்டி.. அம்மாவுக்கு கோபம் வர்ர மாதிரி என்னடா செய்தே...''

''என்கிட்டே கேளுங்க... அதை நான் சொல்றேன். இப்போ சொல்றா.. பெங்களூருக்கு வரமாட்டாளாம். இவளை விட்டுட்டு எப்படி நாம் போக முடியும்... சொல்லுங்க.''

''ஏம்மா முடியாதுங்கறே.. ஜாலியா ஒரு 'டிரிப்' அடிச்சுட்டு வரலாம் வாம்மா.. பெங்களூரை பார்த்த மாதிரியும் இருக்கும்.. ரஞ்சிதாவை கொண்டு சேர்த்து விட்டு வந்த மாதிரியும் இருக்கும்டா..''

''இல்லை 'டாட்..' பக்கத்தில் ஒரு கிராமத்தில் புற்று நோய் கண்டறிய மருத்துவ முகாம் நடக்க இருக்கிறது டாட்... பெண்களுக்காக பிரத்யேகமான கேம்ப்...

அதனால் சர்வீஸுக்கு மகளிர் சேவகிகளுக்கு மட்டுமே அழைப்பு.. நான் அதற்கு போயாக வேண்டும் டாட்.. அதனால் தான் சொல்கிறேன்... என்னால் வரமுடியாதுன்னு..''

''எத்தனை நாள் 'கேம்ப்'டா...''

''இரண்டு நாட்கள் டாட்.. தங்கறதுக்கு.. சாப்பாட்டுக்கு அங்கேயே வசதி செய்து தருகிறார்கள்.. எங்களுக்கு அப்படியொன்றும் அதிக சிரமமான வேலை இல்லை டாட்.. வீடு வீடா போய் பெண்களைப் பார்த்து.. புற்று நோயைப் பற்றி விளக்கி சொல்லி.. அது பெண்களை எந்த வகையில் தாக்குகிறது என்பதையும் தெளிவு படுத்தி.. அவர்களுக்கு தைரியம் சொல்லி 'செக் அப்'புக்கு வரும்படி செய்ய வேண்டியது மட்டும்தான்.. எங்களுடைய சேவை மையத்திலிருந்து பதினைந்து பெண்கள் போகிறோம் டாட்..''

''குட்.. வெரிகுட்.. எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குடா.. என் மகள் மத்த பொண்ணுகளைப் போல சினிமா.. ஓட்டல்னு சுத்தாமல் இப்படி மத்தவங்களுக்கு நல்லது செய்கிறாளேன்னு நினைக்கறபோது கர்வமா இருக்கு.. இல்லையா வரா...''

''அடக் கர்மமே.. உங்கப் பொண்ணை நீங்கத்தான் மெச்சிக்கணும்.. உங்ககிட்டே சொன்னா.. இரண்டு வார்த்தை 'நறுக்'குன்னு சொல்லி அடக்கி வைப்பீங்கன்னு பார்த்தா.. நீங்களும் அவளுக்கு ஒத்து ஊதறீங்களே... எனக்கென்ன வந்தது.. நீங்களும் உங்க பொண்ணும் எப்படியோ போங்கள்..'' கோபத்துடன் அங்கிருந்து சென்றாள் வரலட்சுமி.



''அம்மாவுக்கு என்மேல் கோபம் டாட்..''

''அவ கிடக்கா.. விடுடா.. சிலதுகளுக்கு கற்பூர வாசனைத் தெரியாதாம்.. நீ உன் இஷ்டப்படி போய் வாடா.. என் பொண்ணு மக்களுக்கு சேவை செய்கிறாள் என்பதில் எனக்கு பெருமிதம் தான் நந்தும்மா.. ஆனால் ஒன்று.. அப்பப்ப எங்களுக்கு போன் செய்யணும்.. என்ன...'' என்று தந்தை சொன்னதும் அப்பாடா என்று பெருமூச்சுவிட்டாள் நந்திதா.

நல்லவேளை... பயணம் நின்றுவிட்டது.. அவர்கள் புறப்பட்டதும்.. சித்தியைப் பார்க்க புறப்பட வேண்டியது தான்...

சித்தியிடம் கெஞ்சி... கூத்தாடி இந்த திருமணத்தை நிறுத்தி விட வேண்டும்.. நான் ஊருக்கு வந்ததையோ.. சித்தியிடம் திருமணத்தை நிறுத்தச் சொன்னதையோ அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தெரிவிக்கக் கூடாது என்பதையும் சொல்ல வேண்டும்.

இந்தக் கல்யாணம் நிற்க நான்தான் காரணம் என்று அம்மாவுக்கு தெரிந்தால்... அவ்வளவுதான்.. வார்த்தையாலே கொன்றுவிடுவாள்.

அம்மாவைப் பொறுத்தவரை.. ஏன் அப்பாவுக்கும் தான்.. நான் முகாமிற்கு போயிருக்கிறேன்.. கடவுளே.. நான் நினைத்த மாதிரி இந்த கல்யாண ஏற்பாடு நின்று விட அருள் செய்.. ப்ளீஸ்.. மானசீகமாய் வேண்டினாள்.

புறப்பட்டு செல்லும் வரை வரலட்சுமி 'குர்'ரென்று இருந்தாள்.

தன் வார்த்தைகளை மதிக்காமல் சித்தம்போக்கு சிவன் போக்கு போல தன் இஷ்டப்படி நடக்கிறாளே என்று நந்திதாவின் மீது படு கோபம்.

''இதோ பாருங்க.. உங்க பொண்ணிடம் சொல்லுங்க.. கிராமத்து சேவையை முடித்துக்கொண்டு குன்னூருக்கு போய் இருக்கும்படி.. இங்கே தனியா இருக்க வேண்டாம்னு கொஞ்சம் உறைக்கிற மாதிரி சொல்லுங்க...'' மகளிடம் நேராய் பேசாமல் கணவர் மூலம் சொன்னாள்.

''என்னடா.. அம்மா சொன்னது காதில் விழுந்ததா... அது மாதிரி செய்... என்ன...'' என்று தந்தை சொன்னதும் பெரிதாய் தலையாட்டி வைத்தாள் அவள்.. காரில் அவர்கள் புறப்பட்டு சென்றதும்.. பெரிதாய் மூச்சு விட்டாள்.

நாளைக்கே புறப்பட வேண்டும்.. சீக்கிரம் போய் இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட்டுத் தான் மறு வேலை.. அவன் யாரோ... எவனோ.. அவனைப் பார்க்கும் முன்பே தடுத்துவிட்டால் நல்லது.. அம்மாவோட நச்சரிப்பு இருக்காது...

''பையனுக்கு என்ன குறைச்சல்.. இந்த மாதிரி மாப்பிள்ளை கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும்.. அவனைக் கட்டிக் கொள்''என்று குடைந்தெடுத்து விடுவாள்.. அவளது தொண தொணப்பில் தலை வீங்கி விடும்..

சே.. ஏன்தான் இப்படி இருக்கிறார்களோ... கல்யாணம் தான் வாழ்க்கையா.. அது இல்லாவிட்டால் வாழ முடியாதா..

அன்னை தெரஸா.. நிர்மலா அம்மையார் இன்னும் எத்தனை பேர் திருமண வாழ்க்கையைத் துறந்து தொண்டாற்றுகிறார்கள்.



இவர்கள் எல்லாம் கல்யாணம் இல்லாமல் வாழவில்லையா என்ன.. ஏன்.. அந்தக் காலத்திலேயே ஔவையார் இருக்கவில்லையா...

அந்த நிமிஷத்திலேயே பறந்தோடிப் போய் சித்தியிடம் இந்தக் கல்யாணம் வேண்டாம்... நிறுத்திவிடுங்கள் என்று சொல்ல வேண்டும் போல் ஒரு வேகம்.

என்ன செய்வது.. நாளை வரைக் காத்திருக்க வேண்டுமே... இனியென்ன.. புறப்பட வேண்டியதுதான் என்று பரபரப்புடன் செயல்பட்டாள்.

சொல்லாமல் கொள்ளாமல் போய் நிற்கப்போகிறோம்.. சித்தி என்ன சொல்வாளோ... நான் சொல்லப் போவதை எப்படி எடுத்துக் கொள்வாளோ... என்ன முடிவாகுமோ என்ற தவிப்பில் அவளுக்கு உறக்கம் வர மறுத்தது... எப்போது விடியும் என்று காத்திருந்தாள்.

எந்தக் காரணத்தை வைத்து மாடியேறிப் போவது என்று யோசித்துக் கொண்டிருந்தாள் ப்ரியா...

அவன் வந்து அரைமணி நேரம் ஆகிவிட்டது. போய் பார்க்கலாம் என்றால் ஏதாவது சாக்கு வேண்டும். உலர்ந்த துணிகளைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்ல முடியாது.. மழை என்பதால் துவைக்கவே இல்லை...

காபி கொண்டு போய் கொடுக்கலாமா என்றால் சத்யா காபியே குடிப்பதில்லை.

ப்ச்சு... என்ன சொல்லி அவரைப் பார்ப்பது.. மண்டை வலிக்கும் வரை யோசித்தாள்.

எப்போது சத்யா மாடி போர்ஷனுக்கு குடி வந்தானோ அப்போதே தீர்மானித்து விட்டாள்.. அவன் தான் தனக்கு

மணவாளன்.. அவனது மனதில் இடம் பிடித்து.. அவனுக்கு மனைவியாகி... சந்தோஷமாய் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்.. அப்புறம்.. ஆகா.. வாழ்வே சொர்க்கம் தான்...

அப்பாவின் சிடுசிடுப்பிலிருந்து விடுதலை.. அவரது கஞ்சத்தனத்திலிருந்து விடுதலை.. இந்த வறட்சியான வாழ்க்கையிலிருந்து நிரந்தர விடுதலை.

அதற்காக அவள் எடுத்த முயற்சியும் வெற்றி பெற்றது.

தன்னை வெகு கருத்தாய் அலங்கரித்துக் கொண்டு அவன் கண்களில் படும்படி நடமாடுவதும்..

அவன் மாடி ஏறி வருகையில்.. மொட்டை மாடியிலிருந்து துணிகளை எடுத்து வருவதுபோல எதிர்படுவதும்..

பண்டிகை நாட்களில் அம்மா தயாரிக்கும் ஸ்பெஷல் அயிட்டங்களை கொண்டு போய் கொடுப்பது போல செல்வதும்... பல வழிகளில் அவனை வசீகரிக்க முயன்று... அதில் வெற்றியும் கண்டாள்.

இப்போதெல்லாம் அவளைக் கண்டதும் அவனது முகத்தில் தெரியும் மலர்ச்சி... கண்களில் வரும் 'பளிச்' வெளிச்சம்.. உதடுகளில் எட்டிப் பார்க்கும் மயக்கம் புன்னகை எல்லாமே அவனது இதயம் காதலால் கனிந்து விட்ட செய்தியைக் கட்டியம் கூறியது. இருந்தும்.. அவன் தன் வாயால் சொல்ல வேண்டும் என்று ஆவலாய் காத்திருந்தாள்.

அவனிடம் பேசிப் பார்க்கலாம் என்றால்... எந்தக் காரணம் வைத்து அங்கே போவது.. வழி தெரியாமல் தவித்தவளுக்கு தாயின் அழைப்பு எரிச்சலாக இருந்தது.



''என்னம்மா..'' முகம் சுளித்தவாறே வந்தாள்.

''நான் சொல்றதை செய்யறையா... ரூமுக்கு போய்...''

''போம்மா.. எப்பவும் எனக்குத்தான் வேலையா... உன்னோட சின்ன பொண்ணு.. கடைக்குட்டின்னு இருக்கிறார்களே... அவர்களுக்கு சொல்ல வேண்டியது தானே...''

''சரி.. நீ போக வேண்டாம்.. ரேகாவை அனுப்பறேன்... விடு.. ரேகா.. ஏய்.. வாடீ இங்கே..'' என்று கூவினாள் தாய்.

''கூப்பிட்டாயாம்மா...'' என்று ஓடி வந்த மகளிடம்..

''ஆமாம்.. ரூமில்.. மேஜை மீது ஒரு லெட்டரை வைத்திருக்கிறேன்.. மாடி தம்பிக்கு வந்திருப்பது.. அதை எடுத்துக் கொண்டு போய் கொடுத்துட்டு வா... போ..'' என்றாள்.

அங்கிருந்து சென்று கொண்டிருந்த ப்ரியா.. 'சடக்' கென்று 'பிரேக்' போட்ட மாதிரி நின்றாள். அடடா.. இதுக்குத்தானா அம்மா அழைத்தது. வேறே வேலை என்று நினைத்தேனே.. சத்யாவைப் பார்க்க அருமையான சந்தர்ப்பம்.. அது நழுவ இருந்ததே.. ஊகூம்.. கடித்தைக் கொடுக்கும் சாக்கில் அவனைப் பார்த்து... பேச வேண்டும்.. தங்கையின் பின்னே சென்றவள்.. ''ஏய் ரேகா... நில்லு.. 'ஹோம் வொர்க்' தானே செய்து கொண்டு இருக்கே.. போ.. அதை முடி... நேரத்தை வேஸ்ட் செய்யாதே.. நான் போய் அதைக் கொடுத்து விட்டு வருகிறேன்... படிக்கிறதை விட்டு மத்ததை செய்...'' என்று அதட்டுவது போல பேசி...

அவளது கையிலிருந்து கடிதத்தைப் பிடுங்காத குறையாய் வாங்கினாள்.

மானாய் துள்ளிக் கொண்டு மாடியேறினாள்... மனமும் புள்ளிமானாய் குதித்தது...

சத்யா.. வெறும் லுங்கியில் இருந்தான்.. கையில் சிகரெட் புகைந்தது.

அவளைப் பார்த்ததும் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் அமுத்தி நசுக்கிவிட்டு புன்னகையுடன் எழுந்தவன்... அப்போதுதான் தான் அரை நிர்வாணத்தில் இருப்பதை உணர்ந்தவனாய் அங்கிருந்த டர்க்கிஷ் டவல் ஒன்றை எடுத்து மேலே போர்த்திக் கொண்டான்.

''உங்களுக்கு லெட்டர் வந்திருக்கு... அதைக் கொடுக்க வந்தேன்.. இந்தாங்க.''

அவள் நீட்டிய கடிதத்தை வாங்கிக் கொண்டு ''தாங்க்ஸ்.. ப்ரியா..'' என்றான் சத்யா.

''உங்க அம்மாகிட்டே இருந்து வந்திருக்கு போல...'' என்று கேட்டாள் பேச்சை வளர்க்கும் எண்ணத்தில்.

''ஆமாம்... வழக்கம் போல நேரத்திற்கு சாப்பிடுகிறாயா... வெயிலில் சுற்றாதே... ரொம்ப நேரம் விழிக்காமல் நேரத்தோடு தூங்குன்னு.. தாய்மை பாசத்துடன் எழுதியிருப்பார்கள்... அவர்களுக்கு நான் இங்கே தன்னந்தனியாய் இருப்பது பிடிக்கவில்லை...''

கடிதத்தைப் பிரித்தவாறே சொன்னவன்... அதை வாசிக்க ஆரம்பித்தான்.

படிக்க... படிக்க அவனது முகத்தில் மாற்றம். புன்னகை மாயமாகி... பதிலாய் அதிர்ச்சி தெரிந்தது. அப்படியே அமர்ந்தான்.



''என்ன விஷயம் சத்யா.. யாருக்காவது உடம்பு சரியில்லையா என்ன...'' என்று கேட்டாள் ப்ரியா.

''ஊகூம்... எனக்கு பெண் பார்த்திருக்கிறார்களாம்.''

''என்ன...'' அதிர்ந்து போய் கேட்டாள் ப்ரியா...

''எனக்கும் அதிர்ச்சி தான் ப்ரியா.. எனக்கு இந்த கல்யாண ஏற்பாடு பிடிக்கவில்லை... வேண்டாம் என்று சொல்லிவிடப் போகிறேன்...''

அவனது வார்த்தைகள் ப்ரியாவின் நெஞ்சில் அமிர்த தாரைப் பொழிந்தது போல் குளிர்ச்சியைத் தந்தது.

ஆக... அவனுக்கு விருப்பமில்லை என்று அர்த்தம். அப்படியென்றால்.. சத்யா என்னைக் காதலிக்கிறார். மனசுக்குள் கிளுகிளுப்பு...

இருந்தும் காரணத்தை அவனது வாயால் அறிய வேண்டும் என்ற உந்துதலில் அவனிடம் கேட்டாள்.

''ஏன் வேண்டாம் என்கிறீங்க.. காரணத்தை நான் தெரிஞ்சுக்கலாமா..''

அவளை உற்றுப்பார்த்தான் சத்யா.

''ஏன்... ப்ரியா.. இன்னுமா என் மனதை நீ புரிந்து கொள்ளவில்லை... இல்லை... புரியாத மாதிரி நடிக்கிறாயா.. என் மனதுக்குள் நீ தான் இருக்கே.. ஐ லவ் யூ ப்ரியா.. அதை எப்படி உன்னிடம் சொல்வது என்று தயங்கிக் கொண்டு இருந்தேன்... நல்ல வேளையாய் இந்தக் கடிதம் வந்து உதவி செய்து விட்டது.. அதுவும் ஒரு விதத்தில் நல்லதாகிவிட்டது...''

இதயத்தை சர்க்கரைப்பாகில் முக்கி எடுத்ததுபோல் நெஞ்சு முழுக்க இனித்தது ப்ரியாவிற்கு.

தாமரையாய் மலர்ந்த முகத்துடன்... வாயெல்லாம் புன்னகையாய் சொன்னாள் அவள்.

''எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு சத்யா... என் மனசில் இருப்பது நீங்கதான்.. நானும் உங்களை விரும்புகிறேன்.. பெண்ணாச்சே.. எனக்குத் தயக்கமா இருந்தது.. இப்போ.. நீங்க வெளிப்படையாய் சொன்னதும் வானத்தில் பறக்கறமாதிரி இருக்கு...''

''இங்கே நான் குடி வந்தது உன்னை சந்திக்க வேண்டிதானோ என்னவோ.. எங்கேயோ இருந்த நான் இங்கு வந்து குடியேறியது இறைவன் செய்த ஏற்பாடு என்று தோன்றுகிறது... ப்ரியா. ஏன் ப்ரியா... என்னை உங்கப்பா மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்வாரா...'' என்று ஆவலுடன் கேட்டான் சத்யா.

''நிச்சயமாய்.. உங்களுக்கு என்ன குறை சத்யா.. நன்கு படித்தவர்.. கை நிறைய சம்பாதிக்கின்றவர். நிறைய சொத்தும் இருக்கிறது.. உங்களை வேண்டாம் என்று சொல்ல மனம் வருமா என்ன.. விஷயம் தெரிந்தால் மிகவும் சந்தோஷப்படுவார் தெரியுமா...'' கண்கள் மினுமினுக்க அவள் சொன்னாள்.

அந்தக் குரலில் இழையோடிய ஆசையை... அவளது கண்களில் மின்னிய பேராசையை அவன் உணரவில்லை... உணரும் நிலையில் இல்லை.

கண்களை மூடி வைத்திருந்த மோகமும்... காதலை வெளியிட்ட சந்தோஷமும் அவனது அறிவை மழுங்க வைத்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

எப்படியோ... தனது எண்ணம் நிறைவேறிவிட்டது என்ற மகிழ்ச்சியில் திளைத்த ப்ரியா.. பரிதாபப்படுவது போல சொன்னாள்.



''பாவம்.. சத்யா.. அந்த பொண்ணு.. எனக்கு அவளை நினைக்கும்போது அய்யோ என்று இருக்கு. உங்களை மணக்கும் அதிர்ஷ்டம் அவளுக்கு இல்லாமல் போனதேன்னு பரிதாபமாக இருக்கு... யார் அவள்.. சொந்தமா..''

''என் அக்காவிற்கு தெரிந்த இடமாம்.. அதாவது அந்தப் பெண்ணின் சித்தி அக்காவுக்கு தெரிந்தவராம் அவ்வளவுதான்.. பெண்ணின் வீடு இந்த ஊரில் இருக்கிறதாம்.. பார்க்க வேண்டும் என்றால் போய் பார்த்து விட்டு வா என்று எழுதியிருக்கிறார்கள்...''

''இந்த ஊரிலா.. போய் பார்த்துவிட்டு வாங்களேன்.. ஒருவேளை அவள் என்னை விட அழகியா இருக்கலாமில்லையா...'' விஷமமாய் சிரித்தவாறே சொன்னாள் அவள்.

''நையாண்டியாக்கும்... அவள் ரம்பை... ஊர்வசியாக இருந்தாலும் சரி.. எனக்கு வேண்டாம். எனக்கு என் தேவதை ப்ரியா தான் வேண்டும்..'' கொஞ்சும் குரலில் அவன் சொல்ல...

ப்ரியாவின் முகம் பெருமிதத்தில் ஒளிர்ந்தது.

உலகையே வென்றுவிட்டதுபோல மதர்ப்பும் அவளுக்கு வந்தது.

இனி.. சத்யா என்னுடையவன்.. யாராலும் பிரிக்க முடியாது.

ரம்பை... ஊர்வசி வந்தாலும் தான்.. உள்ளம் கொக்கரித்தது.

# 3



அன்று இரவு முழுக்க தூக்கம் வராமல் தவித்தான் சத்யா.

சொல்லத் தெரியாத ஆனந்தம்.. அதனால் ஏற்பட்ட பரபரப்பு அவனைத் தூங்க விடாமல் செய்தது. காதல் உணர்வு என்பதே சுகம் தான்.. அதுவும் காதலை உள்ளத்தில் சுமந்து.. அதை வெளியிடக் காத்திருப்பது படு சுகமே..

அடைகாத்த அன்பை.. பூட்டி வைத்திருந்த நேசத்தை.. காதலிக்குத் தெரியப்படுத்தியதும்.. அதில் விளையும் இன்பம்.. அதுவும் அலாதிதான்.

அதைத்தான் சத்யாவும் அனுபவித்துக் கொண்டிருந் தான்.

தன் வாழ்க்கையில் இப்படியொரு அதிர்ஷ்டம் வந்ததை அவனால் நம்பவும் முடியவில்லை.

எப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டம்.. அழகான ஒருத்தி என் காதலி.. என் வருங்கால மனைவி.. அழகோடு அறிவும் சேர்ந்திருக்கிறது.... அதையும் சொல்ல வேண்டும்.

என்னைப் போலவே ப்ரியாவும் உறக்கம் வராமல் தவிப்பாளோ.. என்னைப் போலவே இன்ப உணர்வில்.. உலகமே என் வசம் போன்றதொரு குதூகலத்தில் இருப்பாளோ...



பெருமூச்சு விட்டான் அவன்.

ஒரே கூரையின் கீழ் இருந்தும்.. அவனும் அவளும் தனிதனியாய்.. எப்போது சேருவோம் என்ற தவிப்பு...

மனதால் ஒன்றான பின்.. மணத்தால் ஒன்று படுவது என்றோ.. பெருமூச்சுவிட்டான் அவன். முதலில் ப்ரியாவின் வீட்டில் என் விருப்பத்தை தெரிவிக்க வேண்டும்.. அப்புறம் அம்மாவிடம்...

ஊகூம்... அதற்கு முன் இந்தக் கல்யாண ஏற்பாட்டை நிறுத்தியாக வேண்டும். அப்புறம் தான் மற்றது எல்லாம். நேரே குன்னூருக்கு சென்று அக்காவிடம் என் காதலை எடுத்துச் சொல்ல வேண்டும். ஒருத்தியை நெஞ்சில் வைத்துக் கொண்டு.. இன்னொருத்திக் கழுத்தில் எப்படி தாலிக்கட்ட இயலும் என்று சொன்னால்... அக்கா புரிந்து கொள்ள மாட்டாளா... என்ன.. அக்காவின் சம்மதம் கிடைத்துவிட்டால் அது போதும்.. கூடவே மாமாவின் 'சப்போர்ட்டும்' இருந்துவிட்டால் என் காதல் நிச்சயம் ஜெயிக்கும்.. யெஸ்.. அப்படித்தான் செய்யணும்...

அந்த நினைப்பில் யானை பலம் உடலுக்குள் நுழைந் தது போல இருந்தது அவனுக்கு.

நாளைக்கே புறப்பட்டு விட வேண்டும் என்று தீர் மானித்துக் கொண்டான்.

இந்தக் காரியத்தை வெற்றிகரமாய் நடத்தி முடித்த பின்பு தான் ப்ரியாவின் பெற்றவர்களிடம் சொல்லி அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்..

என்னவோ.. ப்ரியாவின் கழுத்தில் அப்போதே தாலி கட்டிவிட்ட மாதிரி நிம்மதியும் சந்தோஷமும் வந்தது. வெகு ஆனந்தமாய் இலவம் பஞ்சு தலையணையை

அணைத்துக் கொண்டு படுத்துவிட்டான். தூக்கமும் வந்து ஆட்கொண்டது.

ப்ரியாவிடம் கண்களால் விடைப்பெற்றுக் கொண்டு புறப்பட்டான் சத்யா.

வானம் கறுத்து.. இடியும் உறுமிக் கொண்டு பய முறுத்தியது.

இரண்டு நாட்களாய் ஓய்வு எடுத்த மழை.. வீரியத் துடன் பொழிய காத்திருந்தது.

அவனுடைய பயணத்தின் காரணம் தெரிந்திருந்த தால்... அவனுக்கு வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தாள் ப்ரியா..

இதயத்திற்குள் அமுத தாரை பொழிந்தது... தன் எண்ணப்படியே எல்லாம் நடக்கிறது.

எல்லாம் நல்லபடியாக நடந்தால்... ஆகா நினைக் கையிலே நெஞ்சம் இனித்தது.

அருமையான வாழ்க்கை.. அன்பான கணவனுடன் சொகுசான இல்லறம்.

பிக்கல் இல்லை... பிடுங்கல் இல்லை... நான் வைத் தது தான் சட்டம்.. இஷ்டம்போல ஜாலியாக வாழலாம். அப்பாடா... அப்பாவின் நச்சரிப்பிலிருந்து தப்பிக் கலாம்... தொட்டுக்கோ.. துடைச்சுக்கோன்னு இருக்கிற இந்த ஏழ்மை நிலையிலிருந்து விடுதலை.. பெரிய வீடு.. கார்... வசதியான வாழ்வு என்று ராணியாக இருக்க லாம்.

''ஏய் ப்ரியா.. மசமசன்னு நிற்காமல்... போய் அரி சியை கழுவி இட்லி மாவுக்கு அரைக்கப் பார்.. நாளைக்கு



டிபனுக்கு வேணும்...'' தாயின் விரட்டலைக் கேட்டு அவளுக்கு எரிச்சல் வந்தது... பற்களைக் கடித்தாள்.

இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ள வேண் டும்... அப்புறம் இருக்கவே இருக்கு ராஜவாழ்க்கை...

வீட்டு வேலைக்கு ஆள் போட்டுக் கொள்ள வேண் டும்.. அலுக்காமல்.. சலிக்காமல்.. கனவுகளுடனேயே மாவாட்டி வைத்தாள்... அந்த மயக்கத்தில் உடல் வலி கூட அவளுக்கு தெரியவில்லை.

அன்றைக்கே சத்யத்தின் பெயரில் குரியரில் கடிதம் ஒன்று வந்தது.

''அடடா.. அந்தப் பிள்ளை ஊருக்குப் போயிட்டானே. இதில் என்ன செய்தியோ.. ப்ரியா.. இதைக் கொண்டு போய் சத்யாவோட அறையினுள் வைத்துவிட்டு வா.. சாவியை அங்கே மாட்டியிருக்கேன் பார்..''என்றாள் ப்ரியாவின் தாய் வசந்தா.

ப்ரியாவுக்கும் ஆர்வம்.. என்ன இருக்கிறது அந்தக் கடி தத்தில்.. மறுபடியும் திருமண விஷயமாக வந்திருக் கிறதா.. யார் எழுதியிருக்கிறார்கள்.

கடிதத்தைப் பார்த்தாள்.

சந்திரிகாவாமே யார் அது. விலாசத்தைப் பார்த்தாள். குன்னூர் என்று இருந்தது.

ஓ! குன்னூரில் இருப்பது சத்யாவின் அக்கா அல் லவா.. அப்படித்தானே சொன்னார் சத்யா. அப்படி யென்ன முக்கிய செய்தி.... குரியரில் அனுப்பும்படி...

மாடியேறியவள்... அந்தக் கடிதத்தின் ஓரத்தைக் கிழித்து உள்ளிருந்ததை எடுத்துப் பார்த்தாள்.

கடிதம்.. கூடவே ஒரு பெண்ணின் போட்டோவும். அவளுக்கு விட்ட சரமாய் போட்டோவை எடுத்து பார்வை ஓட விட்ட 'திடுக்' என்றது.

அந்தப் போட்டோவில் இருந்த பெண் பேரழகியாகத் தோன்றினாள்.

தான் அழகி என்ற கர்வம் ப்ரியாவுக்கு உண்டு. ஒரு ஆணைக் கவர்ந்து இழுத்து வசப்படுத்தும் அழகு தனக்கு உண்டு என்பதை உணர்ந்தவள் தான்..

ஆனால் இந்த பெண்.. பெண்ணான என்னையே பிரமிக்க வைக்கிறாளே என்று நினைத்தவளுக்கு அடிவயிற்றில் அமிலம் சுரந்தது.

அந்தப் போட்டோவை உற்று நோக்கினாள். நிலவாய் பொலியும் வதனம்.. அதற்கு வனப்பூட்டும் கரும்பட்டு கேசம்.. பிறை நெற்றி.. சிரிக்கும் அழகான கண்கள்.. பளிங்காய் மினுமினுக்கும் கன்னங்கள்.. கொவ்வை செவ்வாயில் குமிண் சிரிப்பு.. எடுப்பான நாசி.. சங்கு கழுத்து.. கொடி உடல்.. 'மாடலு'க்கு போயிருந்தால் நிச்சயம் பெயர் எடுத்திருப்பாள்.. நினைக்கவே பொறாமையாகத்தான் இருந்தது.

இந்தப் பெண்ணின் அழகு எனக்கில்லை தான்... என் அழகு இவளைப் போல சொக்க வைக்கும் அழகு இல்லையே...

உள்ளத்தில் தகதகவென்று எரிந்தது.

மைகாட்! இந்தப் போட்டோவை சத்யா பார்க்கவில்லை... பார்த்திருந்தால்.. மனம் மாறியருப்பாரோ... நல்லவேளை.. அவர் சென்றபின்பு வந்ததே... தாங்க்காட்... ஒருவித எரிச்சலுடன் கடிதத்தைப் பிரித்து வாசித்தாள்.



'அன்புத் தம்பி சத்யாவிற்கு.. அக்கா எழுதிக் கொண்டது. அம்மா உனக்கு சொல்லியிருப்பாள்.. இருந்தும்.. நானும் உனக்கு எழுதுகிறேன்.. எனக்கு தெரிந்த பெண்.. பெயர் நந்திதா.. நன்கு படித்திருக்கிறாள்.. குடும்பம் நல்ல குடும்பம்.. பெண்ணை நான் நேரில் பார்க்கா விட்டாலும்... அவளைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்.. அவளது நற்குணங்களைப் பற்றி.. அந்தப் பெண்ணின் சித்தி பூமா.. அதாவது என் தோழி என் காது புளிக்க சொல்லியிருக்கிறாள்... உடனே என் மனசுக்குள் முடிவு செய்து கொண்டேன். இவள் தான் உனக்கு மனைவியென்று.. உனக்கும் அந்தப் பெண்ணை நிச்சயம் பிடிக்கும்... (போட்டோவை பார்... மயங்கிடுவே) உனக்கு நேரில் அந்தப் பெண்ணைப் பார்க்கும் ஆசை இருந்தால்... அவர்கள் வீட்டுக்கே சென்று பார். இல்லை.. முறையாய் போய் பெண் பார்க்கலாம் என்றால்.. பொறுமையாக இரு.... (அவர்கள் வீட்டின் விலாசம் கொடுத்திருக்கிறேன்) இந்தக் கடிதத்தைக் கண்டதும் உடனே போன் பண்ணு... இந்த போட்டோவிற்காக கடிதம்.. இல்லையென்றால் போனிலேயே பேசியிருப்பேன்.. சரி.. போட்டோவைப் பார்த்ததும் அக்காவை மறந்துவிட வேண்டாம் என்ன...'

பற்களை நறநறவென்று கடித்தாள் ப்ரியா.. தன் வாழ்வுக்கு வில்லியாக வந்த நந்திதாவின் போட்டோவை சுக்கலாய் கிழித்து எறிந்தாள். தன் சந்தோஷத்திற்கு இடையூறாய் வந்திருந்த அந்தக் கடிதத்தை கசக்கி வீசினாள்.

உள்ளம் எரிமலையாய் கொதித்தது. அதே சமயம் அறிவு விழித்துக் கொண்டு குரல் கொடுத்தது.

சீப்பை எடுத்து மறைத்து வைத்தால் கல்யாணம் நின்று விடும் என்ற மடத்தனமான எண்ணமாக்கும், போட்டோவையும்.. கடிதத்தையும் அழித்து விட்டால்.. முடிந்து விடுமா....

சத்யா செல்வது அவனுடைய அக்காவின் இருப்பிடத்திற்கு.. அங்கே போய் அவளோட போட்டோவைப் பார்க்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்.. அந்த நந்திதாவை திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கமாட்டான் என்று என்ன உறுதி.. எறும்பு ஊற கல்தேயும் என்பது போல... அவனோட அக்காவின் உபதேசத்தால் அவன் மனம் மாறாது என்பதற்கு என்ன உத்தரவாதம், மடைச்சி... ஏமாறப்போவது நீதான்..

இப்போது என்ன செய்வது.. எப்படி இதை நிறுத்துவது.. எதைச் சொன்னால் இந்தத் திருமணம் நின்று போகும்...

அந்த நேரத்தில் தான் 'பளிச்'சிட்டது அவளுக்கு.. ஆமாம்... இப்படிச் செய்யலாமே...

ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்துவது சரியென்னும்போது.. ஒரு உண்மையைச் சொல்லி நிறுத்துவதில் தப்பில்லையே. உள்ளதைத் தானே சொல்லப்போகிறோம். ஆம்... அதுதான் சரியான ஆயுதம்.. யெஸ்...

மொட்டைக் கடிதம்!

சாதாரணமாய் அது பொய்யைத் தான் உரைக்கும். ஆனால் இப்போது.. இந்த மொட்டைக் கடிதம்



உண்மையை சொல்லி கல்யாணத்தை நிறுத்தப் போகிறது. என்ன எழுதலாம். எப்படி எழுதினால் உறைக்கும். யோசித்தாள் ப்ரியா.. விஷயத்தை கொஞ்சம் மசாலா சேர்த்து சொன்னால் இன்னும் அதிர்ச்சியாக இருக்கும். என்ன.. சத்யாவைக் கொஞ்சம் ஜொள்ளுப் பார்ட்டியாக்க வேண்டும்.. அப்போதுதான்.. அவர் இருக்கும் திசைக்கே கும்பிடு போடுவார்கள். சத்யாவும் தப்பாக நினைக்கமாட்டார்.

அப்புறம் என்ன.. தனக்கு தோன்றியதையெல்லாம் மளமளவென்று ஒரு காகிதத்தில் எழுதி கடைசியில்... அந்த பையனுக்கு கொடுப்பதை விட உங்கள் பெண்ணை ஒரு பாழும் கிணற்றில் தள்ளுவதே மேல் என்று சேர்த்தாள்.

மறுபடியும் படித்துப் பார்த்தவள்.. கொஞ்சம் ஓவராகவே எழுதிவிட்டோமோ.. சத்யாவின் 'இமேஜு'க்கு பங்கம் வந்த மாதிரி இருக்குமோ என்று குழம்பியவள்.. உடனே சமாளித்துக் கொண்டு.. இருந்து விட்டுப் போகட்டுமே.. சத்யாவைப் பற்றி எனக்குத் தெரிந்தால் போதும்.. அவர்கள் யாரோ.. அவர்கள் என்ன நினைத்தால் நமக்கென்ன.. இந்தத் திருமணம் நின்றால் போதும்... என்று அந்தக் கடிதத்தை மடித்து வைத்தாள்.

பிரவாகமாய் கொட்டிய மழையில் கூடியவரைக்கும் முழுவதும் நனையாதவாறு... ஓரமாய் நடந்து நின்றிருந்த 'வோல்வா' பஸ்ஸில் ஏறிக் கொண்டாள் நந்திதா.

சீட் நம்பர் பதினைந்து.. தேடிப் பிடித்து அமர்ந்தாள் அவள்.. காலின் கீழே ஏர்பேக்கை வைத்துவிட்டு.. ஜன்னலோரம் என்றாலும்... திரையால் மூடப்பட்டிருந்தது.

''ஜோ''வென்று பொழிந்த மழையில் வெளியுலகமே மங்கலாய் தெரிந்தது.

துப்பட்டாவை எடுத்து தலைமேல் போட்டுக் கொண்டு சீட்டின் மேல் சாய்ந்து கொண்டாள்.

மழையினாலோ.. இல்லை... பகல் பயணம் என்பு தாலோ.. அவ்வளவாக பயணிகள் இல்லை.. பயணிகள் சேரும் வரை பஸ் காத்திருக்குமோ என்னவோ...

கைகடிகாரத்தை திருப்பிப் பார்த்தாள்.

மணி பத்து.. எப்போது பஸ் கிளம்புமோ.. பெருமூச்சு விட்டாள்.

சித்திக்கு தெரிவிக்கவில்லை... திடீர் என்று போய் நிற்க வேண்டும்.. 'சர்ப்ரைஸ்' தர வேண்டும் என்ற ஆசைதான் அப்புறம்.. சித்தியிடம் நிதானமாய் எடுத்துச் சொல்ல வேண்டும்...

திருமணத்தில் எனக்கு நாட்டமில்லை சித்தி. எனக்கு பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பது தான் குறிக்கோள்... கல்யாணம் என்ற வலையில் சிக்கி அவதிப்பட பிடிக்கவில்லை... வேண்டாமே என்று சொன்னால்.. சித்தி புரிந்து கொள்ளமாட்டாளா.. அப்படி நடக்கும் என்ற நம்பிக்கை நெஞ்சில் ஊறியது.

திடீர் என்று இதமான நறுமணம் நாசியை வருடியது... பாடி 'ஸ்ப்ரே'யின் வாசனைதான். கூடவே.. பக்கத்து ஸீட் அமுந்தியது போல கிறீச் ஒலி...

கண்களைத் திறந்து பார்த்தாள்.

வாலிபன் ஒருவன்... அதுவும் அழகான வாலிபன் அமர்ந்திருந்தான்.



அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.. ஒதுங்கி அமர்ந்தாள்.

கூடவே சலிப்பும் ஏற்பட்டது... பெண் பயணியாக இருந்திருந்தால்... சகஜமாய் அமர்ந்திருக்கலாம் தான். ஆண் பயணி.. அதுவும் இளைஞன்.. சே.. ஆனால் இதை ஒரு குறையாக சொல்ல முடியுமா.. என்னம்மா... படித்தப் பெண்ணா இருக்கே.. இப்படி பத்தாம் பசலித் தனமா பேசுகிறாயே என்று சொல்வார் கண்டக்டர்...

இந்தக் காலத்தில் இதெல்லாம் சகஜம்தான்.. பேசாமல் இருப்பதே நல்லது.

அந்த எண்ணத்தில் கண்களை மூடிக் கொண்டு சீட்டின் மேல் சாய்ந்து கொண்டாள் அவள்.

அரைமணி நேரத்தில் 'மளமள'வென்று பயணிகள் சேர்ந்துவிட... பஸ்ஸும் நிறைந்து விட்டது. உடனே அது புறப்பட்டும் விட்டது. பயணமும் தொடங்கியது.

இரண்டு மணி நேரம் கழிந்திருக்கும்.

பக்கத்து சீட்டில் இருந்தவனின் 'செல்' சிணுங்கியது.

''அலோ''

.........

''குரியரா... வரவில்லையே.. ஊகூம்.. உம்.. உம்...''

...........

''அது விஷயமாய் நானே நேரில் வந்து பேசுகிறேன்.. ஓ.கே..''

அவன் பேசியது காதில் விழுந்தது.

இன்னும் அரைமணி நேரம் கழிந்தது.

மறுபடியும் அவனது 'செல்' முனகியது. எடுத்துப் பேசினான். இப்போது அவனது குரலில் உற்சாகம் தெரிந்தது.

''ஹாய்.. என்ன விஷயம்..''

.........

''அப்படியா...''

.............

''தப்பு இல்லைடா... யாரிடமிருந்து வந்திருந்தது...''

''..............''

''அடடா.. அனுப்பிவிட்டாயா.. சரி லீவ் இட்.. நான் பார்த்துக் கொள்கிறேன். ஓ.கே...''

வேண்டாம் என்றாலும் காதில் வந்து விழுந்தன வார்த்தைகள்.. இப்படித்தான் தொடர்ந்து 'நொய் நொய்' என்று 'செல்'லில் அறுப்பானோ...

துப்பட்டாவால் காதுகளை மூடி சுற்றிக் கொண்டாள் நந்திதா...

எப்போது ஊர் போய் சேருவோம். எப்போது சித்தியிடம் பேசி நடக்கப்போகும் திருமண ஏற்பாட்டை நிறுத்துவோம் என்று இருந்தது அவளுக்கு. அந்த பரபரப்பில் பயணம் செய்த வாகனம் ஊர்வது போல தோன்றியது.

இந்த வேண்டாத பயணத்திற்கு காரணமான கல்யாண ஏற்பாட்டை வெறுத்தாள் அவள். பாவம்.. அந்த கல்யாண நாயகன்தான் தன் அருகே அமர்ந்திருக்கிறான். அவள் உணரவில்லை...



# 4



சத்யாவுக்கு இருந்த கவலையில் அருகில் ஒரு அழகான இளம்பெண் அமர்ந்திருப்பதையும் கவனிக்கவில்லை.

மனம் அந்த அளவு குட்டையாய் குழம்பிப் போய் இருந்தது.

முதலில் போகும் காரியம் ஜெயம் ஆக வேண்டுமே என்ற தவிப்பு.. அக்கா பிடிவாதமாய் இருந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை... தன் காதல் திருமணத்தில் முடியுமா.. ப்ரியா எனக்கு மனைவியாக வேண்டுமே என்ற துடிப்பு..

இந்த 'டென்ஷனில்' பக்கத்து இருக்கையில் யார் இருக்கிறார்கள்... அது ஆணா பெண்ணா என்றெல்லாம் எப்படி கவனிக்கத் தோன்றும்.

அது போதாது என்று அக்காவிடம் இருந்து போன் வேறே... அந்தப் பெண்ணைப் பற்றி விலாவாரியாய் விளக்கம்... நந்திதாவாம்... பெயரைப் பார்... உண்மையிலேயே என் காதலுக்கு நந்தி தான்.. சே.. சென்னையில் பெரிய பணக்காரரான கேசவனின் பெரிய மகள்.. எம்.எஸ்ஸி இன் மைக்ரோபயாலஜி. அவளோட சித்தி பூமா தான் இந்தப் பெண்ணைப் பற்றி சொன்னது.. பெண் அவ்வளவு அழகு.. அவளது போட்டோவை குரியரில்

அனுப்பினேன். நீதான் பார்க்கவில்லை... பார்த்தாயோ அப்படியே மயங்கிடுவே. இத்யாதி... இத்யாதி...

கண்றாவி! மயங்கிடுவேனாமே...

என் அன்புக் காதலி ப்ரியாவைத் தவிர யாருமே எனக்கு அழகி இல்லை.. ஏன்.. ரம்பையும் ஊர்வசியும் கூட என் ப்ரியா முன் 'பூஜ்யம்' தான்.. அப்புறம் இந்த நந்திதா என்ன... ஜூஜூபி... இப்படியெல்லாம் நந்திதா புராணம் பாடும் தமக்கையிடம் போய் ப்ரியாவைப் பற்றிச் சொல்லி எப்படி புரிய வைப்பது.. அதைக் காதில் வாங்கிக் கொள் வளா அக்கா.. அதுதான் தெரியவில்லை.

இதுதான் இப்படி என்றால்.. ப்ரியாவும் போனில் சொன்ன விஷயம் இன்னொரு தலைவலி.. குரியரில் வந்த கடிதத்தைப் படித்துவிட்டு... நந்திதாவின் வீட்டிற்கு ஒரு மொட்டைக் கடிதாசி போட்டு விட்டாள்.. அவசர குடுக்கையாய் செய்த செயல் எதில் முடியுமோ...

பெண் வீட்டார் சும்மா இருப்பார்களா.. பேசாமல் ஒதுங்கி விட்டால் நல்லது.. அக்காவிடம்.. உன் தம்பி யின் லட்சணம் பார்த்தாயா... அவனுக்கா எங்கள் வீட்டுப் பெண்ணைக் கேட்டாய் என்று பூமாவாமே அவர்கள் வரிந்து கட்டிக் கொண்டு சண்டைப் போட்டால்.. சே.. தலைகுனிவாகிவிடும்...

ஆனால்.. அதற்காக ப்ரியாவைக் கோபித்துக் கொள்ள வும் முடியவில்லை. என் மீது இருக்கும் காதலினால்தான் அவள் அப்படிச் செய்தது.

இதனால் வரும் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பதை பற்றித்தான் யோசிக்க வேண்டும்.

என்ன... அம்மாதான் கோபத்துடன் கத்துவாள்.



''ஏண்டா... அந்த மொட்டைக் கடிதாசி விஷயம் நிஜமா.. இதுக்குத்தான் உன்னை அங்கே அனுப்பி னேனா.. போதும்டா... நீ வேலை செய்து கழட்டினது.. உடனே புறப்பட்டு வா.. அப்பா உன் மீது கோபமா இருக்கிறார்'' என்று விளாசுவாள்.. இந்த நேரத்தில் தான் துணிச்சலுடன் செயல் பட வேண்டும்.

தைரியமாய் ப்ரியாவைத்தான் மணப்பேன்.. அவள் தான் என் மனைவி என்று அடித்துப் பேச வேண்டும்.. அம்மா அழுதாலும்.. கதறினாலும் தாழ்ந்து போகக் கூடாது.. மன உறுதியுடன் இருந்து ப்ரியாவை கை பிடிக்க வேண்டும்.

வானமே பிளந்து விழுந்தாலும் தளராமல் இருக்க வேண்டும்.

அவனது எண்ணத்தை எதிரொலிப்பதுபோல வானம் பிளந்தது போல இடி இடித்தது. ஆகாச கங்கையாய் மழை கொட்டோ கொட்டெனக் கொட்டியது.

அந்தப் பெருமழையில் டிரைவர் வெகு சாமர்த்திய மாய்த்தான் வண்டி ஓட்டிக் கொண்டிருந்தார் என்று சொல்ல வேண்டும்.

எந்த நேரத்தில் எது நடக்குமோ என்பது போல ஒரு வித பயம் மனதைக் கவ்வியது.. மணியைப் பார்த்தான்.. ஏழு மணி!

வெளியே இருட்டாக தெரிந்தது... ஆங்காங்கே மரங்கள் தலைவிரி கோலத்தில் நின்று பயமுறுத்தின. ஏதாவது ஊர் வருகையில்.. மின் விளக்குகள் மின்மினிப் பூச்சிகளாய் இருட்டில் ஒளிர்ந்தன...

எங்கே இருக்கறோம் என்று புரிந்து கொள்ள முடியாத அளவு இருட்டு அடர்ந்து இருந்தது. அப்போதுதான் பக்கத்து சீட்டுப் பெண்ணை சரியாக பார்த்தான் அவன்.

கையில் ஒரு ஆங்கில நாவலை வைத்துக் கொண்டு... அதில் ஆழ்ந்து போயிருந்தாள் நந்திதா.

அவளிடமிருந்து ஒருவித நறுமணம்... பாடி லோஷனா.. இல்லை.. பவுடரா.. தெரியவில்லை... இதமாய்... சுகமாய் அவனது மூக்கில் நுழைந்து மயிலிற காய் நெஞ்சை வருடித் தந்தது.

ப்ரியா அருகில் வந்தால்.. நினைவு காதலியிடம் தாவியது. தலையில் சூடியிருக்கும் மல்லிகை வாசம்.. கோகுல் சான்டல் பவுடர் வாசம்.. லக்ஸ் சோப் வாசம் என்று கலவையாய் வாசனை வருமே..

அந்த நினைப்பில் காதலிக்காக மனம் ஏங்கி தவித்தது.. இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள்.. என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பாளோ... வரும்போது நல்ல செய்தியுடன் வரவேண்டுமே என்ற எதிர்பார்ப்புடன் வழிமேல் விழி வைத்து... ஆசையாய் காத்திருப்பாள் பாவம்...

கற்பனையில் அன்புக் காதலியின் காத்திருக்கும் கோலத்தைக் கண்டபோது உற்சாகம் ஊறியது... எதையும் சாதிக்க முடியும் என்ற நெஞ்சுரமும் வந்தது...

அந்த சந்தோஷத்தில் திளைத்துக் கொண்டிருந்த கணத்தில்தான் அது நடந்தது...

'தடால்' என்ற சத்தம்.. எதிலோ பஸ் முட்டி மோதி நின்றதா... இல்லை ஏதாவது பஸ் மேல் விழுந்ததா என்று தெரியவில்லை...



ஆனால் அந்த சொகுசு பஸ் அப்படியும் இப்படியுமாய் ஆட்டம் கண்டு எதிலோ இறங்கி நின்றது.

அந்த வேகத்தில் பஸ்ஸின் கண்ணாடிகள் சிலீர் என்று உடைந்தன.. முன் பக்க கண்ணாடி சுக்கலாய் உடைந்து.. ஓட்டுனர் மேல் தெரித்தது.

என்ன நடந்தது.. ஏது நடந்தது என்று உணர முடியாத அந்த வேளையில்.. 'அய்யோ...' 'அம்மா' 'ஜீஸஸ்..' என்று விதவிதமான வேதனைக் குரல்கள்.. கூடவே.. 'வீல்' என்று அலறிய குழந்தைகள்... முன்புறம் சாய்ந்த நந்திதா.. கொஞ்சம் சுதாரித்துக் கொண்டதால் தோள் புறம் லேசாய் வலி மட்டுமே.

பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்தவனிடமிருந்து 'அய்யோ' என்று குரல் கேட்டதும் தான் அவனுக்கு நல்ல அடி என்று தெரிந்தது.

அவன் நெற்றியை தடவிக் கொண்டிருந்தான்.

''என்னவாயிற்று...'' என்று அவனிடம் கேட்டாள்.

''மேலிருந்து சூட்கேஸ் தலைமேல்.. ஊகூம்... நெற்றிமேல் விழுந்திருக்கிறது... சூட்கேஸின் உருளை உரசி.. காயம் பட்டிருக்க வேண்டும்.. ப்ச்சு... வலி தாங்க முடியவில்லை. ஏதோ விபத்துன்னு நினைக்கிறேன்... உங்களுக்கு அடிகிடி படவில்லையே...''

''லேசாய் தோளில் வலி... அவ்வளவுதான்.. இத்தனை நேரம் நன்றாக தானே ஓடியது வண்டி.. திடீர்னு என்ன ஆயிற்றுன்னு தெரியலையே..''

''விபத்தோ என்னவோ.. இருங்கள்... போய் பார்த்து விட்டு வருகிறேன்..'' என்று எழுந்து சென்றான் அவன்.

நந்திதாவும் சன்னல் வழியே பார்க்க முயன்றாள். ஊகூம்.. வெறும் கும்மிருட்டு மட்டுமே...

பஸ்ஸுக்குள் சலசலப்பு... பயணிகளிடையே பரபரப்பு.

"டிரைவர் என்ன ஆச்சு.. ஆக்ஸிடெண்டா..." என்று விசாரித்தார் முன் சீட்டில் அமர்ந்திருந்த ஒருவர்...

"பெரிய மரம் ஒண்ணு வேரொடு விழுந்ததைப் பார்த்துவிட்டு பஸ்ஸைத் திருப்பினேன் சார்.. வண்டி பள்ளத்தில் இறங்கி.. முட்டுச் சுவரில் மோதி நின்றுவிட்டது... தண்ணீர் வெள்ளமா ஓடுது. பாதையில் மரம் குறுக்கே விழுந்திருக்கிறது. என்ன செய்வதுன்னு தான் தெரியவில்லை..."

"அது சரி.. நாம எங்கே தான் இருக்கிறோம்.. அதை சொல்லுங்கப்பா.. பார்த்தால் அத்துவான காடு மாதிரி இருக்கிறது... இந்த நேரத்தில் யாரு உதவிக்கு வருவாங்க.. அடச்சே.. இந்த மழை வந்தாலும் கஷ்டம்.. வரலேன்னாலும் கஷ்டம்.." அங்கலாய்ப்புடன் சொன்னார் இன்னொரு பயணி.

"நாம மேட்டுப்பாளையத்தை தாண்டி வந்தாச்சு.. குன்னூருக்கு போகும் வழியில் இருக்கோம்.. இருங்க.. யாராவது இந்த பக்கமா வருகிறார்களான்னு பார்ப்போம்." சொல்லும்போதே பின்னால் வேறொரு பஸ் வருவது தெரிந்தது.

இந்த பஸ்ஸின் நிலைமை கண்டதும் நின்றுவிட்டது. கண்டக்டர் தலையில் கர்சீபை போட்டுக் கொண்டு வந்து பார்த்துவிட்டு... நிலைமையைப் புரிந்து கொண்டார்.



அந்த இரவு நேரத்தில்.. விழுந்த மரத்தை நகர்த்தி விட்டுப் பயணத்தைத் தொடர்வது என்பது இயலாத காரியமாகத் தெரிந்தது.

பின்னாலேயே வந்த பஸ்களும் கார்களும்.. வரிசையாய் நின்று விட.. அங்கே டிராபிக் ஜாம் உண்டானது.

கார்கள் மட்டும் வந்த வழியே திரும்பிச் சென்றன. பெரிய வாகனங்களால் அது முடியாதே... தவிர.. மழைப் பெருக்கத்தினால் வழியெல்லாம் வெள்ளக் காடாக இருந்தது... திரும்பிச் செல்வதும் கூட 'ரிஸ்க்' ஆன விஷயமே.

இப்போது என்ன செய்வது என்று வழி தெரியாமல் திகைத்து நின்றிருந்தனர் பஸ் பயணிகள்.. கிட்டதட்ட ஐந்து பஸ்கள்.. அதுவும் கடைசி பஸ்ஸில் வந்தவர்கள்.. வந்த வழியில் மரங்கள் சாய்ந்து விழுந்ததால்.. திரும்பி செல்வதும் சாத்தியம் இல்லவே இல்லை என்று சொல்ல.. அனைவருக்கும் பகீர் என்றது.

பெண் பயணிகளுக்கோ குலை நடுக்கம்.. அதுவும் கைக் குழந்தைகளுடன் வந்தவர்களுக்கு அங்கமெல்லாம் அதிர்ந்தது.

பத்திரமாய் ஊர் போய் சேருவோமா என்று பதற்றத்தில் உறைந்து போய் அமர்ந்திருந்தனர்.

என்ன செய்வது.. ஏது செய்வது என்று தெரியாத கலக்கத்தில் மேலும் இரண்டு மணி நேரம் கழிந்தது.

பஸ் டிரைவர் குன்னூர் பஸ் நிலையத்திற்கு 'செல்'லில் போன் செய்து நிலவரத்தை சொன்னபோது.. மேலும் ஒரு திடுகிடும் தகவல் கிடைத்தது.

நிலச்சரிவு ஏற்பட்ட காரணத்தினால் பஸ் போக்கு வரத்து பாதிக்கப்பட்டுள்ளதாம்.. பாதையெல்லாம் மண் மேடாகி வழித்தடமே இல்லாமல் போய் விட்டது. ஆகையால் திரும்பச் சென்று விடுங்கள் என்று நிலை யத்தின் மேலதிகாரி சொன்னதும் அதிர்ச்சி...

திரும்புவதா.. எப்படி முடியும்.. ஆங்காங்கே மரங்கள் பெயர்ந்து சாலையில் விழுந்து கிடக்கையில் திரும்பு தாவது...

பாவம்... பயணிகள் எத்தனை மணி நேரம் இப்படியே அமர்ந்திருக்க முடியும்... குழந்தைகளும் பசியுடன் இருக்கிறார்களே...

தவிர அடிப்பட்டிருக்கும் பயணிகளுக்கு சிகிச்சை த வேண்டாமா.. யாரோ ஒரு பயணிக்கு மூக்கில் நன்றாய் அடிப்பட்டு 'கொட கொட' வென்று ரத்தம் வழிந் திருக்கிறது...

டிரைவருக்கும்.. கண்டக்டருக்கும் பதைப்பு.. இரு வரும் கையைப் பிசைந்து கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் தான் ஒரு 'இன்னோவா' கார் வந்து நின்றது.

விஷயம் அறிந்து அருகில் இருந்த ஊரின் பெரிய மனிதர் அவசரமாய் வந்திருந்தார்.

அனைவரையும் தன் ஊரில் தங்க வைக்க ஏற்பாடு செய்திருப்பதை சொல்லி.. அதற்காக மினி பஸ்களும் காத்திருக்கின்றன... இறங்கி வாருங்கள் என்று அழைத் ததும்.. அனைவருக்கும் போன உயிர் திரும்பி வந்தத் போல இருந்தது.



இந்த வனாந்தரத்தில்... கொட்டும் மழையில் வயிற்றுப் பசியுடன் இருக்க வேண்டுமே என்று தவித்த உள்ளங் களுக்கு அவர் சொன்னது நெஞ்சில் பாலை வார்த்தாற் போல இருந்தது.

பயணிகள் அனைவரும் பரபரவென்று இயங்கி தங்கள் உடைமைகளை வாரி எடுத்துக் கொண்டு இறங் கினர்.

குழந்தைகளின் தலைமீது டவலை சுற்றி மழையில் நடந்து.. காத்திருந்த வண்டிகளில் ஏறினார்கள். நந்தி தாவும் சத்யாவும் தான்.

டிரைவரும் கண்டக்டரும் நல்லவர்கள்... எதிர்பாரா மல் ஏற்பட்ட அசௌகரியத்திற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டதுதான் மனதை கரைய வைத்த விஷயம்.

எப்படியோ.. மழையினின்றும்.. இக்கட்டிலிருந்தும் தப்புவதற்கு வழி கிடைத்ததே.. அதுபோதும் என்ற சந்தோஷத் துள்ளலுடன் பயணிகள் புறப்பட்டனர்.

அது சின்ன ஊர்தான்.. கிட்டத்தட்ட கிராமம் என்று தான் சொல்ல வேண்டும்.

ஐந்து பஸ்களிலிருந்த சுமார் இருநூறு பயணிகள் வேறு வழியின்றி அங்கே தங்க வேண்டிய நிலைமை. அனைவரையும் ஒரு சின்னக் கல்யாண மண்டபம் ஒன் றில் தங்க வைத்து... அவர்களுக்கு அந்த இரவு நேரத்தில் சுடச்சுட பாலும்.. வாழைப்பழம்.. பிஸ்கட்டும் விநி யோகிக்கப்பட்டது. அந்தக் குளிரில் அவை தேவாமிர்த மாய் இருந்தன.

விடாத மழையினால் தரையெங்கும் வெள்ளப் பெருக்கம். ஊரெல்லாம் வெள்ளக்காடாய் இருப்பதால்..

இப்போதைக்கு அங்கிருந்து செல்லவும் முடியாது என்று நன்றாகவே தெரிந்தது.

புறப்பட்ட நேரம் சரியில்லையோ என்னவோ.. ச... யான ராகு காலத்தில் புறப்பட்டிருக்க வேண்டும் அதான்.. இப்படியெல்லாம் தடங்கல்கள்...

அடைமழையில் புறப்பட்டது முட்டாள் தனம்தான்... சே.. புறப்பட்டோமா.. ஊர் போய் சேர்ந்தோமா என்று இல்லாமல்.. இப்படி நடு வழியில் சிக்கிக் கொள்ளும்படி ஆனதே..

சலிப்புடன் நினைத்தன சில மனங்கள்...

மனிதன் இயற்கையை சிதைத்தால்... பதிலுக்கு இயற்கை மனிதனை வதைக்கிறது.. தட்ஸ் ஆல்... என்று வேதாந்தத்துடன் பார்த்தன சில உள்ளங்கள்.

இதுதான் நடக்க வேண்டும் என்றால்.. அதை யார... லும் தடுத்து நிறுத்த முடியாது.. எல்லாம் நன்மைக்கே... என்று நினைத்து ஏற்க வேண்டியது தான் என்று எண்ணின சில பக்குவ உள்ளங்கள்.

நந்திதாவோ மாறுபட்ட சிந்தனையில் இருந்தாள்...

அவளது சேவை மனம் காயம் பட்டவர்களுக்காக... துடித்தது...

காலில் அடிப்பட்ட பெரியவர் ஒருவரைக் கைத்... தாங்கலாய் அழைத்துச் சென்று இருக்கையில் அம... வைத்தாள்.. டவலை நனைத்து வந்து அடிப்பட்ட... இடத்தைச் சுற்றினாள்.. தன் கைப்பையிலிருந்து ஒரு... மாத்திரையை எடுத்து அதை வாயில் போட்டுக்... கொள்ளும்படி சொன்னாள்.



அப்போது ஒன்றரை வயது குழந்தையொன்று 'வீல்' என்று அலற... அந்த குழந்தையை நோக்கி விரைந்தாள்.

''என்னவோ தெரியலைம்மா... குழந்தை பால் குடிக்காமல் வீறிடுகிறது..'' என்றாள் பெற்றவள்.

''முதல்ல குழந்தையை இங்கே கொடுங்கள்..'' என்று வாங்கிக் கொண்டவள்.. குழந்தையை எறும்பு ஏதாவது கடித்ததா என்று ஆராய்ந்தாள்.

ஊகூம்... எதுவும் கண்ணில் படவில்லை.

குழந்தைக்கு பசியென்றால் பாலை விரும்பி குடித்திருக்குமே.. யோசித்தவளுக்கு மூளையில் 'பளிச்' சென்ற வெளிச்சம்...

ஒருவேளை... 'நாப்பி'யாக இருக்கலாமோ...

உடனே அங்கிருந்த பென்ச்சில் படுக்க வைத்து அதைக் கழற்றினாள்.

உண்மைதான்.. நீண்ட நேரமாய் 'நாப்கின்'னைப் போட்டிருந்ததாலோ என்னவோ.. அந்த இடம் முழுக்க.. சிவந்து போயிருந்தது.

குழந்தையின் தாயிடமே கொஞ்சம் வென்னீர் வாங்கி அந்த இடத்தை நன்றாக துடைத்து... ஜான்ஸன் பேபி லோஷனை இதமாய் தடவ... குழந்தையின் அழுகை குறைந்து போனது.

பாட்டில் பாலை கொடுத்ததும் உடனே மளமள வென்று குடித்தது அந்த பிஞ்சு..

வயிறு நிறைந்ததாலோ... இல்லை... 'நாப்கி'னால் ஏற்பட்ட வேதனை குறைந்ததாலோ.. தெரியவில்லை... குழந்தையின் முகத்தில் சிரிப்பு வந்தது.

''ராத்திரி 'நாப்கின்' கட்டாமல் படுக்க வையுங்கள் சரியாகிவிடும்..'' என்ற நந்திதாவிற்கு மனதார நன்றி சொன்னாள் குழந்தையின் தாய்.. அதை புன்னகையுடன் ஏற்றுக் கொண்டாள் அவள்.

அந்த நேரத்தில் அந்த ஊர் கவுன்சிலரும்.. இன்ஸ் பெக்டரும்... ஊர் பெரிய மனிதருடன் வந்தனர். கூடவே ஒரு வயதான டாக்டரும் வந்திருந்தார். அந்த டாக்டர் அடிப்பட்டவர்களை கவனித்தார். யாருக்கும் பலத்த காயமில்லை என்ற நிம்மதி.

''நீங்கள் காட்டவில்லை... உங்கள் நெற்றியில் இரத்தம் கன்றி.. வீக்கமும் தெரிகிறதே...'' சத்யாவிடம் கேட்டாள் நந்திதா.

''சின்ன காயம்.. இதற்கு டாக்டரா.. ஒரு நாளில் இது சரியாகிவிடும்.. விடுங்கள்'' என்றான் அவன்.

''ஊகூம்.. ஊமைக்காயம் என்றாலும்.. அலட்சியமாய் நினைக்கக் கூடாது... இருங்கள் வருகிறேன்..'' என்றவள்.. நீரில் நனைத்த கைக்குட்டையைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள்.

''முதலில் இதைக் காயத்தின் மேல் வையுங்கள். வீக்கம் குறையும்.. வலியும் மறைந்து விடும்..'' என்றாள் கரிசனத்துடன்.

''என்னங்க.. நீங்க என்ன தேவதையா.. அன்போடு எல்லாரையும் கவனிக்கறீங்க.. நானும் உங்களை கவ னித்துக் கொண்டிருக்கிறேன்.. ஓடிப்போய் உதவுகிறீர் களே... எனக்கு ஆச்சர்யமா இருக்கிறது'' என்று சொன் னான் சத்யா.

''இதிலென்ன ஆச்சர்யம்.. மனித நேயம் வெளி வருவது இந்த மாதிரி நேரத்தில்தான்.. அது இல்லா



விட்டால் மனிதனே கிடையாது என்பது என் எண்ணம். மனுஷனுக்கு மனுஷன் உதவாமல் இருந்தால் எப்படி...'' என்றாள் அவள் தன்னடக்கத்துடன்.

''நான் எத்தனையோ பெண்களை சந்தித்திருக்கிறேன்.. உங்களை மாதிரி உதவிக் கரம் நீட்டும் பெண்ணை நான் பார்த்ததில்லை!''

''நான் கொஞ்சம் வித்தியாசமானவள்.. என் எண் ணங்களும் வித்தியாசமானவைதான்.. ஆங்.. உங்கள் பெயர் என்ன என்று சொல்லவில்லையே..''

''சத்யா.. உங்கள் பெயர்...''

''நந்திதா..''

ஏனோ அந்தப் பெயரைக் கேட்டதும் அவன் முகம் மாறியது.. காதில் எட்டிகாயாய் கசந்தது.

## 5



இன்னும் நல்ல உள்ளங்கள் இருப்பதால் தானோ உலகில் மழை பெய்கிறது...

அந்த ஊர் மக்களின் கவனிப்பில் உள்ளம் நெகிழ்ந்து போனார்கள் அனைத்துப் பயணிகளும்.

இரவு நேரம்.. பசியில் வாடியிருந்த பயணிகளுக்கு வயிறு முட்ட எலுமிச்சை சாதமும்... தயிர் சாதமும் தரப் பட்டது.. அவற்றைப் பங்கீடு செய்ய இளைஞர் கூட் டமே வந்தது.

இரவு படுப்பதற்கு முன் வயதான பெரியவர்களுக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கும் திரும்ப பசும்பால் 'சப்ளை' வேறு...

கிராமத்து பசும்பால் ஆயிற்றே.. வெகு சுவையாக.. கள்ளிச் சொட்டாக இருந்தது.

எங்கிருந்து கொண்டு வந்தார்களோ.. அத்தனை பேருக்கும் படுத்துறங்க வசதிக்காக பாய்கள்.. தலையணைகள்... போர்வைகள்.. இன்னும் கம்பளிகள் என்று வரிசையாய் வந்தன.

அந்த ஊரின் நல்ல உள்ளங்களைப் போற்றினார்கள் பிரயாணிகள்.. அவர்களது விருந்தோம்பலில் மனம் பாகாய் கரைந்தது நிஜமே.

அவசர காலத்தில் தான் மனிதர்களின் மனிதநேயம் வெளிப்படும் என்பது உண்மை.

சத்யாவும் அப்படித்தான் நினைத்தான். தன் பயணம் இப்படி அரை வழியில்... ஊகூம்.. முக்கால் வழியில் நின்று விடும் என்பது அவன் எதிர்பாராதது...

நாளைக்காவது இங்கிருந்து கிளம்ப முடியுமா என்று பார்க்க வேண்டும்.. டாக்ஸியோ.. வேன் வண்டியோ.. எதுவானாலும்...

சீக்கிரம் போய் அக்காவைப் பார்த்துவிட்டு.. விஷயத்தை சொல்லிவிட்டு சென்னைக்கு போக வேண்டும்.

எனக்காக ஆசையாய்.. ஆர்வமாய் ப்ரியா காத்திருப்பாள்... போய் நல்ல செய்தியாகச் சொல்ல வேண்டும்.. அந்த நந்திதாவைப் பற்றிய கவலை இனி வேண்டாம்.. அது முடிந்த கதை... இனி நம்மைப் பற்றி யோசிப்போம் டார்லிங் என்று சொல்லி...அவளது முகம் மலர்வது கண்டு ரசிக்க வேண்டும்.



ஆமாம்.. இந்த நந்திதா எங்கே காணோம்... வலிக்கு மாத்திரை கொண்டு வருகிறேன் என்றாளே.. அவனது கண்கள் தேடின.. சுற்றியலைந்து.. வயதான கிழவிக்கு ஏதோ பணிவிடை செய்து கொண்டிருந்தவளைப் பார்த்ததும் வியப்புடன் நிலைக்குத்தி நின்றன. அதைவிட பிரமிப்பு.. அந்த ஊதல் காற்றில் நடுங்கிய மூதாட்டிக்கு.. தன் விலை உயர்ந்த ஸ்வெட்டரைக் கழற்றி அணிவித்தது தான்.

உண்மையிலே தயாள சிந்தைதான்.. பரந்த மனப்பான்மைதான்.. சுயநலம் கொண்ட மனிதப்பிறவிகள் மத்தியில்... இத்தகைய மனிதர்கள் அபூர்வமே.. கண்களில் ஆச்சர்யம் தெரிய அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. உள்மனதில் அதை உணர்ந்தது போல... அவன் பக்கமாய் திரும்பிய நந்திதாவின் பார்வை அவன் மேல் விழுந்தது.

அய்யோ.. மறந்தேனே என்பது போல நெற்றியை ஒரு தட்டு தட்டிவிட்டு அவனை நோக்கி வந்தாள்.

''சாரி.. மிஸ்டர் சத்யா... மறந்தே போய் விட்டேன். இந்தாருங்கள்.. இந்த மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு நீர் குடியுங்கள். வலி தெரியாது. வீக்கமும் குறைந்து விடும்...'' என்று மாத்திரையையும்.. மினரல் வாட்டர் பாட்டிலையும் நீட்டினாள்.

''பரவாயில்லையே... உங்களுக்குள் ஒரு டாக்டரும் ஒளிந்திருக்கிறார் போல.. மாத்திரை மருந்து எல்லாமே தயாராக வைத்திருக்கிறீர்கள்'' என்றான் பரிகாசம் செய்வது போல..

''எல்லாம் அனுபவம்தான்.. எத்தனை மருத்துவ முகாம்களில் 'சர்வீஸ்' செய்திருக்கிறேன் தெரியுமா.. அதனால்

கொஞ்சம் தெரியும். அதாவது அடிப்படை மருத்துவம் தான்.. ஒரு அவசரத்துக்கு உதவுமே என்று..'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் அவள். மனம் விட்டுச் சிரித்த வளின் முகம் அன்றலர்ந்த தாமரை போல இருந்தது. இதழ்கள் விரிய.. அவற்றின் ஊடே வெண்மணிப் பற்கள் வெட்கத்துடன் எட்டிப் பார்க்க.. கன்னங்களில் மினுமினுப்பு வர.. கண்களில் மின்னல் டாலடிக்க...

மொத்தத்தில் வானவில்லின் வர்ண ஜாலங்களைப் போல... அழகானதொரு மாற்றம்.. அவனையும் மீறி அதை ரசித்தது மனம்..

''ஆமாம்.. தூக்கம் வரவில்லையா உங்களுக்கு...'' என்று வினவினாள் அவள்.

''புது இடமாயிற்றே.. அதான்.. தூக்கம் வரவில்லை. உங்களுக்குமா..''

''ஊகூம்.. கண்ணைச் சுழற்றிக் கொண்டு வருகிறது.. படுத்தவுடன் தூங்கிவிடுவேன் போல..''

''இருக்காத பின்னே... ஓய்வில்லாமல் மற்றவர் களுக்கு ஓடி ஓடி உதவி செய்து கொண்டிருக்கிறீர்களே... ரொம்ப களைப்பாகத்தான் இருக்கும். மற்றவர்களைப் போல நீங்களும் ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருக்கலாமே மிஸ். நந்திதா...''

''மனசு வரவில்லை.. என்னால் முடிந்த ஒத்தாசை செய்யலாமேங்கிற எண்ணம்... அதான்.. பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. அதோ அந்தப் பாட்டிக்கு ஆஸ்துமா.. மூட்டுவலி.. அவரால் ரொம்ப நேரம் நிற்க முடியாதாம்.. உட்கார்ந்தால் எழுந்திருக்கவும் முடியாதாம்.. என்னால் குனிந்து 'மசாஜ்' செய்ய முடியவில்லைம்மா என்றார்.. கேட்டுவிட்டு சும்மா



இருக்க முடியுமா.. அவரிடம் தைலம் வாங்கி 'மசாஜ்' பண்ணிவிட்டேன். 'இந்த மாதிரி பயணமெல்லாம் முடியறதில்லைம்மா... ஆனால் பிள்ளைகள் புரிந்து கொண்டால் தானே.. வந்தே ஆகணும் என்கிறார்கள்' என்று புலம்புகிறார்.. வயசாகிவிட்டால் எல்லாமே கஷ்ட மாகிவிடுகிறது இல்லையா... அப்புறம்.. அந்தச் சின்னப் பையனுக்கு காலில் அடியாம். வலியில் அழுதான் என்று அவனிடம் இதமாய் பேசி... காலுக்கு இதமாய் மருந்து தடவி தூங்க வைக்க வேண்டியிருந்தது.. ஏதோ நம்மால் முடிந்தது..''

''அது சரி.. கல்யாணத்திற்கு பிறகும் இதைத் தொடர் வீர்களா... உங்களோட எதிர்காலக் கணவனுக்கு 'சோஸி யல் சர்வீஸில்' விருப்பம் இருந்தால் பரவாயில்லை... கூடாது என்று சொல்லிவிட்டால்..''

''அதற்குதான் நான் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.. மக்களுக்கு சேவை செய்வது தான் என் இலட்சியம்..'' ஆணித்தரமாக ஒலித்தது அவளது குரல்.

அடடா.. இத்தனை வனப்பும் வீண்தானா... யாரோ ஒருவனுக்கு மனைவியாக இருந்தால் அவனுக்கு சந்தோஷத்தையும் இன்பத்தையும் தருமே. இந்த அழகுப் பதுமை என் மனைவி என்று கர்வமாய் அவளுடன் வலம் வருவான் அல்லவா...

பாலை நிலத்தில் பௌர்ணமி நிலவின் ஒளி விழுந்து என்ன பிரயோசனம்... அது மாதிரிதான்.. இந்தப் பெண் ணும் அதை உணரவில்லையே.. பாவம்.. என்று பரிதாபப்பட்டவன்.. அடுத்த கணமே தலையை உதறிக் கொண்டான்.

இவளைப் பற்றிய கவலை எனக்கேன்...

அடச்சே.. இவள் யாரோ.. நான் யாரோ... பயண சந்திப்பு.. ரயில் சிநேகிதம் மாதிரி.. பார்த்தோம்.. பேசினோம்... பிரிந்தோம் அவ்வளவுதான். அதற்குப் பிறகு நினைவில் கூட வராது. பின் எதற்காக யோசித்து தலையைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்.

தவிர.. ஒவ்வொருத்தருக்கும் ஒரு லட்சியக் கனவு இருக்கத்தான் செய்யும். இவளுக்கு இந்த மாதிரி...

"என்ன... பேச்சையே காணோம் சத்யா. என் பேச்சைக் கேட்டா.. இருக்கட்டும்.. உங்களுக்கு.. வாழ்க்கையில் லட்சியக்கனவு என்று ஏதாவது இருக்கிறதா.. இப்படி செய்ய வேண்டும்.. இது மாதிரி நடக்க வேண்டும் என்று.. ஏதாவது..."

அதைக் கேட்டதும் அவன் திகைத்தான்.

லட்சியக் கனவா.. எனக்கா.. தலையை சொறிந்து கொள்ளாத குறையாய் யோசித்தான்.

அப்படியென்று ஏதுமில்லையே...

வளமான வாழ்க்கை.. ப்ரியாவுடன் குடித்தனம்.. குழந்தைகளைப் பெற்று... அட..எல்லோருக்கும் இருக்கும் ஆசைகள் தான்.. தனிப்பட்ட லட்சியம் என்று...

அடச்சே.. ஏதேதோ கேட்டு என்னைக் குழப்புகிறாளே இவள்..

இதற்கு என்ன பதில் சொல்வது என்று விழிக்கையில் அவளே தொடர்ந்தாள்.

"மனிதப் பிறவி என்பது கிடைப்பதற்கரிய பிறவி என்பார்கள்.. ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிரினங்கள் செய்ய முடியாததை நாம் செய்யலாமே.. தானம்..



தர்மம்.. பொதுச் சேவை எல்லாம் நாம் விரும்பிச் செய்ய முடியும். எதுவும் இல்லாமல் பிறந்தோம்.. இருந்தோம்.. இறந்தோம் என்று வாழ்வதில் என்ன பெருமை இருக்கிறது.. அப்படிப்பட்ட வாழ்க்கையை புழு.. பூச்சி கூடத்தான் வாழ்கிறது.. பின்னே.. நமக்கும் அவற்றிற்கும் என்ன வித்தியாசம்.. பிறந்ததற்கு ஏதாவது நல்ல காரியம் செய்துவிட்டுப் போக வேண்டும்.. பெரிய அளவில் இல்லையென்றாலும் சுண்டைக்காய் அளவிலாவது.. அது தான் ஆத்ம திருப்தி.. சத்யா.."

அவள் சொல்ல.. உள்ளுக்குள் நெருஞ்சி முள்ளால் வருடுவது போல் உறுத்தியது அவனுக்கு. என்றைக்காவது இப்படி சிந்தித்திருக்கிறேனா... இல்லையே..என் வாழ்க்கை.. என் சந்தோஷம் என்று சிந்தையெல்லாம் என்னை மட்டுமே சுற்றிக் கொண்டிருந்ததே தவிர.. அடுத்தவர்களைப் பற்றி யோசித்ததே இல்லையே... இவளது விசாலப் பார்வை.. உயர்ந்த நோக்கம்.. பரந்த மனம்.. மலைக்கச் செய்கிறதே...

பிரமிப்புடன் அவளைப் பார்த்தான்.

"சாரி.. சத்யா.. உங்களைத் தூங்க விடாமல் வளவளவென்று பேசிக் கொண்டிருக்கிறேன்.. பாருங்கள்.. மனசுக்குள் என்னைத் திட்டாதீர்கள். நானும் எங்கேயாவது இடம் பிடித்து.. படுத்துக் கொள்கிறேன்.. குட் நைட்.."

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் சத்யா.

நான் சந்தித்தப் பெண்களில் இவள் வித்தியாசமானவள்... இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணத்தோடு யார் இருக்கிறார்கள். கல்யாணக் கனவு

களுடன் அலைவார்கள்.. இவள் மாறுபட்டவளாய் இருக்கிறாள்..

நந்திதாவைப் பற்றி நினைத்தவாறே அவன் உறங்கிப் போனான்.

அந்த உறக்கத்திலும் அவனுக்கு திடீர் என்று விழிப்பு வந்தது. நிசப்த வேளையில் வந்த குழந்தையின் முன கலோ.. இல்லை அடிக்குரல் பேச்சோ.. எதுவோ..அவனது தூக்கத்தைக் கலைத்தது.

தலைத் தூக்கிப் பார்த்தான்.. அந்த பச்சிளங் குழந் தைக்கு கடுஞ்சுரமோ என்னவோ... முகத்தில் கவலைக் குறியுடன் குழந்தையின் தாயும் தந்தையும் அமர்ந் திருந்தனர்.

மணியைப் பார்த்தான்... இரண்டரை... டாக்டரை அழைத்து வரவும் முடியாதே...

அவன் பார்க்கும் போதே.. ஒரு பிளாஸ்டிக் டப்பா வுடன் அங்கே வந்தாள் நந்திதா.. குழந்தையின் அருகே அமர்ந்து.. டப்பாவில் இருந்த தண்ணீரில் கர்சீப் போன்ற துணியை நனைத்து அதைக் குழந்தையின் நெற்றியில் போட்டாள்... ஜுரத்தைக் குறைக்க 'கோல்டு பேட்' முறை.. இவளால் எப்படி முடிகிறது.. உறக்கம் கலைந் தாலும் சோர்வைக் காட்டாது.. முகம் சுளிக்காது எப்படி செய்ய முடிகிறது.. கண்களில் வியப்பு தெரிய அவளைப் பார்த்தான்.

அதற்கு பிறகு எப்போது உறங்கினோம் என்று அவ னுக்கே தெரியாது.

மறுநாள் ஊர் பெரியவர் வந்தார்.. அனைவருக்கும் அவரது கவனிப்பில் சப்பாத்தியும்.. கிழங்கும் வழங்கப் பட்டது... கூடவே சுடச் சுட தேநீரும்..



அவர் சொன்னார்.. பதினோரு மணியளவில் பஸ் ஒன்றை ஏற்பாடு செய்திருப்பதாகவும்.. கோயமுத்தூர்... ஈரோடு.. திருப்பூர் பயணிகள் ஊர் திரும்ப விரும்பினால் செல்லலாம்... குன்னூர்.. கோத்தகிரி.. ஊட்டிக்கு செல்பவர்கள் கொஞ்சம் காத்திருக்க வேண்டும்.. நிலச் சரிவு காரணமாய் போக்குவரத்து தடைப்பட்டு இருக் கிறது. இன்னொரு மார்க்கம் வழியாக செல்ல ஏற்பாடு நடக்கிறது.. கொஞ்சம் பொறுமையுடன் இருக்க வேண் டும் என்றார் அவர்.

சில பேர் ஏதாவது டாக்ஸி ஏற்பாடு செய்து தாமுடி யுமா என்று கேட்க.. அதற்கும் உதவுவதாய் ஒப்புக் கொண்டார் அந்தப் புண்ணியவான்..

பஸ் வந்ததும் கிட்டத்தட்ட நாற்பத்தைந்து பேர் அதில் ஏறிச் சென்றனர்... அவர்களில் கைக்குழந்தையின் பெற்றவர்களும் தான்...

நந்திதாவே வழியனுப்பி வைத்தாள்.. சீக்கிரமே சென்று டாக்டரிடம் காட்டுவது நல்லது என்று ஆலோ சனை தந்து அனுப்பினாள்.

''பெரியவர் வந்து சொன்னாரே... கேட்டீர்களா நந்திதா.. டாக்ஸிக்கு ஏற்பாடு செய்து தருவதாய்.. அதில் போய் விடலாம்.. வருகிறீர்களா..'' என்று கேட்டான் சத்யா.

''சுற்றுப் பாதையில் செல்லலாம் என்கிறார். வேறு வழி யில்லை.. போய் விடலாம்தான்'' என்றாள் அவள் பதிலாய்.

''அப்போ தயாராகுங்கள்... நந்திதா..'' என்றான் அவன்.

''இதோ.. வருகிறேன்..'' என்று சென்றவள். பத்து நிமி டங்களில் எங்கேயோ.. எப்படியோ உடைமாற்றிக் கொண்டு வந்தாள்.

கத்தரிப்பூ நிறத்தில் சுடிதார் அணிந்திருந்தாள். தலையை அழகாய் சீவி.. எடுத்து கிளிப்புக்குள் அடக்கியிருந்தாள்.. முகம் எந்த வித ஒப்பனையுமின்றி இருந்தாலும்.. வசீகரமாய் இருந்தது.

மற்றப் பெண்களைப் போல இல்லாமல்.. எழுந்ததும்.. அழுது வடியாமல்.. 'பளிச்' சென்று தெரிகிறாள் என்பதை ஒப்புக் கொண்டது அவனது ஆண் மனம்.

''நான் ரெடி.. டாக்ஸி வந்தால் புறப்பட்டு விடலாம். ஆனால் மனசுக்கு கஷ்டமாக இருக்கிறது சத்யா.. இவர்களுக்கு உதவியாக இருக்காமல் புறப்பட வேண்டுமா என்று குறுகுறுக்கிறது...''

''அதற்காக.. எத்தனை நாட்கள் இங்கு இருக்க முடியும்.. அங்கே.. உங்கள் உறவினர்கள் எதிர்பார்க்க மாட்டார்களா..''

''நல்லவேளை.. அவர்களுக்கு வருகிறேன் என்று சொல்லவில்லை... 'சர்ப்ரைஸாக' இருக்கட்டுமே என்று நினைத்தேன்.. அது நல்லதாகி விட்டது. இல்லாவிட்டால்.. என்னவோ.. ஏதோ என்று என்னைப் பற்றி பயந்து தவித்துப் போயிருப்பார்கள். ஏதோ நினைத்தால்.. என்னென்னவோ நடந்து விட்டது.. எதற்கும் ஒரு காரணம் இருக்கும் என்பார்கள்.. எந்தக் காரணத்திற்காக இப்படியொரு தடங்கள் வந்ததோ.. யாருக்குத் தெரியும்..''

''ஏன்... உங்கள் சேவை மனப்பான்மைக்கு இது ஒரு சந்தர்ப்பமாய் நினைக்கலாமே.. இல்லை.. நம் சந்திப்புக்காகவும் கூட இருந்திருக்கலாம்.. இல்லையா..'' அவன் இளநகையுடன் சொல்லவும்.. அவனை வியப்புடன் பார்த்தாள் நந்திதா.



''என்ன பார்க்கிறீர்கள் நந்திதா. எல்லாமே நன்மைக்குத்தான் பாருங்கள். உங்களிடமிருந்து கற்றுக் கொண்டது நிறையன்னுதான்னு சொல்வேன். சுயநலமா சிந்திக்கக் கூடாது... முடிந்தவரை மற்றவர்களுக்கு உதவப் பார்க்க வேண்டும்... பிரதிபலனை எதிர்பார்த்து எதையும் செய்யக் கூடாது.. இத்யாதி.. இத்யாதி..''

அவனது பாராட்டில் முகம் சிவந்து போய் சொன்னாள் அவள்.

''அப்படி ஒன்றும் பெரியதாய் நான் செய்யவில்லை சத்யா.. ஏதோ அணில் சேவையாய்.. என்னால் முடிந்தது..''

''பார்த்தீர்களா.. இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.. இந்த தன்னடக்கத்தையும் சொல்ல வேண்டும்..''

''அய்யோ வேண்டாமே சத்யா.. என்னால் கேட்க முடியவில்லை.. டாக்ஸி இன்னும் வரவில்லையே.. புறப்படலாம் என்றால்..'' என்று வாயில் பக்கம் எட்டிப் பார்த்தாள் அவள்.. பேச்சை திசை திருப்ப...

அதே நேரம்.. 'அய்யோ.. முடியவில்லையே' என்ற அலறல் குரல் அவர்களது கவனத்தை ஈர்த்தது.

# 6



சித்திக்கு பிடிக்குமே என்று வாங்கி வைத்திருந்த 'கிருஷ்ண ஸ்வீட்ஸ்' ஸ்பெஷல் மைசூர்பாகை சிறு சிறு வில்லைகளாக்கி எல்லோருக்கும் விநியோகித்தாள் நந்திதா.

அத்தனை அமர்களத்திலும்.. வயிற்றில் காத்திருக்க பிடிக்காமல் வெளிவந்துவிட்ட சிசுவின் ஜனனத்தை கொண்டாடத்தான்.

மறக்க முடியாத பிரசவம்! இப்படி ஆகும் என்று யாரும் எதிர்பார்க்காத நிகழ்வு...

டாக்டர் குறிப்பிட்டிருந்த நாளுக்கு இன்னும் இருபது நாட்கள் இருந்ததாம்.. இங்கே தானே என்று தைரியமாக அழைத்து வந்திருக்கிறார்கள் பிறந்த வீட்டினர். அதற்குள் குழந்தைக்கு அவசரம்... வெளியுலகைப் பார்க்கும் ஆவலில் வந்துவிட்டது..

செய்தி அறிந்ததும் லேடி டாக்டரை அழைத்துக் கொண்டு வந்துவிட்டார் ஊர் பெரியவர்.. குழந்தையை சுத்தம் செய்து.. தாயருகில் படுக்க வைத்தார் டாக்டர் பின்பு சிசுவை பரிசோதித்து விட்டு....

''குழந்தை ஆரோக்கியமாக இருக்கிறது.. எந்த கவலையும் வேண்டாம்..''என்ற லேடி டாக்டர் சொன்னதில் அனைவரின் முகத்திலும் மலர்ச்சி.

''எங்க ஊரில் பொறக்கணும்னு இருக்கு... இதனால எங்க ஊருக்குத்தான் பெருமையில்லே.. இந்த ஊருக்கு செல்லப்பிள்ளை இவன்... இன்னிக்கு ஊர் சார்பில் பாய சத்தோட சாப்பாடு எல்லோருக்கும்.. தாயி.. எங்க ஊர் தெய்வம் யாரையும் கை விட்டிடாது.. பாரேன்.. சிங்க மாட்டாம் ஆண்பிள்ளையை உனக்கு கொடுத்துட்டா.. டேய்.. படுவா.. பயலே.. இதைப்பிடி..'' என்று ஆயிரம் ரூபாய் நோட்டை குழந்தையின் பிஞ்சு கையில் வைத்தார் பெரியவர்.

''அய்யா... எதுக்கு இதெல்லாம்..'' என்று மறுத்தாள் குழந்தையின் தாய்.



''இல்லேம்மா.. நிலச்சரிவு ஏற்பட்டு எத்தனையோ ஜீவன்கள் புதைந்து போய் விட்டார்கள்.. மரங்கள் சாய்ந்ததில் பல உயிர்கள் பலி.. மழைவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களின் நிலை கவலைக்கிடம் என்று இந்த மழையினால் எத்தனையோ உயிர்கள் நஷ்டம்.. இந்த நிலைமையில் ஒரு ஜீவன் பூத்திருக்கிறதே.. உலகை விழித்து பார்த்திருக்கிறதே என்கிற சந்தோஷம்மா எனக்கு.. அந்த சந்தோஷத்தில் நான் தர்ற அன்பளிப்பு இது.. மறுக்காமல் வாங்கிக்கோம்மா..'' என்றார் அவர்.

அவரைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் நூறு.. அம்பது என்று குழந்தைக்கு அன்பளிப்பாய் தந்தனர்.

நந்திதாவும் தன் பங்குக்கு ஐநூறு தர... அதைப் பார்த்துவிட்டு சத்யாவும் தந்தான்.

''பாவம் சத்யா.. அந்தப் பெண்ணைப் பார்த்தால் வசதியில்லாதவள் போலத் தெரிகிறாள்.. இந்தப் பணம் குழந்தையோட மருந்துக்கும்.. பவுடர் சோப்பு.. டிரெஸ் என்று வாங்குவதற்கும் உதவும் இல்லையா.. அதிர்ஷ்டகார பையன்.. அம்மாவுக்கு ஆஸ்பத்திரி செலவு வைக்கவில்லை.. பிறந்த உடனேயே கை நிறைய பணத்தை சேர்த்துவிட்டான். ஸ்வீட் பேபி..'' என்று நந்திதா சொல்ல...

''அது மட்டுமா.. புறப்பட இருந்தவர்களையும் நிறுத்தி வைத்துவிட்டானே... இந்த பொல்லாத பயல்.. இன்றைக்கு நம் பயணம் ரத்து..'' என்று உதட்டைப் பிதுக்கினான் சத்யா.

''ஓ! சாரி சத்யா.. அந்தப் பெண்ணோட வேதனைக் குரலில் எல்லாமே மறந்துவிட்டேன். அவளுக்கு உதவ

வேண்டும்.. அருகே ஆறுதலாய் இருக்க வேண்டு(ம்) என்ற எண்ணம் மட்டுமே இருந்ததால்... மற்றதை மறந்து விட்டேன். வெரி வெரி.. சாரி.. நீங்களாவது புறப் பட்டிருக்கலாம் இல்லையா..'' என்றாள் அவள்.

''போயிருக்கலாம் தான்.. தன்னைப் பற்றி யோசிக் காமல்.. மற்றவர்களுக்கு உதவுவதில் குறியாக இருக்கும் ஒரு அசட்டுப் பெண்ணைத் தனியாக விட்டுச் செல்ல மனம் வரவில்லை. அதான்.. இருந்துவிட்டேன்.''

''ஓகோ.. மற்றவர்களுக்கு உதவுவது உங்களுக்கு அசட்டுத்தனமாய் படுகிறதாக்கும்... இதே வாய்தானா என் சேவை மனப்பான்மையை ஆகா.. ஓகோன்னு புகழ்ந்தது என்று எனக்கே சந்தேகமாக இருக்கிறது..'' பொய் கோபம் காட்டி அவள் கண்களை உருட்டி.. சொன்னதும் அவன் பக் என்று சிரித்து விட்டான்.

இந்த இரண்டு நாட்களில் இருவரிடையே தயக்கம் குறைந்து.. மனதில் இருப்பதை சொல்லும் அளவில் தோழமை வந்திருப்பதை இருவரும் நன்றாகவே உணர்ந்தார்கள்.

ஊருக்கு புறப்பட்டு சென்றவர்கள் போக இன்னும் எண்பத்தைந்து பேர்கள் அங்கிருந்தனர். அவர்களுக்கு வழக்கம்போல காலை சிற்றுண்டி.. காபி.. பால்.. உணவு.. பழம் என்று தப்பாமல் வந்து கொண்டிருந்தன.

அங்கிருந்தவர்களிடையே பரிச்சயம் ஏற்பட்டு.. ஏதோ சொந்த பந்தங்களைப் போல ஒட்டுதலும் உண்டானது நிஜம்.

பெண்களுக்கும்.. வயதானவர்களுக்கும் இளைஞர்கள் நீர் நிரப்பிக் கொண்டு வந்து தருவதும்..



பெண்மணிகள் குளிப்பதற்கு பின்கட்டில் இருந்த கிணற்றில் நீர் இறைத்து ஆண்கள் வைப்பதும்.. பதிலுதவியாக.. அவர்களுக்கு தட்டில் உணவை வைத்து கொண்டு வந்து வைப்பதும்..

ஏதோ விழாவில் சேர்ந்திருப்பது போல ஒருவருக் கொருவர் அனுசரணையாய்.. ஒத்தாசையாய் இருப்பது கூட வெகு ஆனந்தமாக இருந்தது.

மதியம் உணவு உண்டபின்.. பெரும்பாலோர் உறங்கி விட.. ஓரிருவர் ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண் டிருந்தனர்.

மழை முழுதுமாய் நின்று விட்டதால்.. சிலர் வெளி யில் நின்று வேடிக்கைப் பார்த்தனர்.

ரோடெல்லாம் சேறும் சகதியுமாய் இருந்ததால் வெளியே செல்லும் தைரியம் இல்லை.

சத்யாவிற்கு உறக்கம் வரவில்லை... எந்த வேலையும் செய்யாமல் சும்மாவே இருந்தால் எப்படித் தூக்கம் வரும்.. உடம்பு அலுத்து சலித்தால் தானே அடித்துப் போட்டது போல நித்திரை வரும்..

''எந்த கோட்டையைப் பிடிக்கும் உத்தேசம்.. ம்ம்'' என்று கேட்டுக் கொண்டே அவன் அருகே.. தள்ளியே அமர்ந்தாள் நந்திதா.

''கிண்டலா.. இப்படி எந்த வேலையும் இல்லாமல் வெட்டித்தனமாய் இருக்கோமேன்னு உள்ளுக்குள் குமைந்து கொண்டிருக்கிறேன்.. அங்கே ஆபீஸில் வேறு தலைக்குமேல் வேலை கிடக்கிறது... எப்போதடா கிளம்புவோம் என்று இருக்கிறது நந்திதா..''

''என்னவோ.. நாம ஆசையாய் பிக்னிக் வந்திருக்கிற மாதிரி இல்லே இருக்கிறது உங்கள் பேச்சு... மழையோட

சீற்றத்தாலே இங்கே தங்க வேண்டி வந்தது.. இல்லை விட்டால்.. நாம் நம் நம் வீட்டில் இருந்திருப்போம். வாழ்க்கையில் வரும் நிகழ்வுகளை முகம் சுளிக்காம ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும் சத்யா..''

''நீங்க என்ன படிச்சிருக்கீங்க நந்திதா... ஃபிலாஸ பியா... உங்கள் வாயிலிருந்து ஒரே தத்துவ மழைய வருகிறது..''

அதைக் கேட்டு விட்டுச் சிரித்தாள் அவள்.

''மைக்ரோபயாலஜி 'சப்ஜெக்ட்' நான் படித்தது. படிக்க ஆசைப்பட்டது மாஸ் கம்யூனிகேஷன். அது அம்மாவுக்கு பிடிக்கவில்லை... ஸையின்ஸ் 'சப்ஜெக்ட்' தான் எடு கணும்னு ஒரே பிடிவாதம்.''

''அதுசரி.. உங்களுடைய சர்வீஸ் மனப்பான்மையை உங்கள் வீட்டில் வரவேற்கிறார்களா.. இல்லை எதி கிறார்களா.. நந்திதா..''

''ப்ச்சு.. அம்மாவுக்கு இதில் சுத்தமாய் விருப்பம் இல்லை... அப்பாதான் எனக்கு எப்பவும் சப்போர்ட் அம்மாவோட ஒரே ஆசை.. என்னை இழுத்து மண மேடையில் உட்கார வைத்து.. கல்யாணம் செய்துவிட வேண்டும் என்பதுதான்.''

''அது எல்லா அம்மாக்களுக்கும் வருவதுதானே..''

''என்ன சத்யா.. வாழ்க்கை என்றாலே வெறும் திருமணம் மட்டுமா.. சரி.. அவ்வாறு சம்மசார சாகரத்தில் மூழ்கியவர்கள் அப்படி என்ன சாதித்துவிட்டார்கள் சொல் லுங்கள்.. குழந்தைகளைப் பெற்று.. வளர்த்து என்பது எல்லாமே மற்ற உயிரினிங்களில் கூட நடக்கிறது.. நாம் வித்தியாசமாக நினைத்து செயல்பட வேண்டும்.. மனித



உலகிற்கு என்னென்னவோ செய்ய முடியும். எத்தனையோ வழிகளில்.. அதுதான் என் குறிக்கோள்...''

அந்த நேரத்தில்.. அவனது மனதில் ப்ரியாவின் நினைவு வந்தது.

அவள் இப்படியெல்லாம் சிந்திப்பது உண்டா.. இல்லை எல்லா பெண்களைப் போல.. கல்யாணம்.. கணவன்.. குழந்தைகள் என்று ஒரு சராசரிப் பெண்ணாய்...

அடுத்த கணமே தலையை உதறிக் கொண்டான். அனைவரும் நந்திதாவாய் இருக்க முடியாதுதான். நந்திதா ஆயிரத்தில் ஒருத்தி... வித்தியாசமானவள்.. இப்படித் தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடையவள்.

அவளுடன் ப்ரியாவை ஒப்பிடுவது தப்பு.. பெரு மூச்சுவிட்டான் அவன்.. ப்ரியாவைப் பிரிந்து இரண்டு நாட்கள் தான் ஆகியிருந்தது.. ஆனால் மாதக் கணக்கில் பிரிந்திருப்பதைப் போல அல்லவா தோன்றுகிறது..

''சரி சத்யா.. 'ரெஸ்ட்' எடுங்கள்.. நான்போய் என் வேலையைப் பார்க்கிறேன்''என்று சொல்லிவிட்டு நந்திதா எழுந்து சென்றதையும் உணராமல் ப்ரியாவின் நினைவில் ஆழ்ந்து கிடந்தான் அவன்.

சீதோஷ்ண நிலையின் மாற்றமா... இல்லை.. கிணற் றின் நீர் ஆகவில்லையோ.. அன்று இரவு அவனுக்கு இருமலும் சளியும் வந்து அவதிப்பட்டான். இலேசாய் ஜுரமும் அடித்தது. கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டான்.

நந்திதா தான் உடனிருந்து கவனித்துக் கொண்டாள்.. நேரம் பார்த்து மாத்திரைகள் கொடுத்து இடைவெளி விட்டு இருமல் மருந்து கொடுத்தாள். சுடுநீர் வாங்கி

வந்து ஆற்றித் தந்தாள்.. கடையில் இருந்து ஆர்லிக்ஸ் வாங்கி வந்து அதை கலந்து கொடுத்தாள்.

அவளது அக்கறையான கவனிப்பில் மனம் கரைந்து போனான் சத்யா.

''நீங்க எதுக்கு சிரமப்படுகிறீர்கள் நந்திதா'' என்று கொஞ்சம் கூச்சத்துடன் கேட்டான்.

''ஏன்.. செய்தால் என்ன.. மற்றவர்களுக்கு செய்வது போல்தானே உங்களுக்கும் செய்கிறேன். பேசாமல் படுங்கள் சத்யா..'' என்றாள் அவள்.

''அதில்லை நந்திதா..''

''மூச்... எதுவும் பேசக் கூடாது.. நீங்க இப்போ 'பேஷண்ட்' சொன்னப் பேச்சைக் கேட்டு சமர்த்தா தூங்க வேண்டும். என்ன.. புரிந்ததா'' போலியாய் மிரட்டினாள் அவள்.

அதைக் கேட்டு அவன் சிரித்தான்.

''நான் என்ன 'ஜோக்'கா சொன்னேன்.. சிரிக்க...''

''ஊகூம்.. ஒருவேளை நீங்கள் கல்யாணம் பண்ணிக் கொண்டால்...''

''நான்தான் பண்ணிக் கொள்ளப் போவதில்லை என்றேனே...''

''ஒருவேளை நடந்தால்.. பாவம் அந்த மனுஷன்.. பெட்டி பாம்பாய் அடங்கிக் கிடக்க வேண்டும் போல...''

அதைக் கேட்டு முகம் சிவந்தாள் நந்திதா...

''சாரி.. உங்களிடம் சலுகை எடுத்துக் கொண்டு அதிகமாக பேசிவிட்டேன் போல...''

''சேச்சே.. அப்படியில்லை.. நான் என்ன சொல்ல வந்தேன் என்றால்...'' என்றவன் தும்மல் வர... இரண்டு தடவை தும்மினான்.



பிறகு தான் சொல்ல வந்ததை தொடர்ந்தான்.

''நீங்கள் கல்யாணம் செய்து கொண்டால்.. ஒரு நல்ல மனைவியாய்.. ஒரு நல்ல குடும்பத் தலைவியாய் இருப்பீர்கள் என்கிறேன்...''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் கணவனை அடக்கி வைப்பேன் என்று சொல்லிவிட்டு.. இப்போது நல்ல மனைவி என்கிறீர்களே.. நீங்கள் சொல்வதில் எது நிஜம் என்று தெரியவில்லை சத்யா.. எப்படி இருந்தாலும்.. நான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை. எதற்கு இந்த வீண் பேச்செல்லாம்..''

''ஏன்.. ஏன் நந்திதா.. எதற்கு இந்த நிராசை பேச்சு.. உங்களை மாதிரி ஒரு மனைவி அமைய ஒருவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும்...''

''ஆனால்..என் லட்சியத்தைப் புரிந்து கொண்டு அதற்கு உறுதுணையாய் இருப்பார் என்று என்ன உத்திரவாதம்.. அந்த நம்பிக்கையே எனக்கில்லை சத்யா...''

''அப்படிப்பட்ட ஆணை சந்திக்க நேர்ந்தால்.. அப்போது ஒப்புக் கொள்வீர்கள் தானே..''

''அத்தைக்கு மீசை முளைத்தால் பார்க்கலாம்..'' என்று சொன்னவள்.. சிரித்தவாறே அவனுக்குப் போர்த்தி விட்டுவிட்டு சென்றாள்.

அவன் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தான். மனமெல்லாம் விடாமல் அவளைப் பற்றியே நினைத்தது.

எத்தனை நல்ல மனம்.. பிரதிபலன் எதிர்பார்க்காமல் ஓடி ஓடி உதவுகிறாளே. இந்தக் காலத்திலும் இப்படி ஒருத்தி..

அதோ.. தூங்காமல் அடம் பிடிக்கும் ஐந்து வய
பாலகனருகே அமர்ந்து.. அவனிடம் இதமாய் பேசி
அவனது அழுகையை நிறுத்தி.. எதையோ சொல்
சிரிக்க வைத்து... கதையொன்றைச் சொல்லி.. சாமர்த்தி
மாய் படுக்க வைத்து..

அவன் முகத்தில் புன்னகை உதித்தது.

அன்பாலே எல்லோரையும் ஆட்கொண்டு விடுகிறா
கல்யாணம் செய்து கொண்டால்.. நல்ல மருமகளா
இருப்பாள்.. மாமனார் மாமியாரை கண்ணுக்கு கண்ணா
பார்த்துக் கொள்வாள் என்பது உறுதி.. புகுந்த வீட்டி
ரிடம் பாசத்தைக் காட்டுவாள்...

எந்த வீட்டிற்கு அதிர்ஷ்டம் இருக்கிறதோ.. யார் பாக்கி
சாலியோ.. இப்படியொரு அருமையான குணவதியை
மனைவியாக அடைய..

ஒருவேளை.. ப்ரியாவை பார்க்காமல் இருந்திருந்தால்..
என் மனம் அசைந்து கொடுத்திருக்குமோ என்னமோ.

இவளிடம் என் நெஞ்சை பறி கொடுத்திருப்பேனோ..
அடுத்த கணமே திகைத்துப் போனான்.

சே... இதென்ன கூத்து.. மனம் தறிக்கெட்டு போய்
எங்கேயோ ஓடுகிறதே...

என் வாழ்வில் ப்ரியா மட்டுமே..

வேறு யாருக்கும் மனதில் இடம் இல்லை...

கண்களை இறுக மூடிக் கொண்டான்.

கண்களுக்குள் ப்ரியா வந்து சிரித்தாள். அவள் நினைவு
தந்த ஏக்கம் நெஞ்சில் பிராண்ட.. அவன் சிகரெட்டை
எடுத்து வாயில் வைத்து பற்ற வைத்தான்.



# 7



அனைவருக்கும் பஸ் ஏற்பாடு செய்யப்பட்டு..
மறுநாளே எல்லோரும் கிளம்பிவிட்டனர்.

தமக்கு உணவும்.. தங்க இருப்பிடமும் தந்து உதவிய
அவ்வூர் மக்களுக்கும்.. ஓடி வந்து உதவிய ஊர் பெரிய
மனிதர்களுக்கும்... பாதுகாப்புக்காக வந்த இன்ஸ்பெக்
டருக்கும்.. திருமண மண்டப உரிமையாளருக்கும் நன்றி
கூறிவிட்டு புறப்பட்டனர் பயணிகள். பிரியும் வேளை
வந்தபோது மனதுக்கு கஷ்டமாகத் தான் இருந்தது.
இரண்டு நாட்களாய் ஏதோ வைபவத்தில் சேர்ந்திருந்த
உறவுகளைப் போல கூடியிருந்து விட்டு.. அவரவர்
ஊர்களுக்கு கிளம்ப வேண்டிய நேரம் வந்ததும்.. பிரியா
விடை பெற்றனர்.

"போன் நம்பர் கொடுக்கிறேன்.. நேரம் கிடைக்கிற
போது வரணும்.. மறந்துவிடக் கூடாது.."

"அப்பப்போ தொழில் சம்பந்தமா திருப்பூர் வருவேன்.
அப்போ நிச்சயமா உங்களை சந்திக்கிறேன்."

"இந்த வருஷம் ஷீரடி போனால் உங்களுக்கு தெரி
விக்கிறேன்.. வந்துடுங்க.. போயிட்டு வரலாம்."

"உங்க மகனுக்கு திருமணம் நிச்சயமானால் அழைப்
பிதழ் அனுப்ப மறந்திடாதீங்க... சார்.." போன்ற வார்த்தைப்
பரிமாற்றலுடன் விடைப்பெற்றுச் சென்றனர்.

நந்திதாவிற்கும் ஏதோ ஒரு தவிப்பு.. சொல் தெரியாத இம்சை மனசுக்குள் அரித்தது. காரணம் என் என்றுதான் விளங்கவில்லை.

இங்கிருந்த வரை தன்னால் ஆன உதவிகளை செ தில் உண்டான ஆனந்தமும் ஆத்ம திருப்தியும் இனி இ லையே என்று இருக்குமோ... இல்லை.. ஒரு குடும் போல பழகியவர்களைப் பிரியும் நேரம் வந்ததே என்ற ஏதோ ஒன்று..

ஆனால்.. மனதின் எங்கோ ஒரு மூலையில் கொஞ்சம் வேதனை அழுத்தியது நிஜம்..

ப்ச்சு.. எல்லாம் சரியாகிவிடும் என்று தனக்குத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

குன்னூருக்கு சுற்று வழிப் பாதையில் பஸ் பயணம் சத்யாவும் நந்திதாவும் அருகருகே அமர்ந்திருந்தன பயணம் போரடிக்காமல்.. பேசிக் கொண்டே போ லாமே என்ற எண்ணம்.

சத்யா தெளிவாகியிருந்தான்.. இரவு உறக்கமும் மாத்திரை மருந்தின் வீரியமும் அவனைப் பழைய சத்யாவாக மாற்றி தெம்பூட்டியிருந்தது. உற்சாகத்துடன் நந்திதாவுடன் கலகலப்பாய் உரையாடினான்.

''என்ன நந்திதா.. எத்தனை நாட்கள் குன்னூரில் இருக் கும் உத்தேசம்..'' என்று கேட்டான்.

''இரண்டு நாட்கள் இருந்துவிட்டு புறப்படலாம் என்று இருக்கிறேன். இங்கே.. பயணத்திற்கு இப்படி தடங்கல் ஏற்பட்டு.. தங்கியிருந்த விஷயத்தை என் அப்பா.. அம்மாவிற்கு தெரிவிக்கவில்லை சத்யா.. அவர் களுக்கு சொல்லியிருந்தால் அலறி அடித்துக் கொண்டு வந்திருப்பார்கள்...''



''அவர்கள் உங்கள் 'செல்'லுக்கு போன் செய்யவில்லையா என்ன.. உங்க சித்திக்கு போன் செய்து விசாரித்திருந்தால் கூட தெரிந்து விடுமே நந்திதா.''

''என் 'செல்'லை சார்ஜ் பண்ண வேண்டும்.. அதனால் என்னை 'காண்டாக்ட்' பண்ண சாத்தியமில்லை.. தவிர அவர்களைப் பொறுத்தவரை நான் ஏதோ ஒரு குக்கிராமத்தில் மருத்துவ முகாம் ஒன்றில் சேவை பண்ணிக் கொண்டிருக்கிறேன் என்ற நினைப்பு... அப்படித்தான் சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்ல.. எனக்கு போன் செய்து 'டிஸ்டர்ப்' பண்ணக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன்...''

அவனது புருவங்கள் மேலேறின..

''எனக்கு புரியவில்லை நந்திதா.. சித்தி வீட்டிற்கு எதற்கு பொய் சொல்லிவிட்டு வர வேண்டும். தைரியமாய் சித்தி வீட்டுக்கு போகிறேன் என்று சொல்லியிருக்கலாமே'' என்று கேட்டான்.

''எல்லாம் ஒரு காரணத்திற்காகத்தான் சத்யா.. வீட்டில் திருமணப்பேச்சு நடக்கிறது.. எனக்கு தான் திருமணத்தில் சுத்தமாய் நாட்டமில்லையே.. அம்மாவோ பிடிவாதத்தை தளர்த்தமாட்டாள். அதான்.. சித்தியின் உதவியை நாடி வந்திருக்கிறேன்... அம்மாவுக்கு தெரிந்தால் ருத்ர தாண்டவம் ஆடிடுவாள்.. அதனால்தான் அம்மாவுக்கு தெரியாமல் வந்திருக்கிறேன்.. அம்மா கூட சொன்னாள்.. சமூக சேவையெல்லாம் முடித்துக் கொண்டு குன்னூருக்கு போயிரு என்று.. இருந்தும்.. இங்கு வந்ததை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். இந்தக் கல்யாணம் என்னால் நின்று போனது என்று அம்மாவுக்கு தெரியக்கூடாது என்றுதான்..''

அதற்குப் பிறகு பேச்சு திசைமாறி போனது..

இன்றைய தலைமுறையின் மனப்போக்கு.. வரதட்சணை.. சமுதாய சீர்கேடு.. திருமணம் ஆகாமல் சேர்ந்து வாழும் முறைகேடு என்று எத்தனையோ விஷயங்களை அலசியதில் நேரம் பறந்தது...

குன்னூர் வெகு சீக்கிரத்தில் வந்து விட்டது போல தோன்றியது.

இருவரும் விடை பெற்றுக் கொண்டு தம் ஜாகைக்கு புறப்பட்டனர்... 'என்றைக்காவது சந்திப்போம்' என்று நம்பிக்கையுடன்.

சித்தி பூமா-நந்திதாவைப் பார்த்ததும் கோபத்துடன் படபடத்தாள்.

''என்னடீ.. கொஞ்சமாவது பொறுப்பு இருக்கிறதா... நீ இங்கு வந்தாச்சான்னு உன் அப்பாவும் அம்மாவும் மாறி மாறி விசாரிக்கிறார்கள்.. எனக்கு 'பகீர்' என்று ஆகிவிட்டது.. சரி.. ஒரு போன் போட்டு பேசியிருக்கக் கூடாது. எங்கே எப்படி இருக்கேன்னு..ஆனாலும் உனக்கு இத்தனை நெஞ்சழுத்தம் கூடாதுடீ.. உனக்கு என்ன ஆச்சோ ஏது ஆச்சோன்னு பயந்து நடுங்கிட்டேன்.. தெரியுமா.''

''சித்தி.. கூல் டவுன்..'' என்றாள் சித்தியை அமைதிப்படுத்தும் விதமாய்.

''என்னடீ கூல் டவுன்... ஏற்கனவே இரத்த அழுத்தம். இப்போ உன் விஷயத்தில் 'விர்' என்று ஏறி இருக்கணும்.. இன்னும் வராமல் போயிருந்தால் தலை வெடித்துப் போயிருக்கும்.. நல்லவேளையாய் வந்துட்டே... முதல்ல.. உன் அம்மாவுக்கு போன் பண்ணு.. அங்கே என்



அக்காவோட நிலைமையும் என்னை மாதிரி தான் இருக்கும்.. என்னாச்சோன்னு பதறிக் கொண்டு இருப்பா.. உடனே போன் பண்ணு..''

''என் 'செல்'லில் சார்ஜ் இல்லை... சித்தி..''

''புத்திசாலிதான்.. நம் வீட்டு போனிலிருந்து பண்ணு... அப்புறம் பேசலாம்..'' என்றாள் சித்தி.

சித்தியை மதித்து போனில் தாயுடன் பேசினாள் நந்திதா.

''ஏண்டீ.. உனக்கு கொஞ்சமாவது பொறுப்பு இருக்கிறதா.. எங்கே இருக்கிறேன்னு ஒரு வார்த்தை சொன்னியா.. இரண்டு நாள் 'கேம்ப்'புன்னு சொன்னே.. அப்புறமாவது போன் பண்ணியிருக்கலாம் இல்லையா..அப்படி என்ன வெட்டி முறிக்கிற வேலை உனக்கு.. வயசு வந்த பொண்ணை விட்டுட்டு போனதை நினைச்சு வயித்தில் நெருப்புக் கட்டிக் கொண்டு தவிச்ச தவிப்பு எனக்குத் தான் தெரியும்..'' என்று கடுகாய் பொரிந்த தாயின் பேச்சை பொறுமையுடன் கேட்டுவிட்டு...

''நான்தான் சொன்னேனேம்மா.. வேலை மும்முரத்தில் போன் பண்ண முடியாது என்று.. ஏன் பயப்படுகிறாய்.. இப்பத்தான் வந்தேன்.. வந்ததும் உனக்கு போன் செய்து விட்டேன் போதுமா..'' என்றாள் அமைதியாக.

''சரி.. எப்போ ஊருக்கு வருகிறாய்.. சொல்லிவிட்டு கிளம்பு.. என்றைக்கு நீ வருகிறேன்னு எங்களுக்கு தெரியணும்.. திடீர்னு கிளம்பிடாதே.. ஆமாம்..''

அவளுக்கு சிரிப்பு வந்தது. இன்னும் என்னை சின்னப் பெண்ணாக நினைக்கிறாளே இந்த அம்மா... திருவிழாவில் குழந்தை காணாமல் போய்விடுமோ என்பது

மாதிரி.. அம்மாவுக்கு ஒரு பயம்.. தாய் பாசம் கண்களை மறைத்து.. புத்தியை மழுங்கச் செய்து.. பிள்ளைகளின் வளர்ச்சியை ஒப்புக் கொள்ள மறுக்கச் செய்கிறது.

''என்னடீ.. பதிலைக் காணோம்.. நான் பேசியது காதில் விழுந்ததா.. இல்லையா'' வரலட்சுமி அதட்டலாய் கேட்டாள்.

''என்னம்மா நீ.. இப்படி பயப்படுகிறாய்... சரி.. நான் புறப்படுவதற்கு முன் உ..ாக்கு எப்போ.. எந்த வண்டின்னு தெரியப்படுத்துகிறேன்.. போதுமா.. சரி.. ரஞ்சிதாவை காலேஜில் சேர்த்தாகி விட்டதா..'' என்று விசாரித்தாள் மகள்.

''ஆமாம்.. இப்பக் கேள்.. அத்தனை அக்கறை.. கூடப் பிறந்தவள் மேல்..'' என்று எரிச்சலுடன் சொன்னாள் தாய்.

''என்னம்மா நீ... எல்லாவற்றிற்கும் குற்றம் கண்டு பிடிக்கிறாய்.. இதுதான்.. உன்னிடம் பேசுவதற்கு தயக்கமா இருக்கிறதும்மா..'' மகளின் வார்த்தைகளில் இருந்த வருத்தத்தை உணர்ந்தாளோ என்னவோ.. வரலட்சுமியின் கோபம் கொஞ்சம் தணிந்தது.

''இல்லேடா.. நீ பொறுப்போட நடந்து கொள்ளவில்லையேங்கற ஆதங்கம்.. அவ்வளவுதான்.. ரஞ்சியை காலேஜில் சேர்த்தாகி விட்டது.. நல்ல பி.ஜியாக பார்த்து அங்கே தங்க ஏற்பாடும் செய்தாகி விட்டது.. எல்லாம் இரண்டே நாளில் முடிந்துவிட்டதால்.. ஊருக்கு புறப்பட்டு வந்தாச்சு..''

''என்ன.. நீங்க சென்னைக்கு வந்தாச்சா.. நாலைந்து நாட்கள் ஆகும் என்று சொன்னீர்களே..'' வியப்புடன் கேட்டாள் நந்திதா.



''போன வேலை முடிந்ததும் புறப்பட்டு விட்டோம்.. அதற்கு அப்புறம் அங்கே என்ன செய்வது.. அது மட்டுமில்லைம்மா.. உன்னைத் தனியாக விட்டு வந்ததை நினைச்சு தவிப்பு வேறே.. குன்னூருக்கு நீ போகவில்லை என்றதும்.. என் வயிற்றில் நெருப்பு பத்தி எரிஞ்ச மாதிரி இருந்தது. பெத்தவயிற்றின் வேதனை உங்களுக்கு எப்படிடீ தெரியும்'' அம்மா பேசுவதைக் கேட்ட உள்ளம் நெகிழ்ந்தாள் நந்திதா.

பாவம் அம்மா.. பிள்ளைகளின் நலனை நினைத்துப் பதைத்துப் போகிறாள்.. தாய்மையின் தவிப்பு அது.. அதைப் புரிந்து கொள்ளாமல் எரிச்சல் படுகிறோமே.. குற்ற உணர்வில் உள்ளம் வெகுவாய் குன்றியது.

''சாரிம்மா.. இனி அப்படி செய்ய மாட்டேன் போதுமா.. ஆமாம்.. டாடி எங்கே.. 'செல்' உன்னிடம் இருக்கிறது. வெளியே போயிருக்கிறாரா..'' என்று விசாரித்தாள்.

''இல்லைம்மா.. அசந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்.. எழுந்ததும் பேசச் சொல்கிறேன். இப்ப எனக்கு வேலையிருக்கு சித்திகிட்டே அப்புறம்.. நிதானமா பேசுகிறேன்னு சொல்லு.. என்ன..'' என்று சொன்னாள் அன்னை.

''சித்தி...அம்மாகிட்டே பேசியாச்சு... அம்மாவும் சமாதானமாகிவிட்டாள்.. போதுமா..'' என்றாள் நந்திதா.. சித்தியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு. கோபம் தணிந்திருந்தாலும்.. தணியாதது போல பாவனையில் பேசினாள் பூமா.

''உன் அம்மா பேக்கு... ஐஸ் வச்சமாதிரி இரண்டு வார்த்தை பேசினால் இறங்கி வந்துடுவாள்.. என்னை அப்படியெல்லாம் செய்ய முடியாது. எனக்கு நீ விளக்கம் சொல்லியே ஆகணும்.. உன் அப்பா.. அம்மா பெங்களூர்

புறப்பட்டு போனதும் ஏன் இங்கு வரவில்லை... சரி.. வரவில்லையென்றாலும் ஏன் எனக்கு போன் செய்யவில்லை... உன் அம்மாகிட்டே ஏதோ மருத்துவ முகாமிற்கு போய் பணி செய்யணும் என்றாயாம்.. அது உண்மையா.. இல்லே 'ரூப்' விட்டேயா... அப்படி இல்லை என்றால் இந்த இரண்டு நாளாய் எங்கேயிருந்தாய்.. நேரே இங்கே வராமல் இருந்தவள்.. இப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறாயே ஏன்.. இத்தனை 'ஏன்' 'எதற்கு'களுக்கு பதில் சொன்னால்தான் உன்னிடம் பேசுவேன்.. ஆமாம்..'' உரிமையுடன் மிரட்டி கேட்டாள் சித்தி.

அதைக் கேட்டுவிட்டு 'பக்'கென்று சிரித்துவிட்டாள் நந்திதா.

''ஏண்டி சிரிக்கறே.. என்னைப் பார்த்தால் 'ஜோக்கர்' மாதிரி இருக்கா...'' கண்களை உருட்டி பூமா கேட்டதும்..

''சித்தி... சித்தி'' என்று அவளை இழுத்து.. அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள் மகள்.

''ச்சீச்சீ.. என்னடீ இது சின்னக் குழந்தையாட்டம்.. இப்படியெல்லாம் செய்து என் வாயை மூடப் பார்க்கிறே யாக்கும்.. இதுக்கெல்லாம் நான் மசியமாட்டேன் தெரியுமா.. நான் கேட்டதற்கு பதில் சொல்லியே ஆகணும்..'' என்றாள் விடாப்பிடியாய்.

''அய்யோ.. சித்தி உங்களிடம் சொல்லத்தான் போகிறேன்.. இத்தனை தூரம் வந்ததே உங்களிடம் மனம் விட்டுப் பேசத்தான்.. இந்தத் திருமணம் வேண்டாமே.. இதை நிறுத்துவது உங்கள் கையில் தான் இருக்கிறது.. ப்ளீஸ்'' என்று நந்திதா சொன்னதும்..



அவளை உற்றுப் பார்த்தாள் பூமா.

''நந்து.. என்ன விஷயம்.. நீ யாரையாவது விரும்புகிறாயா என்ன..'' என்று சந்தேகமாய் கேட்டாள்.

''சேச்சே.. என்ன இது சித்தி.. கல்யாணம் வேண்டாம் என்றால்.. அது காதலாய் தான் இருக்க வேண்டுமா என்ன.. என்னோட இலட்சியம் வேறே.. அதுதான் உங்களுக்குத் தெரியுமே.. அதற்கு இந்தக் கல்யாணம்.. குடும்பம்.. கணவன் இதெல்லாம் ஒத்துவராது.. சித்தி...''

''என்னடீ பேத்தல் இது... இப்போதைக்கு வேண்டாம் என்றால் 'ஓகே' என்று சொல்லலாம்.. ஆனால் கல்யாணமே வேண்டாம்னா எப்படி.. காலம் எல்லாம் மக்கள் சேவை செய்ய உனக்கு என்ன அன்னை தெரஸான்னு நினைப்பா.. கேட்கவே சகிக்கவில்லை நந்து..''

''அய்யோ... சித்தி.. ஏன் யாருமே என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன்கிறீர்கள்.. பெண்களுக்கு கல்யாணம் தான் கதியா.. கல்யாணம் இல்லாமல் வாழவே முடியாது மாதிரி பேசுகிறீர்களே சித்தி..'' முகச் சுளிப்புடன் பேசினாள் நந்திதா.

''நீ சொல்வது மேனாட்டு கலாச்சாரத்திற்கு வேணும்னா ஒத்து வரலாம்... நம் நாட்டுக்கு சரிப்படாதுடீ. அங்கே.. ஒரு பெண்ணிற்கு கல்யாணம் ஆகாவிட்டாலும் அதை பெரிசுபடுத்தமாட்டார்கள்.. நம் நாட்டில் அப்படியா.. ஏன் இன்னும் திருமணம் நடக்கவில்லை ஜாதகத்தில் ஏதாவது கோளாறா.. உடம்பில் ஏதாவது குறைபாடா.. வீட்டில் ஏதாவது கஷ்டமா.. ஒருவேளை கல்யாணத்திற்கு தகுதியில்லாதவளா.. என்றெல்லாம் துளைத்து எடுத்து.. அதற்கு கண்.. மூக்கு வைத்து கன்னாபின்னான்னு பேசுவார்கள் நந்து.. இது

தேவையா சொல்லு.. அதான் காலா காலத்தில் பெண்களுக்கு திருமணம் செய்து அனுப்பி விட வேண்டும் என்பது.. அதுமட்டுமில்லைடீ.. பெற்றவர்களுக்கும் இந்த பெண்களை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால் நிம்மதின்னு தோன்றும்.. அதைப் புரிஞ்சுக்கோ..''

சித்தி தன் பங்குக்கு புத்திமதி போல எடுத்துச் சொன்னாலும்.. அது அவளுக்கு எரிச்சலை தான் தந்தது.

என்ன இருந்தாலும் மூத்த தலைமுறைதானே. இப்படித்தான் நினைக்கத் தோன்றும்.

அதுமட்டுமா.. அம்மாவோட தங்கை ஆச்சே.. அம்மா மாதிரி பேசுவாள்.. ஆக.. என் லட்சியத்தை உயர்ந்த நோக்கத்தை புரிந்து பாராட்ட யாருமில்லையே. அப்பாவைத் தவிர.. அப்பா சொல்வாரே.. உன்னை நினைத்து பெருமைப்படுகிறேன்டா என்று..

அப்பா மட்டுமா.. இன்னொருவரும் பாராட்டினாரே. அவள் மனக் கண்ணுள் அந்த இன்னொருவனின் முகம் எட்டிப் பார்த்துப் புன்னகைத்தது. அந்தப் புன்னகை அவளது இதழ்களிலும் தொற்றியது.

## 8



அந்தப் புன்னகையைப் பார்த்துவிட்டு வேறுவிதமாய் புரிந்து கொண்டு பேசினாள் சித்தி பூமா.

''பார்த்தாயா.. இப்போது உனக்கு நான் சொல்றது சரின்னு படுகிறது.. இல்லையா.. இனிமேலாவது உன்



முட்டாள்தனமான எண்ணத்தையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு.. கொஞ்சம் 'பிராக்டிகலா' யோசி நந்து...''

சித்தியின் வார்த்தைகள் அவளைத் திகைக்க வைத்தன. 'நானா... சரின்னு படுகிறதா... எது.. சித்தி சொன்னதா. அடக் கடவுளே... நான் எப்போது சொன்னேன்... சரி... எப்படியோ இருக்கட்டும்...

முதலில் இந்தத் திருமணத்தை நிறுத்த வழி பார்க்க வேண்டும்... அந்த யாரோ எவனையோ கட்டிக் கொண்டு வாழ்க்கையைப் பாழ் பண்ணிக்க முடியாது சித்தியிடம் கறாராய் பேசிவிட வேண்டும்..' என்று எண்ணி வாய் திறந்த சமயத்தில் வீட்டு டெலிபோன் ஒலித்தது. எடுத்துப் பேசிய பூமா... ரிஸீவரை கையால் மூடியவாறு ''நந்து... உன் அப்பா வந்து பேசு...'' என்று அழைக்க... ஓடிப்போய் பேசினாள் அவள்.

''டாட்.. எப்படியிருக்கீங்க...''

''அதை நான் கேட்கணும்டா. எங்கே... பேச்சையும் காணோம்... மூச்சையும் காணோம்... உன் அம்மாவின் புலம்பலில் என் தலையே வீங்கிப் போச்சு தெரியுமா...''

''நான் தான் சொன்னேனே டாட்... கிராமத்தில் மெடிக்கல் கேம்ப் இருக்கிறது... வேலை மும்முரத்தில் பேச நேரம் இருக்காது... 'செல்' ஆஃப் பண்ணி வைத்திருப்பேன் என்று... அதான்... பேச முடியவில்லை.

''சரி... சித்தி வீட்டுக்கு எப்போதடா வந்தே... இன்னிக்குத்தான் வந்தாயாம்... உன் அம்மா சொல்கிறார்கள்...''

''ஆமாம் டாட்... இரண்டு நாள் 'கேம்ப்' முடிந்ததும்...''

''எப்போதிலிருந்து என் மகள் பொய் சொல்ல ஆரம்பித்திருக்கிறாள் என்று தெரியவில்லையே...''

கூவினாள் மகள்.

''டாட்!'' அதிர்ச்சியாய் கூவினாள் மகள்.

''உன் தோழி ஹரிணி போன் செய்தாள்ம்மா... உன் 'செல்'லுக்கு 'டிரை' பண்ணினாளாம்... முடியவில்லை என்று வீட்டு நம்பருக்கு போன் செய்தாள்... உடனே நீ அவளை 'கான்டாக்ட்' பண்ணணும்னா.. அப்போதான் அவளைக் கேட்டேன். ஏம்மா... ஏதாவது மருத்துவ முகாம் விஷயமாகவா என்று... அப்போ அவள் சொன்னாள்... ஸ்கூல் ஸ்டூடண்ட்ஸ்காக பள்ளிகளில் மருத்துவ பரிசோதனை செய்யப் போகிறார்களாம். இந்த தடவை 'ஈஸ்ட் ஜோனில்' அங்கிள்... எல்லாவிதமான மெடிக்கல் டெஸ்ட்கள் உண்டு... இதை நந்திதாவிடம் தெரிவித்து விடுகிறீர்களா என்று... ஏம்மா ஹரிணி... ஏதோ கிராமத்தில் மருத்துவ முகாம் என்று போயிருக்கிறாளே... நீ போகவில்லையான்னு கேட்டப்போதான் அப்படி எதுவும் இல்லையே அங்கிள் என்றாள்... என் மகள் எதற்காக பொய் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் குழம்பினேன்டா... இப்போ உண்மையைச் சொல்கிறாயா என் மகளே...''

கோபப்படாமல்... நிதானமாய் அமைதியாய் தந்தை பேசியது தான் அவளைக் குன்றச் செய்தது. என்ன சொல்வது என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையில்... மறுமுனையில் தந்தையின் குரல் மீண்டும்.

''ஏய்... நந்துகுட்டி... என்ன ஆச்சு உனக்கு... மனதில் எதையும் ஒளித்து வைக்காமல் வெளியே கொட்டுபவள் நீ... உன்னிடம் ரகசியம் என்றால்... ஊகூம்... என்னால் நம்ப முடியவில்லைடா... இதோ பார் நந்தும்மா... என் மகள் எந்தத் தப்பும் பண்ண மாட்டாள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டுடா... எப்போதும் என்னிடம்



மனம் விட்டுப் பேசும் நீ... எதற்காக இப்படிப் பொய் சொல்லணும் என்பதுதான் என் வருத்தம்... பொய்... புரட்டு எல்லாம் உன் குணம் இல்லையேடா... சரி... இப்போ என்னிடம் மறைக்காமல் சொல்ல விரும்பினால்... சொல்லு...''

''அது... வந்து... டாட்... நான் இங்கே வருவது உங்களுக்கு... முக்கியமா அம்மாவுக்குத் தெரிய வேண்டாம் என்று நினைத்துதான் அப்படி ஒரு பொய் சொன்னேன். நீங்கள் பெங்களூருக்கு போய் வர நாலைந்து நாட்கள் ஆகும்... அதற்குள் வந்து விடலாம் என்று நினைத்தேன்... ப்ச்சு... ஆனால்... நானொன்று நினைக்க... வேறொன்று நடந்து விட்டது.. டாட்..''

''அது சரிடா... எந்த விஷயமாய் திடீர் என்று குன்னூர் பயணம்... அம்மாவே உன்னை போகச் சொன்ன பிறகு... எதற்கு ரகசியம் காக்கணும்...''

''எல்லாம் இந்த திருமண ஏற்பாட்டை நிறுத்தத் தான் டாட்... எனக்குப் பிடிக்கவில்லை... அதான் சித்தியிடம் கெஞ்சி... கூத்தாடி நிறுத்தலாம் என்று வந்தேன்... அவர்களது ஏற்பாடு ஆச்சே. நான்தான் நிறுத்தினேன் என்று அம்மாவுக்கு தெரியக்கூடாது என்று நினைத்து தான்...''

''அட மக்கு... சித்தி சொல்லிவிட மாட்டாளா...''

''சித்தியிடம் நான் வந்து சென்றது. வீட்டில் யாருக்கும் தெரிய வேண்டாம் என்று சொன்னால்... மூச் விட மாட்டார்கள் என்ற நம்பிக்கைதான் டாட்...''

''உன்னோட இத்தனை முயற்சியும் வீண்டா... நந்து... நீ இவ்வாறு சிரமப்பட்டிருக்க வேண்டாம்... கல்யாண ஏற்பாடு அதுவா நின்று விட்டது... ஏன்... இதை உ சித்தி சொல்லவில்லையா என்ன...''

தந்தை சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனாள் நந்திதா.

என்ன... திருமணப் பேச்சு நின்று போனதா... எப்படி... எந்தக் காரணத்தால்... எதுவுமே தெரியாமல் நாயாய் அலைந்திருக்கிறேன்... அடக் கடவுளே...

''சரி.. சரி... மற்ற விஷயத்தை உன் சித்திகிட்டே யிருந்து கேட்டுத் தெரிந்து கொள்... சீக்கிரம் புறப்பட்டு வந்து விடு நந்தும்மா... நீயும் இல்லாமல்... ரஞ்சியும் இல்லாமல் வீடு 'வெறிச்'சென்று இருக்கு என்றவர்... கிசு கிசுத்த குரலில் 'உன் அம்மாவோடு தொணதொணப்பை நான் ஒருத்தன் மட்டுமே கேட்டுக் கொள்ள வேண்டி யிருக்குடா... நீ வந்து இம்சையை கொஞ்சம் பங்கு போட்டுக் கொண்டால் தேவலைன்னு தோன்றதுடா...'' என்றதும்... சிரித்து விட்டாள் நந்திதா...

ரிஸீவரை வைத்துவிட்டுச் சித்தியை தேடினாள் 'சித்தி...' என்று அடுக்களைக்குள் எட்டிப் பார்த்தாள்.

நினைத்தது போலவே சித்தி எதையோ கிளறிக் கொண்டிருந்தாள்.

''சித்தி... என்ன செய்கிறீர்கள்...'' என்று கேட்டாள்.

''ம்ம்... சட்டியும் பானையும்... பார்த்தால் தெரியவில்லை... காலி ஃப்ளவர் ரோஸ்ட் செய்து கொண்டு இருக் கிறேன்...'' என்றாள் கொஞ்சம் காரமாய்...

''என்ன சித்தி... என்மேல் கோபமா...'' சித்தியின் தாடையைப் பிடித்துக் கேட்டாள்.

''இன்னும் என்கிட்டே இந்த இரண்டு நாளாய் எங் கிருந்தேன்னு நீ சொல்லவில்லையே... அது சொல்கிற வரைக்கும் என் கோபம் தீராது...'' என்றாள் பூமா... அவளது கையை விலக்கியவாறு.



''சொல்கிறேன் சித்தி...'' என்றவள்... ஊரிலிருந்து புறப்பட்டதிலிருந்து... நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னாள்.

''ஏண்டி... வயசு பெண் நீ... நடு வழியில் வண்டி நின்று போய்... அத்தனை அவந்தரம் நடந்திருக்கிறது... ஒரு போன் செய்து சொல்லியிருக்கலாம் இல்லையா... சித்தப்பாவை இல்லை அருணை அனுப்பி உன்னை அழைத்து வரச் சொல்லியிருப்பேனே... அது போகட்டும்... புறப்பட்றதுக்கு முன்னாவது 'வர்றேன்' என்று சொல்லி யிருக்கலாம் தானே... பொறுப்பில்லாமல் நீங்க நடந்து கொண்டு எங்களுக்கு 'டென்ஷன்' கொடுக்கிறீங்களே... வயசு வந்த பெண்... முன் பின் தெரியாத ஊரில்... யார் யாரோ அறிமுகமில்லாதவர்களுடன்... எப்படிடீ பொறுத் துக் கொள்வது. இது உன் அம்மாவுக்குத் தெரிந்தால்...''

''அய்யோ... சித்தி... இது அம்மாவுக்குத் தெரியவே கூடாது... இங்கே வந்த விஷயமே அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தெரியக்கூடாது என்று எண்ணிதான் அவர்களுக்குத் தெரிவிக்காமல் வந்தது. ஆனால்... என்ன செய்வது.. எல்லாமே ஃப்ளாப் ஆகி விட்டது. ஏன் சித்தி... நீங்கள் பார்த்த இடம்... அதாவது கல்யாண ஏற்பாடு நின்று விட்டதாமே... டாட் சொன்னார்... எப்படி...'' என்று வினவினாள்.

''சாரிம்மா நந்து... நல்ல இடம்... நல்ல குடும்பம் என்று நினைத்து தான் இந்த விஷயத்திற்கு பிள்ளையார் சுழி போட்டேன்... எனக்குத் தெரிந்த பெண்ணுக்குத் தம்பி... அவனைப் பற்றி அத்தனைப் பீற்றிக் கொண்டாள் அவள்... அதை நம்பிதான் நானும் இந்திரன்... சந்திரன் என்று உங்கம்மாவிடம் புகழ்ந்தது... ஆனால்... அடடா...

இரு இரு... அடிபிடிக்கிறது. இறக்கி வைத்து விட்டு வருகிறேன்'' என்று சித்தி சொல்லிவிட்டு... காரியத்தில் இறங்க... நந்திதாவிற்கு ஏமாற்றம்.

அப்புறம் என்ன ஆச்சு... முக்கிய காரணம் என்னவாக இருக்கும் என்று அறிய ஆர்வம்... மர்ம நாவலின் முடிவை அறிந்து கொள்ளும் பரபரப்பைப் போல துடிப்புடன் காத்திருந்தாள்.

சித்தி அந்தப் பேச்சை எடுப்பதாக இல்லை.

''அப்புறம் என்ன ஆச்சு சித்தி... பையனுக்கு படிப்பில்லைன்னா... நல்ல வேலையில்லை என்று தெரிய வந்ததா... பையன் அழகா இல்லை என்றா... எந்த விஷயத்தில் நின்று போனது...'' பொறுமையிழந்து கேட்டாள்.

''இதெல்லாம் பரவாயில்லையே... பையனுக்கு... அடச்சே... பையனாமே... பையன்... சின்னப் பையனா அவன்... இரண்டு கழுதை வயசாச்சு. அவனைப் பற்றி ஒரு மொட்டைக் கடிதாசி வந்திருக்கிறதாம்... அதுவும் எங்கே... உன் வீட்டுக்கு... பையனுக்கு ஏற்கனவே ஒரு காதலி இருக்கிறாள். தவிர... சரியான ஜொள்ளு பார்ட்டி... அவனுக்கு உங்க பெண்ணைத் தருவதை விட... பேசாமல் ஒரு பாழும் கிணற்றில் தள்ளி விடுவதே மேல் என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள்... ஊரிலிருந்து வந்ததுமே... மொட்டைக் கடிதாசியில் வந்திருந்த அணுகுண்டு செய்தியைப் படித்துவிட்டு... பதறிப்போய் உன் அம்மா எனக்கு போன் செய்து விஷயத்தைச் சொன்னாள். அதைக் கேட்டு எனக்கு சர்வாங்கமும் நடுங்கி விட்டது... தெரிந்த இடமே இந்த லட்சணம் என்றால்... முன் பின் தெரியாத இடமாக



இருந்தால் இன்னும் என்ன கண்றாவியெல்லாம் இருக்குமோ...

அந்த ஆத்திரத்தில் உடனே அந்த பையனோட அக்காவிற்கு போன் பண்ணி கன்னா பின்னான்னு பேசி விட்டேன். மொட்டைக் கடிதாசி விஷயம் உண்மையான்னு முதலில் உன் தம்பியை விசாரி... அது உண்மையா இருந்தால் அந்தக் காதலியைக் கட்டி வை... என்று சொல்லிவிட்டேன். கடவுள் புண்ணியத்தில் நந்தும்மா நீ தப்பித்து விட்டாய்... அந்த தெய்வத்திற்கு தான் நன்றி சொல்லணும்... விஷயம் இவ்வளவுதான் இன்னும் உனக்கு என்ன தெரியணும்... சொல்லு.''

''ஒரு முக்கியமான விஷயம் எனக்குத் தெரியணும் சித்தி...''

''என்ன... தம்பியோட காதல் அக்காவிற்கு தெரியாமல் இருந்ததா என்றா...''

''ஊகூம்... அந்த ஆசாமிக்கு இரண்டு கழுதை வயசு என்றீர்களே... அப்போ ஒரு கழுதைக்கு எத்தனை வயசு என்று தெரிய வேண்டும்...'' முகத்தில் சிரிப்பைக் காட்டாமல் அவள் சொல்ல... பூமாவுக்கு சிரிப்பு வந்தது.

''போக்கிரி... நிச்சயித்த இடம் இப்படி 'புஸ்' என்று ஆகி விட்டதே என்ற ஆதங்கத்தில் பேசுகிறேன்... உனக்கு விளையாட்டாக படுகிறதாக்கும்... இரு... இரு... சீக்கிரமே வேறே ஒரு பையனைப் பார்த்து... உன்னைக் கட்டிக் கொடுத்து அனுப்பவில்லையென்றால் கேளு...'' என்று பயமுறுத்துவது போல பேசினாள் பூமா...

''அடக் கடவுளே... ஒரு பையன் எனக்குக் கணவனாமே. காலேஜ் பையனா... இல்லை ஸ்கூல் பையனா... இதுக்கு யாரும் ஒத்துக்க மாட்டாங்களே சித்தி...''

''வாய் கொழுப்பு... ம்ம்... உனக்கு கடிவாளம் போட சரியான ஒருத்தன் வருவான் பார்... அப்ப தெரியும்.''

''ஊகூம்... அது கனவிலும் நடக்காது சித்தி... நான் கல்யாணமே வேண்டாம் என்கிறேன்... அதை நினைத்தால் எட்டிக்காயாய் கசக்கிறது...'' முகத்தை சுளித்துச் சொன்னாள் நந்திதா.

''அய்யோடா... இப்படிச் சொல்கிறவர்கள் தான் என் புருஷன் தான்... எனக்கு மட்டும் தான்னு புருஷனே கதியாக இருப்பார்கள்... எத்தனை பேரை பார்த்திருக்கிறேன்...'' என்று கேலி செய்தாள் பூமா.

''அப்படியா சித்தி... இப்போதுதான் தெரிகிறது. நீங்க கூட சொன்னீர்களாமே... எனக்கு ஏர் ஹோஸ்டஸ் வேலையில் சேர ஆசை... கல்யாணம்... மண்ணாங்கட்டியெல்லாம் வேண்டாம்... என்னை என் போக்கில் விடுங்கள் என்று... அப்புறம் பாட்டியின் பிடிவாதத்தில்... ஆசையைத் தூரப் போட்டு விட்டு தாலிக்கட்டிக் கொண்டீர்களாம்... அம்மா சொல்லுவாள்... 'உன் சித்தி மட்டும் ஸ்திர புத்தியுடன் இருந்திருந்தால் இத்தனை நேரம் உலகையெல்லாம் சுற்றி வந்திருப்பாள் பாவம்' என்று... அடடா... நீங்களும் என் புருஷன்தான்... எனக்கு மட்டும் தான் பாடுகிறீர்களா என்ன..'' என்று குறும்பாய் கேட்டாள் மகள்.

அதைக் கேட்டு விட்டு அசடு வழிந்தாள் சித்தி...

''சொல்லி விட்டாளா உன் அம்மா... சே... எதைச் சொல்வது என்ற விவஸ்தையே இல்லையா...'' என்றாள் பொய் கோபத்துடன்.

அதற்குப் பிறகு பொழுது சிட்டாய் பறந்தது.



சித்தியின் கைமணத்தை ரசித்து... ஒரு பிடிபிடித்து குட்டித் தூக்கம் போட்டு எழுகையில் சித்தப்பா ரமணியும் தம்பி அருணும் வந்திருந்தனர்...

அதற்குப் பிறகு அனுஷாவும் வந்துவிட... சொல்ல வேண்டுமா... வீடே கலகலத்தது.

''உடனே புறப்பட வேண்டும்'' என்றவளை நிறுத்தி... ''அதிசயமாய் வந்திருக்கே... இருந்து விட்டுப் போ'' என்று அனைவரும் வற்புறுத்த... அங்கே தங்கி விட்டாள் நந்திதா. அரட்டை.. ஊர் சுற்றல்... சீட்டாட்டம்.. கேரம் என்று ஜாலியாக பொழுதைக் கழித்தனர்...

ஒரு வாரம் தங்கியிருந்து விட்டுப் புறப்பட்டாள் நந்திதா.

''உன் மனசில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் பிரகாஷ்... என்னைத் தட்டிக் கேட்க ஆளில்லை... நானே ராஜா... நானே மந்திரி என்கிற திமிரா உனக்கு... சே... உன் விஷயத்தில் மூக்கை நுழைத்து... அறுபட்டது தான் மிச்சம்... எனக்கு இதுவும் வேண்டும்..., இதற்கு மேலும் வேண்டும்டா...''

சத்ய பிரகாஷைப் பார்த்ததும் கோபத்தில் சீறி விழுந்தாள் தமக்கை சந்திரிகா...

''சாரிக்கா... உன்னிடம் நேரில் பேசி 'கன்வின்ஸ்' பண்ணத்தான் வந்தேன்... நீயாவது என்னைப் புரிந்து கொள்வாய் என்று நினைத்துத் தான் இங்கே வந்தேன்.. நீயே இப்படி கோபித்துக் கொண்டால் எப்படி...''

தம்பியின் வார்த்தைகள் ஆத்திரத்தை மேலும் கிளப்பின.

''ஆமாண்டா... அவமானப்பட்டு நின்றது நான்... பெண் எனக்குத்தானே தெரியும் அந்த அவஸ்தை... பெண்

ணோட சித்திக்கு என் மீது மதிப்பும் மரியாதையும் இருந்தது... உன் விஷயத்தால் எல்லாமே கப்பலேறி விட்டது... பூமா... போனில் என்னிடம் கேள்விகள் கேட்கும் போது நான் எப்படித் தடுமாறிப் போனேன் தெரியுமா... எல்லாம் உன்னால் வந்தது. மொட்டைக் கடிதாசி யார் போட்டது... நீயா... சொல்லுடா. உலுக்காத குறையாய் அக்கா கேட்க... விழித்தான் பிரகாஷ்... அந்த மொட்டைக் கடிதாசியை எழுதியது ப்ரியா என்று தெரிந்தால் அவள் மீது எரிச்சலும் வெறுப்பும் தான் கூடும்... அதை விட... நான் தான் எழுதினேன் என்று சொல்வதே மேல்...

''என்னடா முழிக்கிறே... செய்வதைச் செய்துவிட்டு எதுவுமே தெரியாத அப்பாவியா காட்டிக் கொண்டால்... நடந்தது இல்லை என்று ஆகி விடுமா... உன்னால் மாமாவிடம் நல்லா வாங்கிக் கட்டிக் கொண்டேன் தெரியுமா. எல்லாம் என் தலையெழுத்துடா... 'ஏண்டி... இதெல்லாம் உனக்குத் தேவையா... வாயை மூடிக் கொண்டு நானாச்சு... என் குடும்பமாச்சு'ன்னு இருக்க வேண்டியது தானே என்று குத்திக் காட்டுகிறார் அவர். நீ காதலிச்சது தப்பில்லை... அதை எங்ககிட்டே சொல்லாமல் இழுத்தடிச்சே பார்... அதுதான் மகா தப்பு... சரி... யார்டா அவ... எத்தனை வருஷமா பழக்கம்... நல்ல குடும்பத்துப் பெண்ணா... சொல்லித் தொலை...''

தமக்கை கொஞ்சம் இறங்கி வந்திருக்கிறாள் என்பதை உணர்ந்தவனாய்... ப்ரியாவைப் பற்றிச் சொன்னான்.

''நீ சொல்வதைப் பார்த்தால்... நமக்கு இணையான இடமாகத் தெரியவில்லையேடா... வசதி குறைந்தவர்களாகத் தெரிகிறார்களே... போகட்டும்... குணம் எப்படி... எல்லோரையும் அனுசரித்துப் போகிறவளா இருக்



கிறாளா... உன்னை விரும்புகிறாளா... இல்லை உன்னிடம் இருக்கும் பணத்தை விரும்புகிறாளா... ஏன்னா... இந்தக் காலத்துப் பெண்கள் கணவனின் பர்ஸ் கொழுத்திருக்கிறதா என்பதில்தான் குறியாக இருப்பார்கள்... பார்த்துக்கோ...'' என்றாள் சந்திரிகா. அவனை எச்சரிக்கும் விதமாய்...

''இல்லைக்கா... ரொம்பவும் நல்லவள்... என் மீது ரொம்பப் பிரியம்... எனக்கு அன்பு மனைவியாய் இருப்பாள் என்பது சர்வ நிச்சயம்... நீதான் எனக்கு இந்த விஷயத்தில் உதவ வேண்டும்..'' என்றான் அவன்... கெஞ்சும் குரலில்...

''முயற்சிக்கிறேன்... இதை முதலில் செய்திருந்தால்... என் கௌவரம் பிழைத்திருக்கும் இல்லையா... சரி... உன் ப்ரியா... நான் பார்த்து வைத்திருந்த பெண்ணை விட அழகா என்ன...''

''என் கண்களுக்கு அவள் அழகுதான் அக்கா...'' என்று உறுதியான குரலில் சொன்னான் அவன்.

''போடா முட்டாள்... நான் பார்த்த பெண்களில் நந்திதா மாதிரி அழகி... ஊகூம்... பேரழகி யாருமே இல்லைம் பேன்... இரு... போட்டோவைப் பார்த்துவிட்டு சொல்... எப்பேர்ப்பட்ட பெண்ணை வேண்டாம் என்று சொல்லியிருக்கேன்னு புரியும்...'' என்றவள் அலமாரியில் இருந்த புத்தகங்களின் மத்தியில் இருந்த கவரை உருவி... அதிலிருந்து போட்டோவை எடுத்து நீட்டினாள்.

அசட்டையாய் அதை வாங்கிப் பார்த்தவனுக்கு அதிர்ச்சி...

அதில் பூவாய் சிரித்துக் கொண்டிருந்தவள் தான் சந்தித்த நந்திதாவே தான்... மனதை மயக்கும் புன்னகை

யுடன் ஒய்யாரமாய் சுவற்றில் சாய்ந்து நின்றிருந்த வளைக் கண் கொட்டாமல் பார்த்தவனுக்கு அதிர்ச்சி... தனக்கு பார்த்த பெண்ணையா சந்தித்துப் பழகினோம்... இது என்ன விதியின் விளையாட்டா என்ற வியப்பும் தான்.

## 9



ஊருக்குத் திரும்பிய பின்னும் கூட அவனுக்கு பிரமிப்பு தீரவில்லை...

தன்னருகே அமர்ந்து பயணம் செய்த நந்திதா... தான் இருந்த இடத்திலேயே தங்கியிருந்த நந்திதா... தன்னோடு சகஜமாய் பேசிப் பழகிய நந்திதா... தனக்காகப் பார்த்து வைத்திருந்த பெண்!

அவனால் நம்ப முடியவில்லை...

அவள் 'நந்திதா' என்றதும்... எத்தனையோ நந்திதாக்களில் இவளும் ஒருத்தி என்று நினைத்தானே தவிர அவள் தான் இவள் என்று தோன்றவில்லையே... அவளுக்கும் இதைப்பற்றி தெரியாது... அதாவது... சக பயணியாக அருகே அமர்ந்திருந்தவன்... நடு வழியில் சிற்றூரில்... ஒரே கூரையின் கீழ் தங்கியிருந்தவன்... நட்புடன் பேசி.. சிரித்தவன் தனக்காகப் பார்த்திருந்த மாப்பிள்ளையென்று அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இருவரும் ஒருவரையொருவர் அறியாமல் பேசியிருக்கிறோம்... உதவியிருக்கிறோம்... மனம் விட்டுப் பேசி



இருக்கிறோம்... இல்லை... மனம் விட்டுப் பேசியிருந்தால் ப்ரியாவைப் பற்றிச் சொல்லியிருப்பேனே.. அப்படி எதுவும் சொல்லவில்லையே... பாவம்... அவள்தான் என்னிடம் மனம் விட்டுப் பேசியிருக்கிறாள்.

குன்னூருக்கு போகும் காரணத்தைக்கூட தெளிவாய் சொன்னாளே...

''இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இல்லை... சித்தியிடம் கெஞ்சி... வேண்டாம் என்று சொல்லத்தான் வந்தேன்...'' என்றாளே... கல்யாணமே வேண்டாம் என்ற எண்ணத்தில்... உறுதியாக இருக்கும் அவளை யாராலும் வற்புறுத்த முடியாதுதான்...

ஆகையால்... குற்ற உணர்வு குறுகுறுக்கவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது...

இந்த ஏற்பாட்டில் இரண்டு பக்கமும் உடன்பாடு இல்லை... அவளுக்கு திருமணத்தில் நாட்டமில்லை... அவனுக்கு இந்தத் திருமணம் வேண்டியதில்லை...

இருவர் புறப்பட்ட நோக்கமும் ஒன்றுதான்...

இருவரின் எண்ணமும் கல்யாண ஏற்பாட்டை நிறுத்துவதுதான்... அதுதான் விசித்திரம்...

இருவரும் அதே எண்ணத்துடன் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு... ஒரே பஸ்ஸில்... அதுவும் அருகருகே பயணம் செய்து... தடங்கலில் சிக்கி ஒரே இடத்தில் தங்கி... தங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொண்டு... மீண்டும் சேர்ந்தே பயணம் செய்து இலக்கை அடைந்ததும் பிரிந்து போயிருக்கிறோம்... ஒருவரையொருவர் அறியாமலே... என்ன விநோதம்!

எப்படியோ... என் காதலுக்கு பச்சைக் கொடி காட்டியது மாதிரி தான்... அக்காவின் காதில் போட்டாகி விட்டது.

அக்கா திறமைசாலி... சாமர்த்தியமாய் பேசி அம்மா அப்பாவை மசிய வைத்து விடுவாள்... அப்புறம் வாழ்வே வசந்தமானதே என்று பாட வேண்டியது தான்.

அதே நினைப்பில்... ப்ரியாவை உடனே போய் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு வந்தது அவனிடம்.

ப்ரியாவிடம் விஷயத்தைச் சொன்னதும் குதிக்காத குறைதான்... அத்தனை சந்தோஷம் அவளுக்கு. இருந்தும் இழையாய் சந்தேகமும் வரத்தான் செய்தது.

''உங்கக்காவிடம் சொன்னது நல்லதுதான்... ஆனால் உங்கம்மா... அப்பா சம்மதிக்க வேண்டுமே...''

''கவலையே வேண்டாம். அக்காவைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்... ஒரு காரியத்தைச் செய்ய ஒப்புக் கொண்டு விட்டால்... அதை நடத்திக் காட்டற வரைக்கும் தூக்கம் வராது ப்ரியா... இத்தனை நேரம் எங்கம்மாவிற்கு செய்தி பறந்திருக்கும் பாரேன். உடனே அம்மாவிடமிருந்து போன் வந்தாலும் ஆச்சர்யமில்லை.''

எப்படியோ... நம்ம கல்யாணம் நடக்கணும்... அது தான் என் ஆசை...'' காதல் பார்வையுடன் அவள் சொல்லவும் அவன் மெழுகாய் கரைந்தான்...

''ஏன் சத்யா... கல்யாணத்திற்குப் பிறகு நாம் இங்கேதான் இருக்கப் போகிறோமா...''

''ஏன்... உனக்கு இங்கே இருக்க விருப்பமில்லையா ப்ரியா...''

''அப்படியில்லை... என்னோட கனவு என்ன தெரியுமா? அன்பான கணவனுடன் பெரிய ப்ளாட்டில் வசிக்கணும். அனைத்து வசதிகளுடன்... அப்புறம் விலையுயர்ந்த காரில் சுத்தணும்... விரும்பிய நகைகளையெல்லாம் வாங்கணும்... மனசுக்குப் பிடித்த உடைகளை



உடுத்தணும்... இதெல்லாம் தான்... இதெல்லாம் உங்கள் மூலமாய் நிறைவேறப் போகிறது சத்யா... ஐம் வெரி லக்கி... சத்யா...''

அவள் கண்கள் பளபளக்கச் சொல்வதை ரசிக்க வேண்டிய மனம் ஏனோ ஏமாற்றத்தைத் தழுவியது போல இருந்தது...

காதில் அக்காவின் குரல் முணுமுணுப்பது போல ஒலித்தது... 'அவள் உன்னை விரும்புகிறாளா... இல்லை... உன்னிடம் இருக்கும் பணத்தை விரும்புகிறாளா...'

அடுத்த கணமே தலையை உதறிக் கொண்டான்.

'சேச்சே... ப்ரியாவை தப்பாக எடை போடக்கூடாது. வாழ்வில் வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டவள். திருமணத்திற்குப் பிறகாவது வாழ்க்கையில் வளங்களோடு இருக்கலாமே என்று ஆசைப்படுவது சகஜம். சாதாரணமாய் எல்லாப் பெண்களுக்கும் இருக்கும் இயல்பான ஆசைகள் தானே... அந்தக் குறைகள் தீர்ந்தால் சாதாரணமாகி விடுவாள்.

இயலாமைதான் அவளை அப்படிப் பேச வைக்கிறது பாவம்...

அது மட்டுமில்லை... பெண்களிடம் பெரும்பாலோரின் ஆசைக் கனவுகள் அதுதானே...

கண்ணுக்கு லட்சணமான கணவன்... நல்ல வசதியான வாழ்க்கை... நகைகள்... உடைகள் இவைகள் தானே அவர்கள் எதிர்பார்ப்பு... அதையே தான் ப்ரியாவும் ஆசைப்படுவது... அதெப்படி தவறாகி விடும்...'

''சத்யா... இந்த சந்தோஷத்தைக் கொண்டாட வேண்டும்... எங்கே போகலாம்... ஹையோ... எனக்கு இறக்கை இல்லாமலே பறப்பது போல இருக்கு சத்யா..

''ஐ அம் ஹேப்பி... யெஸ்... வெரி வெரி ஹேப்பி...''

ஆனந்தக் களிப்பில் கண்களில் ஜோதி தெரிய... முகம் சூரியகாந்தியாய் மலர்ந்திருக்க... அவள் சொன்னதை வெகுவாய் ரசித்தான் அவன்.

''ஓ.கே... எங்கே என்று நீயே சொல்... ப்ரியா... ஃபைவ் ஸ்டார் ஓட்டலா... தியேட்டரில் சினிமாவா... 'பீச்' ரெஸ்டாரெண்ட்டா...''

''ஊகூம்... அதெல்லாம் வேண்டாம். ஏதாவது ஐஸ்க்ரீம் பார்லரில் சாக்லெட் ஐஸ்க்ரீம் சாப்பிடணும் சத்யா... காஸ்ட்லியா இருக்கணும்...''

''ப்பூ.. அவ்வளவு தானா... 'டன்..' உன் வீட்டில் எங்கே போவதாய் சொல்வாய்... அவர்கள் நம்புகிற மாதிரி இருக்க வேண்டுமே...''

''என் சிநேகிதியின் 'பர்த்டே'க்கு போகிறேன்னு சொல்லிவிட்டு வருகிறேன்... அவர்களுக்கு சந்தேகம் வராது... சத்யா...''

''குட்... அப்போ... நாம் சரியா ஏழு மணிக்கு சந்திக்கிறோம்... ஓ.கே...'' என்று எந்த இடம் என்பதையும் குறிப்பிட்டான்.

'சில்'லென்ற ஐஸ்கிரீமை ஸ்பூனில் வழித்தெடுத்து வாயில் வைத்து... அதை ரசித்து மிழுங்கினாள் ப்ரியா. தொண்டைக்குள் அது குளிர்ச்சியாக இறங்கியது.

''என்ன ப்ரியா... சாப்பிடவா நாம் வந்தது... எதுவும் பேசாமல் இருக்கிறாய்...'' என்று வினவினான் சத்யா...

''ஐஸ்க்ரீம் சூப்பரா இருக்கு சத்யா...'' என்றவள் இன்னொரு ஸ்பூன் ஐஸ்க்ரீமை எடுத்து விழுங்கினாள்.



''ஏய்... சாப்பாட்டு ராமி... ஜாலியாகப் பேசலாம் என்று வந்தால்... வெறும் தின்பதிலேயே இருக்கிறாய்.''

''இருங்க... காசு கொடுத்து வாங்கியிருக்கிறோம் முழுசா சாப்பிட வேண்டாமா...'' என்றவள் ஐஸ்க்ரீமில் இருந்த 'டிரை ஃப்ரூட்'ஸை பொறுக்கி எடுத்துச் சாப்பிட்டாள்.

''சரியான சாப்பாட்டு ராமியை மணக்கப் போகிறேன். கடவுளே என்னை நீதான் காப்பாற்றணும்'' என்று கேலியாய் சொல்ல... அதைக் கேட்டு சிரித்தாள் அவள்...

''நான் அதிர்ஷ்டக்காரி சத்யா... நான் கனவு கண்ட மாதிரியே வாழ்க்கை கிடைத்திருக்கிறது தெரியுமா...'' என்றாள் சந்தோஷக் குரலில்...

''என்ன மாதிரி கனவு கண்டாய்... சொல்லேன்...''

''எனக்கு வரப்போகும் கணவர் நான் கேட்டதையெல்லாம் வாங்கித் தரணும்... நான் ஆசைப்படுவதை அன்பளிப்பாக தரணும்... கஞ்சத்தனமாக இல்லாமல் வெகு தாராளமாய் செலவு செய்பவராக இருக்க வேண்டும். அப்புறம்...''

''போதும்... எனக்குப் புரிந்து விட்டது... மொத்தத்தில் ஒரு ஏ.டி.எம். மெஷினா இருக்கணும் என்கிறாய்... அப்படித்தானே... நம் கல்யாணம் நடக்கட்டும்... உனக்கு 'டெபிட் கார்டே' தந்து விடுகிறேன்... உன் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்... சந்தோஷம்தானே...''

''வாவ்! மை ஸ்வீட் சத்யா... இதை... இதைத்தான் நான் எதிர்பார்த்தது... நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். அதான் சொன்னேனே... நான் அதிர்ஷ்டக்காரின்னு...

என்றைக்கு நீங்க எங்க வீட்டுக்கு குடி வந்தீங்களோ... அப்போதே முடிவு செய்து விட்டேன். நீங்க தான் என் வருங்கால கணவர் என்று...''

''ஊகூம்... நான் தான் கொடுத்து வைத்தவன்... அவசரத்திற்கு வீடு வேண்டும் என்று ஆபீஸில் என்னுடன் வேலை பார்த்தவரிடம் சொன்ன நேரம் என் அதிர்ஷ்ட நேரம் என்றுதான் சொல்வேன். அவர்தான் உங்கள் வீட்டு மாடி காலியாக இருக்கிறது... வேண்டும் என்றால் 'டிரை' பண்ணுங்கள் என்றார்... அவசரத்துக்குத் தானே... அப்புறம் பெரிய வீடாகப் பார்த்து போய் விட லாம் என்று வந்த என்னை... இரு மான் விழிகள் கட்டிப் போட்டு அங்கேயே இருக்க வைத்து விட்டதுதான் அதிசயம்...

ஏன் பிரியா... உன் அப்பா நம் காதலை எதிர்க்க மாட்டார் தானே... ஏன் என்றால் பெற்றவர்களுக்கு காதல் என்றாலே அலர்ஜி... அதான் கேட்கிறேன்.''

''என்ன கேள்வி இது சத்யா... உங்களை ரொம்பப் பிடித்திருக்கிறது என் அப்பா அம்மாவிற்கு... நீங்கள் மாப்பிள்ளையானால்... அதை விட சந்தோஷம் அவர் களுக்கு வேறு எதுவும் இருக்காது என்பது நிச்சயம்... என்னை உங்கள் வீட்டில் மருமகளாக ஏற்றுக் கொள் வார்களா... அதைச் சொல்லுங்கள்... வேறு ஒரு பெண்ணைப் பார்த்த அவர்களுக்கு என்னை ஏற்க மனசு வருமான்னுதான் சந்தேகம்...''

''என் அம்மாவைப் பற்றி உனக்குத் தெரியாது ப்ரியா... என்மேல் உயிர்... என் விருப்பத்திற்கு தடை சொல்லவே மாட்டார்கள்... உன்னைப் பார்த்ததும் பிடித்து விடும் அம்மாவுக்கு... ரொம்ப சாது... பூ மாதிரி மனசு...



என்ன... உன் காதலை முதலில் சொல்லியிருக்கக் கூடாதா... இந்த ரகளையெல்லாம் நடந்திருக்காது இல்லையா என்று வருத்தப்படலாம்... அதுவும் கொஞ்ச நேரம் தான். அப்புறம் பழைய மாதிரி அன்பைப் பொழிய ஆரம்பித்து விடுவார்கள்... பாரேன்... என் அம்மாவை நீ பார்த்த உடனே... உனக்கும்...''

''சரி... புறப்படுவோம் சத்யா... நேரமாகி விட்டது வீட் டில் இன்னும் வரவில்லையே என்று பயப்படுவார்கள்... போவோமா'' என்றாள் அவள்.

அம்மா புராணம் அவளுக்கு சலிப்பைத் தந்தது... அதை அவன் புரிந்து கொண்டானா என்று தெரிய வில்லை...

காரின் கதவைத் திறந்து உட்கார முயன்றபோது வயதான பிச்சைக்காரி ஒருத்தி அருகே வந்து நின்று கையேந்தினாள்.

''பசிக்குது... தர்மம்.. கொடு சாமி'' என்ற கெஞ்ச லுடன்.

எலும்பும் தோலுமாய் இருந்த அந்த மூதாட்டியை இரக்கத்துடன் பார்த்தவன்... பர்ஸிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான்.

''நீ நல்லா இருக்கணும் சாமி...'' என்று வாழ்த்தி விட்டு மகிழ்ச்சியுடன் சென்றாள் அந்த பிச்சைக்காரக் கிழவி.

''என்ன சத்யா இது... பிச்சைக்காரிக்கெல்லாம் பத்து ரூபாயா போடுவது... இது ஓவரா இல்லை... ஒரு ரூபாய்... போனால் போகட்டும் என்று இரண்டு ரூபாய் போட் டால் போதாதா... இப்படியெல்லாம் கண்டவங்களுக்

கெல்லாம் வாரிக் கொடுத்தா... அவ்வளவுதான்... கொஞ்சம் சிக்கனமா இருக்கணும் சத்யா...'' என்றாள் ப்ரியா... முகத்தை சுளித்துக் கொண்டு...

''நான் இன்றைக்கு சந்தோஷமா இருக்கேன் ப்ரியா... அதை இப்படி வெளிப்படுத்தினேன் அவ்வளவுதான்...'' என்றான் அவன்... காரைக் கிளப்பியபடி.

''இருக்கட்டும்... அதற்காக பத்து ரூபாயா... உங்களுக்கு பணத்தின் அருமை தெரியலை. சத்யா... நாளைக்குக் கல்யாணம்...'' என்று தொடர்ந்தவளை கையமர்த்தி நிறுத்தினான் சத்யா.

''இதைப் பெரிசு படுத்தாதே ப்ரியா... விட்டுவிடு...'' என்று சொன்னான்... கொஞ்சம் கடுப்பாய்... முதல் உரசல்... வலித்தது அவனுக்கு. ஒரு கணம் தயங்கி விட்டு... ''சாரி... சத்யா... எனக்கு சொல்ல உரிமை இருக்கு என்று நினைத்துச் சொன்னேன்... தப்புதான்...'' என்றவளை திரும்பிப் பார்த்துவிட்டு... ''லீ்ப இட்.. இதைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது... ப்ளீஸ் ப்ரியா...'' என்றான் அவன்...

அதற்குப் பின் இருவரும் பேசவில்லை. பேச மனமில்லை. சத்யாவின் மனம் அவனையும் கேளாமல் நந்திதாவை நினைத்தது.

அவள் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாள்... 'என்ன சத்யா... வயசானவங்க... பணம் கொடுத்து, விட்டால் பசியாறி விடுமா... கொஞ்சம் இருங்கள்' என்று சொல்லி அருகே இருந்த ஓட்டலிலிருந்து இட்லியோ... தோசையோ வாங்கி வந்து தந்திருப்பாள். ஓட்டல் இல்லாவிட்டால் பேக்கரியிலிருந்து பன்... கேக் என்று



வாரிக் கொண்டு வந்து கிழவிக்கு கொடுத்திருப்பாள்... ''பாட்டி... வயிறு நிறைய சாப்பிடுங்கள்... அப்போதுதான் தெம்பு வரும்'' என்றும் சொல்லியிருப்பாள்...

மனிதர்களின் துன்பங்களைக் கண்டு வேதனைப் பட்டு... உதவி செய்ய ஓடும் அவளைப் போல பரந்த மனம் யாருக்கு வரும்... அவள் அன்பின் மறு உருவம்...

தொடர்ந்து அவளுடன் கழித்த அந்த இரண்டு நாட்கள். அவனது நினைவில் வந்து இதமான உணர்வை ஊட்ட... ஏனோ... உள்ளம் லேசானது போல் தோன்றியது.

இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள். என்னை நினைத்துப் பார்ப்பாளா... இப்போது நான் அவளை நினைப்பது போல...

ஏனோ அவளைப் பார்த்துப் பேச வேண்டும் என தோன்றியது...

மறுநாள் காலையில் ப்ரியா அவனிடம் தயங்கி... தயங்கி வந்தாள்.

காலில் 'சாக்ஸை' மாட்டிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்...

''என்ன ப்ரியா... என்ன விஷயம்... ஏதாவது சொல்ல வேண்டுமா என்ன...'' என்று எதுவுமே நடக்காத மாதிரி கேட்க...

அவளது தயக்கம் மறைந்தது.

''சாரி... சத்யா... நேற்று அவசர குடுக்கை மாதிரி ஏதேதோ பேசி விட்டேன்... உங்களுக்கு கோபம் இல்லையா... என்னிடம் பேசாமல் இருந்தீர்களே சத்யா...'' என்றாள் வருத்தத்துடன்.

''அப்படியெல்லாம் இல்லை ப்ரியா... நடந்தது அல்ல விஷயம்... அதை மறந்து விடுவோம்... என்ன... அப்புறம் சொல்ல மறந்து விட்டேனே. இன்னிக்கு காலையில் அம்மாவிடமிருந்து போன் வந்தது. நான் சொன்ன மாதிரி தான் அவர்கள் பேசினது... அவர்களுக்கு என் மீது கோபம் இல்லை ப்ரியா... என்னடா... எனக்கு வேலை வைக்காமல் நீயே பெண்ணைப் பார்த்து முடிவு செய் துட்டேன்னு பரிகாசம் செய்தார்கள். இந்த சந்தோஷமான விஷயத்தை முதலில் உனக்குச் சொல்ல வேண்டும் என்று காத்திருந்தேன்...'' என்று அவன் சொல்ல... ப்ரியாவின் முகம் மலர்ந்து போனது...

''அப்பாடா... இப்போதுதான் எனக்கு நிம்மதியா இருக்கிறது... கல்யாணம் ஆனதும் உங்க அம்மாவும் அப்பாவும் இங்கு வந்துவிடுவார்களா சத்யா..'' என்று கேட்டாள் ப்ரியா.

''ஓகோ... இப்பவே மாமியாரையும் மாமனாரையும் கைக்குள் போட்டுக் கொண்டு மெச்சிய மருமகள் என்று பெயர் வாங்க ஆசையாக்கும்...'' என்று பரிகாசம் செய் தான்.

''இல்லை... அவர்கள் நம்மோடுதான் இருப்பார்களா என்று தெரிந்து கொள்ள கேட்டேன்...''

''அதெல்லாம் இல்லை... அம்மாவுக்கு சென்னை வெயில் ஆகாது... அந்த வீட்டை விட்டு நகரவும் மாட் டார்கள்... அதனால்... அந்த ஆசையெல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம்...'' என்று அவன் சொன்னதும் அவளது முகத்தில் தெரிந்த மலர்ச்சியைக் கவனிக்க வில்லை சத்யா...



வெகு மும்முரமாய் ஷூவிற்கு லேஸ் கட்டிக் கொண்டு இருந்தான் அவன்...

## 10



நந்திதா கருமமே கண்ணாயினளாக வேலையில் ஆழ்ந்திருந்தாள்.

குழந்தைகளுடன் வந்திருக்கும் தாய்மார்களை அமரச் செய்து... குழந்தையின் பெயர்... தாய் தந்தையரின் பெயர்கள்... குழந்தையின் வயது... பிறந்த தேதி... தடுப்பூசிகள் கொடுக்கப்பட்டுள்ளனவா... இல்லையா... சமீபத்தில் மஞ்சள் காமாலை... டைபாய்டு... அம்மை ஏதாவது வந்ததா... குழந்தையின் பிரச்சனை இவைகளை யெல்லாம் கேட்டு... அதை மருத்துவ அட்டையில் பதிவு செய்து... குழந்தையின் உயரம்... எடை பார்த்து... அதை யும் குறித்து... அவர்களை குறிப்பிட்ட மருத்துவரிடம் அனுப்பி வைப்பது தான் அவளது பணி. அதை அவள் செவ்வனே செய்து கொண்டிருந்தாள்.

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு... குழந்தைகளுக் காகவே ஏற்பாடு செய்த இலவச மருத்துவ சிகிச்சை முகாம்... அதுவும் அவள் படித்த கல்லூரியின் மைதானத் திடலில் என்பதால் இரட்டிப்பு ஆர்வத்துடனும் உற்சாகத் துடனும் பணியாற்றினாள்.

இலவசம் என்பதால் மைதானம் நிரம்பியிருந்தது. பிறந்த குழந்தையிலிருந்து... பன்னிரண்டு வயது இளம்

பிள்ளைகள் வரை.. அனைத்து விதமான பரிசோதனைகளும்... கூடவே சிகிச்சையும் என்பதால் கூட்டத்திற்கு கேட்கவா வேண்டும்.

ரோட்டரி கிளப் 'ஸ்பான்சரில்' அந்த நற்பணி அருமையாக நடந்து கொண்டிருந்தது... தானத்தில் சிறந்ததான இரத்ததானம் கூட ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது...

'ரோட்டரி கிளப்' ஸ்பான்சர் என்பதால் வந்திருந்த டாக்டர்கள் அனைவரும் புகழ் பெற்ற மருத்துவ நிபுணர்கள்... பிரசித்தமான மருத்துவமனையில் பணியாற்றும் துறை வல்லுனர்கள்...

குழந்தைகள் நல மருத்துவர்களிலிருந்து... சரும நோய்... கண் நோய்... பல் வியாதி... இதய நோய்... ஈ.என்.டி... நரம்பியல் கூடவே மனநல மருத்துவம் என்று பல துறைகளில் சிறப்புக் கல்வி பெற்ற வல்லுனர்கள் வந்திருந்து பரிசோதனை செய்து... தகுந்த சிகிச்சை தர இருப்பதை அறிந்து அருகே உள்ள ஊர்களிலிருந்தும் பொதுமக்கள் தம் குழந்தைகளுடன் வந்திருந்தனர்...

மொத்தத்தில் அந்த மைதானமே விழாக்கோலம் கொண்டது போல் பரபரப்புடன் இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்... அத்தனைக் கூட்டம்! அந்த அளவு கலகலப்பு...

நான்கு வயது குழந்தையின் எடையைப் பார்த்துக் கொண்டிருந்த நந்திதாவின் அருகே இருந்த 'செல்' 'நான் இருக்கிறேன்' என்று ஒலியெழுப்பி அழைக்க... அவள் எடுத்துப் பேசினாள்.



''ஹேய்... நந்து... கொஞ்சம் 'பிளட் பேங்க் பக்கம் வாயேன்...'' என்று மறுமுனையின் குரல் சொல்ல...

''சாரிடீ... இப்ப 'பிஸி'யாக இருக்கிறேன்... என்ன விஷயம் சொல்லு...'' என்றாள் மறுமொழியாக.

''அதில்லைடீ... உன்னை விசாரித்து ஒருவர் கேட்டார்... நீ எங்கே இருக்கிறாய்னு... சொன்னேன்... உன்னைப் பார்க்க முடியுமா என்று கேட்டார்... அதான் போன் செய்தேன்...''

''இப்ப வர முடியாதே நர்மதா... அவரிடம் சொல்லு... இந்த மாதிரி வேளையில் வந்து பார்த்துப் பேசுவது எல்லாம் சாத்தியம் இல்லை என்று... அவருடைய பெயரையும் போன் நம்பரையும் வாங்கி வைத்துக் கொள்... அப்புறம் 'கான்டாக்ட்' பண்ணுகிறேன் என்று சொல்...''

மறுமுனையில் நர்மதா வந்திருந்த ஆசாமியிடம் பெயரையும்... போன் நம்பரையும் கேட்பதும்... அதற்கு பதிலாய் ஒரு ஆண் குரல் ''என் பெயர் 'சத்யா' என்று சொல்லுங்கள்...'' என்று சொல்வதும் காதில் விழ... அவளுக்கு அதிர்ச்சி... இனிய அதிர்ச்சி.

சத்யாவா... இங்கேயா.. எப்படி... அடடா... எத்தனை நாளாயிற்று அவரைப் பார்த்து...

''நர்மதா...'' என்று அழைத்தவள்... தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதை அறிந்து... தோழிக்கு போன் செய்தாள்.

''அலோ... அவர் போயாச்சுடீ.. 'சத்யா'வாம்...'' என்றாள்.

''ப்ளீஸ்... அவரை இருக்கச் சொல்லு நர்மதா... இதோ வருகிறேன்...''

"இப்பத்தானே நீ..."

"ப்ளீஸ்ட... அவர் போவதற்குள் தடுத்து நிறுத்த வந்து... அவர்கிட்டே முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்" என்று தோழிக்கு சந்தேகம் வராத வண்ணம் விளக்கம் சொன்னாள்.

தனக்கு உதவியாக இருந்த நீலவேணியிடம்... 'பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன் நீலா... அதுவரை நீ பார்த்துக் கொள்' என்று சொல்லிவிட்டு வெளியேறினாள்.

அவளுக்காகக் காத்திருந்தவனைப் பார்த்துவிட்டு வியப்புடன் கேட்டாள் அவள்.

"நீங்கள் எங்கே... இங்கே... உங்களை நான் எதிர் பார்க்கவில்லை சத்யா..."

"ப்ளட் டொனேஷன்'க்காக வந்தேன் நந்திதா..." என்று அவன் சொன்னதைக் கேட்டு கண்களை விரித்துப் பார்த்தாள்.

"இரத்த தானமா... பரவாயில்லையே... அதற்குக் கூட உங்களுக்கு நேரமிருக்கிறதா... என்ன..." என்றாள் வியப்புக் குறையாமல்...

"ஓகோ... மக்கள் சேவை என்பது உங்களுக்கு மட்டும் தான் சொந்தமா... நானும் செய்யக் கூடாதா.. என்ன" என்று கேலிக்குரலில் அவன் கேட்டான்.

"ஓ! தாராளமாய்... யார் வந்தாலும் எனக்கு சந்தோஷம் தான்... ஆமாம்... இது பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்... பேப்பரில் பார்த்தீர்களா சத்யா..."

"இல்லை... நான் குடியிருக்கும் வீட்டின் சொந்தக் காரரின் இளைய மகள் இங்கேதான்... அதாவது இந்தக் கல்லூரியில் தான் படிக்கிறாள். அவள் சொன்னாள்... சரி...





நானும் நல்லது பண்ணலாமேன்னு வந்தேன்... நிச்சயம் உங்களை இங்கு சந்திக்க முடியும் என்று தோன்றியது. அதான் விசாரித்தேன்... சரி... எப்போது ஊர் திரும்பி னீர்கள் நந்திதா... நீங்க ஊருக்குப் போன விஷயம் என்ன ஆயிற்று." விவரத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் அவன் கேட்டான்.

"தாங்க் காட்! அந்தத் திருமணப் பேச்சு நின்று விட் டது..."

"ஓ!..."

"எல்லாம் நன்மைக்குத்தான் சத்யா... அந்த ஆளோட நடத்தை சரியில்லையாம்... இந்த விஷயம் தெரிந்ததும் சித்தி வேண்டாம் என்று சொல்லி விட்டாராம்..."

அதைக் கேட்டதும் அவன் முகம் மாறியது போலத் தோன்றியது... வேதனையின் சாயலோ... நட்புடன் பழகினவள் ஆயிற்றே என்ற நல்ல எண்ணத்தில் வந்த வேதனையோ என்னவோ.

"அதனால் எனக்கு மனக்கஷ்டம் ஏதுமில்லை... சத்யா. பார்க்கப் போனால்... சுதந்திரப் பறவையைப் போல ஃபீல் பண்ணுகிறேன். ஆமாம்... நீங்கள் என்றைக்கு ஊர் திரும்பினீர்கள் சத்யா..." என்றாள் அவள்.

இருவரும் பொதுவாக உரையாடினார்கள்.

அவன் பழக்க தோஷத்தில் சிகரெட் எடுத்து வாயில் வைத்தான்... அதைப்பற்ற வைக்க முனைகையில்... அவள் முகச்சுளிப்புடன் கேட்டாள்.

"என்ன சத்யா... இந்தப் பழக்கம் உங்களுக்கு உண்டா... 'ஸ்மோக்கிங்' உடல் நலத்திற்கு கெடுதி என்று தெரிந் தும் புகைப் பிடிக்கிறீர்களே... நீங்கள் புகைப்பிடிப்பதால்

உங்களுக்கு மட்டுமில்லை. சுற்றிலும் இருப்பவர்களுக்கும் தான் பாதிப்பு. ப்ளீஸ் வேண்டாமே சத்யா...''

''சாரி... நந்திதா'' என்றவன் அந்த சிகரெட்டை தூக்கி எறிந்தான். அவன் விடை பெற்றுச் சென்றதும் தன் பணி செய்ய திரும்பினாள்.

சோர்வுடன் அமர்ந்திருந்த மகளை கோபத்துடன் முறைத்தாள் வரலட்சுமி.

''சேவை... மண்ணாங்கட்டின்னு ஊர் சுத்திட்டு வர்றது அப்புறம் தலைவலி.. கழுத்து வலின்னு சுருண்டு உட்கார்றது.. இதெல்லாம் தேவையாடீ... இந்தக் கொளுத்தும் வெயிலில் வீட்டில் தங்கறது... ஹாயா ஏ.ஸி.யில் இருக்காமல் இப்படியா நாயா அலைவே... இப்படி உடம்பை வருத்திக் கொண்டு செய் என்று யார் சொல்கிறார்கள்... பைத்தியககாரத்தனமா இருக்கு...'' என்று பொரிந்து தள்ளினாள்.

''அய்யோ அம்மா... நான் சொன்னேனா... எனக்கு முடியலேன்னு... ஏம்மா தொண தொணக்கிறே'' என்று மகள் சொல்ல.. இன்னும் கோபம் தலைக்கேறியது.

''ஓகோ... என் பேச்சு உனக்கு தொணதொணப்பா இருக்கு இல்லே... இதை சகிக்க முடியவில்லை என்றால் ஒண்ணு பண்ணு... பேசாமல் கல்யாணம் செய்து கொண்டு ஹாயா புருஷனோடு இருக்க வேண்டியது தானே... அதுவும் வேண்டாங்கற... உனக்கு ஏத்த மாதிரிதான் வந்த வரனும் தட்டிப் போச்சு சே... நல்ல இடமா இருந்திருந்தால்... கல்யாணம் பேசி முடித்து சீக்கிரமா உன்னை அனுப்பியிருப்பேன்... என்ன செய்ய... உனக்கு தான் அந்த அதிர்ஷ்டம் இல்லையே...'' என்று குத்திக் காட்டினாள் தாய்...



''ப்ளீஸ் அம்மா... கொஞ்சம் பேசாமல் இருக்கிறாயா. முடிந்தால்... சூடா ஒரு கப் காபி கொடு... என் செல்ல அம்மா இல்லே... தலை விண் விண் என்று தெறிக்கிறது'' என்று மகள் கெஞ்சியதும் சற்று இளகியது தாய் மனம்...

''என்னவோ போ... மனம் தாளாமல் சொல்கிறேன் கேட்டால் கேளு.. இல்லே... விடு... போய் படுத்து ரெஸ்ட் எடு... தலைவலி போயிடும்... நான் போய் சூடா காபியும் தலைவலி மாத்திரையும் கொண்டு வருகிறேன்...'' என்று சொல்லி விட்டு விரைந்த தாயை புன்னகையுடன் பார்த்தாள் மகள்.

தலையை பிளக்கும் தலைவலி இல்லையென்றாலும்... வெய்யிலோ... இல்லை வேலை பளுவோ... தலைவலி கொஞ்சம் வந்திருந்தது. அம்மாவின் வாயை அடக்க... தாள முடியாத தலைவலி என்பதுபோல காட்டினாள் மகள்.

பாவம்... அம்மா... பாசத்தினால் அப்படிப் பேசுகிறாள்.. வேறொன்றும் இல்லை... ஆனால் என்ன செய்வது 'வருகிறாயா' என்று அழைப்பு வந்ததும்... உடனே ஒப்புக் கொண்டு... சேவை செய்ய விழைகிறதே மனம்...

அந்த 'சர்வீஸில்' தான் எத்தனை அனுபவங்கள்...

இதயத்தில் ஓட்டை என்று வந்திருந்த சில பிஞ்சுகள்... கண் பார்வையில் குறையுள்ள குழந்தைகள்... இரத்த சோகையுள்ள இளசுகள்... மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகள்... எல்லாவற்றையும் விட கொடுமை... பரிசோதனையில் இரண்டு குழந்தைகளுக்கு புற்று நோய்... இரத்தப் புற்று நோய் இருந்தது தெரிய வந்ததுதான்...

கடவுளே... சின்னஞ் சிறு தளிர்களுக்கு இத்தனை சோதனையா... வேதனையுடன் நினைத்தாள் நந்திதா...

ஆனால் ஒரு நிம்மதி... எல்லா நோய்களையும் குணப்படுத்தும் அளவுக்கு திறமையான டாக்டர்களும்... மருத்துவத்தின் இன்றைய சாதனைகளும்... டாக்டர்கள் தரும் நம்பிக்கை வார்த்தைகளும் தான்...

புற்றுநோய் என்றதும் அழத் தொடங்கிய பெற்றவர்களை அடக்கி... பயமே வேண்டாம்... குணப்படுத்த முடியும்... நம்பிக்கை வையுங்கள் என்று டாக்டர்கள் சொன்னது தான் நெஞ்சில் பாலை வார்த்தது போல் இருந்தது.

''இந்தாம்மா... இந்த மாத்திரையை போட்டுக் கொண்டு காபியை குடித்துவிட்டு, கொஞ்ச நேரம் தூங்கு. சரியாகிவிடும்...'' என்று தாய் நீட்டிய மாத்திரையையும்... நீரையும் வாங்கிக் கொண்டாள். மாத்திரையைச் சாப்பிட்டு விட்டு... காபியை வாங்கிக் கொண்டாள்.

''காபியை ரொம்ப சூடாவே கொடுத்திருக்கேன் நந்து... இரண்டு நிமிஷம் போகட்டும்.. அப்புறம் குடி... மாத்திரை சாப்பிட்டிருக்கே...'' என்றாள் அன்னை.

இப்படி நெஞ்சு முழுக்க பாசத்தை வைத்துக் கொண்டிருந்தாலும்... கோபத்தைக் காட்டும் அன்னையை நினைத்து உள்ளூர சிரித்துக் கொண்டாள்.

அம்மாவைப் பொறுத்தவரை... மகள் கஷ்டப்படக் கூடாது. சுகமாக இருக்க வேண்டும்... பெத்த மனம் ஆயிற்றே... அதுதான் பித்தாய் நினைக்கிறது.

அம்மாவை ஒரு தடவை... ஒரே ஒரு தடவை... மருத்துவ முகாமிற்கு அழைத்துச் சென்று காட்ட வேண்டும்.



'பாரம்மா... எத்தனை ஜீவன்கள் நோயில் உடல் நொந்து... மனம் வெந்து கிடக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பார்த்தாயா... அதைப் பார்க்கையில் நாம் எவ்வளவோ பாக்கியசாலிகள்... அந்தக் கஷ்ட ஜீவிகளுக்கு நம்மால் ஆன உதவியைச் செய்கிறோம்... அவ்வளவுதானே... அதுவும் சலிப்பாகத் தெரிகிறதாம்மா...' என்று நிதானமாய் எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வாள்...

எதுவுமே... கண்களால் பார்த்தால் தான் உறைக்கும்... நேரில்... நிதர்சனமான மனிதர்களின் அவல நிலையைக் கண்டால்... நிச்சயம் மனித நேயம் வெளிவரும்...

அவ்வாறு நினைக்கும்போது சத்யாவின் நினைவு எட்டிப் பார்த்தது...

அவனும் அப்படித்தானே... ஏனோ தானோ என்று இருந்தவன்... இரண்டு நாட்களில் மனசுக்குள் தாக்கம் ஏற்பட்டு... இன்றைக்கு முன்வந்து இரத்த தானம் கொடுக்க வந்து விட்டானே... அந்த அளவு அவனிடம் ஒரு மாற்றம்...

அது வியக்கத் தகுந்த மாற்றமே.

தொடர்ந்து அவனது நினைவு... அவனுடன் கழிந்த அந்த இரண்டு நாட்களின் நினைவு அவளுள் நறுமணம் மிகுந்த சாம்பிராணிப் புகையாய் படர்ந்தது.

பழக இனிமையானவன்... பார்க்க வசீகரமானவன். ஆமாம்... அவருக்குத் திருமணம் ஆகிவிட்டதா... அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லையே...

ஊகூம்... திருமணம் ஆகியிருந்தால் மனைவியைப் பற்றிச் சொல்லியிருப்பாரோ... பேச்சு வாக்கில் பெயராவது வந்திருக்குமே...

அப்படியே கல்யாணம் ஆகியிருந்தால்... அந்த இரண்டு நாட்களில் எங்கே இருக்கிறீர்கள்... என்ன செய்கிறீர்கள்... எப்போது வருவீர்கள் என்று தொடர்ந்து 'கால்' வந்திருக்கும்... அதுவும் இல்லை... அவளுக்கு சிரிப்பு வந்தது... எதற்கு இந்த வீண் ஆராய்ச்சி... சத்யாவுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் தனக்கென்ன வந்தது... அதை ஏன் பெரிதாய் நினைக்க வேண்டும்...

கடும் முயற்சி செய்து அவனது நினைவுகளை உதிர்த்தவள்... கண்களை மூடிக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்தில் தூங்கியும் போனாள்.

மறுநாள் காலை எட்டு மணியளவில் போன் கூவியது. போய் எடுத்தாள் நந்திதா.

''அக்கா... எப்படி இருக்கே... உன் பொது ஜனசேவை எப்படி இருக்கு...'' தங்கையின் உற்சாகக் குரல் அவளை குதூகலமடையச் செய்தது.

''நீ எப்படி இருக்கே... அதைச் சொல்லு முதலில்...'' பதிலுக்கு திருப்பிக் கேட்டாள் தமக்கை...

''ப்ச்சு... போரடிக்கிறதுக்கா.. உன்னோடு சண்டை போடாம... அம்மாவோட மல்லுகட்டாம... சுத்த போர்... பேசாம ஊருக்கு வந்துடலாமான்னு பார்க்கிறேன்... என்ன சொல்றேக்கா...'' என்று வினவினாள் தங்கை...

''இப்போ தானே ரஞ்சி சேர்ந்தே... உடனே வந்தால் பாடங்கள் விட்டுப் போகாதா... சின்னப் பிள்ளை மாதிரி இருக்குடீ... நீ பேசறது... போகப் போக எல்லாம் சரியாகிவிடும்... பொறுமையா அங்கு இரு...'' என்று அறிவுரைக் கூறினாள் நந்திதா.

''அய்யோ... 'ஹோம்சிக்' அக்கா... உங்களையெல்லாம் பார்க்கணும்னு துடிப்பா இருக்கு... அம்மா மடியில்





படுத்துத் தூங்கணும்னு இருக்கு. நம் வீட்டுச் சாப்பாட்டை ருசித்துச் சாப்பிடணும்னு தோணுது. நம் வீட்டில் என் அறையில் என்னோட மென்மையான படுக்கையில் படுத்துறங்கணும் என்று ஏக்கமா இருக்கு. தெரியுமா...'' தங்கையின் குரலில் தெரிந்த கெஞ்சல் அவளைக் கரைய வைத்தது...

''சரி... வீக் எண்டில் வந்தால்... பாடங்களுக்கு தொந்திரவு ஆகாது ரஞ்சி... வருவதற்கு முன் தெரியப்படுத்து... நான் வந்து 'பிக்அப்' பண்ணுகிறேன்... என்ன...'' என்றாள் கொஞ்சம் இறங்கி வந்து...

''ஸ்வீட் அக்கா'' என்று சொல்லிவிட்டு 'ப்ச்'சென்று அவள் முத்தம் கொடுப்பது செல்லில் கேட்டது. ''அக்கா... நான் வருவது அம்மா அப்பாவுக்கு 'சர்ப்ரைஸாக' இருக்கட்டும்... சொல்லிடாதே... என்ன...'' என்று சிறு குழந்தையைப் போல் அவள் சொல்ல... அதைக் கேட்டுவிட்டுச் சிரித்தாள் நந்திதா.

# 11



சத்யாவிற்கு வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை... தலை வீங்கிவிட்டது போல கனத்தது. தலைக்குள் வண்டு குடைவது போல வலி... ஏன் என்று தெரியவில்லை... நெற்றியை அழுக்கிக் கொண்டான். கொஞ்சம் படுத்தால் தேவலை என்று இருந்தது. இனியும் தாள முடியாது என்று நினைத்தவனாய் அலுவலகத்தில் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்...

வண்டி சர்வீஸுக்கு விட்டிருந்தது நினைவுக்கு வர எரிச்சல் வந்தது... அடச்சே... இந்த வெய்யிலில் காரில் போனால் நன்றாய் இருந்திருக்கும்... ப்ச்சு... கால் டாக்ஸிக்கு போன் செய்தான்... உடனே வந்து நின்றது.

காருக்குள் அமர்ந்தவன்... செல்ல வேண்டிய இடத்தைச் சொல்லிவிட்டு சீட்டில் சாய்ந்து கொண்டான்...

நாக்கு வரண்டு போனது போல இருந்தது. சூடாய் காபி சாப்பிட்டால் தேவலை என்றும் தோன்றியது.

ப்ரியாவிடம் சொன்னால் கொண்டு வந்து தருவாள் அவள் கையால் பருகுவது கூட தனி இன்பம்தான்.

உடனே தலைவலிகூட மாயமாகி விடும்... காதலியின் மென்மையான விரல்கள் நெற்றியை இதமாய் அழுத்திவிட... அடடா... அதுவல்லவா சுகம்...

உடனே உள்ளமும் மனமும் பரபரத்தது... டாக்ஸி நத்தையாய் ஊருகிற மாதிரி அவனுக்குத் தோன்றியது.

ஒரு வழியாய் வந்து சேர்ந்ததும்... டாக்ஸி அந்த சின்ன தெருக்குள் வர இயலாது... ரிவர்ஸில் திரும்ப முடியாது என்று காரணம் காட்டி டிரைவர் சற்று தள்ளி வண்டியை நிறுத்திவிட... சத்யா இறங்கி... மீட்டரில் காட்டிய பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

வீடும் அருகேதான் என்பதால்... நடப்பதும் சிரமமில்லை...

வீட்டை நெருங்கும்போது தபால்காரர் கடிதங்களை அவன் கையில் வைத்துவிட்டுச் சென்றார்.

இரண்டு கடிதங்கள்... ஒன்று அவனுக்கு... ஏதோ வங்கியிலிருந்து... இன்னொன்று... பட்டாபிராமன் என்ற பெயருக்கு... அதாவது... ப்ரியாவின் தந்தைக்கு வந்



திருந்த திருமண அழைப்பிதழ் ஆகா... அதைக் கொடுக்கும் சாக்கில் ப்ரியாவைப் பார்த்து விடலாமே... உள்ளம் உற்சாகத்தில் துள்ளியது.

அவளும் என்னை எதிர்பார்த்திருக்க மாட்டாள்... என்னைப் பார்த்ததும் கண்கள் விரிய நிற்கப் போகிறாள்... அப்படி அவள் சிலையாய் நிற்பதைப் பார்த்து ரசிக்க வேண்டும்... மனம் ரசனையுடன் நினைக்க... ஷூக்களை சத்தமின்றி கழற்றிவிட்டு.. சாக்ஸுடன் வராந்தாவில் நடந்தான்...

இதயம் காதலியைக் காணப்போகும் பரபரப்பில் வேகம் எடுக்க... மெல்ல எட்டு வைத்தவனின் காதில் பட்டாபிராமனின் குரல் சத்தமாய்க் கேட்டது.

''மாப்பிள்ளை பார்க்கவா... கையில் சல்லிக்காசு இல்லாமல் எப்படிடீ மாப்பிள்ளை வேட்டையில் இறங்க முடியும்... சும்மா பேச வந்துட்டா...''

''அதுக்காக... பெண்களை எத்தனை நாள் வீட்டில் வச்சுப்பீங்க... ப்ரியாவோட வயசு இருபத்தி நாலாச்சு... தெரியுமில்லே... அவளுக்கு அடுத்து இன்னொருத்தியும் வயசுக்கு வந்தாச்சு... கண்ணை மூடித் திறக்கறதுக்குள் அவளும் கல்யாணத்துக்குத் தயார்னு வளர்ந்துடுவா... அதைத் தெரிஞ்சுக்குங்க... இதுக்கே அலுத்துக்கிறீங்களே... ப்ரியாவிற்கு அப்புறம் அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகள் பிறந்து செத்ததுகளே... அந்த இரண்டும் உயிரோட இருந்திருந்தால்.. என்ன செய்திருப்பீங்க... கேட்கிறேன்...'' என்று சற்றுக் கோபத்துடன் கேட்டாள் ப்ரியாவின் தாய்.

என்ன செய்வது... பேசாமல் திரும்பி விடலாமா என்று யோசித்து... தயங்கினான் சத்யா...

''நல்லவேளையாய் அப்படி இல்லையே... சந்தோஷப் படுடீ... அஞ்சு... பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்னு சொல்வார்களே... என்னால் எப்படி முடியும்... இதோ பார் ப்ரியா... உங்களைப் படிக்க வைத்து பட்டதாரி ஆக்கியதே பெரிய விஷயம்... உங்கள் சாமர்த்தியத்தால் பிழைத்துக் கொள்ளுங்கள்'' என்று அந்த வீட்டுத் தலைவர் சொல்ல.

''அப்படீன்னா... என்னால் முடியாது... நீங்களே மாப்பிள்ளைத் தேடிக் கொள்ளுங்கள் என்கிறீர்கள்... அப்படித் தானே அடச்சே.. கேட்கவே படு அசிங்கமாக இருக்கு...'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள், அவரது பத்தினி.

அப்போது ப்ரியாவின் குரல் ஒலிக்க... திரும்பிச் செல்ல இருந்தவன் ஆர்வத்துடன் நின்று கேட்டான்.

தந்தையிடம் அவர்களது காதலை வெளிப்படுத்தப் போகிறாள் போலும்... ஆவலுடன் காதைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தான் சத்யா...

''என்னைப் பத்தி கவலைப்படாதீங்கப்பா... உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வைக்காமல்... நல்ல மாப்பிள்ளையா நான் பார்த்தாச்சு...'' என்றது காதலியின் குரல்...

அப்பாடா... ஒரு விதமாய் விஷயம் வெளிவந்தாகி விட்டது... முழு விபரமும் தெரிந்ததும்... கணவனும் மனைவியும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கப் போகிறார்கள்...

தங்களுக்குத் தெரிந்தவன்... நன்கு படித்து கௌரவமான வேலையில் இருப்பவன்... நல்ல குடும்பப் பின்னணி உடையவன் தங்கள் வீட்டு மாப்பிள்ளை என்றால்



கசக்குமா அவர்களுக்கு... இரு கரங்கள் நீட்டி வரவேற்பார்களே... உள்ளம் துள்ள காத்திருந்தான்.

''யாரடி அது... என்னிடம் கூட சொல்லாமல்... இப்போ வந்து சொல்றே...'' என்று தாய் கூவுவதும் காதில் விழுந்தது.

''அதான்ம்மா... நம் மாடியில் குடியிருக்கிறாரே... சத்யா... அவர்தான்...''

''சபாஷ்ம்மா... இப்பத்தான் நீ என் பொண்ணு... பிடிச்சாலும் நல்ல புளியங் கொம்பாத்தான் பிடிச்சிருக்கே... பார்த்தாயாடீ என் பொண்ணின் சாமர்த்தியத்தை...''

''சகிக்கல்லே... இப்படியும் ஒரு அப்பனான்னு வியப்பா இருக்கு... பொண்ணை அடங்கியிரு... அதிகப் பிரசங்கித்தனமா நடக்காதேன்னு சொல்ற அப்பனைத்தான் நான் பார்த்திருக்கிறேன்... இங்கே... எல்லாம் தலைகீழ் பாடமா இருக்கு... கர்மம்.''

''இதோ பாருடீ... நாம இருக்கிற லட்சணத்திற்கு... ஏழைக்கேத்த எள்ளுருண்டையாய். ஒரு சாதாரண மிடில் கிளாஸ் மாப்பிள்ளையைத்தான் பார்க்க முடியும்... ஆனா... இந்தப் பையன்... பெரிய இடத்துப் பிள்ளையாக்கும்... அதுவும் ஒரேப் பிள்ளை. அவனோட அக்காவிற்கு கல்யாணம் ஆகி வசதியா வாழ்றா. அதனால சொத்தில் பங்கு கேட்டு வரப் போவதில்லை. அது நிச்சயம்தான். அப்புறம் ஊரில் பெரிய வீடு இருக்காமே... இங்கே இவனுக்குக் கொழுத்த சம்பளம் வேறு... ஊருக்கு அனுப்பியாக வேண்டும் என்றில்லை... இதைவிட வேறு என்ன வேண்டும்... சொல்லுடீ... நாமா தேடியிருந்தாலும் இந்த மாதிரி வரன் கிடைத்திருக்குமா... அந்த விஷயத்தில் நம்

ப்ரியாவைப் பாராட்டத்தான் வேணும். அம்மாடி... எனக்கு ரொம்ப சந்தோஷம்மா... நீ ஒரு குறையும் இல்லாம மகாராணி மாதிரி சொகுசா இருப்பே... எங்களை மறந்து விடாதேம்மா...''

இதைக் கேட்டுக் கொண்டிருந்தவனுக்கு நெருடலாக இருந்தது. பெரியவரின் பேச்சில் பணம்... சொத்து... வீடு என்று தான் இருந்ததே தவிர மாப்பிள்ளையின் நல்ல குணங்கள் பற்றியோ... இனிய சுபாவம் பற்றியோ பேச்சே இல்லையே... வெறும் பணம் மட்டுமே முக்கியமாய்... இன்னொரு உறுத்தலும் கூட... அக்கா சொத்தில் பங்கு கேட்டு வரமாட்டாளாமே...?... சே... என்ன மனிதர் இவர்...

அடச்சே. அந்த மனிதர் படு கஞ்சன்... பணம் என்றால் வாயைத் திறப்பவர்... அல்ப புத்தி... ஆனால் ப்ரியா அப்படி இல்லை... அவள் என்னை மதிப்பவள்... என்னிடம் உயிராய் இருப்பவள்... அது போதுமே... மாமனார் எப்படியிருந்தால் நமக்கென்ன... என் வருங்கால மனைவி நல்லவளாய்...

இதோ ப்ரியாவும் ஏதோ சொல்கிறாளே...

காதலியின் கனிமொழி வார்த்தைகளை காதால் கேட்கத் தயாரானான்...

''அய்யோ... அப்பா... அப்படி உங்களையெல்லாம் அம்போ என்று விட்டுடுவேன் என்று நினைக்கிறீர்களா.. எல்லாம் யோசிச்சு வச்சிருக்கேன் தெரியுமா.. இங்கே தனிக்குடித்தனம் வேறு... மாமனார் மாமியாரின் தொல்லையும் கிடையாது... நானே ராணி... என்னோட ராஜ்ஜியம் தான்.. பாருங்களேன். அவரை என் கைக்குள்



போட்டுக் கொண்டு... வீட்டில் என்னோட ஆட்சி தான்... நான் வச்சதுதான் சட்டம் என்று ஆகட்டும். அப்புறம் குடும்பத்துக்கு என்னவெல்லாம் பண்ணுகிறேன் என்று உங்களுக்குத் தெரியும். தங்கை... தம்பியை படிக்க வச்சு கரையேத்தி விடமாட்டேனா... அவரோட வருமானம் எல்லாம் என் கைக்கு வரட்டும்... நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்த மாதிரிதான்ப்பா... கவலையை விடுங்கள்.''

எரிமலை கக்கி... தீப்பிழம்புகள் தன் மேல் தெறித்து விழுந்தது போல இருந்தது சத்யாவிற்கு... அதன் ஜ்வாலையால் தன் இதயம் பொசுங்கினது போலவும் வலித்தது...

ப்ரியாவா அப்படிப் பேசினது... என்னை... என்னை மட்டுமே காதலிக்கிறாள் என்று நினைத்தவளா இப்படி.. உணர்ச்சி வேகத்தில் உடம்பெல்லாம் அதிர்வதுபோல இருந்தது.

தொடர்ந்து ப்ரியாவின் தாய் மனம் பொறுக்காமல் ''பண விஷயத்தில் அப்படியே உன் அப்பனை உரிச்சு வச்சிருக்கேடீ... அப்பாவுக்கும் பொண்ணுக்கும் பணம் மட்டும் தான் பிரதானமா படுகிறது... சே!'' என்று கூறியதை தொடர்ந்து...

''அய்யோ அம்மா... இந்தக் காலத்தில் இப்படித்தான் இருக்கணும்... அப்பத்தான் பிழைக்க முடியும்'' என்று ப்ரியாவின் பதிலும் ஆலகால விஷமாய் காதில் விழுந்தன...

அத்துடன் இல்லையே...

''ஆமாண்டி... இதே... அந்தப் பிள்ளை கொஞ்சம் சம்பாதியத்தில் இருந்தா... இந்த கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டிருப்பியாக்கும்...'' என்று தாயின் குத்தலுக்கு.

''மாட்டவே மாட்டேன்... இந்தக் காலத்தில் பணத்திற்கு தான் மதிப்பும்மா... தெரிஞ்சுக்கோ... அவர் கிட்டே நிறைய பணம் இருக்கு... அதுதான் அவரோட ப்ளஸ் பாயிண்ட்... யாருக்குத்தான் சொகுசான வாழ்க்கைக்கு ஆசையிருக்காது... எனக்கும் அதேதான்...'' என்று ப்ரியா சொன்ன வார்த்தைகள்... சாட்டை அடிகளாய் விழுந்தன... ஏதோ சாக்கடைக்குள் விழுந்து விட்ட மாதிரி ஒரு அருவருப்பான உணர்வு அவனுக்குள்... அதற்கு மேலும் அங்கு நிற்கப் பிடிக்காமல்... அந்தத் திருமண அழைப்பிதழை வீசி எறிந்து விட்டு... சத்தம் இன்றி திரும்பினான்.

அங்கும் இங்கும் நடந்து நடந்து கால்கள் வலித்தாலும்... அவனுக்கு அது உறைக்கவில்லை... அதை உணரும் மனநிலையிலும் அவன் இல்லை.

உள்ளம் உலைக்களமாய் கொதித்துக் கொண்டிருந்தது. திரும்பத் திரும்ப ப்ரியாவின் வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தன...

பேராசைப் பிடித்த கேவலமான மனிதர்கள்... பணமே குறி என்றிருக்கும் பணப் பிசாசுகள்...

பற்களை நறநறவென்று கடித்தான் சத்யா... கண் எதிரே ப்ரியா மட்டும் இருந்திருந்தால்... கழுத்தை நெறித்திருப்பானோ என்னவோ... அத்தனை ஆவேசம்... பணத்திற்காக... பணத்திற்காக மட்டுமே தன்னிடம் அவள் குழைந்ததும்... வழிந்ததும் என்பதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை...

அன்றைக்கு... பெற்றோர்கள் இங்கே வருவார்களா என்று கேட்டதை... அவர்கள் மீது இருக்கும் அன்பினால் கேட்கிறாள் என்று நினைத்தேனே... யாரும் வேண்டாம்... தனிக் குடித்தனத்தை அனுபவிக்க வேண்டும்



என்ற எண்ணத்தில் அவ்வாறு சொல்லியிருக்கிறாளே...

இவளைப் போய்... நம் குடும்பத்திற்கு ஏற்ற மருமகள் என்று நினைத்து மகிழ்ந்த மடையன் நான்...

மீண்டும் மீண்டும் ப்ரியாவின் வார்த்தைகளை அசைபோட்டுப் பார்த்ததில் அர்த்தம் வேறாக இப்போது பட்டது...

''உங்கப்பா என்னை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்வாரா'' என்ற கேள்விக்கு உங்களுக்கு என்ன குறை... நிறைய சம்பாதிப்பவர்... நிறைய சொத்து உடையவர்... உங்களை வேண்டாம் என்பாரா'' என்று சொன்னதை பெருமையாக நினைத்தேனே.. அது பேராசை என்று மரமண்டைக்குத் தெரியாமல் போனதே. நினைக்கையில் தன் மீது ஆத்திரம் வந்தது...

அவளது பேச்செல்லாம் ஃப்ளாட்டில் வசிக்க வேண்டும். காரில் சுத்த வேண்டும்... விரும்பிய நகைகளை வாங்க வேண்டும் என்றுதான் இருந்ததே தவிர... பரஸ்பர அன்பைப் பற்றிய வார்த்தையே வரவில்லையே...

அக்கா சொன்னது எத்தனை நிஜம்...

அவள் உன்னை விரும்புகிறாளா... இல்லை... உன் பணத்தை விரும்புகிறாளா... என்று கேட்டாளே...

அடச்சே... இப்படியா ஒருத்தனுக்கு மூளை மழுங்கிப் போகும்...

என்னைக் கைக்குள் போட்டுக் கொண்டு... என் வருமானத்தையெல்லாம் வாங்கிக் கொண்டு... எத்தகைய கீழ்த்தரமான ஆசை.

இப்போது புரிகிறது... பேசும் போதெல்லாம்... திருமணம் ஆனதும் என்னிடம் பொறுப்பைக் கொடுத்துட்டு ஹாயா இருங்க என்று சொன்னதன் அர்த்தம்... அதாவது... மாத சம்பளம் வாங்கி அப்படியே என்னிடம் கொடுத்துவிட்டு வாயை மூடிக் கொண்டு இருங்கள் என்பதை மறைமுகமாய் சொல்லி இருக்கிறாள்... அப்போது அதைப் புரிந்து கொள்ளாமல் ஆகா... இவளல்லவோ பெண் என்று புளகாங்கிதம் அடைந்தேனே... அதைச் சொல்ல வேண்டும்.

'இந்தக் காலத்தில் பணத்திற்குத்தான் மதிப்பு... இப்படித்தான் இருக்க வேண்டும்... அப்பத்தான் பிழைக்க முடியும்...' என்று பணத்திற்காக வாயைப் பிளப்பவளை... ஒரு பணப் பிசாசையா வாழ்க்கைத் துணையாக முடிவு செய்தேன்... நினைக்கையில் அவனுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

அந்தத் தருணத்தில் அந்த வீடும்... அதன் சூழ்நிலையும் சாக்கடை தேக்கம் போல அருவருப்பாய் தோன்றியது... இனியும் இங்கு இருந்தால்... மூச்சு முட்டி இறப்பது போல இருக்கும்...

உடனே இங்கிருந்து கிளம்பி விட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தான்...

அவனது நல்ல வேளையோ என்னவோ... ஒரு அழகான ஃபிளாட் அவனுக்காகவே காத்திருந்தது. போல... காலியாக இருந்தது. உடனே பேசி... அட்வான்ஸும் கொடுத்து விட்டான்.

கூடிய வரைக்கும் ப்ரியாவைப் பார்க்க விரும்பாமல் தவிர்த்தான் அவன்.



வீட்டில் இருந்தால் தானே சந்திக்க வேண்டி வரும்... அதனால்... சீக்கிரமே வீட்டை விட்டுக் கிளம்பி விடுவான்... வெகு நேரம் கழித்து வீடு திரும்புவான்.

வீடு கிடைத்ததும்... உடனே பட்டாபிராமனை சந்தித்துப் பேசுவதற்காகச் சென்றான்...

அவனைப் பார்த்ததும் ஒரு அசட்டு சிரிப்பு சிரித்தார் அந்த மனிதர்.

''வாங்க தம்பி... உட்காருங்க... ஏதோ முக்கியமான விஷயத்தைச் சொல்ல வந்திருக்கீங்க போல தெரிகிறது...'' என்று எதிர்பார்ப்போடு கேட்டார் அவர்.

''ஆமாம்... நான் வீட்டைக் காலி செய்யலாம் என்று இருக்கிறேன்... இரண்டு நாளில் காலி செய்து... 'கீ' கொடுத்து விடுகிறேன்...''

அதைக் கேட்டதும் அதிர்ந்து போனார் பட்டாபி.

''என்னது.. காலி செய்கிறீர்களா... எதுக்கு... இங்கே வசதிகள் குறைவா என்ன... இருந்தால் சொல்லுங்க... செய்து தருகிறேன்...'' சுதாரித்துக் கொண்டு சொன்னார் அவர்.

''இல்லை... என் அம்மாவை அழைத்துக் கொண்டு என்னுடன் வைத்துக் கொள்ளப் போகிறேன். அதற்காக ஃபிளாட் ஒன்றைப் பார்த்திருக்கிறேன். செக்யூரிட்டி வசதி இருக்கிறது... ஏ.ஸி... இருபத்தி நான்கு மணி நேரம் நீர் வசதி... 'பவர் கட்' ஆனால் ஜெனரேட்டர் என்று எல்லாமே இருக்கிறது... அதான்'' என்று வேண்டும் என்றே அவருக்கு உறைப்பது போல் சொன்னதும் அவர் வாயைப் பிளந்தார்.

அப்போ... மகள் சொன்னது.. பொய்யா என்ன... காதலிப்பவன் இப்படி காலி பண்ணிக் கொண்டு செல்வானா... இதைத் தடுக்க வேண்டுமே...

''முடியாது.. திடீர் என்று வந்து சொன்னால் எப்படி... அட்வான்ஸ் பணத்தைத் திருப்பித்தர எனக்கு அவகாசம் வேண்டாமா... ஒரு மாதத்திற்கு முன்னால் சொன்னால் தானே வேறே ஒருத்தரை குடி வைக்க ஏற்பாடு செய்ய முடியும்... ஒரு மாத வாடகைப் பணம் எனக்கு நஷ்டம் தானே...'' என்று தன் புத்தியைக் காட்ட ஆரம்பித்தார் பட்டாபி.

''சார்... என் அட்வான்ஸ் பணத்தில் ஒரு மாத வாடகையுடன் உங்களுக்கு நஷ்டம் ஆன பணத்தையும், கழித்துக் கொள்ளுங்கள். பரவாயில்லை...'' என்றான் சத்யா... அவரது வாயை அடக்கும் விதமாய்... அவன் மாடியேறி சென்ற சிறிது நேரத்தில் புயலாய் வந்தாள் ப்ரியா...

எதிர்பார்த்தது தான்... எந்த வித சலனமும் இன்றி அவளை அமைதியாகப் பார்த்தான் அவன்...

''காலி செய்து போகிறீர்களா... ஏன்... அப்போ நாம் பழகினதுக்கு என்ன அர்த்தம்... நம் காதல் அவ்வளவு தானா...'' பொறுமலுடன் கேட்டாள் அவள்...

''காதலா... அப்படியென்றால்...'' என்று கிண்டலாய் அவன் வினவ... அவள் விழித்தாள்.

''என்ன ஆச்சு சத்யா உங்களுக்கு... ஏன் ஒரு மாதிரியா பேசறீங்க... யாராவது உங்க மனசை மாத்திட்டாங்களா... சொல்லுங்க சத்யா...'' என்று கலக்கத்துடன் கேட்டாள் அவள்.



''எனக்கா... இத்தனை நாள் இருந்த மயக்கம் தெளிந்து விட்டது... அதுதான் போகிறேன்... குட்பை...''

''அப்போ... நான் வேண்டாமா சத்யா... என்னை உதறிவிட்டு செல்கிறீர்களா என்ன... இது உங்களுக்கே நியாயமாக படுகிறதா?''

''நீ வருத்தப்பட வேண்டியதில்லை... என்னைவிட பெரிய பணக்காரனைப் பார்த்து குடி வைக்கச் சொல் உன் அப்பாவிடம்... அவனைக் காதலித்தால் ஆயிற்று...''

அவனைத் திகைப்புடன் பார்த்தாள் ப்ரியா...

''என்ன பார்க்கிறே... உனக்குப் பணம் தானே முக்கியம்... அதைத்தானே நீ காதலிப்பது... சத்யாவை நீ காதலிக்க வில்லை... சத்யாவின் பணமும்... அதனால் வரும் சொகுசு வாழ்க்கையும் தான் உனக்கு வேண்டும்... அப்படித்தானே'' என்றான் கோபத்துடன்.

''சத்யா... நீங்க தப்பாக...'' என்று ஆரம்பித்தவளை அடக்கிவிட்டு அவன் தொடர்ந்தான்.

''வாயை மூடு... நீயும் உன் அப்பாவும் பேசிக் கொண்டதை என் காதால் கேட்டேன்... அப்போது தான் உன்னோட கீழ்த்தரமான நோக்கம் எனக்குப் புரிந்தது... தாங்க் காட்! உன் வலை வீச்சில் இருந்து தப்பினேனே... அதுபோதும்... ஒரு பெரிய ஆபத்திலிருந்து மீண்டேனே என்று மகிழ்ச்சியாக இருக்கிறது... கல்யாணம் மட்டும் நடந்திருந்தால்... அது எனக்கு ஆயுள் தண்டனையாகத்தான் இருந்திருக்கும்... நல்லவேளை... அப்படி நடக்காமல் போனது என் அதிர்ஷ்டம்...''

''ப்ளீஸ் சத்யா... நான் சொல்வதை...''

"இனியும் உன் சாகசத்தை நம்பி ஏமாறுவேன் என்று எதிர்பார்க்காதே... உன்னைப் பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது... இனி என் முகத்தில் விழிக்காதே... கெட் லாஸ்ட்."

அவன் சீறியதும் அங்கிருந்து ஓடினாள் அவள்... விம்மலுடன்...

## 12



ஏனோ... நந்திதாவைப் பார்க்க வேண்டும் போல் மனம் துடித்தது... அவளது அன்பான பார்வையும்... இதமான வார்த்தைகளும்... புன்னகை பூத்த முகமும் புண்பட்டுப் போன உள்ளத்திற்கு புனுகு மருந்தாய் இருக்கும் என்று தோன்றியது.

ஆனால் அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரியாதே. விலாசமும் கிடையாது... அப்படியே இருந்தாலும் போய் பார்க்கத்தான் முடியுமா... எந்தக் காரணம் சொல்லி அவளைப் பார்க்க முடியும்...

அது போகட்டும்... அவள் வீட்டில் இருப்பாள் என்று உறுதியாகச் சொல்லவும் முடியாதே... ஏதாவது கிராமத்தில் சேவை செய்து கொண்டு... அல்லது... எங்கோ ஒரு முகாமில் பணியாற்றிக் கொண்டிருந்தால்... மனம் நிராசையுடன் நினைத்தது...



அப்படியும் நப்பாசையுடன் கண்கள் அங்கும் இங்கும் அலைபாய காரில் பயணிப்பான்... எங்கேயாவது கண்ணில் படமாட்டாளா என்ற நோக்கத்துடன்... செய்தித் தாளில் ஏதாவது மருத்துவ சேவைப் பற்றிய குறிப்பு வந்திருக்கிறதா என்று அலசுவான். அங்காவது அவளைச் சந்திக்கலாமே என்ற ஏக்கத்துடன்... அவளிடம் போன் நம்பரை வாங்கி வைத்துக் கொள்ளாமல் போனோமே என்ற வருத்தமும் வந்தது. இருந்தால் போனில் பேசி ஆறுதல் பட்டிருக்கலாம்... இவ்வளவு பெரிய நகரத்தில் அவளை எங்கே சந்திப்பது என்று சோர்ந்து போனது மனம்...

ஆனால் உலகம் ரொம்பவம் சின்னதாமே. அப்படியென்றால் ஊரும் குட்டியூண்டு தானே... சந்திப்பும் நிகழ்ந்தது. தன் ஸ்கூட்டரை பாதையோரம் நிறுத்தி விட்டு... இளநீர் ஒன்றை வாங்கி ஸ்ட்ரா மூலம் உறிஞ்சிக் கொண்டிருந்தவளைப் பார்த்ததும் இன்ப அதிர்ச்சி... கண்டேன் சீதையை என்று துள்ளிக் குதித்தது நெஞ்சம்.

தன் காரை சற்றுத் தள்ளி... மரத்தின் நிழல் கீழ் நிறுத்தி விட்டு அவளை நோக்கி வந்தான்.

"எனக்கும் ஒரு இளநீர் வாங்கித் தர முடியுமா..." என்று அவன் கேட்டதும்... வியப்புடன் திரும்பினாள் நந்திதா...

"ஓ! நீங்களா... எப்படி இருக்கிறீர்கள் சத்யா..." என்று நலம் விசாரித்தாள்...

சைகையால் இன்னொரு இளநீர் வேண்டும் என்றவள்...

"ஆமாம்... இங்கேயா உங்கள் அலுவலகம்" என்று கேட்டாள்...

"ஊகூம்... இங்கே இல்லை... இந்தப் பக்கம் ஒரு வேலையாய் வந்தேன்... அது சரி... நீங்கள் எங்கே இந்த

இடத்தில்... அருகே ஏதாவது ஆசிரமம் இருக்கிறதா... இல்லை... ஏதாவது 'மெடிக்கல் கேம்ப்பா...'' என்று கேலியாகக் கேட்டான்.

இளநீரை வாங்கி அவன் பக்கம் நீட்டியவாறு சொன்னாள் நந்திதா...

''ஓகோ... எனக்கு இந்த இரண்டையும் விட்டால் வேறு ஏதும் இல்லை என்று நினைத்து விட்டீர்களாக்கும்... என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட் ஒருத்திக்கு 'எங்கேஜ்மெண்ட்'... அதை 'அட்டெண்ட்' பண்ண வந்தேன்...''

''பரவாயில்லையே... உங்களுக்கு அதற்கெல்லாம் நேரம் இருக்கிறதா என்ன...''

''இந்தக் கிண்டல் தானே வேண்டாம்ங்கிறது... வாழ்க்கை வாழ்வதற்குதான் என்பதை புரிந்து வைத்திருக்கிறேன் நான்... அது மட்டுமல்ல... இப்பவே அம்மாவிடம் திட்டு வாங்குகிறேன்... இன்னும் முழு நேர சேவை என்றால்... அவ்வளவு தான்... நீ என்னடீ... பெரிய அன்னை தெரஸான்னு நினைப்பா என்று சீறிடுவாள்... ம்ம்... ஏதோ ஆத்ம திருப்திக்கு அப்பப்போ செய்கிறேன்... அவ்வளவுதான்...''

சத்யா குடித்து முடித்த இளநீரை வீசிவிட்டு அவளிடம் வினவினான்...

''உங்களுக்கு அம்மாவிடம் ரொம்ப பயமோ...''

''பயம் என்று இல்லை... அம்மா சொல்லுக்கு மரியாதை அவ்வளவுதான்... எங்கம்மா செல்ல அம்மா... எங்களிடம் அத்தனை பாசம்... அந்தப் பாசத்தில் தான் உரிமையுடன் கோபித்துக் கொள்கிறாள்... அது நன்றாகவே தெரியும்...''



பர்ஸிலிருந்து பணத்தை எடுக்கப் போனவனைத் தடுத்து விட்டு தன் பையிலிருந்து சின்ன பர்ஸை எடுத்து அதிலிருந்து அம்பது ரூபாய் நோட்டை உருவி இளநீர்காரனிடம் நீட்டினாள்.

''அப்போ... உங்க அம்மா செல்லமா... உரிமையாக கோபித்துக் கொண்டு கல்யாணம் செய்து கொள் என்று சொன்னால்... சம்மதித்துவிடுவீர்கள் தானே...'' என்று புன்னகையுடன் அவன் கேட்க... அவள் முகம் சுளித்தாள்.

''என்ன செய்வது சத்யா... கூடிய வரைக்கும் போராடிப் பார்ப்பேன்... அம்மா பிடிவாதம் பிடித்தால் வேறு வழியில்லை... இணங்கத்தான் வேண்டும்... ஆனால் ஒரு நிபந்தனையுடன்... என் மனசுக்கு ஒப்ப வேண்டும்... அப்புறம்தான் சம்மதிப்பேன்'' என்று இளநீர்காரன் கொடுத்த சில்லரையை வாங்கிக் கொண்டு பர்ஸில் திணித்தாள் அவள்.

''எப்படிப்பட்டவராய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் நந்திதா... நல்ல வேலையில் இருக்க வேண்டும்... வசதியான வாழ்வா இருக்க வேண்டும் என்றெல்லாம் உண்டா...''

''எனக்கு பணமெல்லாம் முக்கியமில்லை... சத்யா... நல்லவரா... மனிதாபிமானத்துடன் இருப்பவராய் இருக்க வேண்டும்... ஏழையாக இருந்தாலும் பரவாயில்லை. 'ஜென்டில்மேனாக' இருந்தால் போதும்... ஆமாம் என்னைப் பற்றி கேட்கிறீர்களே... உங்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே... உங்கள் பேச்சிலிருந்து இன்னும் திருமணம் ஆகவில்லை என்று தெரிகிறது... எப்படிப்பட்ட பெண்ணை எதிர்பார்க்கிறீர்கள்...'' என்று அவள் திருப்பிக் கேட்டாள்.

'உன்னை மாதிரி...' என்று சொல்ல வேண்டும் போல் இருந்ததை அடக்கிக் கொண்டு...

''என்னைப் புரிந்து கொண்டு... என்னை மட்டுமே நேசிக்கும் பெண்ணை... கிடைத்தால் மணக்கத் தயார் நந்திதா...'' என்று தன் மனதைக் குறிப்பாக உணர்த்தினான்.

''நிச்சயம் கிடைப்பாள் சத்யா... ஓகே... நான் கிளம்புகிறேன்... நேரமாகிறது...'' என்று ஸ்கூட்டரில் அமர்ந்தாள் அவள்.

''நந்திதா... உங்க 'செல்' நம்பர் வேண்டுமே... தருகிறீர்களா...'' என்று அவளிடம் வினவினான் அவன்...

அதைக் கேட்டு அவள் கண்களை விரித்தாள்... எதற்கு என்பது போல... அதாவது அதை எதிர்பார்க்காதவளாய்...

''பயப்படாதீங்க நந்திதா... அரட்டை அடித்து உங்களோட பொன்னான... இல்லை... பிளாட்டின நேரத்தை வீணாக்க மாட்டேன்... விஷயம் ஏதாவது சொல்ல வேண்டுமானால் தேவைப்படுமே... அதற்கு தான் கேட்கிறேன்'' என்றான் சிரித்தவாறு.

அவளும் பதிலுக்கு சிரித்துவிட்டு தன் நம்பரைச் சொன்னாள்...

''வரட்டுமா... பை'' என்று அவள் புறப்பட்டுச் செல்ல... அவள் செல்வதையே கண் கொட்டாமல் பார்த்தான் சத்யா.

அவளுடன் கழித்த அந்த இருபத்தைந்து நிமிடங்கள் அவனுக்கு இனிமையானதாய் தோன்றியது... அன்று குன்னூருக்குச் செல்லும் வழியில் தங்கியிருந்தபோது உணர்ந்தது போலவே...



அவளிடம் கொஞ்ச நேரம் பேசினாலே போதும்... உற்சாகம் திரும்பி விடுகிறது...

சந்தோஷத்தை பறித்துக் கொள்ளும் பெண்ணை மணப்பதை விட... சந்தோஷத்தை மீட்டுத் தரும் பெண்ணை மணப்பதுதான் சிறந்தது...

இவளைப் போய் வேண்டாம் என்று தள்ளி வைத்தேனே... மடையன் நான்...

அன்று அக்காவின் வார்த்தைக்கு மதிப்பளித்து ஒரு வார்த்தை 'ஓகே' என்று சொல்லியிருந்தால்... இத்தனை நேரம் திருமணம் பேசி முடிவாகி இருக்கும்...

சே... சொக்கத் தங்கம் கிடைக்க இருக்கையில் அதை ஒதுக்கி விட்டு... பித்தளை மினுமினுப்பில் மயங்கிக் கிடந்த என் மந்த புத்தியைச் சொல்ல வேண்டும்.

அதே சமயம் மனதில் ஒரு நெருடலும் வந்தது. நான் ஆசைப்பட்டதுபோல... நந்திதாவும் விரும்ப வேண்டுமே... அவளுக்குத் தான் கல்யாண ஆசையே இல்லையே... அப்படியே தலையசைத்தாலும்... அது அம்மாவின் வற்புறுத்தலுக்காக மட்டும்தான் தவிர... அவளாக விரும்பினாள் என்று சொல்ல முடியாது... கல்யாண ஏற்பாட்டை நிறுத்தத்தானே அவள் விரும்பியதும்...

பெருமூச்சு விட்டான் அவன்.

வேண்டாம் என்றபோது தேடி வந்தது... விரும்பும் போது தள்ளிச் செல்கிறது... இதுதான் விதியின் விளையாட்டு போலும்...

என் மனதை அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தவித்தது நெஞ்சம்... மறுபடியும் அவளைச் சந்திக்க விழைந்தது உள்ளம்... அந்த சந்தர்ப்பத்தை அவனே உருவாக்கிக் கொண்டான்...

மறுநாள் அவனிடமிருந்து அவளுக்கு 'கால்' வந்தது...

''ஹாய் நந்திதா...'' என்று அவன் பேசியதும்... அவளுக்கு வியப்பு... உடனேயேவா...!

''அலோ சத்யா... என்ன விஷயம்... வேலை எதும் இல்லாமல் 'ரிலாக்ஸா' இருக்கிறீர்களாக்கும்... அதான் என் நினைவு வந்து போன் செய்திருக்கிறீர்கள்'' குரலில் கேலி தெரிய கேட்டாள் அவள்.

'அய்யோ... நந்திதா... எப்போதும் உன் நினைவு தான் என்னை ஆட்டி வைக்கிறது' என்று சொல்ல வேண்டும் போல் துடித்தாலும்... அது முடியவில்லை. தயக்கம் அவனை இழுத்துப் பிடித்தது.

''பார்த்தீர்களா... உங்களை நினைப்பதில்லை என்பது போலல்லவா இருக்கிறது உங்கள் பேச்சு... ஒரு சந்தோஷமான விஷயத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்ளலாமே என்று எண்ணி போன் செய்தேன். எனக்கு பதவி உயர்வு கிடைத்திருக்கிறது. 'சீனியர்' போஸ்ட்... யாரிடமாவது சொல்லி சந்தோஷப்பட வேண்டும் என்று நினைத்து உங்களுக்கு போன் செய்தேன்... இதை உங்களுடன் சேர்ந்து 'செலிபரேட்' பண்ணனும் என்று ஆசை... சாரி... நந்திதா... எனக்கு என்று நல்ல நண்பர்கள் யாருமில்லை...

என்னோட 'வெல் விஷர்' நீங்கள்... அதான் உங்களிடம் சொன்னேன்...'' அவனது குரலில் தெரிந்த உற்சாகம் அவளையும் தொற்றியது.

''கங்கிராட்ஸ் சத்யா... மகிழ்ச்சியான விஷயம்தான். கண்டிப்பாய் வருகிறேன்... எங்கே என்று சொல்லுங்கள்...''

''ஃபைவ் ஸ்டார் ஓட்டலுக்குப் போகலாமா.''



''சேச்சே... எதுக்கு ஆடம்பரம்... வேண்டாமே...''

''சரி... த்ரீ ஸ்டார் ஓட்டல்... போதுமா...''

''எனக்கென்னவோ... அதுவும் வேண்டாம் என்று தோன்றுகிறது... இதெல்லாம் விட வெகு சிறப்பா... சந்தோஷமா கொண்டாட வழியிருக்கிறதே சத்யா...''

''எப்படி...''

''நேரில் வந்து சொல்லட்டுமா... எங்கே சந்திக்கலாம். சொன்னால் வந்து விடுகிறேன் சத்யா...''

ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னதும் நான்கு மணிக்கு சந்திப்பதாய் சொன்னாள் நந்திதா.

'டாண்' என்று நான்கு மணிக்கு அந்த இடத்தில் இருந்த நந்திதாவை வியப்புடன் பார்த்தான் சத்யா... அவளிடம் இருந்த நல்ல விசயங்களில் 'பங்க்சுவாலிட்டி'யும் ஒன்று போல... சாதாரணமாய் பெண்களிடம் காணப்படாத ஒன்று...

''ஹாய் சத்யா... ஆறு மணிக்கு வேறொரு முக்கியமான வேலை இருந்ததால் நான்கு மணி என்றேன்... உங்களுக்கு தொந்திரவாகி விடவில்லை தானே...'' என்று வினவினாள்... தன் ஹெல்மெட்டை கழற்றியவாறு...

அப்படியேதும் இல்லை என்றான் அவன்.

இந்தப் பதவி உயர்வு வெகு மகிழ்ச்சியான விஷயம் தான் என்றாலும்... அதை பெரிதாய் நினைத்துக் கொண்டாடும் அளவிற்கு அவனுக்கு மனமில்லை என்று தான் சொல்ல வேண்டும்...

ஆனால்... அதை சாக்காக வைத்து... நந்திதாவை அழைத்து அவளுடன் பொழுதை ஜாலியாகக் கழிக்கும்

எண்ணம் தான்... வெறுமனே 'வா' என்று அழைத்தால் வருவாளா... இல்லை... அப்படியே அழைப்பதற்கு [illegible]கும் வாய் வருமா... ஏதோ பரவாயில்லை... அவளும் பிகுமானம் இன்றி வந்து விட்ட திருப்தி.

''சரி... எங்கே... எப்படி என்று திட்டமிடுவோமா சத்யா... நான் ஆலோசனை கூறலாம் தானே...'' என்று கேட்டவளை ரசனையுடன் பார்த்தான்.

கேசத்தை விரல்களால் கோதியவாறு... அவன் சொல்லப் போவதைக் கேட்கும் ஆர்வத்தில் கண்களை பெரிதாக்கி... தலையை சாய்த்து நின்றவளைக் கண்டு இதயத்தின் துடிப்பு தேவகானமாய் கேட்டது.

இந்த தேவதை மட்டும் எனக்குக் கிடைத்தால்... அவன் கண் முன் சொடக்கி... அவனது கவனத்தை ஈர்த்தாள் நந்திதா.

''ஆங்... என்ன சொன்னீர்கள் நந்திதா...''

''போச்சுடா... நாம் எதற்கு வந்திருக்கிறோம் என்பதையே மறந்து விட்டீர்களா சத்யா...''

''வந்து... யெஸ்... என் பதவி உயர்வை எப்படி கொண்டாடலாம் என்று 'ஐடியா' தருகிறேன்னு வரச் சொன்னீர்களே நந்திதா... சொன்னால் கேட்கத் தயார்'' என்று பாசாங்கு வினயத்துடன் அவன் சொல்ல... அது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது... அவளது இதழ்களில் குறுநகை பூத்தது...

''சொல்வேன்... ஆனால் அதைக் கேட்டு விட்டு நீங்கள் தயங்கினால்...'' நமுட்டு சிரிப்புடன் அவள் சொல்ல...

''தயக்கமா... எனக்கா... ஊகூம்... 'பார்ட்டி' எங்கே என்று சொல்லுங்கள் நந்திதா... தருவது என் கடமை...



ஆடம்பரம் வேண்டாம் என்று சொல்வதைப் பார்த்தால்... கையேந்தி பவனில் வைத்துக் கொள்ளலாம் என்பீர்கள் போலிருக்கே... இந்தப் பதவி உயர்வால் எனக்கு கூடுதல் சம்பளம் எவ்வளவு வரும் தெரியுமா மேடம்... ஆறாயிரம் ரூபாய்...! எம்.என்.சி. கம்பெனியாக்கும்... அதற்கு ஏற்ற மாதிரி 'பார்ட்டி'யும் இருக்க வேண்டாமா நந்திதா...'' என்று எடுத்துரைத்தான் சத்யா.

''ஓகே... உங்க 'பட்ஜெட்' எவ்வளவு சத்யா...''

''ஓ! அதற்கு ஏற்ற மாதிரி இடத்தை சொல்லப் போகிறீர்களா... எனக்குப் புரிந்து விட்டது... உணவை 'பேக்' பண்ணிக்கொண்டு 'பிக்னிக்' மாதிரி போய் வரலாம் என்ற எண்ணம்... அம் ஐ ரைட்... நந்திதா... சரி... எங்கே போகலாம்... மகாபலிபுரம்... பெசண்ட் நகர் பீச்... இல்லை... முட்டுக்காடு போட்டிங் ஸ்பாட்... எங்கேயென்று சொல்லுங்கள்...''

''ஆகா.. ஆசை... தோசை... பிக்னிக்கெல்லாம் கிடையாது... நான் சொல்ல வந்தது வேறே... சரி சொல்லட்டுமா...'' என்று அவள் இழுக்க...

''ப்ளீஸ்...'' கெஞ்சும் குரலில் அவன் கேட்டுக் கொண்டான்.

''ஆனால் உங்கள் 'பட்ஜெட்' தொகை எவ்வளவு என்று சொல்லவில்லையே...''

''மை காட்! 'சஸ்பென்ஸ்' வேண்டாமே... இதோ... பாருங்கள்... இதயம் படபடப்பதை... அவுட் வித் இட்... நந்திதா...'' ஆர்வத்தில் துடித்தான் அவன்.

அவள் தன் எண்ணத்தை வெளியிட்டபோது 'ப்பூ' இவ்வளவுதானா என்று ஆர்வம் வடிந்து போனதும் உண்மை...

எதிர்பார்க்கவும் இல்லை...

அதை அவன் எதிர்பார்க்கவும் இல்லை...

ஒட்டலும் வேண்டாம்... 'பிக்னிக்'கும் வேண்டாம் என்றவளின் மனதில் இப்படிப்பட்ட ஐடியா இருக்கும் என்பதை அவன் சத்தியமாய் நினைக்கவும் இல்லை...

உண்மையை சொல்லப் போனால் அவள் சொல் வதைக் கேட்டு அவன் முகத்தில் அசடு வழிந்தது என்று தான் சொல்ல வேண்டும்... இப்படியும் ஒரு பார்ட்டியா'' என்ற குழப்பத்தில் அவன் 'பேந்த' விழித்ததும் நிஜம்.. அவனது முகம் போன போக்கைப் பார்த்துவிட்டு நந்திதாவிற்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போல இருந்தது.

கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்...

''என்ன சத்யா... பேச்சு மூச்சு இல்லை... சொன்னேன் பார்த்தீர்களா... நீங்கள் தயங்குவீர்கள்... யோசிப்பீர்கள் என்று... அது சரியாகிவிட்டது.''

''இதை ஒரு தடவை செய்து பாருங்கள்... சத்யா... மன நிறைவை உணர்வீர்கள்... பயப்பட வேண்டாம். ஏற்பாடெல்லாம் என்னுடையது... பணம் மட்டும் நீங்கள் கொடுத்து விடுங்கள் என்ன... சரி... நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் தானே... ஓ.கே... சத்யா... ஏற்பாடெல்லாம் செய்துவிட்டு உங்களுக்கு தெரிவிக்கிறேன்... வந்து விடுங்கள் என்ன... நிச்சயம் நீங்களும் 'என்ஜாய்' பண்ணு வீர்கள்... பாருங்கள்... அய்யோ... நேரமாகி விட்டது... அப்போ நான் புறப்படுகிறேன். நாளை சந்திப்போம்... பை...'' கையசைத்துவிட்டு... அவள் ஸ்கூட்டரில் அமர்ந்து புறப்பட...

அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்... கண்களிலிருந்து மறையும் வரை...



# 13



வண்டியை நிறுத்திவிட்டு வீட்டிற்குள் வந்தவள்... தங்கையைப் பார்த்துவிட்டுத் திகைத்தாள்... அவளை எதிர்பார்க்காததால் வந்த திகைப்பு.

''நான்தான் சொன்னேனே... எப்போது வேண்டு மானாலும் வந்து குதிப்பேன் என்று... அது சரி... தங்கை வந்து விட்டாள் என்று சந்தோஷத்தில் குதிப்பேன்னு பார்த்தா... இப்படி 'பேக்கு' மாதிரி முழித்துக் கொண்டு நிக்கறேயேக்கா... திரும்பி ஊருக்கு போய் விடட்டுமா...'' என்று பரிகாசக் குரலில் ரஞ்சிதா சொன்னதும் சுதாரித் துக் கொண்டாள் தமக்கை.

''இன்றைக்கு வருகிறேன்னு நீ முன் கூட்டியே சொல்லவில்லையே ரஞ்சி... அதான்...'' என்று பதில் சொன்னாள் தங்கைக்கு.

''ஆமாம்... சொல்லியிருந்தால் மட்டும் ஆரத்தி கரைத்து வைத்து காத்திருப்பேயாக்கும்... காற்றையாவது கட்டி வைத்து விடலாம் போல... உன்னை கட்டி வைக் கிறது கஷ்டம் என்று அம்மா புலம்புவது நிஜம்தான்க்கா...'' என்று தங்கை சொல்ல 'களுக்'கென்று சிரித்தாள் நந்திதா.

''அப்பா... இப்பவாவது சிரிச்சேயே... முகத்தை 'குர்'ரென்று வைத்திருந்ததைப் பார்த்துவிட்டு... நான் வந்தது பிடிக்கவில்லையோ என்று நினைத்தேன்...''

பொய்யை மெய்யாக்கி சொன்ன தங்கையை அணைத்துக் கொண்டாள் நந்திதா...

"இதுதானே வேண்டாம் என்கிறது... உன்னை 'மிஸ்' பண்ணினேன் ரஞ்சி... நீ இல்லாமல் வீடு 'வெறிச்' சென்று இருந்தது தெரியுமா... நீ வந்தது எனக்கு ரொம்ப ரொம்ப குஷியாக இருக்கறதுடீ... ரஞ்சி..."

"சரி... நீ சொல்வதை நான் நம்புகிறேன். போதுமா. ப்ச்சு... வீட்டை விட்டு போய்... தனியா இருக்கும்போது தான் வீட்டின் அருமை தெரிகிறதுக்கா... நானும் உன்னை ரொம்ப 'மிஸ்' பண்ணினேன். நந்துக்கா... அந்த ஏக்கத்தில் தான் ஓடி வந்தேன்..." என்ற தங்கையை தோளில் சாய்த்துக் கொண்டாள்.

"அம்மாவுக்கு ஒரே குஷியாக்கும். என்னைப் பார்த்ததும் அசந்து போய் நின்னாங்கன்னா பாரேன். இன்னிக்கு எனக்குப் பிடித்ததுதான் மெனுவே... 'லிஸ்ட்' போட்டுக் கொடுத்து விட்டேன்... ப்ச்சு... நாக்கு செத்துபோய் வந்திருக்கேன்க்கா..."

"சரி... படிப்பு எப்படி... உனக்குப் புரிகிறதா... ஏன்னா... 'பி.ஆர்க்' உனக்குப் புது பாடம் ஆச்சே... காலேஜும் உனக்குப் பிடித்த மாதிரி இருக்கிறது தானே ரஞ்சி..."

"காலேஜ் பெரிதாய்... சூப்பராய் இருக்குக்கா... அங்கே படிக்கிறோம்ங்கறதில் பெருமையாகவும் இருக்கு. உடன் படிக்கும் மாணவர்களும் 'ஃப்ரண்ட்லி' யாக இருக்கிறார்கள்தான்... பகல் எல்லாம் பொழுது போவது தெரிவதில்லை... சாயந்திரம் தான்... கஷ்டமா இருக்கு... அப்போதான் வீட்டில் இருந்தால் என்ற ஏக்கம் நெஞ்சை அடைக்கிறது... அப்போ படிக்கவும் தோணுவதில்லை... ஏண்டா படிக்கறதுக்கு இங்கே வந்தோம் என்று தோன்றுகிறது..."



"ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும் ரஞ்சி... போகப் போக சரியாகிவிடும்... படிக்க என்று போய் விட்டு இப்படியெல்லாம் வருத்தப்படக்கூடாது. நாலு வருடங்கள்... 'சர்'ரென்று ஓடிடும்... உன் எதிர்காலத்தை நினைத்துப் பார்த்து... படிக்க ஆரம்பி ரஞ்சி... இந்தப் படிப்பை முடித்துவிட்டு வந்தால்... அது எங்களுக்கும் பெருமை தானே ரஞ்சி..."

"சரிக்கா... ஏதாவது நல்ல படமா எடுத்து வந்து போட்டுப் பாக்கலாமா... அங்கே தான் படிப்பு... எழுதறதுன்னு இருக்க வேண்டிருக்கு... இங்கே ஜாலியா பொழுதைக் கழிக்கணும்னு வந்திருக்கேன்... வாக்கா..."

"ஆமா... எனக்கும் அவசர வேலை இருக்கிறது ரஞ்சி... டிரஸ்ஸை தைக்கக் கொடுத்து விட்டு... கொஞ்சம் 'பர்ச்சேஸ்' பண்ணனும்... இரு... போய் முகம் கழுவிக் கொண்டு வருகிறேன்... இன்னும் அப்பா வரலையா ரஞ்சி..."

"டாடிக்கும் நான் வந்திருப்பது தெரியாது... அவருக்கு 'சர்ப்ரைஸ்' தர வேண்டும்... டாடி வருவதற்குள் திரும்பி விட வேண்டும்க்கா... சீக்கிரம் போய் விட்டு வருவோம் வா..." என்ற தங்கையின் பேச்சுக்கு தலையாட்டிவிட்டு சென்றாள் நந்திதா.

ரஞ்சிதா தொலைக்காட்சி பக்கம் திரும்பினாள்...

தன் முன்னே இருந்த 'லேஸ்' சிப்ஸை எடுத்துக் கொறித்தவாறு ஏதோ ஒரு ஆங்கிலப் படத்தில் மூழ்கினாள்...

முகம் கழுவி... வேறு உடை மாற்றிக் கொண்டு கையில் 'கேரி பேக்'குடன் வந்த நந்திதா தங்கையை உசுப்பினாள்...

''ரெடியா... இதோ நானும் வந்தேன்'' என்று டி.வி.யை அணைத்து விட்டு எழுந்தாள் சின்னவள்.

''நல்ல படம்... ப்ச்சு... பார்க்க முடியவில்லை... அக்கா... 'த்ரீ இடியட்ஸ்' படம் பார்த்தாயா... சூப்பரா இருக்காம். தியேட்டரில் பார்க்கணும்னு ஆசைக்கா... நாளைக்குப் போவோமா...'' ஆசையுடன் கேட்டாள் தங்கை.

''ஓ... மை காட்! மறந்து விட்டேனே... சே...'' என்றவள் உடனே போன் செய்து 'கேட்டரிங்'க்கு ஆர்டர் கொடுத்து விட்டு... சாரதா ஆசிரமத்திறகும் போனில் பேசினாள்.

தங்கையுடன் பேசிக் கொண்டிருந்ததில் எல்லாமே மறந்து விட்டது...

''அக்கா... நான் சொன்னது காதில் விழுந்ததா இல்லையா...'' பொறுமையிழந்து கேட்டாள் தங்கை...

''விழுந்தது ரஞ்சி... நாளை என்றதும் தான் 'சட்'டென்று நினைவுக்கு வந்தது... ஆசிரம குழந்தைகளுக்கு மதியம் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்... அங்கு போயாக வேண்டும்...''

''ஏன்க்கா... வாழ்க்கையை 'என்ஜாய்' பண்ண மாட்டாயா... இல்லை... தெரியலையா... எப்ப பார்த்தாலும் கிழவியாட்டம் அனாதை ஆசிரமம்... தொண்டு... இரத்த தானம்... இதே தானா... வாழ்க்கையை அனுபவிக்க பாருக்கா... 'என்ஜாய்' பண்ற வயசு இது... அதை விட்டுட்டு... சேவை சேவைன்னு சுத்தறது பார்க்க எனக்கே சகிக்கவில்லை. கடவுளே.. வரப்போகும் உன் கணவர் எப்படி சகித்துக் கொள்வாரோ... அய்யோ... பாவம்...'' என்று எரிச்சலுடன் சொன்னாள் சின்னவள்.



அதைக் கேட்டுச் சிரித்தாள் நந்திதா.

''பிறருக்காக வாழ்வதில்... சின்னச் சின்ன சேவையாய் செய்வதில் வருகின்ற சந்தோஷமும் மன திருப்தியும் அலாதிடீ... அதெல்லாம் உனக்கு எங்கே தெரியும்... இரண்டு தடவை என்னோடு வந்து பார்... அப்புறம் தெரியும்... அதன் அருமை...'' என்றாள் அவள்.

''அய்யோ... சாமி... இந்த வீட்டுக்கு நீ மட்டும் போதும்... எல்லோருக்கும் சேர்த்து நீயே செய்து... மூட்டை மூட்டையாய் புண்ணியம் சேர்த்துக் கொள்... எங்களை விட்டு விடு... ப்ளீஸ்'' என்று ரஞ்சிதா கையெடுத்துக் கும்பிட...

''அது... சரி... இப்படி நீ சொன்னதற்கு பிரதி உபகாரமாய்... நாளைக்கு நாம் 'பர்ஸ்ட் ஷோ'க்கு போகிறோம்... அதே 'த்ரீ இடியட்ஸ்' படத்திற்கு... ஓ.கே.'' என்றாள் தமக்கை.

''அப்பா... இப்பத்தான் எனக்கு சந்தேகம் தெளிந்தது...''

''சந்தேகமா... உனக்கா...''

''பின்னே... எல்லா பெண்களைப்போல... ஊகூம்... வயசுப் பெண்களைப் போல ஆசை... அபிலாஷைகள் உனக்கு இல்லையா... நீ சாதாரண மனுஷி இல்லையோ... என்ற சந்தேகம் எனக்கு... சினிமாவுக்குப் போகலாம் என்றதும் தான்... பரவாயில்லை... என் அக்கா 'அப்நார்மல்' இல்லையென்று புரிந்து கொண்டேன்'' என்று சொல்லிவிட்டுக் கண்களைச் சிமிட்டினாள்...

தங்கையை முறைத்துப் பார்த்த நந்திதா... ''இந்தப் பேச்சுக்கு சினிமா 'கட்' என்று சொல்லியிருப்பேன். போகட்டும் என் தங்கையாச்சே என்று மன்னித்து

விடுகிறேன்... பிழைத்துக் கொள்...'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

இருவரும் கைக்கோர்த்தவாறு வெளியே புறப்பட் டனர்...

சாரதா ஆசிரமத்தில் சத்யாவிற்காக அவள் காத்திருந் தாள்... இன்னும் வராதது ஏன்... போக்குவரத்து நெரி சலா... அலுவலகத்தில் அவசர வேலை வந்து விட்டதா... இல்லை... இந்த ஏற்பாடே பிடிக்காமல்...

அப்படி இருக்காது... வர முடியவில்லை என்றாலும் வரப் பிடிக்கவில்லை என்றாலும் போனில் சொல்லி யிருப்பாரே...

வயதான ஆசிரம பொறுப்பாளர் கொஞ்சம் பொறுமை யிழந்தவராய் நந்திதாவிடம் வினவினார்.

''என்னம்மா... இன்னும் அவர் வரவில்லையே... ஒருவேளை மறந்து போயிட்டாரா என்ன... ஒரு தடவை அவரோட 'செல்'லுக்கு போன் செய்து பாரம்மா... பாவம்... பிள்ளைகள் பசியுடன் இருக்காங்க...'' என்றார்.

''இல்லை சார்... அவர் வந்தே வருவார்... ஏதாவது அவசர வேலை வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆங்... அதோ வந்து விட்டார்...'' என்றவள்...

காரை நிறுத்திவிட்டு இறங்கியவனை நோக்கி சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்துச் சென்றாள். அவனை ஆசிரம தலைவருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அவரும் சத்யாவிற்கு வாழ்த்துக் கூறி... நன்றியும் கூறினார்...

அங்கிருந்த குழந்தைகளுக்கும்... வயது முதிர்ந்த பெரியவர்களுக்கும் தன் கையால் இனிப்பை வழங்கி னான் சத்யா...



நந்தவனத்தில் பூத்த மலர்களாய்... மலர்ந்த முகத் துடன் வரிசையாய் வந்து லட்டை வாங்கும்போது அந்தப் பிஞ்சு முகத்தில் தெரிந்த சந்தோஷம்... அவனுள் சிலிர்ப்பை ஊட்டியது நிஜம்...

அதுவும் நான்கு வயது பெண் குழந்தை... அவன் தந்த இனிப்பை வாங்கிக் கொண்டு... கண்களை பெரிதாய் விரித்து 'அங்கிள்... உங்களுக்கு ஒரு தாங்க்ஸ் முத்தம் தரட்டுமா'' என்று கேட்டதும் மனம் நெகிழ்ந்த வனாய் அருகே குனிந்தான்... அந்த இளஞ்சிட்டின் பட்டு போன்ற உதடுகள் இதமாய் கன்னத்தில் பதிந்து முத்தம் தர... அவன் நெக்குருகிப் போனான்.

கண்களில் நீர் கசிவுடன் அவன் மெய்மறந்து நின்ற கோலம் கண்டு நந்திதாவிற்கு சிரிப்பு வந்தது. அதைத் தானே அவளும் விரும்பியது.

அழைத்தாள் என்று வந்தோம் என பட்டும் படாமலும் வந்திருந்தவனின் உள்ளத்தில் இப்போது உற்சாக ஊற்றுப் பொங்கி வழிந்தது.

அவர்களின் மகிழ்ச்சியில் அவனும் கலந்து கொண்டான்.

குழந்தைகளிடம் சிரித்துப் பேசி... அனாதைகளாகி விட்ட வேதனையில் நொந்து போயிருக்கும் வயதான வர்களிடம் இன்முகம் காட்டி... இதமாக உரையாடி... எல்லோருக்கும் தன் கையாலே பதார்த்தங்களை பரிமாறி... உபசரித்து... அனைவரும் வயிறார உண்பதை மனநிறைவுடன் பார்த்தவனுக்கு நெஞ்சு விம்மியது.

அன்னதானம் முடிந்து... புறப்பட்டபோது முதியவர் கள் வழங்கிய ஆசிகளையும்... குதூகலத்துடன் குழந் தைகள் சொன்ன கோரஸ் நன்றியையும் புன்னகையுடன்

ஏற்றுக் கொண்டு வெளிவந்தவன்... நந்திதாவிடம்
''தாங்க்ஸ் நந்திதா...'' என்றான் உணர்ச்சி ததும்பும்
குரலில்.
''எதுக்கு தாங்க்ஸ்'' என்று வினவினாள் அவள்.
''சந்தோஷத்தின் முழுமையை எனக்கு உணர வைத்த
''சந்தோஷத்தின் முழுமையை எனக்கு உணர வைத்த
தற்கு... நாம் மற்றவர்களுக்காகவும் வாழ வேண்டும்
என்பதைப் புரிய வைத்ததற்கு... இந்த நாளை என்
வாழ்க்கையில் மறக்க முடியாதபடி செய்ததற்கு...''
''இதை நீங்கள் உணர்ந்து கொண்டீர்களே சத்யா.
அதுதான் எனக்கு வேண்டியிருந்தது. எத்தனை பேர்
அதை உணர்ந்து அனுபவிக்கிறார்கள்... அப்படியே
உணர்ந்தாலும் அதை வெளிப்படையாய் ஒப்புக் கொள்
ளும் நல்ல மனம் யாருக்கு இருக்கறது... எத்தனையோ
பேர் வெறும் டம்பாச்சாரத்திற்காக வந்து அன்னதானம்
செய்கின்றார்கள். ஆத்மார்த்தமாய் செய்யாத எந்தச்
செயலிலும் பலன் இல்லை என்பது அவர்களுக்குத்
தெரியவில்லை. பாவம்... என்னைப் பொறுத்தவரை
இல்லாதவர்களுடன் சேர்ந்து கொண்டாடுவதுதான்
உண்மையான விருந்து என்பேன்...''
''நீங்க சொல்வதும் உண்மைதான் நந்திதா... வயிறு
ரொம்பியிருக்கும் சுகவாசிகளை அழைத்து விருந்தளிப்
பதைக் காட்டிலும்... இந்த மாதிரி ஆசிரமத்தில் இருப்ப
வர்களுக்கு அன்னமிடுவது மனநிறைவான விஷயம்
தான். அன்புக்காக ஏங்கியிருக்கும் இந்தப் பிஞ்சுகளைப்
பார்க்கும்போது எனக்கு வேதனைப் பிடுங்கித் தின்
கின்றது... நந்திதா...''
''பிஞ்சுகள் மட்டுமில்லை... உலர்ந்த சருகுகளும்
தான்... பிள்ளைகளிடம் அன்பும் ஆறுதலும் எதிர்

... இந்த ஆசி
பார்த்து... அது
ரமத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் முதியோர்களைப் பார்க்
கையில் உலக வாழ்க்கை ஏதோ சூன்யத்தை நோக்கி
போய்க் கொண்டிருக்கிறதோ என்று தோன்றுகிறது
சத்யா... நம் நாட்டில் எது பல்கிப் பெருகி வளர்கிறதோ
இல்லையோ... மழை காலத்து காளான்கள் மாதிரி...
முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை மட்டும் நாளுக்கு
நாள் வளர்கிறது... எல்லாம் காலத்தின் மாற்றம்... சத்யா...''
''இளைய தலைமுறையின் மனப்போக்கு மாறி
வருவது தான் காரணம்...''
''அவர்களை மட்டும் குறை சொல்ல முடியாது...
சத்யா. முன்பு கூட்டுக் குடும்பமாக இருந்தபோது... பிள்ளை
களுக்கு நல்ல கவனிப்பும்... அன்பும்... அக்கறையும்
கிடைத்தது... இப்போ அப்படியில்லை. பெற்றவர்கள்...
நாம் இருவர்... நமக்கு இருவர் என்று குறுகிய வட்டம்
போட்டு வாழும்போது... உறவுகளைப் பற்றி தெரிந்து
கொள்ள வழியின்றி தனித் தீவுகளாய் வாழ்கிறார்கள்...
பெற்றவர்களின் அலட்சியப் போக்கும்... அவசர
வாழ்க்கையும் தான் இன்றைய இளைஞர் சமுதாயத்தின்
தடுமாற்றத்திற்கு காரணம் தம் பிள்ளைகளுக்குப் பணம்
சேர்க்க வேண்டும்... சொத்து சேர்க்க வேண்டும் என்ற
நினைப்பில் மட்டுமே இருக்கிறார்கள்... தம் பிள்ளை
களுக்கு உறவுகளை சேர்க்க வேண்டும் என்ற எண்ணம்
இல்லவே இல்லை... பிள்ளைகளுக்குக் கேட்டது
எல்லாம் வாங்கிக் கொடுப்பதுடன் கடமை முடிந்து
விட்டது... பிள்ளைகளின் விருப்பங்களைப் பூர்த்தி
செய்து விட்ட சந்தோஷத்தில்... நாம் தான் நல்ல பெற்
றோர்கள் என்று எண்ணி இறுமாந்து போகிறார்கள்...

தம்பிள்ளைகள் ஆசைப்படுவது அது மட்டுமல்ல... அன்பும் அக்கறையும் தான் என்பது அவர்களுக்கு புரியாமல் போனது தான் பரிதாபம்... விளைவு என்ன தெரியுமா... இந்தப் பிள்ளைகளின் மனதில் வெறுமை குடியேறி... தங்களுக்கு யாருமில்லையே என்று ஏங்குகிறார்கள். இவர்களைப் பணக்கார அனாதைகள் என்று தான் சொல்ல வேண்டும்... சொந்த வீட்டில் அகதிகள்... பாவம்... அப்படி வளர்ந்த பிள்ளைகளின் மனதில் பாசம் எங்கே வரும்... பாசம் வற்றிப்போய்... பெற்றவர்களைப் பாரமாய் நினைத்து ஆசிரமத்தில் தள்ளி விடுகிறார்கள்... அவர்களுக்கும் 'நாம் இருவர் நம் குழந்தைகள் இருவர்... அது போதும்' என்ற எண்ணம் தான் வரும்... இதெல்லாம் மாற வேண்டும் சத்யா..."

மேடையில் பேசுவதுபோல கருத்துக்களை அள்ளி வீசும் அவளை வியப்புடன் பார்த்தான்... அவளது சிந்தனையே தனியாக இருக்கிறதே... மற்ற பெண் களைப் போல இல்லாமல்... இவள் வித்தியாசமாய் தனிப்பட்டுத் தெரிகிறாள்.

அவனுக்குத் தெரிந்த பெண்கள் எல்லோரும் புடவை... நகை... ஷாப்பிங்... அலங்காரம்... சினிமா பேச்சு... டி.வி. சீரியல்ஸ் என்று அலுத்துப் போன சமாச்சாரங்களைப் பேசித்தான் பார்த்திருக்கிறான்...

ஏன் அவனுடைய அக்காவும் தான்... ப்ரியாவின் பேச்சு கூட தனக்கு பிடித்த நடிகை... நடிகர்... சினிமா நகைச் சுவை.. ஆடித் தள்ளுபடி விற்பனையில் வாங்கிய டிரெஸ்... அதற்கு பொருத்தமான அணிகள் என்று இந்த வட்டத் துக்குள்ளே சுற்றி வருமே தவிர... அறிவுப் பூர்வமான பேச்சாக இருந்ததில்லை என்பதும் நினைவுக்கு வந்தது.



அதே சமயம் அவனுக்கும் வெட்கமாகத்தான் இருந்தது. இதுவரைக்கும் வெளியுலகத்தைப் பற்றி யோசிக்கா மல்... பணம்... உல்லாசம்... காதல் இவை மட்டுமே தான் வாழ்க்கையில் என்று இருந்தேனே... என்னவொரு சுயநல புத்தி... மனசுக்குள் குன்றினான்...

அவளது வார்த்தைகள் சம்மட்டிகளாய் அவனை அடித்தது போல உணர்ந்தான்.

அவள் சொல்வதும் நூற்றுக்கு நூறு உண்மைதானே...

இன்றைய சிறுவர்கள் உறவுப் பின்னலை அறிய வாய்ப்பில்லாமல் தனித் தீவாய் வாழ வேண்டிய கட்டாயம். பெற்றவர்களின் சொந்த பந்தங்களுடன் பழகும் சந்தர்ப்பமும் இல்லையே... பள்ளி ஆயிற்று வீடு ஆயிற்று... அது மட்டுமில்லை... டி.வி. முன் அமர்ந்து போகோ... கார்ட்டூன் என்று பார்த்து விட்டு படுத்தால் முடிந்தது அன்றைய தினம்...

போகட்டும்... பள்ளி விடுமுறையையாவது சொந்த பந்தங்களுடன் கழிக்க முடிகிறதா... இந்த தடவை அத்தை வீட்டுக்குப் போகிறோம்... கிறிஸ்மஸ் லீவுக்கு பாட்டி வீடு என்று குஷியாய் சொல்லும் காலம் போயே போச்சு...

ட்யூஷன்... ஸ்போர்ட்ஸ்... மியூசிக் கிளாஸ்... சம்மர் கேம்ப் என்ற பெயரில்.... பிள்ளைகளுக்கு எங்குமே போக முடியாமல்... சிறைப்பட்டு போவதுதான் பரிதாபம்...

உறவு முறை எந்த அளவுக்கு மாறி விட்டது என்றால் என் பெரியம்மா... என் அத்தை என்பதெல்லாம் மாறி... என் மம்மியின் அக்கா... என் டாடியின் சிஸ்டர் என்று குறிப்பிடும்படி தூர... தூர தள்ளிச் செல்கிறது உறவுகள்...

குளத்தில் நீர் நிறைந்து இருந்தால் தானே மீன்களும் தவளைகளும் துள்ளி விளையாடும்.. மனதில் அன்பு நிறைந்திருந்தால் தான் சொந்தங்களும் உறவுகளும் தேடி வரும்... அதைத்தான் சொல்கிறாள் நந்திதாவும்...

"அந்தக் காலம் மாதிரி மறுபடியும் கூட்டுக் குடும்ப அமைப்பு வந்தால் தான் நல்லது சதயா... அரவணைக்க அநேக கைகள் தயாராக இருக்கின்றன என்று துணிச்சலுடனும் நம்பிக்கையுடனும் செயல்படுவார்கள். வீட்டுப் பெரியவர்களின் அன்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்தவர்களுக்கு நிச்சயம் வயதானவர்களை உதாசீனப்படுத்த மனம் வராது. அவர்களை கைவிடவும் மாட்டார்கள். அப்புறம் இந்த மாதிரி முதியோர் இல்லங்களுக்கு வேலையும் இருக்காது... ப்ச்சு... அப்படி நடக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை... ம்ம்... மீண்டும் பழைய காலத்துக்குக் கொண்டு செல்லும் டைம் மிஷின் மட்டும் இருந்தால்..." என்று பெருமூச்சு விட்டாள் நந்திதா.

அதைக் கேட்டு விட்டு அவன் சிரித்தான்... "அப்படி பின்னோக்கிப் போனால்... நீங்கள் இந்த மாதிரி ஸ்கூட்டர் மேல் அமர்ந்து... வெகு சுதந்திரமாய் என்னுடன் பேசிக் கொண்டிருக்க மாட்டீர்கள் நந்திதா... எங்கேயாவது இருட்டனா சமையல் அறையில்... சேலையை இழுத்துப் போர்த்திக் கொண்டு விறகு அடுப்புடன் அல்லாடிக் கொண்டிருக்க வேண்டும்" என்று அவன் வேடிக்கையாய் சொன்னதும் அவளும் சேர்ந்து சிரித்தாள்...

"ஓகே... தேங்க்யூ சத்யா... நான் சொன்னதை மதித்து ஏற்றுக் கொண்டதற்கு... நான் புறப்படுகிறேன்" என்று அவள் ஸ்கூட்டரை ஸ்டார்ட் பண்ணியபோதுதான் அவனுக்கு 'பளிச்'சென்று நினைவுக்கு வந்தது.



'கேட்டரிங்'க்கு இன்னும் பணம் தரவில்லையே... அவளும் கேட்காமல் கிளம்புகிறாளே...

"ஒரு நிமிஷம் நந்திதா... 'கேட்டரிங்'க்கு பணம் தரவேண்டாமா என்ன... எவ்வளவு ஆயிற்று... சொல்லுங்கள்..." என்று வினவ... அவளும் இவ்வளவு என்று சொன்னாள்...

"கேட்டரிங்'காரர்கள் எனக்குப் பழக்கமானவர்கள் தான்... நீங்கள் நிதானமாய் தந்திருந்தாலும் பரவாயில்லை சத்யா."

"இல்லை... இல்லை... உடனே கொடுப்பதுதான் மரியாதை. அப்புறம் மறந்து விட்டால்..." என்றவன், தன் பர்ஸை எடுத்து பண நோட்டுகளை எண்ணி அவளிடம் தந்தான்.

அதே நேரம்... எடுத்து வந்திருந்த பாத்திரங்களைக் கழுவி... அவற்றை காத்திருந்த ஆட்டோவில் ஏற்ற வந்தார் கேட்டரிங் பரிச்சாரகர். பணத்தை வாங்கி அதை அப்படியே அவரிடம் நீட்டினாள் நந்திதா.

"சாப்பாடு நன்றாக இருந்ததா சார்..." என்று ஆவலுடன் கேட்டவருக்கு இன்முகம் காட்டி "வெகு அருமையாக இருந்தது... குழந்தைகள் ருசித்துச் சாப்பிட்டார்கள்... நல்ல சாப்பாட்டை தந்ததற்கு நன்றி சொல்ல வேண்டும் உங்களுக்கு" என்றான் பாராட்டும் விதமாய்...

"எங்களுக்கு வாடிக்கையாளர்களுடைய திருப்தி தான் வேண்டும் சார்... பணம் முக்கியமில்லை... அம்மா... வரட்டுமா... சார்... வருகிறேன்" என்று அவர் ஆட்டோவில் ஏறி புறப்பட்டுச் சென்றார்.

''சரி... சத்யா நேரமாயிற்று.. நானும் புறப்படுகிறேன்...'' என்று அவளும் புறப்பட்டு விட... தன்னைச் சுற்றிலும் இருந்த வெளிச்சம் மறைந்து இருள் கவ்வியது போல உணர்ந்தான்.

# 14



அரை மனதுடன் ஊருக்குக் கிளம்பிய தங்கையை காரில் அழைத்துச் சென்று ஸ்டேஷனில் விடச் சென்றாள் நந்திதா...

அவளுக்கும் தங்கையைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற துக்கம் நெஞ்சில் இரும்புக் குண்டாய் அழுத்தினாலும்... அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் கலகலப்பாய்... வேடிக்கையாய் பேசினாள்...

ஏற்கனவே 'ஹோம்சிக்' அவளுக்கு... எனக்கும் மனசுக்கு கஷ்டமா இருக்கு ரஞ்சி என்றால்... அவ்வளவுதான்... பயணத்தை நிறுத்தி விடுவாள்...

அது மட்டுமல்ல... அவள் உற்சாகத்துடன் கிளம்பிப் போனால்தான் படிப்பில் கவனம் செலுத்த முடியும்...

அழுது வடிந்து கொண்டு சென்றால்... புத்தகத்தை தொடவும் மாட்டாள். மன சஞ்சலத்தில்... பாடத்தில் மும்முரமாய் ஈடுபடவும் முடியாது.

போகப்போக எல்லாம் சரியாகிவிடும்...

அவளை விட்டுவிட்டு... வீடு திரும்பியவளுக்கு தொண்டை அடைத்து வந்தது... அன்புத் தங்கையை



இதுவரைக்கும் பிரிந்திருந்ததில்லை.... இப்போது... படிப்பு என்று தொலைதூரம் போயிருக்கிறாள்...

வீட்டில் இருக்கும்போதும் இருவருக்கும் இடையே வாக்குவாதம்... போட்டோ போட்டி... சச்சரவு என்றெல்லாம் வரும்தான்...

ஆனால்... இப்போது... அதுதான் வேண்டியிருந்தது.

சோபாவில் அவள் படித்து முடித்த புத்தகம்... சாப்பாட்டு மேஜையில் அவள் குடித்து வைத்திருக்கும் ஜூஸ் கிளாஸ்... 'சேரின்' மேல் விழுந்து கிடக்கும் அவளது துப்பட்டா... அவளது அறையில் கட்டிலின் மேல் பரவலாய் கிடந்த சி.டி.க்கள்... என்று அவளை நினைவூட்டும் பொருள்கள்...

பெருமூச்சு விட்டாள்...

அம்மா எங்கே... ரஞ்சிதா புறப்பட்டுச் செல்வதை தாள முடியாமல் அழுதவள் ஆயிற்றே... இன்னும் அம்மா அழுது கொண்டிருக்கிறாளோ...

சமாதானம் செய்ய வேண்டும் என்று விழைந்தது மனம்...

அறைக்குள் அம்மா விம்முவதும்... தந்தை ஆறுதல் சொல்வதும் காதில் விழுந்தது.

''என்னம்மா... வரா... உன் பொண்ணை ஏதோ கண்மேனாட்டுக்கு அனுப்பி வைத்தது மாதிரியில்லே போயிணீர் விட்றே... இங்கே இருக்கிற பெங்களூருக்கு போயிருக்கா... நாலு வருஷம்... கை சொடக்கற மாதிரி நிமிஷமா ஓடிடும்... படிப்பை முடிச்சிட்டு வந்திடுவா... பெரிய படிப்பு முடிச்சுட்டு வர்ரான்னா அது நமக்கும் பெருமையில்லையா... சொல்லு...''

''அவளைப் பிரிஞ்சு நான் இருந்ததேயில்லைங்க... என்னால் தாள முடியல்லே...''

''அடடா... பெண்களைப் பெத்திருக்கோம்... கொஞ்சம் தைரியமா இருக்க வேண்டும் வரா. இப்ப போயிட்டு வந்துடுவா நம்ம பொண்ணு. அப்புறம்... கல்யாணம் ஆகி... புகுந்த வீட்டுக்குப் போயிடுவாளே... நிரந்தரமா... அப்போ என்ன செய்வேம்மா... பெண்களைப் பெத்தவங்க... இந்தப் பிரிவுக்கெல்லாம் தயார் படுத்திக்கணும் வரா... மனசை கெட்டியாக்கிக் கொள்ளவேண்டும்...''

''நீங்க என்ன ஆம்பிளை... எதையும் கண்டு கொள்ளாமல் இருப்பீங்க... பத்து மாசம் வயித்தில் சுமந்து பெத்தவளாச்சே... என்னால் முடியுமா...''

''சரி... அதற்கு என்ன செய்யணுங்கறே... படிப்பும் வேண்டாம்... ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம்னு இங்கேயே இருந்துட சொல்லிடலாமா... அசடு... பெண்களை நல்லாப் படிக்க வைக்கணும். அவங்க சொந்தக் காலில் நிற்கணும்னு நீதானே சொன்னே. இப்ப... நீயே கலங்கி நிற்கறே...''

இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த நந்திதா... அறைக்குள் சென்றாள்.

''கரெக்ட் டாட்... இந்த அம்மா சுத்த மோசம்... கூழுக்கும் ஆசை... மீசைக்கும் ஆசை மாதிரி... தன் பெண்கள் படிக்க வேண்டும் என்று ஆசையும் இருக்கு... படிப்பு என்று எங்கேயும் போகக் கூடாது என்று தவிப்பும் இருக்கு... நீங்க சொல்கிற மாதிரி... பெண்களுக்கு கல்யாணம் ஆனால் அவர்களது பிரிவை எப்படிச் சகிப்பாராம்... அதைக் கேளுங்கள் டாட்... இதற்குதான்... நான் திருமணமே வேண்டாம் என்கிறேன்...'' என்றாள் குறைப்படுவது போல்...



''ஆமாம்... கல்யாணம் பண்ணிக்காமல் ஒளவைப் பாட்டி மாதிரி இருந்துடு... விளங்கின மாதிரி தான்... இதோ பாருங்க... இவ சொல்றான்னு 'தேமே'ன்னு இருந்துடாதீங்க... நல்ல பையனாப் பார்த்து... ஏன்... எதுக்கு ரெண்டு பேரும் சிரிக்கிறீங்க... அட சொல்லிட்டுச் சிரியுங்களேன்...'' என்று வரலட்சுமி பொறுமையிழந்து கேட்க... இன்னும் பலமாய்ச் சிரித்தார்கள் தந்தையும் மகளும்...

''ஓகோ... நான் பேசறது உங்களுக்குக் கோமாளித்தனமா இருக்காக்கும்.. சே... என்னை யாருமே புரிஞ்சுக்க மாட்டேன்கிறார்களே... எல்லாம் என் தலை விதி...'' என்று புலம்பினாள் வரலட்சுமி.

சிரிப்பதை நிறுத்திவிட்டு ''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தான் பெண்களைப் பிரிந்து இருக்க முடியவில்லைன்னு மூக்கால அழுதே... இப்ப... கல்யாணம் பண்ணிக் கொண்டு போய் சேர் என்கிறே... கணப் பித்தம்... கணப் பைத்தியம் என்பது போல இருக்கு... நீ பேசறதும்... அழுவதும்... அதான் சிரிச்சோம்...'' என்றார் கேசவன்.

அவரை முறைப்புடன் ஒரு பார்வை பார்த்துவிட்டு ''பிரியணுமேன்னு வருத்தம் இருந்தாலும்... அதற்காகப் பெண்களை எத்தனை நாள் வீட்டில் வைத்துக் கொள்ள முடியும்... கல்யாணம் செய்யாமல் இருந்து விட்டால்... ஊர் உலகம் நக்கலாகப் பேசுமே... அதான்... வேதனையை ஒதுக்கி வச்சுட்டு... நம் கடமையைச் செய்ய வேண்டும் என்கிறேன்...'' என்று கூறினாள் மனைவி.

''அடடா... இதுவல்லவா புத்திசாலித்தனமான பேச்சு... பார்த்தாயா நந்தும்மா உன் அம்மாவை. அழுமூஞ்சி... அசடு என்று நினைத்தோமே... என்ன தெளிவாகப் பேசுகிறாள் பார்.. இதற்காகவாவது நீ அவள் பேச்சுக்குக் கட்டுப்பட்டு... தலையாட்ட வேண்டும்.... எதையாவது பேசி உன் அம்மா மனதை நோக வைக்காதேடா...'' என்று சொல்லிவிட்டு மகளைப் பார்த்து கண்களைச் சிமிட்டினார்.

அதாவது... அம்மா அழுகையை நிறுத்தியிருக்கிறாள். எதையாவது சொல்லி அவளை கண்ணீர் சிந்த வைக்காதே... என்று மறைமுக எச்சரிக்கையாய்... அதைப் புரிந்து கொண்டதுபோல் அவளும் மேலே வாதம் புரியாமல் 'கப்சிப்' ஆனாள்.

''சரி...' வரா... எழுந்திரு சாப்பிடலாம்... குழந்தை பசியுடன் இருக்கிறாள்... நீ உன் கையால் பரிமாறினால் தான் எங்களுக்கு சாப்பிடப் பிடிக்கும். இன்னிக்கு என்ன மெனு வரா... சொல்லு...''

வருத்தத்தையெல்லாம் மூட்டைக் கட்டி ஒதுக்கி வைத்து விட்டு... வரலட்சுமியும் பரபரப்புடன் எழுந்தாள். கணவரும்... மகளும் பசியோடு இருக்கிறார்கள். பாவம்... சீக்கிரம் பரிமாற வேண்டும்... என்ற பரிதவிப்புடன் சமையலறைப் பக்கம் ஓடினாள்.

''என்னப்பா... அம்மா கல்யாணம் என்றதும் 'ஓகே' என்று தலையாட்டி விட்டீர்கள்... நான்தான் கல்யாணமே வேண்டாம் என்கிறேனே... ப்ளீஸ் டாட்... டிரைடு அன்டர்ஸ்டாண்ட் மீ...'' என்று கெஞ்சும் குரலில் கேட்ட மகளை அரவணைத்துச் சொன்னார் தந்தை.



''இதோ பார் நந்தும்மா... இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம் என்று சொல்... அதுக்கு உன் அம்மாவை ஒத்துக்க வைக்கலாம்... ஆனால் கல்யாணமே வேண்டாம் என்று சொன்னால்... அது முடியாதுடா... டிரைடு அன்டர்ஸ்டாண்ட் அவர் ஃபீலிங்க்ஸ்...'' என்று அவளை மாதிரியே திருப்பிக் கேட்கவும்... அவளால் மேற்கொண்டு வாதாட முடியவில்லை.

'சே... என்ன வாழ்க்கை இது... சுயமாய் முடிவு எடுக்க இயலாத வாழ்க்கை... ஒரு ஆண் எனக்கு திருமணமே வேண்டாம் என்று இருந்தாலும் நடக்கும்... ஆனால்... பெண்கள்... பெற்றவர்களுக்கு அடங்கி... கழுத்தை நீட்டியே ஆக வேண்டும்... எத்தனை ஆண்டுகள் ஓடினாலும் பெண்களுக்கு இன்னும் முழு சுதந்திரம் கிடைக்கவேயில்லை. மகா கேவலம்...' உள்ளுக்குள் புழுங்கினாள் நந்திதா. வேறென்ன செய்ய முடியும். அவளால் முடிந்தது அதுதான்.

'லேப் டாப்'பைக் கண்டுபிடித்த அந்தப் புண்ணியவான் நீடூழி வாழ்க என்று மனசுக்குள் வாழ்த்தினான் சத்யா... வீட்டில் இருந்தவாறு கூட அலுவலக வேலைகளையெல்லாம் செய்ய முடிகிறதே...

'லேப் டாப்' மட்டுமா... இன்டெர் நெட்டும்... பிராட் பேண்டும் கூடுதல் வரம் தான்...

முக்கியமான... அதுவும் அவசரமான வேலையில் ஆழ்ந்திருந்தவனை தட்டியெழுப்பியது அவனது செல். யாரந்த பூஜை வேளைக் கரடி... முகம் சுளித்தவாறே... 'லேப் டாப்'ல் இருந்த கவனத்தைத் திருப்பாமலே அதை அணைத்து விட்டு வேலையைத் தொடர்ந்தான்.

அதுவும்... அதாவது செல்லும்... நான் விடுவேனா என்று மறுபடியும் ராகம் இழுக்க... அவன் எரிச்சலுடன் நம்பரைப் பார்த்தான்.

அய்யோ... அம்மா... எரிச்சலும் கோபமும் மாயமாகி... நிதானம் திரும்ப... ''என்னம்மா...'' என்று கேட்டான்.

''ஓகோ... 'அம்மா'ன்னு ஒருத்தி இருப்பது நினைவில் இருக்கிறதா... அதென்ன... போனை 'கட்' பண்றே... அம்மா ஏதோ சொல்ல ஆசைப்படுகிறாளே... அதைக் கேட்கலாம் என்று தோன்றவில்லையா...'' படபட வென்று பொரிந்தாள் தாய்.

''இல்லேம்மா... ஆபீஸ் வேலையா இருந்தேன்... அர்ஜெண்டா அனுப்பியாக வேண்டும்... அதான்... அதுவும் நீங்கதான்னு தெரியாமல் 'ஆஃப்' பண்ணி னேன். சாரிம்மா.''

உடனே பெற்ற மனம் திசை திரும்பியது.

''வேலையா... இப்ப மணி என்ன தெரியுமா... பதி னொரு மணியாகப் போகிறது... இப்ப போய் வேலை இருக்கு என்கிறாயே பிரகாஷ்... இப்படி ராத்திரியெல் லாம் கண் முழித்தால் உடம்புக்கு என்ன ஆகும்டா... சொல்லு...'' பாசத்தில் தவித்தவளாய் அக்கறையுடன் கடிந்து கொண்டாள் தாய்.

''அம்மா... என் வேலை அப்படி... கைக்கட்டி உட்கார்ந்திருந்தால் அவ்வளவுதான்... இந்த வேலையை முடித்து விட்டுப் படுத்தால் தான் தூக்கம் வரும்மா... நான் வேலை பார்க்கிறது எம்.என்.ஸி. கம்பெனி... வேலை சுமை அதிகம்... அப்புறம் பண்ணலாம் என்று தள்ளிப் போட முடியாது'' என்று எடுத்துக் கூறினான் பிள்ளை.



''உனக்கு எதுக்குடா இந்த தலையெழுத்து... ஊருக்கு வந்து... ஹாயா இருக்கலாம் இல்லையா. நமக்கு நிலபுலன்கள் நிறைய இருக்கு... அதைப் பொறுப்பா பார்த்துக் கொண்டிருக்கலாமேடா... சரி வேண்டாம்... உள்ளூரிலேயே வேலைத் தேடிக் கொண்டு எங்களுடன் இருக்கலாம் தானே... அதை விட்டு விட்டு இப்படி ஒண்டியா... வெளியில் சாப்பிட்டுக் கொண்டு... இராப் பகலா முழித்து வேலைப் பார்த்துக் கொண்டு... இது தேவையாடா... எனக்கு கஷ்டமா இருக்குடா... பேசாமல் வந்து விடுப்பா...'' வழக்கமாய் புலம்புவது தான்... இப்போதும் அரற்றுவது கேட்டு சகித்துக் கொண்டு பதில் சொன்னான் சத்யா.

''என்னம்மா இது. ஒவ்வொரு அம்மாவும் தன் பிள்ளை பெரிய படிப்பு படித்து... பெரிய வேலையில் அமர்ந்து... கை நிறைய சம்பாதிப்பதை பெருமிதமாய் நினைப்பாள்... ஆனால் நீங்க என்னம்மா... நல்ல வேலையை விட்டு விட்டு வா என்கிறீர்களே. அங்கே வந்து நிலபுலன்களைப் பார்க்கவா நான் இன்ஜினியரிங் படித்தேன்... தவிர... உத்யோகம் புருஷ லட்சணம்மா... சும்மா வா... வா என்று என்னைக் கூப்பிடாதீர்கள்... ப்ளீஸ்.''

''ம்ம்... எப்போ என் பேச்சை கேட்டு நடந்திருக்கே... இப்ப கேட்கறதுக்கு... சரி... நான் விஷயத்துக்கு வர்றேன்... யாரையோ காதலிக்கிறேன் என்று... நாங்க பார்த்த பொண்ணை வேண்டாம்னு சொன்னே... சரி... உன் இஷ்டப்படியே ஆகட்டும் என்று ஒப்புக் கொண் டோம்... இப்ப... அந்தப் பொண்ணைப் பிடிக்கவில்லை... நீங்க பார்த்த பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள தயார்னு உன் அக்காவிடம் சொன்னாயாமே... நிஜமாடா...''

ஓ! அக்காவிடம் சொன்ன சமாச்சாரம் தந்திச் செய்தி மாதிரி அம்மாவிற்குப் போய் விட்டது. அப்படிப் போகும் என்று தெரிந்து தானே அக்காவிடம் சொன்னது... உள்ளுக்குள் உற்சாகம் பீறிட்டாலும்... அதை வெளிக்காட்டாமல் பேசினான்.

''ஆமாம்மா... இதை உங்களிடமே சொல்லிருக் கலாம்தான்... ஆனா தயக்கமாக இருந்தது. அதான் அக்கா விடம் தெளிவாய் என் எண்ணத்தை சொன்னேன்ம்மா...''

''சரிடா... திடீர்னு இப்படிச் சொன்னா எப்படி... எந்த முகத்தை வச்சு அவர்களிடம் பேசுவது உன்னைப் பற்றி படு கேவலமா ஒரு மொட்டைக் கடிதாசி எழுதிப் போட்டு விட்டு... இப்போ வந்து அம்மா... அந்தப் பொண்ணைப் பண்ணிக்கத் தயார் என்றால்... அவர்கள் பொண்ணைக் கொடுக்க தயாராக இருக்கணுமே... யானை தன் மேல் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது மாதிரி காரியத்தை செஞ்சுட்டு... இப்போ வருந்தி என்னடா பிரயோசனம்... சரி... அப்படியே போய் பொண்ணைக் கொடுக்கிறீர்களா என்று கேட்டாலும் இன்னும் மொட்டைக் கடிதாசி விஷயம் அவர்களுக்கு உறுத்தலாய் தானே இருக்கும்... உன் அக்கா உறுதியாய் சொல்லிட்டாள் பிரகாஷ்... நான் போய் கேட்க மாட்டேன் என்று... எனக்கு உதறலா இருக்கும்மா... ஏற்கனவே என்னை பூமா வாங்கு வாங்குன்னு நல்லா வாங்கி யிருக்கா... திரும்பப் போய் இந்தப் பேச்சை எடுத்தால் அவ்வளவுதான்... என்னைக் கிழிச்சு தோரணமா கட்டிடு வான்னு நடுங்கறாடா... ஒண்ணு வேணும்னா செய்... நீயே 'டைரக்டா' அந்த பூமா... அதான்... பொண்ணோட சித்திகிட்டே பேசு... அவங்க கிட்ட மொட்டைக் கடுதாசி



போட்டது நான்தான் என்று ஒப்புக் கொண்டு விடு... அப்புறம் விஷயத்தை சொல்லிப் பார்... ஒரு வேளை ஒத்துக் கொள்ளலாம். பார்... நீ பண்ணின வேலைக்கு சூடு... சொரணை எல்லாம் விட்டு விட்டுப் போய் நிக்க வேண்டியிருக்கிறதை...'' மனத்தாங்கலாய் தாய் சொல்ல வும்...

''சாரிம்மா... நான் செய்தது தப்புதான். ஒத்துக் கொள் கிறேன்... அந்தத் தப்பை நானே சரி செய்து விடுகிறேன்... போதுமா...'' என்று பதில் சொன்னான்.

''உன் அக்கா கேட்பதையே நானும் கேட்கிறேன். உனக்கு அந்தப் பொண்ணே வேண்டுமா... வேறு பொண்ணு இல்லையா... உனக்கு பொண்ணைத் தர போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள் பிரகாஷ்... யோசிச்சு சொல்...''

''இல்லேம்மா... அக்கா அந்தப் பெண்ணின் போட் டோவைக் காட்டினாள்... எனக்குப் பிடித்திருந்தது... அக்காவும் அவளோட குணத்தைப் புகழ்ந்து பேசினாள்... அப்படிப்பட்டவள் நம் வீட்டுக்கு... முக்கியமா உனக்கு மருமகளா வந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத் தேன்... அவ்வளவுதான்... உன்னை மாதிரியே அவளும் ரொம்ப நல்லவளாம்மா...''

மறுபக்கம் 'அச்'சென்று தும்மும் ஓசை...

''ஏம்மா...'' என்று வினவினாய் மகன்.

''நீ வச்ச 'ஐஸில்' எனக்கு சளிப்பிடித்து விட்டதுப்பா. அதான் தும்மினேன்... அது சரி... நீ காதலிச்ச அந்த ப்ரியா வுக்கு என்ன ஆச்சு... அவ்வளவு பழகிவிட்டு வேண்டாம் என்றாயே... அதான் கேட்டேன்...''

''சொல்லவே கஷ்டமா இருக்கிறது... என்னை விட என்கிட்டே இருக்கும் பணத்து மேல் தான் அவளுக்கு ஆசைன்னு தெரிந்து கொண்டேன்... அதான் வேண்டாம் என்று ஒதுங்கி விட்டேன்ம்மா...''

''நல்லவேளை... கல்யாணத்திற்கு முன்னாலேயே உனக்குத் தெரிஞ்சதே... அது போதும்... இந்தப் பெண் அப்படியில்லையென்று தெரிகிறது... இந்தக் காலத்தில் நல்ல குணவதியாய் அமைவது சிரமம் பிரகாஷ்... அதான் பிகுமானம் இல்லாமல் நீயே போய் பேசு. உன் அதிர்ஷ்டம் பார்க்கலாம். சரி... அப்பப்போ எனக்கு போன் பண்ணு... முக்கியமா... அந்தப் பொண்ணோட சித்தியிடம், பேசிவிட்டு உடனே எனக்குத் தெரிவிக்கணும்.. என்ன..''

அம்மா பேசி முடித்த பின்னர்... வேலையைத் தொடர முடியாமல் ஏதேதோ யோசனைகள்.

நந்திதாவின் சித்தியைப் பார்த்துப் பேச வேண்டுமாமே... அவர்கள் முகம் கொடுத்துப் பேசுவார்களா... நான் சொல்வதை ஏற்பார்களா.. ஒருவேளை... நம்ப மறுத்தால்... அப்புறம்...

அதன் விளைவை எண்ணிப் பயந்தான்...

நந்திதாவை விடுத்து வேறொரு பெண்ணை மணக்க மனம் விழையவில்லை... நந்திதாவே வேண்டும் என்று அடம் பிடித்தது பாழும் மனம்.

ஊகூம்... விடமாட்டேன்... நந்திதா தான் என் வாழ்க்கைத் துணைவி...

அது நடக்கும்... நடந்தே தீரும்...

நம்பிக்கை ஒளி நெஞ்சில் பளிச்சிட... சந்தோஷத்துடன் வேலையில் ஆழ்ந்தான் சத்யா.



# 15



கணவர் எப்போது வருவார் என்று தவித்துக் கொண்டிருந்தாள் வரலட்சுமி...

அவரிடம் விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்ற பரபரப்பு அவளிடம் தெரிந்தது.

தங்கையிடமிருந்து போன் வந்ததிலிருந்து அவளுக்கு நிலை கொள்ளவில்லை... அவள் சொன்ன விஷயம் அப்படி...

''நாம் நினைத்த மாதிரி அந்தப் பையன் தப்பானவனா படவில்லைக்கா... அவனே நேரில் வந்து மன்னிப்புக் கேட்டான் தெரியுமா... திடீர் என்று அக்காவும் அம்மாவும் 'கல்யாணம்' என்றதும் எனக்குப் பிடிக்காமல் போனது... இன்னும் ஒரு வருடம் போகட்டும் என்று சொன்னதற்கு... அவர்கள் பிடிவாதமாய் உடனே செய்ய வேண்டும்... நல்ல இடம் வந்திருக்கிறது என்கிறார்கள்... அந்தக் கோபத்தில் தான் மொட்டைக் கடிதாசி எழுதினேன்... அப்படியாவது ஏற்பாடு நிற்கட்டுமே என்று தான்னு சொன்னான்... பார்க்க ரொம்ப லட்சணமா... நம்ம நந்து குட்டிக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கான்க்கா... நல்ல உயரம்... கம்பீரம்... ராஜகுமாரன் மாதிரி அழகனா இருக்கான்... நீ பார்த்தா உடனே இவனே என் மாப்பிள்ளைன்னு முடிவு செய்துடுவேக்கா...'' என்று தங்கை சொன்னதும்... உள்ளம் பூரித்துப் போனாலும்...

உள்ளுக்குள் இருந்த நெருடலுக்கு பதில் வேண்டியிருந்தது...

"சரி... பூமா... கல்யாணம் வேண்டாம் என்று அவன் மொட்டைக் கடிதாசி எழுதியதாகவே வைத்துக் கொள்வோம்... இப்ப எப்படி திடீர்னு மனம் மாறி வந்தானாம்..." என்று கேட்டாள் தமக்கை.

"அதையும் கேட்டேன்... அதற்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா... அவன் அக்கா அவனுக்கு நம் நந்துவின் போட்டோவைக் காட்டி... இந்த மாதிரி பெண்ணை மணக்க அதிர்ஷ்டம் வேண்டும்... அந்த அதிர்ஷ்டம் உனக்கில்லைடா..." என்றாளாம்... போட்டோவில் இருந்த நந்துவைப் பார்த்ததும்... உடனே பிடித்து விட்டதாம்... அதான்... மனம் மாறி... உங்களிடமே கேட்க வந்தேன்... என் மீது நான் பூசிக் கொண்ட மசியை நானே துடைத்தெறிவதுதானே முறை... அதான்... நானே வந்தேன்" என்றான்... எனக்கென்னவோ அவன் மீது நம்பிக்கை இருக்குக்கா... வேண்டும் என்றால் ஒண்ணு பண்ணலாம் அவன் விலாசம் வாங்கித் தருகிறேன்... மாமாவைப் போய் பார்த்து பேசச் சொல்... என் மனசுக்கு... அவன் தான் நம் நந்துவுக்கு பொருத்தமானவன் என்று தோன்றுகிறது... நல்ல படிப்பு... அவனுக்கு இருக்கும் சொத்துக்களைப் பற்றி சொல்லவே வேண்டாம்... அது தவிர நல்ல வேலையில் இருக்கிறான்.. இன்னும் என்ன வேண்டும் அக்கா..." என்று தங்கை விளக்கியதும்தான் நிம்மதி வந்தது...

இதைத்தான் கணவனிடம் கொட்டிவிட வேண்டும் என்ற துடிப்புடன் ஆவலாய் காத்திருந்தாள். கேசவன் வந்ததும் ஓடிப்போய் காபியை கலந்து வந்தவள்...



"என்னங்க... உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்" என்று ஆரம்பித்தாள்.

"எனக்கு அப்பவே தெரியும்... உன் மண்டைக்குள் ஏதோ குடைகிறது... அதை கக்கி விட வேண்டும் என்று காத்திருக்கிறாய் என்பதை உன் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன் வரா... சொல்லு..." என்றார் பரிகாசத்துடன்.

"முதலில் காபியைக் குடித்துவிட்டு..."

"அதுவரைக்கும் உனக்குப் பொறுக்க முடியாது வரா... கொட்டிவிடு... அய்யோ காபியைக் கொட்டி விடாதே... நான் சொன்னது... உன் மனசில் இருப்பதை..." என்றார் கேலியுடன்.

அவரை பொய்க் கோபத்துடன் பார்த்துவிட்டு... தன் தங்கை சொன்னதையெல்லாம் அப்படியே ஒப்புவித்தாள்...

கேசவன் காபியை உறிஞ்சியவாறு யோசித்தார்.

"என்னங்க.. எதுவும் சொல்லாம இருக்கீங்க..." என்று வரலட்சுமி கேட்டதும்...

"வரா... உடனே அவசரப்படக் கூடாது. அந்தப் பிள்ளை செய்தது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதம்மா... முதலில் கல்யாணம் வேண்டாம் என்றான்... ஓ.கே. அவன் சொன்ன காரணம்... கல்யாணத்தைத் தள்ளிப் போடும் எண்ணத்தில் என்று வைத்துக் கொண்டாலும்... அதற்கு மொட்டைக் கடிதாசி எதுக்கு... சரி... அது தவிர வேறு வழியில்லை என்றே இருந்தாலும்... இப்போ... மனம் மாறி வந்திருக்கிறான் என்றால்... யோசிக்க வேண்டிய விஷயம் வரா... உன் தங்கையின் கண்ணோட்டத்தில் அவன் நல்லவனாக இருக்கலாம்...

பெண்ணைப் பெற்றவர்கள் நாம்... நாமும் அவனைச் சந்தித்து... அவன் எப்படி... நம்பலாமா... கூடாதா என்று ஆராய வேண்டும்...'' என்றார் நிதானமாக... தெளிவாகவே...

வரலட்சுமிக்குள் தளும்பி இருந்த உற்சாகம் வடிந்து போனது போல் இருந்தது...

''என்ன சொல்றீங்க... இந்தப் பையன் நம்பிக்கையானவன் இல்லை என்கிறீங்களா...'' என்றாள் நிராசையுடன்.

''நான் அப்படிச் சொல்லவில்லை... அவசர முடிவு எடுக்க வேண்டாம் என்கிறேன்... முதலில் அந்தப் பையனைப் போய் பார்ப்போம்... அப்புறம் இது பத்தி யோசிப்போம் என்ன...'' என்றார் அவர் முடிவாக.

''அதையும் நம் பூமா சொன்னா... அந்தப் பையன் இங்கே... சென்னையில் தான் வேலை செய்கிறானாம்... 'அட்ரஸ்'ஸை வாங்கித் தருகிறேன். வேண்டும் என்றால் போய் பார்த்து... பேசச் சொன்னாள்.''

''சரி... முதலில் உன் தங்கைக்கு போன் பண்ணி அந்தப் பையனின் விலாசம் வாங்கு... போய் பார்த்து விட்டு வருகிறேன்... அதற்கப்புறம் யோசிப்போம்... என்ன.. அதுவரைக்கும் நந்திதாவிடம் மூச்சு விட வேண்டாம் என்ன... அமைதியா இருக்கிற அவள் மனசை குழப்பி விடக் கூடாது பார்... அதான்...''

கணவன் சொன்னதற்கு தலையாட்டினாலும்... உள்ளுக்குள் ஏனோ மனம் அடித்துக் கொண்டது... 'தெய்வமே... இந்தப் பையன் நல்லவனா... நம்பிக்கையானவனா இருந்து... அவரும் மனசு ஒப்பி... நந்திதாவும் அவன் மீது ஆசைப்பட்டு... அவனே இந்த வீட்டிற்கு



மாப்பிள்ளையா வரணும். கருணைக் காட்டுப்பா...' என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்.

கேசவனும் சத்யாவின் வீட்டைத் தேடிப் பிடித்து அவனைச் சந்திக்கச் சென்றார்...

தான் வரும் விஷயத்தை முன்னறிவிப்பாகச் சொல்லாமல் திடீர் என்று போய் பார்க்கும் உத்தேசம் தான்... அப்போது தான் எந்த மாதிரி என்று தெரிந்து கொள்ள முடியும் என்ற எண்ணம்...

அவர் சென்றது ஞாயிற்றுக்கிழமை... காலை ஒன்பது மணிக்கு...

சோம்பேறியாக இருந்தால் தூங்கிக் கொண்டிருப்பான்.

தவிர... குடிப் பழக்கம்... சிகரெட் பழக்கம் இருந்தாலும் தெரிந்து விடும்.

மது பாட்டில்கள்... சோடா புட்டிகள்... சிகரெட் துண்டுகள். இவைகள் தானே சான்றுகள்.

ஃப்ளாட் என்பதால் செக்யூரிட்டியிடம் பெயர்... விலாசம்... வந்த நோக்கம்.. நேரம் இவையெல்லாம் எழுதிக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றார்.

மூன்றாவது தளத்தில் இருந்த அவனது ஃபிளாட்டை அடைந்து கதவைத் தட்டியதும்... சத்யா கதவைத் திறந்தான் பரவாயில்லை... பையன் 'ஜம்'மென்று இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டார்.

அவரை வியப்புடன் பார்த்துவிட்டு 'என்னைத் தேடி வந்தீர்களா' என்று கேட்டான் அவன். அவரை முன்னே பின்னே பார்த்ததில்லையே.. யார் இவர் என்று கொஞ்சம் குழப்பமாய்.

''நான் நந்திதாவின் தந்தை. பெயர் கேசவன்'' என்றதும் அவனது முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. கதவை நன்றாகத் திறந்து வைத்து ''வாங்க சார். உள்ளே வாங்க...'' என்று இன்முகத்துடன் வரவேற்றான்.

வீட்டினுள் ஏ.ஸி.யின் குளுகுளுப்பு. இதமாக இருந்தது.

''உட்காருங்கள் சார்... ஜூஸ் சாப்பிடுகிறீர்களா.. சாரி... காபி... டீ போட எனக்கு வரவே வராது'' என்றான் அவன்.

''பரவாயில்லை. ஜூஸ் கொடுங்கள்... போதும்'' என்றார் கேசவன்.

அவன் எடுத்து வரச் சென்றதும்... வீட்டை கண்களால் அளைந்தார்... அழகாய்... கச்சிதமாய் இருந்தது.

வீடு சுத்தமாய் இருந்தது... தரை... தூசியின்றி 'பளிச்'சென்று இருந்தது... அவர் சந்தேகப்பட்டது போல் மது பாட்டில்களோ... சிகரெட் துண்டுகளோ கண்களில் படவேயில்லை...

அவர் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து நேர் எதிரே படுக்கை அறை... படுக்கை விரிப்பு சுத்தமாய் விரிக்கப்பட்டு... கசங்கலின்றி இருந்தது... போர்வையும் அழகாய் மடித்து வைக்கப்பட்டிருந்தது. கட்டிலின் மேல் எந்தத் துணிகளும் இல்லை... ஆக... ஒழுங்கு முறையை கடைப்பிடிப்பவன் தான்... சீக்கிரமே எழுந்து விட்டிருக்க வேண்டும்...

அந்தத் தருணத்தில் கண்ணாடி டம்ளரில் ஜூஸுடன் வந்தான் அவன்... நிமிர்ந்து அவனை சரியாக கவனித்தார் கேசவன்...

படித்த களையும்... பணக்கார களையும் அவனது [illegible]ச்சில் அதிகமாகவே தெரிந்தது.



அதிக சதை போடாமல்... கச்சிதமான உடல் வாகுடன் இருந்தான்... டீ ஷர்ட் அவனுடைய முறுக்கேறிய தேகத்திற்கு வசீகரமாகவே இருந்தது. உடற்பயிற்சி செய்வானோ...

மொத்தத்தில் ஆணழகன்தான் என்பதை அவரது உள்ளம் ஒப்புக் கொண்டது.

சரி... அழகு மட்டும் போதாதே... நல்ல குணங்கள் இருக்க வேண்டுமே... பார்க்கலாம்...

விருந்தோம்பல் நன்றாக இருக்கிறது.

''எடுத்துக் கொள்ளுங்கள் சார்'' என்று சொன்னான் அவன்.

''நான் வந்து உங்கள் தூக்கத்தைக் கெடுக்கவில்லையே'' என்று கேட்டவாறு டம்ளரை வாங்கிக் கொண்டார்.

''நோ.. நோ... நோ... அப்படியேதும் இல்லை... நான் அதிகாலையில் எழுந்து 'ஜாகிங்' போவது வழக்கம். வந்ததும் யோகாவும் பண்ணுவேன்... 'ஜிம்'முக்கு போக நேரம் ஏது... அதுதான் வீட்டிலேயே எல்லாம் முடித்துக் கொள்வது... 'யோகா'வில் சூரிய நமஸ்காரம் நல்ல உடற்பயிற்சி என்பதால் அதை பண்ணுவது வழக்கம்.''

தான் நினைத்தது சரியே... யோகா பண்ணினாலே மனம் கட்டுப்படும்... சிந்தனை தெளிவாக இருக்கும்... மனமும் கண்டபடி அலையாது... என்று நினைத்து 'டிக்' போட்டுக் கொண்டார்...

கொஞ்சம் கொஞ்சமாய் அவன் மீது மதிப்பு கூடிக் கொண்டே வந்தது.

''ஆமாம்... தம்பி.. இந்த வீட்டில் நீ மட்டும் தான் இருக்கிறாயா... சாரிப்பா... கொஞ்சம் உரிமையுடன் ஒருமையா அழைத்து விட்டேன்...'' என்றார் கேசவன்.

''இருக்கட்டும் சார்... நீங்க வயதில் பெரியவர்.. உங்கள் பிள்ளை மாதிரி நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்னை ஒருமையில் அழைப்பதில் தப்பே இல்லை... ஆங்... என்ன கேட்டீர்கள் சார். எங்களுக்கு சொந்த வீடு.. நிலம் தோப்பு எல்லாமே திருச்சியில் இருக்கிறது... அம்மாவுக்கு நான் வேலை பார்ப்பதில் இஷ்டமில்லை... வேலையை விட்டு விட்டு... வந்து சொத்தை... அதாவது நிலம்... தோப்பு குத்தகை விஷயங் களையெல்லாம் நிர்வாகம் செய் என்கிறார்கள்... நான் தான்... என்னதான் சொத்து இருந்தாலும்... உழைக்க வேண்டும். நமக்கு என்று வேலை இருந்தால் தான் கௌரவம் என்று இங்கே வேலையில் சேர்ந்து விட் டேன்... அங்கே இருந்தால் சோம்பேறியாகி விடுவேன்... தாத்தா சம்பாதித்து வைத்த சொத்தில் வாழ்வது பெருமையில்லை என்று சொல்லி விட்டேன்...'' என்று சொல்லிவிட்டுப் புன்னகைத்தான்... அவனது சிரிப்பு அவனது முக வசீகரத்தை கூட்டியதைக் கண்டு மனசுக் குள் 'நந்திதாவும் இவனும் பொருத்தமான ஜோடியாக இருப்பார்கள்' என்று நினைத்துப் பெருமைப்பட்டார்.

அப்போதுதான் புரிந்தது... தன் மனம் அவனை மாப்பிள்ளையாக ஒப்புக் கொண்டு விட்டது என்று.

அவனது நிதான பேச்சு... அமைதி... உழைக்க வேண்டும் என்ற விருப்பம்... சொத்தை நம்பி இருக்கக் கூடாது என்ற தன்மானம்... பேச்சில் வினயம் எல்லாமே அவரை ஈர்த்தன என்றுதான் சொல்ல வேண்டும்.



ஆனால் ஒரு விஷயம் மட்டும்... ஒரே ஒரு விஷயம் மட்டுமே உறுத்தலாய் இருந்தது.

அந்த மொட்டைக் கடிதாசி விஷயம் தான்... அதை யும் மனசுக்குள் வைத்துக் கொள்ளாமல் கேட்டு விட் டால் அந்த உறுத்தல் மறையும். அதைக் கேட்டும் விட்டார்.

''தம்பி... நான் பெண்ணைப் பெற்றவன்... எதிலும் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது என்று நினைப்பவன். அதனால் ஒன்று கேட்கிறேன்... எங்களுக்கு வந்த மொட்டைக் கடிதாசியை நாங்கள் நம்பவில்லை என்று சொன்னால் அது அபத்தமாகி விடும்... அது எங்களுக்கு அதிர்ச்சி தான்... அதை எழுதியது நீதான் என்று பிறகு எங்களுக்குத் தெரிய வந்தது... திருமணம் இப்போது வேண்டாம் என்ற எண்ணத்தில் அதை எழுதினாயாம்... வேண்டாம்... ஏற்பாட்டை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த உனக்கு எதனால் வந்தது இந்த திடீர் மாற்றம்... அதை நான் தெரிந்து கொள்ளலாமா.''

அந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. அதனால் தடுமாறிப் போனான். இவரிடம் பொய் சொல்வதா... உண்மையைச் சொன்னால் தப்பாக நினைக்க மாட்டாரா... உள்ளத்தில் போராட்டம்...

''ஏன் தம்பி... சொல்லப் பிடிக்கவில்லைன்னா வேண்டாம்'' என்றார் கேசவன்.

''அப்படி இல்லை... உங்களிடம் உண்மையை மறைக்கப் பிடிக்கவில்லை சார்... சொல்லிவிடலாம் என்று தோன்றியது... அதைக் கேட்டு விட்டு என்னைப் பற்றித் தவறாக நினைக்கக் கூடாது என்ற தயக்கம் தான்...''

''நிச்சயம் மாட்டேன்... உண்மையை மறைக்காமல் சொல்ல நினைக்கிறே பார்... அதை மெச்ச வேண்டும்... நீ தைரியமா சொல்லு தம்பி...''

''சார்... நான் முதலில் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரரின் மூத்த பெண் பெயர் ப்ரியா...

என்னிடம் சகஜமாகப் பழகுவாள்... எனக்கும் அவளைப் பிடித்திருந்தது... வசதியில்லாத குடும்பம்... ஆகையால் எளிமையாக... அதிக ஆசையில்லாமல் இருப்பாள் என்ற நம்பிக்கையில் அவளை மணக்க விரும்பினேன். அந்த சமயத்தில் தான் என் அக்கா மூலமாய் உங்கள் மகள் பற்றிய விவரம் வந்தது... ப்ரியாவைப் பற்றி தெரிந்திருந்ததால்... முன் பின் பார்த்திராத பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள கஷ்டமாக இருந்தது. ப்ரியாவைப் பற்றி அம்மாவிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்த போது தான் இந்தக் கல்யாண ஏற்பாடு வந்தது... அதை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அசட்டுத்தனமான காரியத்தைச் செய்தது ப்ரியாதான்...

ஆனால்...''

''சொல்லுப்பா... அப்புறம் என்ன ஆச்சு... ஏன் அந்தப் பெண்ணை வேண்டாம் என்றாய்...''

''அந்தப் பெண்ணின் சுயரூபத்தை அறிந்ததும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது...'' என்றவன் அலுவலகத்திலிருந்து தலைவலி என்று சீக்கிரம் வந்த அன்று நடந்த சம்பவத்தை எடுத்துரைத்தான்...

''ஒரு பணப்பிசாசை மணக்க எனக்கு விருப்பமில்லை சார்... நிச்சயம் அவள் எனக்கு ஒரு நல்ல மனைவியாகவோ... என் தந்தை தாய்க்கு நல்ல மருமகளாகவோ



இருக்க மாட்டாள் என்று தெரிந்து விட்டது... அப்படியே ஒதுங்கி விட்டேன்...''

''நல்ல காரியம் செய்தே தம்பி... கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டம்... அதான் கொஞ்சம் ஜாக்கிரதையா வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கணும் என்பார்கள்... தவறினால்... வாழ்க்கையே போச்சே...''

''உண்மைதான் சார்... அதனால் தான்... என் அக்கா தேர்ந்தெடுத்த பெண்ணை... உங்கள் மகளை மணந்தால் வாழ்க்கை ஆனந்தமாய் இருக்கும் என்று நினைத்து... பூமா ஆன்ட்டியிடம் நேரில் சென்று பேசினேன்... ஆனால் அவர்களிடம் இந்த உண்மையைச் சொல்லும் துணிவு இல்லை... அதைச் சொல்லாமல் மறைத்து விட்டேன்... ஆனால்... ஏனோ உங்களிடம் அதை மறைக்க மனமின்றி சொல்லிவிட்டேன்... இப்போது தான் மனப்பாரம் இறங்கியது போல இருக்கிறது...''

''ரொம்ப சந்தோஷம் தம்பி... ஆங்... உங்க பெயரைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறேனே... அதைச் சொல்லணும்...''

''பிரகாஷ்... வீட்டில் அனைவரும் அப்படித்தான் அழைப்பார்கள்... நீங்களும் என்னை அப்படியே அழைக்கலாம் சார்...''

''சரிப்பா... இனி இந்த சார்... மோர் எல்லாம் வேண்டாமே... நானும் வாய் நிறைய மாப்பிள்ளை என்று அழைக்கிறேன்... என்னை நீ மாமா என்றே கூப்பிடலாம்...'' கேசவன் அவ்வாறு சொன்னதும் அவன் வியப்புடன் பார்த்தான்.

''என்னப்பா அப்படிப் பார்க்கிறே... நீ தான் என் மாப்பிள்ளை என்று நான் முடிவு பண்ணியாச்சு. என் பொண்ணு அதிர்ஷ்டக்காரி... இப்படியொரு சூப்பர் மாப்பிள்ளை கிடைக்க கொடுத்து வைத்திருக்கிறாளாக்கும்...''

அவருடைய பாராட்டில் குளிர்ந்து போனான் சத்யா.

''மாமா... ஒரு சின்ன வேண்டுகோள்... அந்த ப்ரியா விஷயத்தை உங்கள் பெண்ணிடம்...''

''குப்பை... அதை ஏன் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் மாப்பிள்ளை... அதை ஒதுக்கித் தள்ளுங்க... நடந்ததெல்லாம் கெட்ட கனவு என்று மறந்துடுங்க... இதை நந்திதாவிடம் கூட சொல்லணும்னு அவசியம் இல்லை... சரி நான் புறப்படுகிறேன்... வீட்டில் கலந்து பேசிவிட்டு ஒரு நல்ல நாள் பார்த்துச் சொல்கிறேன்... சம்பிரதாயமா நீங்க பெண் பார்க்க வரலாம்...''

''அந்த ஃபார்மாலிட்டிஸ் எல்லாம் எதுக்கு மாமா... எனக்கு உங்க பெண்ணைப் பிடித்து விட்டது... ஆனால் உங்க பெண்ணிற்கு என்னை...''

''அப்படியெல்லாம் இல்லை... மாப்பிள்ளை... என் பொண்ணு ரொம்ப தங்கமானவள்... நாங்க தேர்ந்தெடுக்கும் மாப்பிள்ளையை கட்டிக்க சம்மதிப்பாள்... அது நிச்சயம்... நம்ம இரண்டு குடும்பமும் சந்தித்தால் நல்லா இருக்குமே என்று நினைத்துச் சொன்னேன்...''

''ஒன்று செய்யலாமே மாமா... பெண் பார்க்கும் படலத்தன்றே நிச்சயதார்த்தமும் வைத்துக் கொள்ளலாம் தானே... உங்களுக்கு மறுப்பேதும் இல்லையே...''

''உங்க அவசரம் எனக்குப் புரிந்தது மாப்பிள்ளை. அப்படியே செய்வோம்... அதுவும் நல்ல யோசனைதான்.



அப்போ வரட்டுமா...'' என்று கிளம்பிய எதிர்கால மாமனாரை கீழ் கேட் வரை சென்று வழியனுப்பி வைத்தான் வருங்கால மாப்பிள்ளை... எதையும் மறைக்காமல் சொல்லிவிட்ட நிம்மதி வந்தது. அதே சமயம்... ஒரு விஷயத்தை மறைத்து விட்டதை தவறாக நினைக்கவும் இல்லை. பயணத்தின்போது நந்திதாவை சந்தித்ததையோ குன்னூர் அருகே நந்திதாவுடன் கழித்ததையோ சொல்லவில்லை.

உங்கள் மகளுடன் பேசிப் பழகியிருக்கிறேன் என்று சொல்லாமல் மறைத்ததற்கு ஒரு காரணமும் இருந்தது.. அந்தக் காரணத்தை நினைக்கையில் அவனுக்கு உற்சாகமாகவும் இருந்தது...

எப்படியோ... தன் விருப்பம் நிறைவேறப் போகிறது என்ற குஷியில் துள்ளல் நடையுடன் வீட்டிற்குள் வந்தான்...

வரலட்சுமி... நெஞ்சு படபடக்க... இருப்புக் கொள்ளாமல் அங்கும் இங்குமாய் நடந்தாள்.

பையனைப் பார்க்கச் சென்றவர் என்ன செய்தியுடன் வருகிறாரோ...

நல்ல செய்தி என்றால் சந்தோஷம்... பையனை எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால்...

கடவுளே... அவர் வந்து நல்ல சமாச்சாரமாய் சொல்ல வேண்டும்...

மனம் வேண்டிக் கொள்ள... கண்கள் வாசல் பக்கமே கதியாய் கிடக்க... காத்துக் கிடந்தாள்...

கணவரைக் கண்டதுமே ஓடிப்போய் கேட்டாள்.

''என்னங்க... பையன் எப்படி... முதலில் அதைச் சொல்லுங்க.. எனக்கு துடிப்பா இருக்கு...'' மனைவியின் ஆர்வத்தைக் கண்டு சிரித்தார் கேசவன்.

''இரு... இரு... விளக்கமா சொல்கிறேன்...''

''எனக்கு உங்க விளக்கமெல்லாம் வேண்டாங்க...''

''ஒரே வார்த்தையில் சொல்லுங்க.. போதும்...''

''எப்படிச் சொல்லச் சொல்றே... டீலா நோ டீலாவில் வர்ற மாதிரி ஒரே வார்த்தையில்... ஓகோன்னு வாழ்க்கை என்றா...''

''விளையாட்டெல்லாம் வேண்டாம்... சட்டு புட்டுன்னு விஷயத்திற்கு வாங்க...''

''சரி... ஒரே வார்த்தையில் சொல்கிறேன்...

''சூப்பர்...''

''அப்பா... இப்பத்தான் எனக்கு நிம்மதி... ஆமாம் பையன் பார்க்க எப்படி இருக்கிறான்... பூமா சொன்னாள்... பார்க்க களையா இருப்பான் என்று... அது நிஜமா.''

''அதுதான் சொன்னேனே வரா... பார்க்க.. பழக... எல்லாவற்றிலும் படு சூப்பர் என்று... உடனே ஒரு நல்ல நாள் பார்க்க வேண்டும் வரா... பெண் பார்ப்பது எல்லாம் வேண்டாம்... நேரா நிச்சயதார்த்தம் பண்ணிடலாம் என்கிறான்... அத்தனை அவசரம் பாரேன்...''

''ஊகூம்... அது சரியில்லை... முதலில் மாப்பிள்ளையோட அப்பா அம்மாவிடம் பேசிவிட்டு முடிவு எடுக்க வேண்டும்... அதுதான் மரியாதை... அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்... அதற்கப்புறம் அதற்குத் தகுந்த மாதிரி ஏற்பாடு செய்வோம். சரி...



இப்போ எனக்கு எல்லாவற்றையும் விளக்கமா சொல்லுங்க... நீங்க என்ன பேசினீங்க... பையன் என்ன சொன்னான்னு எல்லாம் தெரியணும்.''

''முதல்ல குடிக்க 'ஜில்'லென்று ஏதாவது கொடும்மா. இந்த விஷயத்தில் என் மாப்பிள்ளையே தேவலை போல... வெயிலில் வந்திருக்கிறேன்னு கிளாஸ் நிறைய ஜூஸ் கொண்டு வந்து கொடுத்தானாக்கும்'' என்று பெருமையுடன் அவர் சொன்னதும்...

''போச்சுடா... இனி மாப்பிள்ளை புராணத்தைக் கேட்டுக் கேட்டு காது புளிக்கப் போகிறது...'' என்று கிண்டல் செய்து விட்டு அவருக்கு மோர் எடுத்துவரச் சென்றாள்...

இந்தக் கல்யாண ஏற்பாட்டினால் வீட்டின் சூழ்நிலையே மாறிப்போனது என்று தான் சொல்ல வேண்டும் வீட்டில் சுபகாரியம் நடக்கப் போகும் சந்தோஷம். எல்லோர் மனதிலும் குதூகலம்... மகிழ்ச்சி... ஆனால்... நந்திதாவை தவிர.

கல்யாண செய்தியைக் கேட்டதும் இறுகிப் போனாள் அவள்...

## 16



நந்திதாவிற்கு எதுவும் பிடிக்கவில்லை... மறுபடியும் கல்யாணப் பேச்சை எடுத்தது மட்டுமில்லை... அந்த ஆசாமியையே மாப்பிள்ளையாகப் பார்த்திருக்கிறார்களாம். அந்தச் செய்தி இடியாய்... அதுவும் சாதாரண

இடியா... அண்ட சராச்சாரத்தையே நடுநடுங்கச் செய்யுமே... அத்தகைய பேரிடியாய் இருந்தது அவளுக்கு... அம்மாவும் அப்பாவும் மாறி மாறி அவனைப் புகழ்ந்து தள்ளுவது வேறு படு எரிச்சலாக இருந்தது.

அதுவும் மாப்பிள்ளையாமே... சகிக்கவில்லை... அம்மாதான் கல்யாண விஷயத்தில் சாமியாடுவது அதிகம்... இந்த அப்பாவிற்கு என்ன ஆயிற்று... அம்மாவோடு சேர்ந்து கூத்தடிக்கிறாரே... எப்பவும் எனக்கு 'சப்போர்ட்' பண்ணிப் பேசுபவர்... இப்போது 'பல்டி' யடித்து அம்மாவுக்கு தாளம் போடுவதைப் பார்த்தால்... பற்களைக் கடித்தாள் அவள்.

இவர்கள் இப்படி என்றால்... ரஞ்சிதா அதற்கு மேல்... ''என்னக்கா... மாமாவுக்கு உன் மீது உயிராமே... உன் போட்டோவைப் பார்த்ததும் அப்படியே மயங்கி விட்டாராம்... பார்க்க மன்மதன் மாதிரி இருக்கிறாராம்... நீதான் முறுக்கிக் கொண்டு இருக்கிறாயாம்... பேசாமல் ஒத்துக் கொள்ளேன்க்கா. அப்பா அம்மாவுக்குப் பிடித்து விட்டது... அதுதானே வேண்டும்... உன் நிலையில் நானாக இருந்தால்.. உடனே தலையாட்டியிருப்பேன்... ம்ம்.. என்னை யாரும் கேட்க மாட்டேன்கிறார்கள்... கேட்டிருந்தால் நான் கல்யாணத்திற்கு ரெடின்னு சொல்லியிருப்பேன்...'' என்று பரிகாசம் என்ற பெயரில் இம்சிக்கிறாள்...

இந்த சித்தி... போனில் கிண்டல் பண்ணுவதும் ஆத்திரமாக வருகிறது.

''என்னடீ.. கல்யாணப் பொண்ணு எப்படி இருக்கே... உன் போட்டோவைப் பார்த்ததில் இருந்து பிரகாஷ் உன் நினைவிலேயே இருக்கிறானாம்... பார்த்துக்கோ...



கல்யாணத்துக்கப்புறம்... அய்யா போடச் சொன்னால் போட்டுக்கறேன்... போதும் வரை கன்னத்திலேன்னு உனக்கு தாசனாயிடுவான் போலிருக்கு... பலே ஆள்டீ நீ... புன்னகையாலே ஆளை சரிச்சிட்டே பார்...'' என்றெல்லாம் பரிகாசம் செய்வதைக் கேட்கவும் சகிக்கவில்லை.

எந்தச் சுவற்றில் போய் முட்டிக் கொள்வது என்று நினைத்தாள்...

அந்த பிரகாஷ்... அவன் யாரோ... அவனது முகத்தைக் கூட நான் பார்க்கவில்லை... அதற்குள் காதல்... ஊதல் என்று பிதற்றல் வேறு... கண்டதும் காதலாம்... சே...

பார்க்காமல் அவன் மீது வெறுப்பு வந்தது.

போகட்டும்... கல்யாணமே வேண்டாம் என்ற பிடிவாதத்தை தளர்த்திக் கொள்ள நான் தயார். வரப் போகும் கணவன் பரிச்சயமானவனாய்... குறைந்த பட்சம் கொஞ்சம் பழகியவனாய் இருந்தாலும் பரவாயில்லை... அச்சமோ... தயக்கமோ இருக்காது. சத்யா சமீபத்தில் அறிமுகம் ஆனவர்தானே. ஆனால் அவரிடம் பேசும் போது எத்தனையோ வருடங்களாய் பழகினது போல அவரிடம் சகஜமாய் வார்த்தையாட முடிகிறதே... எனக்கு அதுதான் வேண்டும்... ஆனால் இந்த பிரகாஷ் எப்படியோ... சத்யாவைப் போல இல்லாமல் சிடுமூஞ்சியாய்... கடுவன் பூனையாய் இருந்தால்... அய்யோ... வாழ்க்கையே நரகமாகி விடுமே... ஊகூம்... அப்படி இல்லையாமே... சிரித்த முகமாக இருக்கிறானாம்...

அப்பா சொல்வது போல... அவர் நல்லவராக... கலகலப்பாக பேசுபவராக இருக்கட்டும். சத்யாவைப் போல பெண்ணை... பெண்ணின் ஆசை... அபிலாசைகளை... அவளது இலட்சியக் கனவுகளைப் புரிந்து கொண்டு...

அதற்கு அனுசரணையாக... உறுதுணையாய் இருப்பான் என்று என்ன நிச்சயம்...

ஒருவருடன் பழகும்போதுதான் அவரது இயல்பு... குணாதிசயம் எல்லாம் தெரிய வரும்... அப்பா ஏற்பாடு செய்திருக்கும் அந்த ஆளைப் பார்க்கவே இல்லை. பேசிப் பார்க்கவும் இல்லை. அதற்குள் நிச்சயதார்த்த மாமே... கர்மம்...

அம்மாவிடம் கேட்டால்... நாங்களெல்லாம் பேசி... பழகிப் பார்த்தா கல்யாணம் பண்ணிக் கொண்டோம். நாங்கள் சந்தோஷமாக இல்லை என்கிறாள். எல்லாம் தலைவிதி... முகமறியா ஒருவனைக் கணவனாக நினைத்து... முகத்தைச் சுளித்தாள் நந்திதா... நினைப்பே கசக்கிறதே... அவனுடன் வாழப் போகும் வாழ்க்கை... அய்யோ...

'எனக்கு கல்யாணம் வேண்டவே வேண்டாம்' என்று கத்த வேண்டும் போல் இருந்தது.

ஆனால் கத்தினாலும் அதை காதில் போட்டுக் கொள்ள மாட்டார்கள் என்றும் தெரிந்தது.

தந்தையும் இப்போது அம்மாவின் கட்சி... அந்தப் பிரகாஷைப் பார்த்து விட்டு வந்ததிலிருந்து ஆள் மாறிப் போய் விட்டார்... அவனை மாதிரி மாப்பிள்ளை கிடைக்க மாட்டார்களாம்... மண்ணாங்கட்டி...

மனம் இரும்புக் குண்டாய் கனத்தது... யாரிடமாவது இறக்கி வைக்க வேண்டும் போல் இருந்தது. யாரிடம்...? எல்லோரும் எதிர்கட்சியில்... யாரிடம் போய் புலம்ப முடியும்... தலை சுற்றி வருவது போலக் காய்ந்தது...

அப்போதுதான் தோன்றியது... சத்யாவிடம் பேசினால்...



என் மனம் அமைதியிழந்து தவிக்கிறது சத்யா... என் குறிக்கோள்... என் எதிர்காலக் கனவு பற்றி அறிந்தவர் நீங்கள்... உங்களிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் உங்களைப் பார்க்க வேண்டுமே என்று சொன்னால்... வர மாட்டாரா... அவரிடம் மனதின் சுமையை இறக்கி வைத்து... என்ன செய்யலாம் என்று கேட்டு...

அடுத்த கணமே உள் மனம் சுருண்டு கொண்டது...

''இது உங்கள் பிரச்சனை நந்திதா... உங்கள் எதிர் காலத்தை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்... நானில்லை...'' என்று சொல்லிவிட்டால்... என்ன செய்வது... எது செய்வது என்று வழி தெரியாமல் தவித்தாள் அவள்.

நிச்சயதார்த்தத்திற்கு நாளும் குறித்து... அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்ததும் நெஞ்சுக்குள் 'பக் பக்' என்றது.

நெருப்பு வளையத்துக்குள் சிக்கிக் கொண்ட ஜந்துவைப் போல பரிதவிப்புடன் இருந்தாள்...

''என்னம்மா... உனக்கு பிரகாஷைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லையா... அவன் உன் மேல் எவ்வளவு ஆசை வைத்திருக்கிறான் தெரியுமா. அவனை வேண்டுமானால் வீட்டுக்கு அழைக்கட்டுமா. நந்தும்மா... அவனிடம் பேசிப்பார்... உனக்கும் அவன் மேல் நல்ல அபிப்ராயம் வரும்மா... இந்த மாதிரி பிடித்தம் இல்லாமல் விட்டேற்றியாய் நீ இருக்கிறதைப் பார்க்கிறப்போ எனக்கு வேதனையா இருக்கும்...'' அவள் அருகில் அமர்ந்து... கேசத்தைக் கோதியவாறு சொன்ன தந்தையை வருத்தத்துடன் பார்த்தாள்.

'ஏனோ அந்தப் பிரகாஷைப் பிடிக்கவில்லைப்பா' என்று சொல்ல நாக்குத் துடித்தது. கட்டுப்படுத்திக் கொண்டாள். அப்படிச் சொல்லி தந்தைக்கு வேதனை தர விரும்பவில்லை. அவர் பார்த்த மாப்பிள்ளையாயிற்றே...

''உன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லைடா... உனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லையா.. இல்லை... கல்யாணத்திலேயே விருப்பமில்லையா... சொல்லுடா.. நீ காரணத்தைச் சொன்னால் பரவாயில்லை. எதுவும் சொல்லாமல் 'உம்'மென்று இருந்தால் எப்படி... இப்படி நீ இருக்கிறதைப் பார்த்தால் எனக்குக் கூட சந்தேகம் வருகிறது... யாரையாவது மனசில் விரும்புகிறாயா... அதற்காகத்தான் இந்த தயக்கமா... அப்படி ஏதேனும் இருந்தால் நிச்சயம் இதை நிறுத்தி விடுகிறேன்... காதலுக்கு நான் எதிரி இல்லேம்மா... தைரியமா சொல்லு...'' நிதானமாய்... இதமாய் தந்தை கேட்டதும் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள் அருமை மகள்.

இந்தத் திருமணத்தை நிறுத்த ஒரே வழி... நான் யாரையோ காதலிக்கிறேன் என்று சொல்வதுதான். ஏதோ ஒரு குகையிருட்டில்... மூச்சு முட்டிக் கொண்டிருக்கும்போது... பாறை இடுக்கு வழியே வெளிச்சம் வந்தால் எப்படி இருக்குமோ... அது போல துள்ளியது மனம்... உடனே அதை மானசீகமாய் குட்டினாள்...

யாரையோ, காதலிக்கிறேன் சரி... அந்த 'யாரையோ' என்று யாரைச் சொல்வது... அப்படிச் சொன்னதும்... பார்க்க வேண்டும் என்றால்...

'அவரை எங்கே போய் தேடுவது... சினிமாவில் கதைகளில் வருவது போல வாடகைக் காதலனைத் தேடிப் போக வேண்டும் போல...' மனக்கசப்புடன் எண்ணினாள் அவள்.



''என்னம்மா... இன்னும் என்ன தயக்கம்... அப்பாதான் சொல்கிறேனே... உனக்குப் பிடித்தவனையே மணம் செய்து வைக்கிறேன்னு... இன்னும் என்னம்மா.. தைரியமா என்னிடம் சொல்லுடா...'' என்று ஊக்குவித்தார் பெற்றவர்...

நந்திதா... இதுதான் சரியான சமயம்... கல்யாணத்தை நிறுத்த ஒரே வழி... காதல் என்று சொல்லிவிடு.. இந்த கல்யாண கலாட்டாவிற்கு ஒரு முற்றுப்புள்ளி விழுந்து விடும்... ம்ம்... சீக்கிரம். உள் மனம் அவளை உந்தித் தள்ளியது.

''வந்து... டாட்... நானே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன்... அதற்குள் நீங்கள் போய் பேசி நிச்சயம் செய்து வந்து விட்டீர்கள்... அதான் மெல்லவும் முடியாமல்... துப்பவும் முடியாமல் தொண்டையில் சிக்கிய முள் மாதிரி தவித்துக் கொண்டு இருக்கிறேன் டாட்... என் மனசுக்குள்ளும் ஒருத்தர் இருக்கிறார்... அவர் மிகவும் நல்லவர்... அவர் எனக்குக் கணவராய் வந்தால் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும் என்று நம்புகிறேன்... டாட்...''

'அப்பாடா... ஒரு வழியாய் சொல்லியாகி விட்டது. இனியென்ன... நிச்சயதார்த்தம் இனி நின்ற மாதிரி தான்...' உள்ளம் கும்மாளம் போட்டது.

''சரிடா... இப்போ இதைச் சொல்கிறாயே... இதை முதலில் சொல்லியிருக்கக் கூடாதா... இந்த ஏற்பாடு எல்லாமே வீண் தானே... போகட்டும்... யாரம்மா அந்தப் பையன்... பெயர் என்ன...''

அவள் யோசிக்கு முன்... வாயிலிருந்து 'சட்'டென்று
வந்த பெயர் 'சத்யா...' சொல்லியதும் திடுக்கிட்டாள்...
ஏன் அந்தப் பெயரைச் சொன்னோம்...

ரமேஷ்... உமேஷ்... என்று ஏதோ ஒரு பெயரைச்
சொல்லி சமாளித்திருக்கலாம்...

ஆனால் முன் பின் யோசிக்காமல் அந்தப் பெயரைச்
சொல்லி விட்டேனே... இப்போது எப்படிப் பின் வாங்க
முடியும்... எதையாவது சொல்லிப் பூசி மொழுக வேண்
டியது தான்...

''அவனைப் பற்றிய விவரம் சொல்லும்மா... உனக்கு
ஏற்றவனா... இந்தக் குடும்பத்திற்கு மாப்பிள்ளையாக
வரத் தகுதியுடையவனா... என்ன படித்திருக்கிறான்
எல்லாம் சொன்னால் தானே முடியும்...''

''வந்து... அவர் நல்லாப் படித்திருக்கிறார்... நல்ல
வேலையிலும் இருக்கிறார்...''

''சரி... குடும்பப் பின்னணி... அதைச் சொல்லுடா...''
அங்கேதான் உதைத்தது.

அவனைப் பற்றிய விவரங்கள் அவளுக்கு எங்கே
தெரியும்... உரையாடும்போது... தன்னைப் பற்றி... தன்
பயணத்தின் காரணத்தைப் பற்றி... தன் எண்ணங்களைப்
பற்றிப் பேசினாளே தவிர.. அவனைப் பற்றிய விஷயங்
களைக் கேட்கவும் இல்லை... அவனும் வாய் விட
வில்லை... இந்த லட்சணத்தில் அவனது குடும்பத்தைப்
பற்றி எதைச் சொல்வது... தலையைச் சொறிந்தாள்.

''என்னடா... யோசிக்கிறே... எதுவும் தெரியாமலா
அவனைக் காதலித்தே... கெட்டது போ...''

''இல்லேப்பா... அவர் சொன்னார்... நான் தான் கேட்
டுக் கொள்ளவில்லை... அவருக்கு அப்பா அம்மா
இருக்கிறார்கள்...''



''இருந்தே ஆகணும்மா... அப்பா அம்மா இல்லாமல்
மனுஷன் பிறக்க முடியாதே... அவர்கள் எந்த ஊர்...
எப்படிப்பட்டவர்கள்... ஏழையா... பணக்காரர்களா...
குடும்பத்தில் எத்தனை பேர்... ஏதாவது தெரியுமா
நந்து...''

யோசித்தாலும் பிடிபடவில்லை... அது அவளுக்கே
வெட்கமாக இருந்தது... ஓட்டை வாய் மாதிரி எல்லா
வற்றையும் உளறி வைத்திருக்கிறேன்... குன்னூர் பய
ணத்திலும் சரி... அதற்கு பிறகும் சரி... அவன் தன்னைப்
பற்றி எதையும் மூச்சு விடவில்லையே... அவன் புத்தி
சாலியா... இல்லை... நான் மடச்சியா... அவள்
மௌனமாக இருப்பதைப் பார்த்து...

''ஆக... எதுவும் தெரிந்து கொள்ளாமலே அந்த சத்யா
மீது உனக்குக் காதல் என்கிறே... சாரிடா... உன் காதலை
வரவேற்கிறேன்... அதே சமயம் வெறும் காதலை
மட்டுமே மதித்து நான் பச்சைக் கொடி காட்டுவதாய்
இல்லை... எனக்கு என் மகளைக் கொடுக்கப் போகும்
இடம் நல்ல குடும்பமாய்... அவளைச் சந்தோஷமாய்
வைத்துக் கொள்ளும் உறவுகளாய் இருக்க வேண்டும்.
அது வரைக்கும்... அதாவது சத்யாவின் முழு விவரங்
களை நீ தெரிந்து கொண்டு வந்து சொல்லும் வரை நான்
காத்திருப்பேன்டா... எனக்கு திருப்தியானால் இந்த
நிச்சயதார்த்தம் 'கேன்ஸல்'... இல்லையோ... பிரகாஷ்
தான் இந்த வீட்டு மாப்பிள்ளை... அது மட்டும் உறுதி''
என்று அமைதியாக... அதே சமயம் உறுதியாகச் சொல்லி
விட்டு சென்றார் கேசவன்.

நந்திதா தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்
திருந்தாள்...

அவளுள் இருந்த குழப்பம் இன்னும் தீரவில்லை. 'சத்யா' என்று ஏன் சொன்னோம்... தனக்குத் தெரிந்த நண்பர்கள் வட்டத்தில் ஆண்கள் இல்லையா... ஏன் தொண்டு குழாமில் விக்னேஷ்... மாதவன்.. தன்னுடன் படித்த கல்யாண்... நிரஞ்சன்... சிரஞ்சீவி... இன்னும் ஏன்... என்னைப் பார்த்ததுமே முகம் மலர்ந்து... குழைவுடன் பேசும் டாக்டர்... ஆனந்த் இவர்களையெல்லாம் மறந்து விட்டு கொஞ்ச நாட்களுக்கு முன் தான் பரிச்சயம் ஆன சத்யாவின் பெயரைக் குறிப்பிட்டது ஏன் என்பது அவளுக்குப் புரியாத புதிர்தான்...

அந்த அளவில் என் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறானோ என்று வியப்பும் வந்தது...

அதனால் தான் மனதின் சுமையை இறக்கி வைக்க அவரை நாடியதோ உள்ளம்...

அதனால் தான் பிரகாஷை விரும்பாமல்... அவனை சத்யாவுடன் ஒப்பிடத் தோன்றியதோ...

அதனால் தான் தந்தை கேட்டவுடன் அவனது பெயரை உச்சரித்ததோ உதடுகள்...

வரப்போகும் கணவன் சத்யா மாதிரி இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தது கூட அதனால் தான் போலும்...

ஆனால் இதயம் விரும்பியது சத்யா மாதிரி அல்ல. சாட்சாத் சத்யாவேதான் என்று இப்போதல்லவா தெரிகிறது... எப்போது வந்தது இந்த மாற்றம்.. அது அவளுக்கு பிரமிப்பாக இருந்தது... அதே சமயம் சொல்லத் தெரியாத ஒரு இன்ப உணர்வும் நெஞ்சுக் கூட்டுக்குள் பரவியதும் புது அனுபவமாய் உணர்ந்தாள். இதுதான் காதல் என்றால்... காதலும் சுகம் தான். அடக் கடவுளே... என் மனதை நான் அறியாமல் இத்தனை நாளும் இருந்திருக்கிறேன்...



இன்னொரு வேடிக்கை என்னவென்றால்... திருமணக் கூத்தை நிறுத்த பொய் சொல்ல நினைத்து... அதுவே மெய்யாகிப் போனது தான்... அது சொன்ன பின்பு தான் உணர்ந்ததுதான் விசித்திரம்... அவளுக்கு உரக்க சிரிக்க வேண்டும் போல இருந்தது...

உடனே அறிவு அவளை எச்சரித்தது.

'அசடு... இது சிரிக்கும் நேரமில்லை... சிந்திக்க வேண்டிய நேரம்... சத்யாவைப் பற்றி சரியாகத் தெரியவில்லையென்றால்... பிரகாஷ்தான் உனக்கு மாப்பிள்ளை... தெரிந்து கொள். இன்னொரு விஷயத்தையும் மறந்து விட்டாயே... சத்யாவின் பெயரைச் சொல்லி விட்டால் போதுமா... அவனும் உன்னை நேசிக்கிறானா என்பதை தெரிந்து கொள்ள வேண்டாமா. அப்படி ஏதும் இல்லையென்றால்... எல்லாம் அபத்தம் என்றாகி விடுமே... அதை யோசி... அப்படியிருந்தால்.., அப்பாவுக்கு என்ன சொல்வது... இந்தக் கட்டிலிருந்த மீள என்ன வழி...'

அவள் குழம்பித் தவித்த வேளையில் தான் அவளது 'செல்' கூவியது.

எடுத்துக் காதில் வைத்தவள்... முகம் மாறினாள்... 'அலோ நான் பிரகாஷ்!' என்றது குரல்...

## 17



"அலோ... நான் தான் பிரகாஷ் பேசுகிறேன்... நான் பேசுவது காதில் விழுகிறதா..." மறுபடியும் அவன் கேட்டதும் எரிச்சலுடன் சொன்னாள் அவள்.

''கேட்கிறது... சொல்லுங்கள்.''

''என்ன நந்திதா... உங்கப்பாவிடம் கெஞ்சிக் கேட்காத குறையாய் உன் 'செல்' நம்பரை வாங்கிப் பேசுகிறேன். உன் குரலில் ஆர்வமே இல்லையே... நமக்குக் கல்யாணம் நிச்சயமாகி... நிச்சயதார்த்தத்திற்கும் நாள் குறித்தாகி விட்டது... குஷியாக பேச வேண்டாமா டியர்... ஓ... புரிகிறது... நாம் இன்னும் சந்திக்கவே இல்லையே... அதில் வருத்தமா... இப்பவும் 'உம்' என்று சொல்லு... உன்னை ஓடி வந்து பார்க்கிறேன்... உன் விருப்பமே என் பாக்கியம்'' அவன் பேசப் பேச அவளுக்கு ஆத்திரம் பொங்கியது.

பற்களை நறநறவென்று கடித்தாள்.

''என்னம்மா... பேச்சே காணோம்... ஓ... வெட்கமா... அடடா... வெட்கத்தில் உன் முகம் சிவந்திருக்குமே... உன் கன்னங்கள் இரண்டும் ஆப்பிளாய் மாறி இருக்கமே... ஆமா... அந்த அதிசயத்தைப் பார்த்து மகிழ நான் அருகில் இல்லையே... அந்த சிவந்த கன்னத்தை நிமிண்டி... உன் முகம் ரோஜாவாய் மாறுவதை ரசிக்க முடியவில்லையே... டார்லிங்... உன்னை நான் சந்திக்க வில்லை என்றாலும்... உன்னை போட்டோவில் பார்த்த நாளிலிருந்து என் நெஞ்சில் தான் இருக்கிறாய்.. என்னுடன் எப்போதும் நீ இருக்கும்போது... இந்தப் பெண் பார்க்கும் சம்பிரதாயமெல்லாம் எதற்கு என்று நினைத்து தான் வேண்டாம்... நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறியுங்கள் என்று என் அருமை மாமனாருக்கு சொல்லி விட்டேன். அதில் உனக்கு மனக்குறை ஏதுமில்லையே நந்து...''



அவளுக்கு உடம்பெல்லாம் தீப்பற்றி எரிவது போல இருந்தது... கோபத்தில் இரத்தம் சூடானது போல இருந்தது.

யார் இவன்... பார்க்கவும் இல்லை... பழகவும் இல்லை. போட்டோவைப் பார்த்ததுடன் சரி... அதற்குள் இத்தனை சலுகை எடுத்துக் கொண்டு பிதற்றுகிறான்... பிதற்றலே தான்... 'டார்லிங்'காம்... 'டியராம்' நந்துவாமே... இவன் யார் என்னை அப்படி அழைக்க... அதுவும் அருமை மாமனாராம்... அட... கண்றாவியே...

சிவந்த கன்னத்தை நிமிண்டியாமே அதை நினைக் கக்கூட குமட்டி வருகிறது... இவனை எப்படி கணவனாய் ஒப்புக் கொள்வேன்... இப்பவே இப்படி வழிகிறான்... கல்யாணம் என்று ஆனால்... இவனது வழிசலையும்... பிதற்றலையும் எப்படித் தாங்குவது... எண்ணும்போதே நெஞ்சு சுருட்டி வைத்த பாயாய் சுருண்டு கொண்டது.

இந்த இளிச்சவாயன் வீட்டு மாப்பிள்ளை என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள் அம்மாவும் அப்பாவும்...

கணவன் என்றால் கம்பீரம்... மிடுக்கு.. கண்ணியம் இவை கள் தான் வேண்டும்... வழிதல்... நெளிதல் குழைதல்... எல்லாம் ஆண் மகனிடம் இருந்தால் அது அசிங்கம்...

நேரில் பார்த்திராத ஒரு பெண்ணிடம் இந்த அளவு வழி கிறானே... இவனெல்லாம் பெண்ணிடம் எப்படிப் பேசிப் பழகுவது என்பதை சத்யாவிடம் கற்று வர வேண்டும்.

அவர் எங்கே... இவன் எங்கே...

கடவுளே... எங்கேயிருந்து இவனை அனுப்பி வைத் தாய்... எனக்கென்று... இம்சிக்கிறானே...

''என்ன நந்து டியர்... பேச்சு மூச்சையே காணோம். என் மீது கோபமா... கண்ணே... ஓகே... உனக்கு என்னைப் பார்க்க வேண்டும். அதற்காகத் தானே இந்த கோபம் எல்லாம்... நாளையே சந்திப்போமா...''

''எனக்குக் கோபம் எதுவும் இல்லை... அதுவும் உங்களைப் பார்க்க முடியவில்லை என்பதற்காகவும் இல்லை...'' நறநறவென்று பற்களைக் கடித்து தாடையெல்லாம் வலித்தது...

''பின்னே... ஏன் எதுவும் பேச மாட்டேன்கிறாய்... காரணத்தைச் சொல்... டியர்...''

''வந்து... எனக்கு அலுப்பாக இருக்கிறது... தூக்கம் வருகிறது...'' என்றவள் வேண்டும் என்றே 'ஆவ்' என்று அவன் காது கேட்கும்படி கொட்டாவி விட்டாள்...

உன்னுடன் பேசவும் பிடிக்கவில்லை என்பதன் மறைமுகக் குறிப்பு... புரிந்து கொண்டால் புத்திசாலி...

''அடடா... உன்னோடு ஜாலியா பேசலாம் என்று பார்த்தால் முடியாமல் போனதே... ஓகே நந்து டியர். குட் நைட்.. ஸ்வீட் டிரீம்ஸ் டார்லிங்... அதில் நான் தான் இருக்க வேண்டும்... ஓகே...''

மை காட்! திஸ் இஸ் டூ மச்... இந்த மனுஷனின் அசட்டுப் பேச்சையே பொறுக்க முடியவில்லையே... இந்த அச்சு பிச்சுவைப் பொறுத்துக் கொள்வது எப்படி...

டாடி... பையன் ரொம்ப ஜோவியல் என்றாரே... அசட்டுப் பேச்சை போய்தான் 'ஜோவியல்' என்று எடுத்துக் கொண்டார் போலும்...

இனி இவனுடன் தான் வாழ்நாள் முழுவதும் என்றால்.. நினைப்பே நெஞ்சுக்குள் நடுக்கத்தை ஏற்படுத்



கிறதே. அவளுக்கு 'ஓ'வென்று அழவேண்டும் போல் இருந்தது.

அதே நேரத்தில் சத்யாவிற்கு உரக்கச் சிரிக்க வேண்டும் போல இருந்தது...

குரலை மாற்றிக் கொண்டு நந்திதாவுடன் பேசி... அவளைத் தத்தளிக்கச் செய்வது 'திரில்'லாக இருந்தது.

வேண்டும் என்றே தான் அப்படிப் பேசி... அவளது மனநிலையைத் தெரிந்து கொள்ளும் ஆவல் தான். தெரிந்தும் கொண்டாயிற்று...

அவனின் பேச்சு... அதாவது... பிரகாஷின் பேச்சு அவளுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை... அதான் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை...

அதற்குக் காரணம் ஒன்று இந்த திருமணத்தில் அவளுக்கு இஷ்டம் இல்லை... காரணம் இரண்டு... அவளுக்கு திருமணத்திலேயே இஷ்டமில்லை...

பிரகாஷை மணக்க விருப்பமில்லையென்றால்... அவளது மனதில் வேறே யாரோ என்று இருக்கலாம் தானே... அதையும் சீக்கிரத்தில் கண்டுபிடிக்க வேண்டும்... சீக்கிரம் என்ன... நாளையே முடியும்.

புன்னகையுடன் அந்த 'செல்'லில் இருந்த 'டொகோமோ' 'சிம்'மை அகற்றிவிட்டு... தன் வழக்கமான 'ஏர்டெல்' 'சிம்'மை போட்டுவிட்டு... மறுபடியும் நந்திதாவின் நம்பரை அழுத்தினான்... ரிங்போய்க் கொண்டிருந்தது.

ஒரு வேளை சொன்னது போலத் தூங்கி விட்டாளா... நிறுத்தலாமா என்று நினைத்தபோது... அவள் எடுத்துப் பேசினாள்.

''அலோ... சத்யா... உங்கள் நம்பரைப் பார்த்ததும் எனக்கு ஆச்சர்யம். இந்த நேரத்தில் நீங்கள் போன் பண்ணுகிறீர்கள் என்றால் ஏதோ விஷயம் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆம் ஐ கரெக்ட் சத்யா...'' குரலில் உற்சாகம் தெரிய அவள் பேசினாள்.

''ஹை... கண்டுபிடித்து விட்டீர்களே... உண்மையில் வெரி இம்பார்ட்டண்ட் மேட்டர்... அதுவும் சந்தோஷமான சமாச்சாரமாக்கும். உங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்று ஆசை... நாளை சந்திக்கலாமா நந்திதா... அந்த விஷயத்தை நேரில்தான் சொல்ல வேண்டும்.''

அதைக் கேட்டு அவளது உள்ளம் துள்ளியது. அவரைச் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அது போதும்... இந்த வாய்ப்பை நழுவ விடாமல்... அவரைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்... மேலும் அவர் மனதில் நான் இருக்கிறேனா என்பதைத் தெரிந்து கொள்ளலாமே...

ஒருவேளை அப்படியும் இருக்கலாமோ... அதற்காகத் தான் என்னை அழைப்பதும்... சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வதுமோ... அப்படி இருந்தால்... பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி தான்...

முதலில் அவர் காதலை வெளிப்படுத்தட்டும்... மறுகணமே தந்தையிடம் சொல்லி இந்த திருமணத்தை நிறுத்தச் சொல்லி விடுகிறேன்...

அப்பப்பா... பிரகாஷின் தொல்லை தாங்க முடியவில்லை. டியர்... டார்லிங். கண்ணே... மூக்கே என்று சொல்லிச் சொல்லி காதுகளைப் புளிக்க வைத்து விடுகிறான்.

அதே வார்த்தைகளை சத்யா சொன்னால்... காதுகளில் தேன் பாய்ந்தது போல இருக்குமே. பிரகாஷ்



சொல்வது ஈயத்தைக் காய்ச்சி செவி துவாரத்தினுள் ஊற்றியது போல அல்லவா இருக்கிறது.

''பரவாயில்லை நந்திதா... உங்களுக்கு வேறே முக்கிய வேலை இருந்தால் வரவேண்டாம்... ஏதோ உங்களைப் பார்த்துப் பேச வேண்டும் போலத் தோன்றியதால் அழைத்தேன்'' என்று அவன் சொன்னதும் பதைப்போடு சொன்னாள்.

''அப்படியொன்றும் இல்லை சத்யா... நாளை கண்டிப்பாக வருகிறேன். நானும் வெகு ஆவலாய் இருக்கிறேன். அந்த சமாச்சாரம் என்ன என்பதை அறிய... எங்கே சந்திக்கலாம் என்று சொல்லுங்கள் வந்து விடுகிறேன்... ஓகே...''

அவன் சொன்னதும் குதூகலத்துடன் ஒப்புக் கொண்டாள். அவனும் ''குட்நைட் நந்திதா... ஸ்வீட் ட்ரீம்ஸ் என்றால் ஏற்றுக் கொள்வீர்களா... ஏனென்றால் எனக்குத் தினமும் ஸ்வீட் ட்ரீம்ஸ்தான்... அதனால் உங்களுக்கும் 'விஷ்' பண்ணினேன்'' என்று அவன் சொல்ல...

நெஞ்சுக்குள் கிளுகிளுப்பு... ஸ்வீட் ட்ரீம்ஸாமே... அப்படியென்றால் காதல் கனவுகளா... காதல் நாயகன்... அவரா... அதைத்தான் உள்ளர்த்தமாய் குறிப்பிடுகிறாரோ...

அவருக்கும் தினமும் அப்படித்தானாமே... அதை ஏன் அவர் என்னிடம் சொல்ல வேண்டும்... கனவுக் கன்னி நீதான் என்று உணர்த்தவா... அப்படி இருந்து விட்டால்... என்னை விட அதிர்ஷ்டக்காரி வேறு யாரும் இருக்க முடியாது... ஆனந்தம் பொங்கியெழுந்தது போல நெஞ்சு விம்மியது.

அப்போது தான் 'சுர்'ரென்று உறைத்தது.

'ஸ்வீட் ட்ரீம்ஸ்' என்று சத்யா சொன்னபோது இயல்பாய் ஏற்றுக் கொண்ட மனம்... பிரகாஷ் சொன்னபோது முரண்டு பிடித்ததே. இதுதான் காதல் செய்யும் மாயமா...

எது எப்படியோ... நாளை அவரைச் சந்திக்கப் போகிறேன் என்று ஆனந்தக் களிப்பில் அவளுக்கு இறக்கை முளைத்து வானத்தில் பறப்பது போல இருந்தது... இரவெல்லாம் தூக்கமும் வரவில்லை. அவனைச் சந்திக்கும்போது... என்ன பேசவேண்டும். அவனது மனதையறிய என்ன செய்யலாம்... அவனது குடும்ப விவரங்களை எப்படி நாசுக்காய் கேட்கலாம். இதே யோசனை...

எப்போது விடியும் என்று தவமிருந்தவளைப் போல சீக்கிரம் எழுந்து... குளித்துவிட்டு ஒருவித பரபரப்புடன் புறப்பட்டாள்.

பத்து மணிக்கு சந்திப்பதாய் ஏற்பாடு... ஆனால் அவள் ஒன்பதரைக்கே ஆஜர்... அவனுக்கு முன்னாலேயே அங்கு சென்று காத்திருந்தாள்.

மனதில் ஆர்வம் கொந்தளித்தது. முக்கிய செய்தி என்றாரே... அதுவும் சந்தோஷமான விஷயமாமே... அது என்னவாவாக இருக்கும்...

எனக்கு உன் மீது காதல்... அதை என் பெற்றவர்களிடம் சொன்னேன்... அவர்களுக்கும் சம்மதமே. உன் சம்மதம் நாடி ஓடி வந்தேன்... என்னை மணக்க சம்மதமா நந்திதா என்று கேட்பாரோ.. அப்படிக் கேட்டால்... யெஸ்... யெஸ்... ஓ யெஸ் என்று நூறு தடவை சொல்லி என் மனதைப் புரிய வைப்பேன்...



எனக்கு பிரகாஷ் வேண்டாம் சத்யா... நீங்கள் தான்... நீங்களேதான் வேண்டும் என்று சொல்லி விட உள்ளம் துடித்தது.

காத்திருந்தவளின் கண்களில் அவனது கார் பட்டுவிட... இதயம் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்ட மாதிரி வேகம் எடுத்தது.

நெரிசல் இல்லாத இடம் என்பதால்... அந்த இடத்தைச் சொன்னான் அவன். 'பார்க்கிங்' தொந்திரவு இருக்காது என்று.

காரை விட்டு இறங்கியவன்... சாலையை கடக்க முயன்று... நிதானமாய் நடந்து வந்தான். அவளைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு தலை நிமிர்வுடன் நடந்து வந்தவனை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்...

அவள் அருகே நின்று கொண்டிருந்த இரு டீன் ஏஜ் பெண்களில் ஒருத்தி 'வாவ்..' வாட் எ ஹான்சம் கையார்... பிரின்ஸ் சார்மிங்! ம்ம்.. எந்த சின்ட்ரல்லா கொடுத்து வைத்திருக்கிறாளோ' என்று சொன்னதைக் கேட்டதும் பெருமிதம் உண்டானது அவளுக்கு... அது நானாக இருந்தால்... இருக்க வேண்டும்...

அவனை முதல் முறையாய் பார்ப்பது போல் கண்களால் அளந்தாள்.

நெடுநெடுவென்ற உயரமும்... ஆரோக்கியமான தேகமும்... பளிச்சென்ற தோற்றமும் அவனை மற்ற ஆண்களிடமிருந்து தனித்துக் காட்டின.

அடர்ந்த கேசமும்... அளவான மீசையும்... குறுகுறுவென்று பார்க்கும் கண்களும்... அழகான... அழுத்தமான உதடுகளும் அவனை ஆணழகனாக்கும் அம்சங்கள் என்பதை ஒப்புக் கொண்டது அவளது மனம்.

அதுவும்... அந்தக் கறுப்பு நிற ஜீன்ஸும்... சாம்பல் நிற டீ ஷர்ட்டும்... அவனது தோற்றப் பொலிவை இன்னும் எடுத்துக் காட்டியது என்றுதான் சொல்ல வேண்டும்...

இத்தனை நாட்களாய் உணராததை இப்போது உணர்ந்தது எதனால்... காதலைத் தெரிந்து கொண்ட பின்பு தான் எல்லாம் கண்ணில் படுகிறதோ. இருந்தாலும் இருக்கலாம்...

அவன் அருகில் வந்ததும் கேட்டான்.

''என்ன நந்திதா... வந்து ரொம்ப நேரம் ஆகி விட்டதா... உங்களைக் காக்க வைத்து விட்டேனா.''

''ஊகூம்... நீங்கள் தாமதமாக வரவில்லை... நான் தான் சீக்கிரம் வந்து விட்டேன். சத்யா'' என்றாள் அவள்.

''தாங்க்ஸ் நந்திதா. நான் அழைத்ததும் வந்தீர்களே...''

''சத்யா... ப்ளீஸ்... இந்த 'ங்க' வேண்டாமே... இவ்வளவு பழகிவிட்டு... என்னை அப்படி அழைத்தால் என்னவோ போல் இருக்கிறது... என்னை ஒருமையில் அழைத்தால் சந்தோஷப்படுவேன் சத்யா...''

''அட.. எனக்கும் அதுதான் ஆசை நந்திதா... ஆனால் தயக்கம் தான்... இப்போ நீயே சொல்லி விட்டாய்... சரி... இங்கே நின்று பேசுவது கஷ்டமாக இருக்கிறது... உள்ளே பீட்சா சென்டர் இருக்கிறது.. வா... போய் சாப்பிடலாம்...'' என்று கூறி அவளை அழைத்துச் சென்றான்.



குடில் போல் இருந்த சின்ன கடை முன் டேபிளும் சேர்களும் போடப்பட்டிருந்தன...

போய் அமர்ந்து ஆர்டர் செய்தான் அவன்.

பிறகு அவள் பக்கம் திரும்பி... ''ம்ம்... சொல் நந்திதா...'' என்றான் அவன்.

அதைக் கேட்டு விட்டுச் சிரித்தாள் நந்திதா.

''சொல்ல வேண்டியது நீங்கள்தான். ஏதோ குட் நியூஸ் என்றீர்கள்... அதைக் கேட்டு விட்டு வாழ்த்துக் கூற நான் தயாராக இருக்கிறேன். சத்யா...'' என்றாள் எதிர்பார்ப்புடன். அவன் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

''என்னவாக இருக்கும்... 'கெஸ்' பண்ணு... பார்க்கலாம்...'' என்று கேட்டான்...

''ம்ம்... பதவி உயர்வுன்னு இருக்காது... இப்போது தான் அது கிடைத்திருக்கிறது... வேறே என்னவாக இருக்கும்... ஆங்... பாரின் போகப் போகிறீர்கள். கரெக்ட்...''

இல்லை என்று தலையசைப்பில் சொன்னவன்

''அதைவிட மகிழ்ச்சியான விஷயம் நந்திதா... என் ஆசை நிறைவேறப் போகிறது... அது என்ன என்று நீ சொல்...'' என்று ஊக்கினான் அவளை...

''அதைக் கேட்டு அவள் மனம் படபடத்தாலும்... வேண்டும் என்றே.. ஓ! புரிந்தது. சொந்தமாக ஆபீஸை தொடங்கப் போகிறீர்கள்... உங்கள் நீண்ட நாள் ஆசையும் அதுதான்... சரியா... சத்யா...'' கண்கள் விரிய அவள் சொன்னாள்...

''ஊகூம்.. அதுவும் இல்லை...'' என்றான் சத்யா...

''நீங்களே சொல்லி விடுங்கள் சத்யா... சஸ்பென்ஸ் வேண்டாமே...''

சூடாய் பீட்சா வந்தது... அவள் பக்கம் ஒரு பிளேட்டை நகர்த்திவிட்டு... ''முதலில் சாப்பிடுவோம் நந்திதா... பீட்சா ஆறினால் நன்றாக இருக்காது...'' என்றான் கையில் போர்க்கையும் கத்தியையும் எடுத்துக் கொண்டு.

அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது... அது என்னவாக இருக்கும் என்ற ஆர்வத்தில் இதயம் வெடித்து விடும் போல இருந்தது.

மனசுக்குள் சின்ன எதிர்பார்ப்பு... தன் உள்ளக் காதலை பெற்றவர்களிடம் சொல்லி அவர்களின் அனுமதி வாங்கி விட்டாரோ... அதைத்தான் குறிப்பிட்டு... என் ஆசை நிறைவேறப் போகிறது என்கிறார் போலும்... அதற்கு தான் இந்த சஸ்பென்ஸ் நாடகம்...

உள்ளுக்குள் பரவசம் பொங்கியது... அதனால் அவன் வாங்கித் தந்த பீட்சாவும் தேவாமிர்தமாக இருந்தது...

சாப்பிட்டதும் அவள் அவனிடம் ஆர்வமாய் கேட்டாள்.

''சொல்லுங்கள்... சத்யா... என்ன விஷயம் என்று...'' ஒரு வினாடி புன்னகையுடன் அவளை உற்றுப் பார்த்தவாறு... ''ஓகே... சொல்கிறேன் நந்திதா. எனக்கு திருமணம் நிச்சயமாகி விட்டது... சீக்கிரமே எங்கேஜ்மெண்ட்டும் நடக்கப் போகிறது... இதைத்தான் உன்னிடம் சொல்ல ஓடி வந்தேன்...'' என்றதும்... அவள் பனிச்சிலையாய் உறைந்து போனது போல அசைவின்றி அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் வேதனையின்



சாயல்.. அவளது இதழ்கள் துடித்தனவோ... அழுகையை அடக்கும் பிரயத்தனம் போலும். அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும்... அந்தத் தவிப்பை ரசித்தான்... நெஞ்சுக்குள் கொண்டாட்டம்.

யெஸ்... அவள் மனதில் இருப்பது நான்தான்... நானேதான்... அதனால் தான் நான் அழைத்ததும் ஓடி வந்திருக்கிறாள்.

ஒருவாறு சுதாரித்துக் கொண்டு சொன்னாள் நந்திதா... ''காங்கிராட்ஸ்... சத்யா... அவள்... அந்த அதிர்ஷ்டக்காரி யார்... உங்களுக்கு தெரிந்தவளா...''

''தெரிந்தவள்தான்... என் இதய தேவதை அவள்... என் அக்கா பார்த்து வைத்த பெண் தான்... அங்கே அவளைப் பார்த்துவிட்டு மயங்கினவன் தான். அன்றிலிருந்து அவளது நினைவில் கிடந்து தவிக்கிறேன் என்றால் பார்த்துக் கொள்... எனக்கு என்ன சந்தோஷம் என்றால்... எனக்கு வரப்போகும் மனைவி உன்னைப் போலவே தயாள குணமும்... இரக்க சிந்தனையும் அதிகம்...'' வேண்டும் என்றே அவன் சீண்டுவது போல பேசவும்... அவளால் தாங்க முடியாமல் போனது...

'உன்னைப் போலவே' என்கிறாரே... 'உன்னைத் தான் விரும்புகிறேன் என்று சொல்லியிருக்கக் கூடாதா... இனியும் அங்கிருந்தால்... எங்கே உடைந்து போய் அழுது விடுவோமா என்ற அச்சத்தில் அவள் எழுந்து நின்றாள்.

''சரி... நான் புறப்படுகிறேன் சத்யா... நேரமாகி விட்டது'' என்றாள் கரகரக்கும் குரலில்...

''இரு நந்திதா... என்ன அவசரம்... நீ சொல்வது போல்... இந்த சந்தோஷத்தைக் கொண்டாட வேண்டும்... எந்த ஆசிரமத்திற்குப் போகலாம்.''

''உனக்கு தான் ஒரு பட்டியலே தெரியுமே... சொல்... செய்திடுவோம்...''

ஏனோ அவனது வார்த்தைகள் எரிச்சலூட்ட...

''இப்போதைக்கு நேரமில்லை.. நிதானமாய் யோசித்துச் சொல்கிறேன்...'' என்றாள் மனக்குமுறலுடன்.

அதைப் புரிந்து கொண்டவன் போல குறும்பாய் சிரித்தான் சத்யா.

''ஓகே... ஓகே... உனக்கு எத்தனையோ வேலைகள் இருக்கும்... அதை ஏன் கெடுக்க வேண்டும்... நந்திதா ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன்... இப்போது என்னிடம் கேட்டால்... உலகத்திலேயே ரொம்ப சந்தோஷமாய் இருப்பது நான்தான் என்பேன். அந்த மாதிரி... நீயும் உன் மனசுக்குப் பிடித்தவனாய் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்... என்னை மாதிரியே நீயும் ஃபீல் பண்ணுவாய்... பாரேன்'' என்று அவன் சொன்னதைக் கேட்கப் பிடிக்காமல் எங்கோ வெறித்தாள்.

''என்ன நந்திதா... நீயும் சந்தோஷப்படுவே என்று நினைத்தால் ஏதோ பறி கொடுத்தவள் போல இருக்கிறாய்... வீட்டில் ஏதாவது பிரச்சனையா... ப்ச்சு... எல்லாம் சரியாகிவிடும்... கவலையை விடு. அப்புறம்.. என் நிச்சயதார்த்தம் எப்போது என்று போன் பண்ணுகிறேன்... கண்டிப்பாய் நீ வரவேண்டும்... என் பெஸ்ட் ஃபிரெண்ட் நீ... நீதான் என்னருகில் இருக்க வேண்டும்... நந்திதா... இருக்க வேண்டும் என்ன... இருப்பாய்... சரிதானே...''



அதற்குப் பின் அவள் பேசவில்லை... பேசவிடாமல் அவள் நெஞ்சில் துக்கம் பந்தாய் அடைத்துக் கொண்டிருந்தது.

அவனிடம் தலையசைப்பில் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சென்றாள் அவள்...

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன்... 'ஐ லவ் யூ நந்து டார்லிங்...' என்று தனக்குள் முணுமுணுத்தான்...

## 18



'பாலும் கசந்ததடி... சகியே...

படுக்கை நொந்ததடி...' என்னும் வேதனை காதல் நோயினால் மட்டுமில்லை... காதலின் தோல்வியினாலும் தான்...

அந்த நிலையில் தான் இருந்தாள் நந்திதா...

எல்லாம் கைநழுவிப் போய்விட்டது... யாரையும் ஏற்றுக் கொள்ள மறுத்த அவளது சின்ன இதயம்... எந்த ஆண் மகனையும் கண்டு அசைந்து தராத அந்தக் கையளவு இதயம்... சத்யாவிடம் சரணடைந்தது ஏன்.. அந்தக் காதலை ஏன் காலம் கடந்து உணர்ந்தேன். முதலில் தெரிந்திருந்தால்... ப்ச்சு... அப்பவும் சத்யா

அதை ஏற்றுக் கொண்டிருப்பார் என்பது என்ன நிச்சயம்... என்னை அருமையான சிநேகிதி என்று நினைத்தாரே தவிர... என் இனிய காதலி என்று எண்ண மனம் வரவில்லையே... அவள்... அவரது இதயம் கவர்ந்தவள்... என்னை விட அழகியாக இருப்பாள் போலும்... அதுதான் பார்த்ததும் மயங்கி விட்டார்...

ப்ச்சு... அது அவர் குற்றமும் இல்லையே.. மனம் என்பது விசித்திரமானது... அது யாரை... எப்போது ஏற்கும் என்பது அதற்கு மட்டுமே தான் தெரியும்... அவரது மனமும் அந்தப் பெண்ணைத்தான் வருங்கால மனைவியாய் பார்த்ததோ என்னவோ... பெருமூச்சு விட்டாள் அவள்...

அவளே வந்து சொல்லட்டும் என்று கேசவன் நினைத்தாரோ தெரியவில்லை... அதற்குப் பின் மகளிடம் வந்து கேட்கவே இல்லை...

அப்படி ஏதாவது இருந்தால் அவளே சொல்வாள் என்று இருக்கலாம்... இல்லை... அவள் மௌனத்தைப் பார்த்துவிட்டு நிச்சயதார்த்தத்தை நடத்தி விடலாம் என்றும் இருக்கலாம்...

வரலட்சுமிதான் மகளிடம் வந்து சொன்னாள்...

''சித்தி வீட்டில் வைத்து பெண் பார்க்கும் ஏற்பாடு நந்து... நாளைக்கே நாம் கிளம்பறோம்... சீக்கிரம் தயாராகு... என்ன... ஆங்! பச்சை நிற மைசூர் சில்க் புடவையை எடுத்துக் கொள். அது உனக்கு ரொம்ப அழகா தெரியும்...''



மகள் ஏதாவது எதிர்ப்போ... மறுப்போ தெரிவிக்கப் போகிறாள்... இல்லை... கேட்டுவிட்டு முகத்தை சுளிப் பாள் என்று எதிர்பார்த்தவள்... அப்படி ஏதும் இன்றி... 'உங்களிஷ்டம்மா' என்று வினயத்துடன் பதில் வந்ததும் மகளை வியப்புடன் பார்த்தாள் தாய்...

இந்த மட்டும் தணிந்து வந்தாளே என்று குளிர்ந்து போனது பெற்ற மனம்.

பிரகாஷிடமிருந்து போன் வருவதும் கொஞ்சம் நின்று போயிருந்தது... எங்கோ வேலை விஷயமாய் டூர் போயிருக்க வேண்டும் என்று தந்தை சொன்னது அவள் காதில் விழுந்தது.

'அப்பாடா... நிம்மதி... கொஞ்ச நாள் ஹாயாக இருக்கலாம்... தொண தொணப்பு இல்லாமல்' என்று நினைத்தாள்.. 'இனி வாழ்நாள் முழுக்க சகித்துக் கொள்ளத் தானே வேண்டும்...' என்று சலிப்புடன் நினைத்தாள்.

இந்தக் கல்யாணப் பேச்சு காதில் விழ முடியாத தூரத்திற்கு சென்று விடலாம் போல இருந்தது அவளுக்கு. அதுவும் ஒவ்வொருவராய்... மாறி.. மாறி தன்னை வெறுப்பேற்றுவது போலப் பேசுவதை துளியும் சகிக்க முடியாமல் போனது.

''பார்த்தீர்களா நம்ம பொண்ணை... கல்யாணமே வேண்டாம் என்று முரண்டு பிடித்தவள்... இப்போ எப்படி அமைதியாயிட்டா... என்ன சொன்னாலும் சரிங்கறா... கல்யாணம் என்றதும் எங்கிருந்தோ வெட்கம் வந்து ஒட்டிக் கொள்கிறது பெண்களுக்கு...'' இது அம்மா... வெட்கத்தினால் தான் அமைதி என்பது இல்லை... வேதனையினாலும் கூட வரும் என்பது அம்மாவிற்குத் தெரியவில்லை.

ரஞ்சிதாவும் தன் பங்கிற்கு அவளைக் கிண்டலும் கேலியும் செய்து பொறுமையை சோதிக்கிறாள்.

''என்னக்கா... பகல் கனவா... மாமாவுடன் டூயட்டா... ஜமாய்... ஆமாம் பிரகாஷ் சார் ஊரில் இல்லையாமே... அய்யோ பாவம்... கல்யாணம் வரைக்கும் இந்தப் பிரிவின் வேதனையை சகித்துக் கொள்ளத் தான் வேண்டும்... வேறு வழியில்லை... கல்யாணம் ஆன தும்.. வட்டியும் முதலுமாய்...'' அவளது வார்த்தைகளைக் கேட்கப் பிடிக்காது காதை மூடிக் கொள்ள வேண்டும் போல இருக்கும்.

அப்பாவும் சும்மா இருக்காமல் ''வரா... நம் வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளை... இந்த வீட்டில் அவனுக்கு தடபுடலாய் வரவேற்பு இருக்கணும்... நம்ம நந்து குட்டியை விட்டு அவனுக்கு என்னென்ன பிடிக்கும் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளச் சொல்... அதை சமைத்துப் போட்டு மாப்பிள்ளையை அசத்திட வேண்டும்... மாமனார் வீட்டு உபசரிப்பில் மாப்பிள்ளை, இரண்டு சுற்று பெருத்து விட வேண்டாமா...'' என்று மாப்பிள்ளைப் புராணம் பாடியே கழுத்தை அறுத்து விடுகிறாரே. சித்தி பூமா மட்டும் விதி விலக்கா... இல்லையே...

''என்னடீ சொக்குப் பொடி போட்டே நந்து... சொன்னதுக்கெல்லாம் தலையாட்டுகிறானாமே. போற போக்கைப் பார்த்தால் பிரகாஷ் பூம்பூம்மாடு மாதிரி ஆகி விடுவான் என்கிறாள் என் சிநேகிதி. அடியே... என் மகளே... அதே ரகசியத்தை கொஞ்சம் எனக்குச் சொல்லேன்... நானும் கொஞ்சம் உன் சித்தப்பா மேலே



... உன்னை நேரில் பார்க்கா...
தூவி வைக்கிறேன். உன்னை நேரில் பார்க்கா... மந்திரிச்சு விட்ட இப்படி... நேரில் பார்த்திருந்தால்... மந்திரிச்சு விட்ட கோழிதான்...''

மந்திரிச்சு விட்ட கோழியாமே... இங்கே நான் கழுத் தறுபட்ட கோழி மாதிரியல்லவா துடிக்கிறேன் என்று சித்தியிடம் புலம்ப ஆசைதான்... ஆனால் புலம்பி என்ன பிரயோசனம். சத்யா இல்லை என்று ஆனதும்... யாரோ ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டித்தானே ஆக வேண்டும்... அது யாராக இருந்தால் என்ன...

விரக்தியுடன் நினைத்தாள் அவள்...

மனதுக்குள் ரண வேதனையாய் வலித்தது...

சத்யா யாரோ ஒருத்திக்கு சொந்தம்... இனி அவரை மெல்ல மெல்ல மறந்துவிட வேண்டும்... முடியுமா... இதயத்தை நசுக்கிப் பிழிந்தாற்போல இருந்தது... வாழ்க்கையே சூன்யமாகி விட்டது போன்றதொரு சலிப்பு வந்தது. அந்தச் சலிப்புடனே ஊருக்கு புறப் பட்டாள்.

பெண் பார்க்கும் படலத்திற்கான ஏற்பாடு ஜோராய் நடந்து கொண்டிருந்தது.

பழம் பஞ்சாங்கம் போல சொஜ்ஜி... பஜ்ஜியெல்லாம் வேண்டாம்... மாறுதலாய் ஏதாவது செய்யலாமே என்று பூமா சொன்னதற்கு அனைவரும் 'ஓகே' போட்டனர்.

அனைவரும் தம் தம் ஐடியாக்களை கூற... நந்திதா எதுவும் பேசாமல் இருந்தாள்.

''நந்து... நீயும் வாய் திறந்து உன் கருத்தை சொல்ல லாம்... வெட்கப்பட வேண்டாம்...'' என்று அருணும் சொல்ல...

'ஏன்.. எட்டிக்காய்... வேப்பங்காயில் செய்யலாமே... படு பொருத்தமாய் இருக்கும்' என்று சொல்லத் துடித்த நாவை அடக்கிக் கொண்டு... அமைதியாக சொன்னாள்.

''பெரியவர்கள் நீங்கள் முடிவு செய்யுங்கள்... நான் எதற்கு...''

உடனே ரஞ்சிதாவும்... அனுஷாவும் கோரஸாக 'ஓ' போட்டார்கள்... அருண் கைத்தட்டிவிட்டு ''இதுவல்லவோ மணப் பெண்ணின் லட்சணம்'' என்று கேலி செய்தான்.

கடைசியில் காசி அல்வா... ஜாமூன்... சேமியா புலவ்... என்று முடிவானது... இது அவர்கள் வந்ததும் தர வேண்டிய ஐயிட்டங்கள்.

அன்றே நிச்சயதார்த்தம் என்பது முடிவான விஷயம் ஆனதால்... அதற்கான ஏற்பாடுகளும் செய்ய வேண்டியதாயிற்று... அதற்கென்று தனி மெனு வேறு... குடும்பத்தின் முதல் சுபகாரியம் என்பதால்... அதை வெகு சிறப்பாய் செய்துவிட வேண்டும் என்ற ஆசை... கேசவனுக்கும் வரலட்சுமிக்கும்.

இருபக்கத்து உறவினர்களையும் அழைத்தாயிற்று. பிரகாஷுக்கு சங்கிலி... விலை உயர்ந்த வாட்ச்... வைர மோதிரம்... உயர் ரக உடை என்று எல்லாம் வாங்கியாகி விட்டது...

பெண் பார்க்கும் சம்பிரதாயத்திற்கு பிரகாஷின் பெற்றவர்களும்... அக்காவின் குடும்பம் மட்டுமே வருவது... பிரகாஷிற்கு அவசர வேலை வந்து விட்டதால் அதை முடித்துக் கொண்டு... நிச்சயதார்த்த வேளைக்கு வருவதாய் சொல்லியிருந்தான்.



நிச்சயதார்த்த நாள் நெருங்க நெருங்க... நந்திதாவிற்கு படபடப்பு அதிகமாகியது... மரணத்தை எதிர்நோக்கியிருக்கும் நோயாளியைப் போல மனதில் ஒரு இம்சை...

நெஞ்சின் சத்யா... சத்யா என்ற கதறல் அவளை இரு கூறாய்ப் பிளந்தது.

அவள் வெறுப்புடன் எதிர்நோக்கி இருந்த அந்த நாளும் வந்தது...

குன்னூரில் பூமாவின் வீடு விசாலமாக இருந்ததால் அங்கேயே நிச்சயதார்த்தத்தை நடத்தி விடலாம் என்று நினைத்தனர்.. கேசவனும் ரமணியும்.

பெரிய கூடம்... மாடியில் பெரிய பெரிய அறைகள். எத்தனை பேர் வந்தாலும் தாங்கக் கூடிய வீடுதான். அந்தக் காலத்து வீடாயிற்றே...

உறவினர்கள் எல்லோரும் வந்தாயிற்று. மிகவும் நெருங்கிய உறவினர்களை மட்டுமே அழைத்திருந்தனர்...

அதுவும் ரமணி சித்தப்பாவின் ஆலோசனைதான். ''கல்யாணத்திற்கு எல்லோரையும் அழைக்கலாம். இந்த பங்க்ஷனுக்கு நெருங்கிய சொந்தம் மட்டும் போதும். என்ன சொல்கிறீர்கள் அண்ணி'' என்று அவர் சொன்னதை கணவனும் மனைவியும் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் எதுவும் வேண்டாம்... குறையின்றி செய்து விடலாம் என்பது நல்ல விஷயம் தானே... அப்படியே செய்திடலாம் என்று ஒப்புக் கொண்டனர்.

உறவினர்கள் என்று வந்தவர்கள் இருபத்து நான்கு பேர்தான்... எல்லோரும் வைபவத்தில் கலந்து கொண்டு... இரவே புறப்படும் உத்தேசத்தில் வந்திருந்தனர்.

வீட்டை அலங்கரிக்கும் வேலையை அனுஷாவும் ரஞ்சிதாவும்... அருண் உதவியுடன் ஒப்புக் கொண்டனர்.

இளைய தலை முறையாயிற்றே... புதுமையான அலங்காரத்தில் வீட்டையே மாற்றி விட்டார்கள். எங்கும் 'ஆர்க்கிட்' மலர்களின் புன்னகையும்... ரோஜாக்களின் மொட்டிதழ் சிரிப்பும்... இடத்தை இந்திரலோகமாகக் காட்டியது.

''எப்படி எங்களது கைவண்ணம்'' என்று பெருமையுடன் கேட்டாள் அனுஷா.

''இதெல்லாம் ஒரு அலங்காரமாக்கும்... என் கல்யாணத்தில் வீதி முழுக்க பந்தல் போட்டு... பந்தல் முழுக்க தஞ்சாவூர் கதம்பமும்... மதுரை மல்லிகையும் வச்சு அலங்கரிச்சாங்க பாரு. அது அலங்காரம்... வீதியெல்லாம் நறுமணம் வீசும் தெரியுமா...'' என்று உறவு முறை பாட்டி சொல்ல...

''பாட்டி... இந்த ஆர்க்கிட் பூ மாதிரி அழகு வருமா.. சொல்லுங்க'' என்றாள் ரஞ்சிதா.

''ம்கும்... என்ன அழகுடீ... காகிதப் பூ மாதிரி பார்க்கத்தான் அழகு... மல்லிகை... ஜாதி... முல்லை... செண்பகம் இது மாதிரி மணம் இருக்கா... மூக்கை பூக்கிட்டே வைத்துப் பார்க்கணும்...'' என்று பதிலடிக் கொடுத்தாள் பாட்டி...

''இதுக்குத்தான்... மூத்த தலைமுறை கிட்டே வாய் கொடுக்கக் கூடாதுங்கறது... பேசாமல் உங்க வேலைகளைப் பாருங்கடீ...'' என்று அடிக்குரலில் அதட்டினாள் பூமா.



நந்திதாவிற்கு அலங்காரம் செய்ய 'ப்யூட்டிஷியன்' ஒருத்தியை வரவழைத்திருந்தார்கள்.

அவளிடம் நந்திதா கண்டிப்புடன் சொல்லி விட்டாள்... மிதமான மேக்கப் போதும் என்று..

கூந்தலை அழகான கொண்டையிட்டு... அதில் வெண்மணி முத்துக்களை சொருகி... நெற்றியில் சிவப்புக்கல் நெற்றி சுட்டி வைத்து... மிதமான ஒப்பனை செய்து... அவளது அழகுக்கு மெருகூட்டினாள் அந்த அழகுக்கலை நிபுணி...

அவளது கைவண்ணத்தில்... அப்சரஸாக மிளிர்ந்தாள் நந்திதா... தேவலோக மங்கை தேவலோகம் நீங்கி பூமிக்கு வந்து விட்டாளோ என்று எண்ணும்படியாய்... அழகு சிலையாக இருந்த அவளை நெட்டி முறித்து திருஷ்டி கழித்தாள் வயதான பாட்டி...

''என் கண்ணே பட்டுவிடும் போல இருக்கே நந்தும்மா... இப்பவே கல்யாணப் பொண்ணு களை வந்து விட்டது. எனக்குப் பெருமையா இருக்கு செல்லம்...'' என்று பெருமிதமாய் தாய் கூறியதையும்...

''சூப்பர் அக்கா... சினிமா ஸ்டார் மாதிரி இருக்கே... அவர்கள் கூட உன் அழகில் பிச்சை வாங்கணுமாக்கும்...'' என்று சொல்லி விட்டு தங்கை முத்தமிட்டதையும்...

''இந்த மாதிரி அழகான மணப்பொண்ணை யாரும் பார்த்திருக்க மாட்டாங்க... இல்லையா அக்கா. எல்லோரும் போன பிறகு முதல்ல நம்ம நந்து குட்டிக்கு திருஷ்டி சுத்திப் போடணும்... யார் கண்ணு எப்படியோ...'' என்று சொன்ன சித்தி அவளை உச்சி

முகர்ந்ததையும்... எந்த வித உணர்ச்சியும் இல்லாமல் மர பொம்மையைப் போல் ஏற்றுக் கொண்டாள்...

முகத்தில் உணர்ச்சிகளைத் தொலைத்து... கண்களில் வெறுமை தெரிய... கடனே என்று இயங்கினாள்.

அவளைப் பார்க்க ஆவலுடன் வந்த சந்திரிகாவும் அவளது தாய் தேவகியும் வீட்டுக்கு வரப் போகும் மருமகளைப் பார்த்துவிட்டு அசந்து போயினர்.

அவர்கள் வைத்த கண் வாங்காது அவளைப் பார்த்தனர்...

சந்திரிகாவிற்கு நந்திதா அழகி என்று தெரியும் தான்... ஆனால் இன்று.... இப்போது... நேரில் காணும்போது அவளது பேரழகு கண்களைக் கூச வைத்தது.

ஆகா... தம்பி இன்னும் இவளைப் பார்க்கவில்லையே... பார்த்தால் மகுடி முன் நாகம் மாதிரி மயங்கி நின்றிடுவான்... ம்ம்... அழகான பெண்ணொருத்தி காத்திருப்பாள் என்று பரபரப்புடன் ஓடி வரமாட்டானோ... இன்றும் வேலை தானா... சரியான மடையன் என்று மனசுக்குள் திட்டவும் செய்தாள்.

தேவகி மருமகளை அரவணைத்து அருகில் அமர வைத்துக் கொண்டாள்...

அவளிடம் இதமாகப் பேசினாள்... அவளது படிப்பு... அவளுக்குத் தெரிந்த கலைகள்... அவளது விருப்பு... வெறுப்புகள் என்று விசாரித்துத் தெரிந்து கொண்டாள்.

''எனக்கு மன நிறைவா இருக்கும்மா... என் மகன் பிரகாஷுக்கு ரொம்பப் பொருத்தமான மனைவி தான் கிடைத்திருக்கிறாள். அந்த விதத்தில் என் பிள்ளை



கொடுத்து வைத்தவன் தான்'' என்று மெச்சிக் கொண்டாள் வருங்கால மாமியார்... பரவாயில்லை. தாயார் நல்லவராக இருக்கிறார்... என்று நினைத்தாள் நந்திதா.

தாயாரை ஏற்றுக் கொண்ட மனம்... மகனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. குடிபுகுந்துவிட்ட சத்யாதான்... காலி செய்ய மறுத்து... பிடிவாதமாய் உட்கார்ந்திருக்கிறானே... என்ன செய்வது... உள்ளூர மறுகினாள் நந்திதா...

''பிரகாஷ் வந்ததும் நந்திதாவிடம் பேச ஆசைப்படுவான்... இரண்டு பேரும் தனியாக இருந்து பேசட்டும்... இத்தனை நாள் அவன் பார்க்காமல் இருந்ததே பெரிய விஷயம்... அம்மாடி... நந்திதா நீ மாடியில் போய் இரு... எல்லோர் முன்னேயும் பேசறதுக்கு உனக்கும் சங்கோஜமாய் இருக்கும்... அவனுக்கும் உன்னிடம் தனிமையில் பேச ஆசையிருக்கும் தானே...

ஆனால் பதினைந்து நிமிஷம் தான் தருவோம். அப்புறம் கீழிறங்கி வந்துடணும்... இத்தனை நாளாய் உன்னைப் பார்க்காமல் இருந்ததற்காகத்தான் இந்த சலுகை...'' என்று நகைத்துக் கொண்டு சொன்னாள் தேவகி...

விட்டால் போதும் என்பது போல... வில்லிலிருந்து பாய்ந்த அம்பு மாதிரி ஓடாத குறையாய் மாடியேறி சென்றாள் நந்திதா...

அம்மாடி... இனி யாருடைய தொணதொணப்பும் இருக்காது.. என்ற நிம்மதியை மிதித்து... எழுந்து நின்றது பயம்...

பிரகாஷை சந்திக்கப் போகிறோம்... அவனுடைய பிதற்றலைக் கேட்க வேண்டுமே... ஈசுவரா... என்று சோர்ந்து போனது உள்ளம்...

கீழே... 'மாப்பிள்ளை வந்தாச்சு' என்று யாரோ உரக்கச் சொல்வது காதில் விழ... இதயம் படுவேகத்துடன் துடித்தது...

இனியென்ன... மேலே வரப்போகிறான். வரட்டும்... அவனை வரவேற்கப் பிடிக்கவில்லை என்பதைக் காட்டுகிறேன்... ஏன் அவனைப் பார்க்கவும் மனமில்லை என்பதை அவன் உணரும்படி செய்கிறேன்... வாயில் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தவள்... அழுத்தமான காலடி ஓசை கேட்டும் திரும்பிப் பார்க்காமல் இருந்தாள்.

''அலோ... நந்திதா... ஐ அம் பிரகாஷ்...' சத்ய பிரகாஷ்... என்னை நெருங்கிய நண்பர்கள் சத்யா என்று அழைப்பார்கள்.. நீயும் சத்யா என்றே அழைக்கலாம்..'' என்ற ஆழ்ந்த குரல் கேட்டு அதிர்ச்சியுடன் திரும்பினாள்... சத்யாவா பேசியது... ஆமாம்... சத்யாவே தான்... என் சத்யா தான்.

கண்கள் பெரிதாய் விரிய... அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் நந்திதா.

## 19



நந்திதாவின் திகைப்பு இன்னும் தீரவில்லை.

கனவு காண்கிறேனோ என்ற பிரமிப்பு... என் கண்கள் தான் என்னை மோசம் செய்கிறதோ என்ற மலைப்பு...



'சத்யா' வார்த்தைகள் ஓசையின்றி முணுமுணுப்பாய் வந்தது.

''யெஸ்... சத்யாவேதான்'' வலது கையை மார்பருகே வைத்து... தலையை வணங்கி சொன்னவனின் உதட்டில் குறும்புச் சிரிப்பு...

அவளது திகைப்பையும்... மலைப்பையும் காணத் தானே இந்த கண்ணாமூச்சி ஆட்டமும்... அதுவும் அழகாகவே இருந்தது. மனதார ரசித்து மகிழ்ந்தான்.

அவளால் இன்னும் நம்ப முடியவில்லை...

இத்தனை நாளும் யாரோ ஒரு பிரகாஷுக்கு மனைவியா என்று மறுகினாளே...

அந்த பிரகாஷ் சத்யா தானா... சத்ய பிரகாஷ் என்றாரே...

''பிரகாஷ் என்று சொன்னது... என்னிடம் பேசியது... நம்ப முடியவில்லையே சத்யா.''

''நம்ப வைக்கட்டுமா...'' என்றவன்... கொஞ்சம் குரலை மாற்றிக் கொண்டு ''என்னம்மா... பேச்சே காணோம்... ஓ... வெட்கமா... அடடா... வெட்கத்தில் உன் முகம் சிவந்திருக்குமே... அந்த சிவந்த கன்னத்தை நிமிண்டி... உன் முகம் ரோஜாவாய் மாறுவதை ரசிக்க முடியவில்லையே... டார்லிங்'' என்று ஒரு மந்தகாசப் புன்னகையுடன் அவன் சொல்ல...

உண்மையிலேயே அவள் முகம் ரோஜாவாய் சிவந்து போனது... அவன் வாயிலிருந்து வந்த 'டார்லிங்' தேனாய் இனிக்கிறதை சந்தோஷத்துடன் உணர்ந்தாள். பிரகாஷ் என்று நினைத்து வெறுப்புடன் முகம் சுளித்ததையும்... இளிச்சவாயன்... வழிசல் என்றெல்லாம்

நினைத்து எரிச்சலுற்றதையும் நினைவுக்கு வர அவனுக்கு சிரிப்பு வந்தது.

அவளது சிரிப்பைப் பார்த்ததும் ஏன் என்பது போல புருவங்களை உயர்த்தினான் சத்யா.

காரணத்தை அவள் சொன்னதும் அவனுக்கும் சிரிப்பு வந்தது.

''இதற்கு தான்... இரண்டு பெயர் இருந்தால் வசதி...'' என்றான் அவன்.

''உங்கள் அக்காவோ... அம்மாவோட கூட மூச்சு விடவில்லையே ஒரு தரம் கூட உங்கள் பெயரை 'சத்யா' என்று உச்சரிக்கவில்லையே சத்யா... அவர்களிடம் சொல்லி வைத்திருந்தீர்களா என்ன...'' என்று வினவினாள் அவள்.

''அப்படி ஏதுமில்லை... வீட்டில் என்னை அழைப்பதே பிரகாஷ் என்றுதான்... என் தாத்தாவின் பெயர் சத்யமூர்த்தி... அதனால் அம்மா 'சத்யா' என்று அழைப்பதில்லை... அதனால் எல்லோருக்கும் பிரகாஷ் தான்... அலுவலகத்தில் மட்டுமே நான் சத்யா... ஏன்... உனக்கும் தான்...''

''அதெப்படி... என்னைத்தான் உங்கள் வீட்டில் பார்த்து வைத்திருந்து என்று உங்களுக்குத் தெரிந்தது... நம் சந்திப்பில் கூட நீங்கள் மூச்சு விடவில்லையே சத்யா'' என்று கேட்டாள் அவள்.

''பயணத்தில் நாம் சந்தித்தபோது... நீ தான் எனக்கு பார்த்திருக்கும் பெண் என்று எனக்குத் தெரியாது. அப்போதைய மனநிலையில் இந்தத் திருமணம் எனக்கு அவசியமாய் படவில்லை... மொட்டைக் கடிதாசியால்



திருமண ஏற்பாடு நின்றது. எனக்கு அனுகூலமாய் தெரிந்தது... ஆனால் நம் பயணத்தில் ஏற்பட்ட தடையால்... நாம் தங்க வேண்டி வந்தது பார்... அந்த சமயத்தில் தான் உன்னைப் பற்றி தெரிந்து கொண்டேன்... உன் இனிமையான சுபாவம்... உன் தொண்டு மனப்பான்மை... உன் பேச்சு எல்லாமே என் மனதைக் கவர்ந்தது என்று தான் சொல்வேன். அப்போதும் நீ தான் எனக்கு பார்த்து வைத்திருந்த பெண் என்று தெரியாது. என் அக்கா வீட்டில் தான் உன் போட்டோவைப் பார்த்துவிட்டு அதிர்ந்து போனேன்.

ஆகா... ஒரு அருமையான... அற்புதமான பெண்ணை இழப்பதா என்று மனசுக்குள் துடித்துப் போய் தான் மறுபடியும் உன் சித்தியிடம் வந்து மனம் விட்டுப் பேசியது. என்னிடம் நீயும் இந்தத் திருமணத்தில் எனக்கு விருப்பம் இல்லை... நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை என்றாய் பார்... அதனால்... உன் மனதை அறிவதற்கு ஒரு சின்ன 'டெஸ்ட்' வைத்தேன்... எனக்கு திருமணம் நிச்சயமாகி இருக்கிறது என்ற விஷயத்தை உன்னிடம் சொன்னபோது... உன் முகத்தில் தெரிந்த தவிப்பும்... வேதனையும் உன் மனதைப் படம் பிடித்துக் காட்டியதா... அதனால் உற்சாகத்துடன் செயல்பட்டேன்.''

''என்னிடம் அப்போதாவது சொல்லியிருக்கலாம் சத்யா... என்னை வேதனையில் துடிக்க வைத்து விட்டீர்களே...'' என்று அவள் சொல்லவும்...

''சஸ்பென்ஸாக இருக்கட்டும் என்றுதான்... அதில் தான் த்ரில்... அப்படியே உன்னைக் கொஞ்சம் தவிக்க

விடலாமே என்று ஆசை...'' கண்களைச் சிமிட்டிச் சொன்னான் அவன்...

''ஓகோ... நான் தவிக்கிறது உங்களுக்கு சந்தோஷமாக்கும்...'' என்று பொய்யான கோபத்துடன் அவள் கேட்க...

''சாரிம்மா... உன் முகவாட்டத்தைப் பார்த்து எனக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது... ஆனால் இப்போது என்னை இன்ப அதிர்ச்சியுடன்... கண்களை 'சாஸர்' மாதிரி விரித்துப் பார்த்துக் காண்டு நின்றாய் பார்... அதற்காக எதையும் செய்யலாம் என்று தோன்றியது... ஒன்று சொல்ல மறந்து விட்டேனே... இந்த மணப்பெண் அலங்காரத்தில் ரொம்பவும் அழகாக இருக்கிறாய் தான்.. நந்து டியர்... இந்த அழகுச் சிலை என் மனைவி என்று நினைக்கப் பெருமையாக இருக்கிறது... ஆனால்... என் மனதைக் கவர்ந்த நந்திதா யார் தெரியுமா டார்லிங்... தன்னைப் பற்றி துளியளவும் சிந்திக்காமல்... மற்றவர்களைப் பற்றியே யோசித்துக் கொண்டு... கலைந்த கேசத்துடன் ஒப்பனை இல்லாத வதனத்துடன்... கசங்கிய உடையணிந்திருந்தாலும் வனதேவதை மாதிரி சுற்றி வந்து.. யாருக்காவது உதவி தேவைப்படுமா என்று தன் அழகிய கண்களால் வட்டமடித்து... ஓடிப்போய் செய்யும் அந்த நந்திதாதான்...'' என்று அவன் கூறும் போது அவன் கண்களில் தெரிந்த மின்னல் ஒளி அவளை சிலிர்க்க வைத்தது.

''சரி... நான் போய் இவற்றையெல்லாம் கலைத்து விட்டு வரட்டுமா...'' கேலியாய் அவள் கேட்க.

''செய்யலாம் தான்... ஆனால் அது எனக்கு மட்டும் தான் பிடிக்கும் என்றேன்... மற்றவர்களுக்கு அப்படி



இல்லையே... நந்தும்மா... அவர்களைப் பொறுத்த மட்டில் நாம் இருவரும் முதன் முதலாய் சந்திக்கிறோம்... நாம் ஏற்கனவே சந்தித்திருப்பது அவர்களுக்குத் தெரியாது... சொல்லியிருந்தால்... இத்தனை நேரம் 'சஸ்பென்ஸ்' உடைந்திருக்குமே...''

''ஓ... அதுதான் விஷயமா... உங்கள் மூளை ரொம்பத்தான் யோசித்திருக்கிறது... ஆனால் இப்படி தவிக்க விட்டதற்கு தண்டனை கண்டிப்பாய் உண்டு.''

''தண்டனையா... மை காட்! இன்னும் இந்த ஏழை சத்ய பிரகாஷை மன்னிக்கவில்லையா... கண்ணே...'' என்று பரிதாபத்துடன் கேட்க... அவனது முகத்தைப் பார்த்துவிட்டுச் சிரிப்பை அடக்கக் கஷ்டப்பட்டாள்.

''பிரகாஷை எப்பவோ மன்னித்து விட்டேன்... ஆனால் இந்த சத்யாவைத்தான் மன்னிக்க மாட்டேன் என்னமாய் என்னைத் துடிக்க வைத்தார்... அவரை சும்மா விடுவதா... ஊகூம்...''

''சரி... அதற்கு என்ன தண்டனை என்று சொன்னால் அடியேன் அதற்கு தயாராவேன்... உன் கையால் கொடுத்தாலும் சரி... உன் இதழ்களால் கொடுத்தாலும் அந்த வலியைத் தாங்கவும் தயார்...'' என்றான் குறும்பாய்...

''ஆசை... தோசை... அய்யாவுக்கு ரொம்பத்தான் ஆசை... இது தண்டனை இல்லை... பரிகாரம்...''

''என்ன பணியாரமா... அதுவும் எனக்குப் பிடிக்குமே'' என்று வேண்டும் என்றே அவன் மாற்றிச் சொல்ல...

''ரொம்பத்தான் சாமர்த்தியம் என்ற நினைப்பு'' என்று சிணுங்கலாய் சொன்னாள் நந்திதா...

''என்ன... என்ன சொன்னே நந்து... என் காதில் விழவில்லை... இரு... கொஞ்சம் அருகில் வந்து கேட்கிறேன்'' என்றவன்... அவளை ஒட்டினாற் போல் வந்து நின்று... குனிந்து கேட்பதைப் போல நின்றான்...

அவனிடமிருந்து தவழ்ந்து வந்த ஏதோ ஒரு நறுமணம் அவளைக் கிறங்க வைத்தது... அவனது அருகாமையில் இதயம் 'ரன்னிங் ரேஸில்' பங்கெடுத்தது போல வேகம் எடுத்தது...

''ம்ம்... இப்போ சொல் நந்து டியர்... கேட்கிறேன்...'' என்று கைக்கட்டி வாய் புதைத்து அவன் நின்றதைக் கண்டு நகைத்தவள்... ''நேரமாகிறது... கீழே காத்திருப்பார்கள்... போகலாம் சத்யா...'' என்றாள்.

''நோ... அதென்னவோ சொன்னாயே... அது தெரிந்து கொள்ளும் வரை இங்கிருந்து நகரும் உத்தேசம் இல்லை...'' என்றான் அவன் விடாப்பிடியாய்...

''வேண்டாம்... அப்புறம் வருத்தப்படுவீர்கள் சத்யா.''

''நான் சொன்னது சொன்னது தான்... நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லும்மா... அதை நிச்சயம் செய்து காட்டுவேன்...''

''அப்படியா... சரி சொல்கிறேன்... ரிஷிகேஷம் தெரியுமா...''

''ஆமாம்... புண்ணிய தலமாயிற்றே... அங்கே ஏதாவது விசேஷமா என்ன... அதற்குப் பணம் அனுப்ப வேண்டும் தானே... டன்... செய்திடுவோம் நந்து'' வீறாப்பாய் பதில் சொன்னான் அவன்.

''அதில்லை சத்யா... ரிஷிகேசத்தில் ஒரு ஆசிரமம் இருக்கிறது... அங்கே போய் ஒரு வாரம் தங்கி சேவை செய்ய வேண்டும்... அதுதான் என் ஆசை...''



அதைக் கேட்டதும் சிரித்து விட்டு... அவளை அணைத்து தன்னோடு சேர்த்தவன் ''அவ்வளவுதானா... செய்யலாம். நானும் வருகிறேன்... எப்போ என்று சொல்... அடுத்த வருடம்...?'' என்றான் குதூகலமாய்...

''அடுத்த வருடம் இல்லை... இது பரிகாரமாயிற்றே... உடனே செய்ய வேண்டுமாக்கும்... நம் திருமணம் முடிந்ததுமே... ஆங்... சொல்ல மறந்து விட்டேனே... நம் 'ஹனிமூன்' கூட அங்கே... அந்த ஆசிரமத்தில் தான் சத்யா...'' என்றவள் உதட்டை மடித்து வந்த சிரிப்பை அடக்க முயன்றாள்.

''அய்யோ... தேவுடா...'' என்று அலறினான் சத்யா.

அந்த நேரத்தில் உள்ளே வந்தாள் தேவகி... இருவரும் விலகி நின்றார்கள்.

''ஏண்டா அலறினே... என்ன சொன்னாள் என் அருமை மருமகள்...'' என்று கேட்டாள் மகனிடம்.

''வந்தும்மா... கல்யாணத்துக்கு அப்புறம்...''

''ஆமாம்.. 'ஹனிமூன்'னு பேசியது என் காதிலும் விழுந்தது. அவள் ஆசைப்பட்ற. இடத்திற்குப் போக வேண்டியது தானே பிரகாஷ். கவலைப்படாதேம்மா... எப்படியாவது அவனை சம்மதிக்க வைத்து நீ சொன்ன இடத்திற்கு அனுப்பி வைக்கிறது என் பொறுப்பு... உன் ஆசைப்படியே எல்லாம் நடக்கும்... கவலை விடு...'' என்று... என்ன... ஏது என்று புரிந்து கொள்ளாமல் தேவகி சொல்லவும்... சத்யாவும் நந்திதாவும் சிரித்தார்கள்.

அதைப் பார்த்து விழித்த தேவகி... ''ஏம்மா... ஏதாவது தப்பா சொல்லிட்டேனா... சரி... உங்களுக்குள் ஆயிரம்

இருக்கும்... ஆங்... வந்த விஷயமே வேறு... நல்ல நேரம் முடிவதற்குள் நிச்சயதார்த்தத்தை நடத்தி முடிக்கணும்... எல்லோரும் காத்திருக்கிறார்கள்... வாங்க...'' என்று சொல்லிவிட்டு.. முன் சென்றாள்...

அவன் தன் கரத்தை நீட்ட... அதில் தன் மென்கரத்தை இணைத்தாள் நந்திதா.

இருவருக்குள்ளும் மின்னலாய் பரவசம் ஊடுருவ... வாழ்வில் இணையப்போகும் ஆனந்தச் சிலிர்ப்புடன் கீழே இறங்கி வந்தனர்.

அந்த அழகான... அருமையான... மிகப் பொருத்த மான ஜோடியைக் கண் இமைக்கவும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தனர் உறவினர்கள்... பெற்றவர்களும் உட்பட...

✱